

# நம்பிக்கை மற்றும் பங்களிப்பு

INSURANCE
BOARD OF SRI LANKA

இலங்கை காப்புறுதிச் சபை

வருடாந்த அறிக்கை 2015

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் | 4 |
| தலைவியின் செய்தி | 6 |
| பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 10 |
| சபை அங்கத்தவர்கள் | 14 |
| சபை அங்கத்தவர்கள் பற்றிய சுருக்கக்குறிப்பு | 15 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 17 |
| ஊழியர் குழாம் | 18 |
| பொது மீளாய்வு | 22 |
| புள்ளிவிபர மீளாய்வு | 28 |
| தொழிற்பாடுகளின் மீளாய்வு | 60 |
| நிதி நிலைமையின் கூற்று | 76 |
| முழுமையான வருமானக் கூற்று | 77 |
| காசுப்பாச்சல் கூற்று | 78 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப்பாச்சல் கூற்று | 79 |
| கணக்கீட்டு பூட்கைகள் | 80 |
| நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 82 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 89 |
| கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்களுக்கான சபையின் பதிலளிப்பு | 94 |
| பின்னிணைப்பு I | 105 |
| பின்னிணைப்பு II | 106 |
| அருஞ்சொல் விளக்கம் | 108 |

# நம்பிக்கை மற்றும் பங்களிப்பு



மாறுபடும் அரசியல் மற்றும் பொருளாதார பின்னணியினுள், கடந்த வருடங்களில் நாங்கள் தயாரித்த நிலையான கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் செயன்முறை வரிசையை உச்சநிலைக்கு கொண்டு வந்தமை கடந்த நிதியாண்டில் நாங்கள் பெற்றுக்கொண்ட வெற்றியாகும்.

தழுவல், வேறுபடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளின் ஊடாக காப்புறுதிக் கைத்தொழிலை உயர் மட்ட முதிர்ச்சி நிலைக்கு கொண்டு செல்ல முடிந்தது. இந்த வருடத்தில் இடர் அடிப்படையிலான மூலதன மாதிரியின் தழுவலுக்கான இறுதி மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அநேக நிறுவனங்கள் அவர்களுடைய கலவை காப்புறுதி வியாபாரத்தை இரு வேறு சட்ட நிறுவனங்களாக வேறுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் ஊடாக வேறுபடுத்தல் செயன்முறையின் இறுதிக் கட்ட நடவடிக்கைகளையும் காண முடிந்தது.

அதேவேளை, இந்த வருடம் இரு பொது காப்புறுதிக் கம்பனிகள் அவர்களுடைய தொழிற்பாட்டை ஒன்றிணைப்பதற்கு கொண்ட நாட்டத்துடன், உள்ளூர் காப்புறுதித் கைத்தொழிலில் ஒருங்கிணைப்பு செயன்முறையின் ஆரம்ப அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

நம்பிக்கை மற்றும் பங்களிப்பு எனும் பலம் மிக்க அஸ்திவாரத்துடன், 2015ம் ஆண்டு காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் காப்புறுதிக் கைத்தொழிலுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனும் தயாரிக்கப்பட்ட கொள்கையை உறுதிப்படுத்துவதற்காக, ஒழுங்குபடுத்துனர்களினால் கைத்தொழிற்றையுடன் அர்த்தமுள்ள ஆலோசனைகளை வழங்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.



# தொலை நோக்கு

ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் அடையாளக் குறியீட்டாளராக இருத்தல்.

# பணி

காப்புறுதித் தொழிலின் அபிவிருத்தியை ஒழுங்கமைப்பு செய்வதிலும், மேற்பார்வை செய்வதிலும், எளிமையாக்குவதிலும் ஈடுபடும் அதே நேரம், காப்புறுதி வைப்பாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.



# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- 30 காப்புறுதிக் கம்பனிகள்
- 57 காப்புறுதித் தரகர்கள்
- 45,429 காப்புறுதி முகவர்கள்
- காப்புறுதி குறித்த விழிப்புணர்வு 866 கிராம சேவைகள் பிரிவுகளை எட்டியது

## காப்புறுதிக் கைத்தொழிலின் செயலாற்றுகை

| | 2015 | 2014 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ.பில்லியன்) | 122 | 105 | 16.12 |
| மொத்த சொத்துகள் (ரூ.பில்லியன்) | 465 | 421 | 10.33 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் % சத வீதத்தில் ஊடுறுவல் | 1.09 | 1.01 | 8.49 |
| காப்புறுதி அடர்த்தி (ரூபா) | 5,838 | 5,074 | 15.04 |

## சபையின் செயலாற்றுகை

| | 2015 | 2014 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாயர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ.பில்லியன்) | 2.64 | 2.18 | 21 |
| செஸ் வருமானம் (ரூ.பில்லியன்) | 321.75 | 273.91 | 17 |
| வருடாந்தக் கட்டணம் (ரூ.பில்லியன்) | 103.81 | 73.44 | 41 |

# ரூபா. 465 பில்லியன்

காப்புறுதித் தொழிலின் மொத்தச் சொத்துகள்

# ரூபா. 122 பில்லியன்

காப்புறுதித் தொழிலின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம்



# முகாமைத்துவத் தகவல்கள்



“ஒழுங்குபடுத்துனருக்கு, அதன் அதே சுபாவத்துடன், தாம் ஒழுங்குபடுத்தும் நிறுவனம் சட்டத்திற்கு இணக்கமாக உள்ளதா என பார்த்துக்கொள்ளல் சாட்டப்பட்டிருந்த போதிலும், அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கைத்தொழிற்துறையுள்ள நிதர்சனமான உலகத்தின் அனுபவத்தின் ஊடாகவன்றி தனித்து அதனை மேற்கொள்ள முடியாது என்பதனை நான் நம்புகின்றேன்”

# தலைவியின் செய்தி

இலங்கை அரசியலிலும் மற்றும் பொருளாதாரத்திலும் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்திய வருடமான 2015ம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஜனாதிபதி தேர்தல் மாற்றம் அதைத் தொடர்ந்து வந்த பொதுத் தேர்தல் என்பன நாட்டின் எதிர்கால பொருளாதார கொள்கையின் திசையை காட்டுவதற்கு மாற்றமடைந்த அரசியல் தளக்கோளத்தின் மீது சந்தை தங்கியிருந்ததினால், மாற்றங்களும் கடந்து செல்லல்களும் வருடம் முழுவதிலும் ஏற்பட்டது.

அநேக நிறுவனங்கள் அவர்களுடைய கலவை காப்புறுதி வியாபாரத்தை இரு வேறு சட்ட நிறுவனங்களாக வேறுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் ஊடாக வேறுபடுத்தல் செயன் முறையின் இறுதிக் கட்ட நடவடிக்கைகளையும் காண முடிந்தது. பூட்கையாளர்களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கொள்கை நடவடிக்கைகளாக சட்டமாக்கப்பட்டதும், முழுமையான காப்புறுதி கைத்தொழிற்துறையின் நன்மைக்காகவும் மேற்கொள்ளப்பட்ட வேறுபடுத்தல் செயன்முறைகள் அனைத்தும் காப்புறுதி நிறுவனங்களினால் விருப்பத்துடனும் மனவுறுதியுடனும் மேற்கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடுவதற்கு கிடைத்தமை ஊக்கமூட்டும் ஓர் நிகழ்வாகும். வேறுபடுத்தல் தேவை தொடர்பாக இதுவரை இணங்காத சில நிறுவனங்கள், பல்வேறு காரணங்களினால் பின்னடைய நேர்ந்தாலும், எவ்வித வெளிவாரிக் கருதல்களின்றி சட்டம் எல்லோருக்கும் ஒரேவகையில் பிரயோகிக்கப்படும் என்பதனால் எதிர்காலத்திலும் அவ்வாறு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

“காப்புறுதித் தொழிலின் அபிவிருத்தியை ஒழுங்கமைப்பு செய்வதிலும், மேற்பார்வை செய்வதிலும், எளிமையாக்குவதிலும் ஈடுபடும் அதே நேரம், காப்புறுதி வைப்பாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்” எனும் எங்களின் செயற்பணி வாக்கியத்தை பூரணப்படுத்துவதன் ஊடாக இலங்கையில் துடிப்பான மற்றும் நிலையான காப்புறுதிக் கைத்தொழிலை நிர்மாணிப்பதற்கு இலங்கை காப்புறுதி சபையின் அடிப்படை நோக்கத்தை இந்த மாறுபடும் காலத்தினுள் வைத்திருந்தது.

### கைத்தொழிற்துறையின் செயலாற்றுகைகள்

இந்த தறுவாயினுள், காப்புறுதிக் கைத்தொழிற்துறை நீண்ட கால மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்களின் ஊடாக மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களாக கிட்டத்தட்ட ரூபா 122,390 மில்லியனை அடைய முடிந்ததுடன், இது 16,992 மில்லியன் அதிகரிப்பை பதிவு செய்ததுடன், இது 16.12% வீத வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சியானது 2014ம் ஆண்டு ஏற்பட்ட 5.44% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஓர் வளர்ச்சியாகும். இந்த மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் நீண்ட கால மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் திருப்திகரமான செயலாற்றுகையை வெளிப்படுத்தின.

எனினும், காப்புறுதி நிறுவனங்களின் மொத்த சொத்துக்களில், ஆயுள் காப்புறுதி வியாபாரப் பிரிவில் 23.81% வீத வளர்ச்சி வெளிப்படுத்தப்பட்டதுடன், பொது காப்புறுதிப் பிரிவு 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.75% வீத வீழ்ச்சியை மட்டுமே வெளிப்படுத்தியது. 2015ம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட வேறாக்கல் செயன்முறை இந்த வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கக்கூடும்.

### சாதனைகள்

2015ம் ஆண்டு இடர் அடிப்படையிலான மூலதன மாதிரியின் தழுவலுக்கான இறுதி மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. சமாந்தர ஓட்டம் 2014ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2015ம் ஆண்டின் இறுதிவரை அது தொடரப்பட்டதுடன், இதன் போது காப்புறுதியாளர்களுக்கு புதிய இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் அவசியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொடுத்ததுடன், ஒரு நிறுவனம் ஓர் குறிப்பிட்ட கடன்தீர் ஆற்றல் விதிமுறையில் இருந்து இன்னுமொன்றுக்கு மாறும் பொழுது இயற்கையாக எழும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனை தீர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்பட்டது. 2016ம் ஆண்டிலிருந்து இடர் அடிப்படையிலான மூலதன அமுல்படுத்தப்படுத்துவதன் ஊடாக இலங்கை காப்புறுதி சபை மற்றும் காப்புறுதியாளர்களுக்கு வெற்றியளிக்கும் முகமாக புதிய பிரச்சனைகள் எழும் என நாங்கள் எதிர்பார்ப்பதுடன், அந்த சமாந்தர ஓட்டத்தில் நாங்கள் அனைவரும் பெற்றுக்கொண்ட அனுபவம் எதிர்வரும் வருடங்களின் எங்களை ஓர் சிறந்த இடத்திற்கு கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை.

காப்புறுதி கைத்தொழிலுக்காக ஒழுங்கு விதிகளை செயற்படுத்தும் பொழுதும் கொள்கைகளைத் தயாரிக்கும் பொழுதும் இலங்கை காப்புறுதிச் சபை மற்றும் காப்புறுதி கைத்தொழில் ஆலோசனைசார் மற்றும் கூட்டிணைந்த அணுகுமுறையை பின்பற்றியமை இந்த வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஊக்கமளிக்கும் விடயம் என்பதை குறிப்பிடாமல் இருப்பது குறைபாடாக அமையக்கூடும்.

ஒழுங்குபடுத்துனருக்கு, அதன் அதே சுபாவத்துடன், ‘தாம் ஒழுங்குபடுத்தும்’ நிறுவனம் சட்டத்திற்கு இணக்கமாக உள்ளதா என பார்த்துக்கொள்ளல் சாட்டப்பட்டிருந்த போதிலும், அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கைத்தொழிற் துறையுள்ள நிதர்சனமான உலகத்தின் அனுபவத்தின் ஊடாகவன்றி தனித்து அதனை மேற்கொள்ள முடியாது என்பதனை நான் நம்புகின்றேன்.

அதேவேளை, 2015ம் ஆண்டு காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்காகவும் காப்புறுதிக் கைத்தொழிலுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனும் தயாரிக்கப்பட்ட கொள்கையை உறுதிப்படுத்துவதற்காக, ஒழுங்குபடுத்துனர்களினால் கைத்தொழிற் துறையில் அர்த்தமுள்ள ஆலோசனைகளை வழங்கும் மெச்சத்தக்க செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

கூட்டிணைந்த நடவடிக்கை மற்றும் கூட்டுறவு எனும் தலைப்புகள் இலங்கை காப்புறுதிச் சபையின் இன்னுமோர் குறிப்பிடத்தக்க சாதனையாகும் என்பதுடன், “காப்புறுதி ஒழுங்கமைப்பு பாதையை மாற்றியமைத்தல்” எனும் தலைப்பின் கீழ் 10வது ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் சர்வதேச மாநாடு 2015 ஜுலை மாதம் கொழும்பில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. சீனா, சீன தாய்பே, ஜப்பான், ஹொங்ஹொங், இந்தியா, மக்கோ, மாலைதீவு, பப்புவா நியூகினி, பிலிப்பைன்ஸ், கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா நாடுகளைச் சேர்ந்த காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களை ஒன்று சேர்த்த இந்த வைபவத்திற்கு காப்புறுதி கண்காணிப்பாளர் சங்கத்தின் (IAIS) செயலாளர் மற்றும் பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் (OECD), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல் (A2ii) எனும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தனர். இந்த மாநாடு மிக வெற்றிகரமாக அமைந்ததுடன், ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர் சங்கத்தின் முன்னெடுப்புகளுக்கான கலந்துரையாடல்கள் மற்றும் சீனாவில் பீஜிங் நகரில் நிரந்தர செயலகத்தை அமைத்தல் தொடர்பான முன்மொழிவு என்பவற்றுடன் மாநாடு நிறைவடைந்தது. தகவல் பரிமாற்றம் தொடர்பான கலந்துரையாடல் பத்திரத்தை தயாரிப்பதற்கு மாநாட்டினால் நியமிக்கப்பட்ட செயலாற்றுகை படையணியின் ஒரு பகுதி இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டது.

பொது காப்புறுதி நிறுவனங்கள் இரண்டு அவர்களின் தொழிற்பாடுகளை ஒன்றிணைப்பதற்கு

# தலைவியின் செய்தி தொடர்ச்சி

மேற்கொண்ட முயற்சியுடன், உள்நாட்டு காப்புறுதிக் கைத்தொழிலில் ஒன்றிணைக்கும் செயற்பாடுகளின் ஆரம்பமும் 2015ம் ஆண்டு நிகழ்ந்தது. எங்களைப் போன்ற சார்புசார் சிறிய பொருளாதாரத்தினுள், கலப்பிணைவு மற்றும் கைப்பற்றல் என்பவற்றின் ஊடாக ஒன்றிணைத்தல் செயற்பாடானது தங்களுடைய வாடிக்கையாளர்களின் தேவையை தீர்ப்பதற்கும் நாட்டின் காப்புறுதி பற்றிய விளக்கத்தின் கீழ் மட்டத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் மிகப் பலமான ஐந்தொகையைக் கொண்ட உள்நாட்டு காப்புறுதி கைத்தொழிலுக்கு காரணமாக அமையும்.

**முன்னோக்கிச் செல்லல்**

உள்நாட்டு சந்தையில் குறைந்த மட்ட காப்புறுதி ஊடுறுவலானது தொடர்ந்தும் காப்புறுதிக் கைத்தொழிற்துறை எதிர்கொள்ளும் பிரதான சவாலக அமைந்துள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தின் அதிகரிப்புடன், நடுத்தர வருமானம் பெறும் நாடாக பயணம் செய்வதனால், இந்த நாட்டின் நிதிப் பிரிவின் ஓர் அலகான காப்புறுதித்துறை, எதிர்காலத்திக் சவாலை எதிர்கொள்வதற்கு முறையொன்றினை அபிவிருத்தி செய்தல் கட்டாயமானதாகும்.

இந்த நாட்டிலிருக்கும் மற்றும் நீண்டகாலமாக மறைந்திருக்கும் திறனை நாங்கள் கைப்பற்ற வேண்டுமெனில், பொறுப்புடைய மக்கள் நிதி தயாரிப்பு மற்றும் ஊழியர்களைப் பயன்படுத்தவதுடன் அதனை தொடர்புபடுத்தல் கட்டாயமானதாகும். அதனால், காப்புறுதி கைத்தொழிற்துறையின் திறனை மீண்டும் மதிப்பீடுசெய்து, விசேடமாக இதுவரை மிகக் குறைந்தளவு சேவையைப் பெற்றுக்கொள்ளும் பிரிவான பொருளாதாரத்தில் கிராம மற்றும் நகரத்தில் வறுமையான பிரிவுகளில் பொருத்தமான குழு மற்றும் அவர்களின் தேவையை பூர்த்திசெய்யக்கூடிய பொருத்தமான நிதி உற்பத்திக்கு அவசியமான எதிர்பார்ப்பினை மக்களிடையே காப்புறுதியின் தேவை தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என நான் நம்புகின்றேன். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் அவர்களின் தேவையை பூர்த்திசெய்யக்கூடிய, அவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை கருத்தில்கொள்ளும் மற்றும் அவர்கள் இலகுவாக அடையக்கூடிய சேவைகள் தொடாபாக அவர்கள் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கை காப்புறுதிச் சபை உலக வங்கியுடன் இணைந்து 2016ம் ஆண்டு நுண் காப்புறுதித்துறையினை அபிவிருத்தி செய்வதற்கும் உருவாக்குவதற்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது. உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி நியமங்கள் மீது நுண் காப்புறுதி குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நாங்கள் கவனம் கொண்டுள்ளோம்.

**பாராட்டு**

இறுதியாக, எனது சபை அங்கத்தவர்களின் பெறுமதி மிக்க பங்களிப்பு மற்றும் தடங்களற்ற ஆதரவுக்கு எனது பாரட்டினைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன். அவர்கள் காப்புறுதிக் கைத்தொழிற்துறைக்கு தாக்கத்தினை உருவாக்கும் பல்வேறுபட்ட கொள்கையை தயாரித்தல் தொடர்பாக கலந்துரையாடும் பொழுதும் அதனை தீர்மானிக்கும் பொழுதும் அவர்களினால் தொடர்ச்சியாக வழங்கப்படும் பங்களிப்பானது ஒழுங்குபடுத்தலில் உயர் சொத்துகளில் ஒன்றாகும்.

அதேபோல், காப்புறுதி ஒம்புட்ஸ்மன், இலங்கை காப்புறுதி சங்கம் மற்றும் இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம் உட்பட காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் உள்ள பங்குதாரர்களுக்கு, அவர்களின் மிகச்சிறந்த ஒத்துழைப்பு மற்றும் எங்களுடன் பேணும் மனப்பூர்வமான உறவுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் சபையின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு அவர்களின் ஈடுபாடு தொடர்பாகவும் இலங்கை காப்புறுதி சபையின் இலக்கினை அடைவதற்கான அர்ப்பணிப்பு தொடர்பாகவும் எனது அங்கீகாரத்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். வருங்காலங்கள் இலங்கை காப்புறுதி சபையின் தொலைநோக்கு மற்றும் பணியினை பூர்த்திசெய்வதற்கான உபாயமார்க்கங்களை நிறைவேற்றுவதற்கு இந்தக் குழு தன் செயற்பாட்டைத் தொடரும் என நான் நம்புகின்றேன்.



**இந்திராணி சுகததாச**
*தலைவி*

*21 ஜுன் 2015*



“ 2015ம் ஆண்டு உலக வங்கியினால் நடாத்தப்பட்ட இலங்கைக்கான நிதித்துறையை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் மாதிரிகள் (மொடல்கள்) சிலவற்றில் இருந்து இலங்கையில் காப்பறுதித்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்வு செய்யப்பட வேண்டிய பிரதான துறைகள் அடையாளம் காணப்பட்டன. ”

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

காப்புறுதிச் சபையின் 2015ம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை காப்புறுதி கைத்தொழில் வரலாற்றினுள் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டு வந்த 2015ம் ஆண்டின் சவால்களை வெற்றிகரமாக பூர்த்திசெய்த ஆண்டாக இது விளங்குகின்றது. கலவை காப்புறுதி நிறுவனங்களை வேறாக்கல் அவ்வாறான செயற்பாடுகளில் ஒன்றாக இருப்பதுடன், அதனை நிதர்சனமாக்குவதற்கு கைத்தொழிற்துறையினதும் சபையினதும் கொள்கை மாறாத மற்றும் கடமையுணர்வு என்பன அவசியமாகியது. வியாபாரத்தினுள் வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பவற்றை உயர் மட்டத்தில் வெளிப்படுத்தி, 12 கலவை காப்புறுதி நிறுவனங்களில் 9 காப்புறுதி நிறுவனங்கள் தங்கள் வியாபாரத்தை ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்களாக வேறாக்கின.

மூலதன சீர்திருத்தம் அடுத்த முக்கிய மாற்றமாக அமைந்ததுடன், அது கைத்தொழிற்துறைக்கும் சபைக்கும் புதிய விடயமாகும். சபை உருவாகிய பொழுது அறிமுகப்படுத்திய எளிமையான விதிகளின் அடிப்படையில் அமைந்த மூலதன மாதிரியில் இருந்து சர்வதேச போக்குக்கு அமைவாக புதிய விதிகளில் அடிப்படையிலான மூலதன மாதிரிக்கு கைத்தொழிற்துறை மாற்றமடைந்தது. இந்த செயற்பாடுகளின் முக்கிய பகுதியான கைத்தொழிற்துறையினுள் பல்வேறு வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மட்டங்களினான ஆராச்சிகளின் பின்னர், இந்த மூலதன சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு மூலங்களில் இருந்து தொழில்நுட்ப உதவி மற்றும் மூலதன இயலளவு பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், காலதாமதமின்றி செயற்படுத்துவதற்கு விதிகளைத் தயாரிக்கும் இறுதிச் சுற்றானது சவாலானதாக அமைந்தது. தடைகள் சில இருந்த போதிலும், உரிய நேரத்தில் இலக்குகளை அடைவதற்கு எங்களால் இயலுமானது. எதிர்வரும் காலங்களில் கைத்தொழிற்துறையில் இடர் அடிப்படையிலான மூலதன கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுப்பதுடன், இது தொடர்பாக முறைமையான நிர்வாக பொறிமுறையொன்றை தயாரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை மறுசீரமைப்பு

இவ்வருடத்தினுள் மேற்குறிப்பிட்ட மூலதன மறுசீரமைப்புடன் காப்புறுதி கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு சபையினால் மேலும் சில ஒழுங்குவிதிகளை மறுசீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நடவடிக்கைகள் கைத்தொழிற்துறையுடன் மிக நெருக்கமாகவும் மனப்பூர்வமானதாகவும் ஆலோசனை வழங்கும் படிமுறையாக அமைந்தது. இந்த மறுசீரமைப்பின் மூலம் கைத்தொழிற்துறைக்கு அவசியமான வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பான விடயங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலில் கவனம் எடுக்கப்பட்டது. அப்பணிகளில் சில நிறைவடைந்துள்ளதுடன் ஏனைய விடயங்கள் தொடர்பாக பொது உடன்படிக்கைக்கு வருவதற்கு கைத்தொழிற்துறையுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மறுசீரமைப்பில் காப்புறுதி வழங்குனர்களின் புலன் விசாரணையாளர்களின் நடத்தை தொடர்பான வழிகாட்டல்கள், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் தரகர்கள் முறைப்பாடுகளைக் கையாளுதல் தொடர்பான வழிகாட்டல்கள், காப்புறுதி முகவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான சிறந்த நடைமுறைகள், முகவர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை, காப்புறுதி வழங்குனர்களுக்கான முதலீட்டு வழிகாட்டல்கள், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் முகவர்களின் பிரதான வழங்குனர்களின் பொறுப்புகளும் வகிபாகங்களும் தொடர்பான வழிகாட்டல்கள், அனுமதிக்கப்படாத உடல்நல காப்புறுதி பொதிகள் மீதான வழிகாட்டல்கள், பரிந்துரைத்தல் மாதிரிகள், ஆயுட் காப்புறுதி ஒதுக்குகளின் நிலுவை மீதான வழிகாட்டல்கள், கூட்டிணைந்த ஆளுகை விதிகள், மோட்டார் வாகன கோரிக்கைகளின் நிலுவை ஏற்பாடுகளின் மீள்திருப்புகை மீதான வழிகாட்டல்கள், மீள்காப்புறுதி வைப்புகளின் போதான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் திருத்தங்கள், சந்தை நடத்தை வழிகாட்டல்கள் போன்றன உள்ளடங்குகின்றன. மனக்குறையுடைய காப்புறுதி வைப்பாளர்களின் தேவைகளுக்கு சிறந்த தீர்வை வழங்குவதற்காக முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் படிமுறையை சீரமைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

## எதிர்கால முன்னெடுப்புகள்

2015ம் ஆண்டு உலக வங்கியினால் நடாத்தப்பட்ட இலங்கைக்கான நிதித்துறையை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் மொடல்கள் சிலவற்றில் இருந்து இலங்கையின் காப்புறுதித்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்வு செய்யப்பட வேண்டிய பிரதான துறைகள் அடையாளம் காணப்பட்டன. இடர் அடிப்படையிலான மூலதன நிர்வாகத்திற்கு அமைவாக, இடர் அடிப்படையிலான மேற்பார்வை முறைமை, காப்புறுதி கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தை தயாரித்தல் திருத்துதுல் மற்றும் காப்புறுதி கண்காணிப்பாளர்களின் சர்வதேச சங்கத்தின் மத்திய காப்புறுதி விதிக்கமைய ஒழுகுதல், விசேட நுண் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை அபிவிருத்தி செய்தல், உற்பத்தியின் ஊடாக சந்தை அபிவிருத்திச், செயற்பாடு, சந்தைப்படுத்தல் மற்றும் நிறுவனப் புத்தாக்கம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

## கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை

கைத்தொழிற்துறையின் உந்தத்துடன் இணைந்து தொடர்ந்து உயர் வளர்ச்சியினை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் இந்த வருடமும் பிரதிபலித்ததுடன் அதன் மொத்த வளர்ச்சி வீதம் 16.12% வீதமாகும். இது 2011ம் ஆண்டின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட மிக உயர்ந்த தொகையாகும். இந்த வருடம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்களும் கிடைக்கப்பெற்றதனால், இந்த அறிக்கை முழுமையான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயற்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது.

2015ம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் 13% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், இது 2014ம் ஆண்டைவிட 4% வீதம் அதிகரித்துள்ளது. இந்த வருடமும் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் (20%) பொதுவியாபாரத்தின் (13%) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சியைக் கடந்து சென்றது. இந்த வருடம் மோட்டார், தீ, கடல் பயண மற்றும் நானாவித காப்புறுதிகள் என்பன நேர்மறை வளர்ச்சியைக் காட்டியதுடன், மோட்டார் காப்புறுதி 19% வீத வளர்ச்சியைக் காட்டியதுடன், இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 62% வீதமாகும். அடுத்த விடயம் பொதுக் காப்புறுதி வியாபாரம் 2014ம் ஆண்டு பதிவு செய்த 109% வீத வளர்ச்சியில் இருந்து 99% வீதமாக குறைவடைந்தது. 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 புள்ளிகளினால் மோட்டார் வாகன வியாபாரத்தின் தேறிய கோரிக்கைகளில் விகிதமானது அதிகரித்துள்ள போதிலும் கலவை விகிதம் குறைவடைந்ததன் காரணமாக 19% வீதத்தினால் தேறிய செலவுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. மற்றைய குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக ஊடுருவல் மட்டம் 0.58 இருந்து 0.62 ஆக அதிகரித்ததைக் குறிப்பிட முடியும். அத்துடன் விசேடமாக தீ உப வகை இரட்டிப்பானதுடன், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வீதமானது உயர் பிரதிபலிப்பு மட்டத்தில் காணப்பட்டது.

2011ம் ஆண்டிலிருந்து அதியுயர் வளர்ச்சியான 20% வீத வளர்ச்சியை நீண்ட கால வியாபாரத்தின்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு தொடர்ச்சி

மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் வெளிப்படுத்தியது. இலங்கை காப்புறுதிச் சங்கத்தினால் கடந்த செப்டெம்பர் மாதம் ஆயுட் காப்புறுதி மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன், இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. எனினும், ஆயுட் காப்புறுதியின் ஊடுருவலானது 0.43 இருந்து 0.48 வீதமாக மட்டுமே அதிகரித்திருந்தது.

முதிர்ச்சிக்கான சலுகைகளுக்கான கொடுப்பனவுகள் இவ்வருடம் குறிப்பிடத்தக்களவு 20% அதிகரித்துள்ளதுடன், மொத்தக் கோரிக்கையில் அரைவாசிக்கு மேற்பட்டவை மேற்கொள்ளப்பட்டது. மற்றைய குறிப்பிடத்தக்க விடயமாக அடைக்கலதாரர் நன்மைகள் 27% வீதத்தினால் குறைவடைந்தமையை குறிப்பிட முடியும்.

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வீதம் 1.09% வீதத்துடன் ஏனைய விரிவடைந்துவரும் நியதிகளுடன் தொடர்ச்சியாக ஊடுறுவல் மட்டம் குறைவடைகின்றது. எனினும், 2014ம் ஆண்டு 1.01% வீத ஊடுருவல் மட்டத்துடன் ஒப்பிடுகையில் 8% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண அதிகரிப்பு காரணமாக தனிநபருக்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வீதத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் காப்புறுதி அடர்த்தியானது 2014ம் ஆண்டு ரூபா 5,074 இருந்து 2015ம் ஆண்டு ரூபா 5,838 னால் அதிகரித்தது.

2011ம் ஆண்டிலிருந்து காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களின் பெறுமதியானது நிலையாக அதிகரித்ததுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10% வீதத்தினால் வளர்ச்சியைக் காட்டியது. எனினும், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி வீதம் குறைவடைந்ததை அவதானிக்க முடிந்தது. 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பங்குதாரர்கள் உட்பட நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகள் 24% வீத குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை காட்டியதுடன், பொதுக் காப்புறுதி மற்றும் பங்குதாரர்கள் 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களின் விநியோக ஊடகத்தை காப்புறுதி முகவர்கள் ஆக்கிரமிப்பு செய்தனர். பொது காப்புறுதித் துறையில் காப்புறுதி வழங்குனர்களின் நேரடி வியாபார ஊடகத்தை முகவர்கள் கைப்பற்றினர்.

### தரகர் வியாபாரத்தின் செயலாற்றுகை

2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 11% வீத பங்கிளைப்பு வளர்ச்சியை தரகர் கம்பனிகள் கொண்டிருந்தன. இந்த பங்களிப்பானது பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண வருமானத்தில் முறையே 98.74% மற்றும் 1.26% வீதங்களைக் கொண்டிருந்தன.

### சர்வதேச உறவுகள்

2015ம் ஆண்டு இலங்கை காப்புறுதி சபைக்கு விசேடமானதாகும். இவ்வருடம் இலங்கை காப்புறுதிச் சபை “காப்புறுதி ஒழுங்கமைப்பு பாதையை மாற்றியமைத்தல்” எனும் தலைப்பின் கீழ் ஆசியாவின் பல்வேறுபட்ட காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி கண்காணிப்பாளர் சங்கத்தின் (IAIS) செயலாளர் மற்றும் பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் (OECD), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல் (A2ii) எனும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றிய 10வது ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் சர்வதேச மாநாடு நடாத்தப்பட்டது. ஒவ்வொருவரினதும் அனுபவங்கள் தொடர்பாக சந்தித்துக் கற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் மற்றும் ஆசிய ஒழுங்கமைப்பாளர்கள் கலந்துரையாடிய கொழும்பு பிரகடன உடன்பாட்டுடன் நிரந்தரமான செயலகத்தை நிறுவுவதற்கான முன்மொழிவு உட்பட 10 வருடங்கள் பழமையான AFIR தொடர்பாக மிக நேர்மறையான விளைவுகளையும் மாநாடு வழங்கியது. இயலளவு கட்டியெழுப்பல், பிரதேச ஒத்துழைப்பு மற்றும் AFIR இன் ஆளுகை கட்டமைப்பு தொடர்பாக ஆசியாவின் ஒழுங்கமைப்பாளர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக கோட்பாட்டு பத்திரம் அபிவிருத்தி செய்வதற்காக இலக்கு குழு நிறுவப்பட்டது. இந்த கோட்பாட்டுப் பத்திரங்கள் சீன தாய் பாயில் நடைபெறும் 11 வது AFIRஇல் சேர்த்துக்கொள்ளப்படும். தற்போது AFIR இன் தலைமைப் பதவி சீன காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவிடம் உள்ளதுடன் செயலக உதவி சீன காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்படும். இலங்கை காப்புறுதிச் சபையும் இலக்குக் குழுவில் ஓர் அங்கத்தவராக இருப்பதுடன், தகவல் பரிமாற்றம் தொடர்பான பத்திரத்தின் மீது மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலில் இதற்கும் பொறுப்புள்ளது.

### பாராட்டுரை

இந்த முடிவுரையில், வருடம் முழுவதிலும் எங்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலுக்காக தலைவி மற்றும் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அவர்களில்லாமல் நாங்கள் எங்கள் செயற்பாடுகளில் வெற்றியை அடைந்திருக்க முடியாது. ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் மாநாட்டை ஒழுங்கு செய்வதற்கு எங்களுக்கு பக்கபலமாக இருந்த தலைவிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது நன்றியை ஐஏஎஸ்எல், எஸ்எல்ஐபிஏ மற்றும் எஸ்எல்ஐஐ தலைவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சபைக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக எனது குழுவைச் சேர்ந்த பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான இலக்கினை அடைவதற்கு அவர்கள் வழங்கிய உயர்ந்த மட்ட அர்ப்பணிப்பிற்கும் கடும் உழைப்பிற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**தமயந்தி பர்ணாந்து**
*பணிப்பாளர் நாயகம்*

*21 ஜூன் 2015*



# சபை அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள்

# சபை அங்கத்தவர்கள்






1. **திருமதி இந்திராணி சுகததாச**
   *தலைவி*

2. **திரு பி. சமரசிறி**
   *அங்கத்தவர்*

3. **செல்வி புஸ்பா வெல்லப்பிலி**
   *அங்கத்தவர்*

4. **திரு டி என் ஆர் சிறிவர்தன**
   *அங்கத்தவர்*

5. **டாக்டர் ஏ ஏ ஸஹாபிர் குலாம் குசைன்**
   *அங்கத்தவர்*

6. **திரு ஜேர்மி போலிங்**
   *அங்கத்தவர்*

# சபை அங்கத்தவர்கள் பற்றிய சுருக்கக்குறிப்பு

### (1) திருமதி இந்திராணி சுகததாச
### தலைவி

திருமதி இந்திராணி சுகததாச 1977 இல் இலங்கை நிர்வாக சேவையின் அங்கத்தவராக திட்ட அமுலாக்கல் அமைச்சில் தனது பணியை ஆரம்பித்து இன்று சிரேஸ்ட நிர்வாக சேவையாளராக தன்னை நிலைநிறுத்தியுள்ளார். 35 ஆண்டுகளுக்கும் அதிகமாக பொதுத்துறையில் அவராற்றிய கௌரவமிக்க பணிகளில் பல்வேறுப்பட்ட அமைச்சுகளில் வகித்த பல்வேறுபட்ட சிரேஸ்ட பதவிகளையும் பிணையங்களும் பரிவர்த்தணையும் ஆணையத்தில் வகித்த தலைவர் பதவியையும் குறிப்பாக உள்ளடக்க முடியும்.

தற்போது அவர் இலங்கை காப்புறுதிச் சபையில் தலைவியாக இருப்பதுடன், தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் களுபோவிட்டிய தேயிலைத் தொழிற்சாலை லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருக்கின்றார். முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை தேயிலைச் சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய இளைஞர் மன்றம், பெருந்தோட்ட முகாமைத்துவத்துக்கான தேசிய கல்வி நிறுவனம் மற்றும் தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றின் சபைகளிலும் பணியாற்றியுள்ளார்.

திருமதி இந்திராணி சுகததாச கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான பட்டம் பெற்றிருப்பதுடன், அவுஸ்திரேலியாவின் மொனாச் (Monash) பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டப் பின்படிப்பு (MBA/MPA) பட்டமும் பெற்றுள்ளார். கௌரவிக்கப்பட்ட எச் ஹம்ப்ரே பெலோசிப் (புல்பிரைட்) விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

திருமதி சுகததாச, வெளிநாடுகளுக்கு அனேக தூதுக் குழுக்களின் இலங்கைக்கான பிரதிநிதியாகச் சென்றுள்ளதுடன், சர்வதேச அரங்குகள் பலவற்றில் பங்கேற்பாளராகவும் இருந்துள்ளார்.

2013 இல் அவுஸ்திரேலியன் அலுமினி எக்ஸலன்ஸ் விருது மற்றும் முகாமைத்துவத்தில் உள்ள பெண்களினால் வழங்கப்பட்ட தங்க விருது ("Inspirational Woman 2014/15") உள்ளடங்களாக, நாட்டின் பொதுத் துறை சேவை மற்றும் பல்வேறு துறைகளில் தலைமைத்துவம் என்பவற்றிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அவர் பெற்ற அனேக பாராட்டுக்களின் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.

### (2) திரு பி சமரசிறி

திரு பி சமரசிறி தற்போது இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராக சேவையாற்றுகின்றார். இப்பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியில் உதவி ஆளுனர், நாணயச் சபையின் செயலாளர், வங்கி மேற்பார்வை அலகின் இணக்கப்பாட்டு அலுவலராகவும் மற்றும் பணிப்பாளராகவும் பல்வேறுபட்ட சிரேஸ்ட நிலைப் பதவிகளை வகித்துள்ளார். அத்துடன் இலங்கை வங்கியாளர் நிறுவனம் மற்றும் கடன் தகவல்கள் சபை என்பவற்றின் தலைவராகவும மற்றும் இலங்கை நாணயப் பரிமாற்று ஆணைக்குழுவில் அங்கத்தவராகவும் இருக்கின்றார்.

திரு சமரசிறி, பொருளாதாரத்தில் கலைமானி (கௌரவம்) பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தை ஐக்கிய அமெரிக்க நாட்டின் கென்சாஸ் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டுள்ளார். திரு சமரசிறி இலங்கை மத்திய வங்கியில் சேவையாற்றிய தனது 33 வருட காலத்தில் புள்ளி விபரவியல், பொருளாதாரக் கொள்கைகள், நிதி மற்றும் நிதி சாரா நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல், நிதி முறைமையின் ஸ்தீரத்தன்மை, கூட்டிணைந்த நல்லாட்சி, நாணய முகாமைத்துவம், வெளிநாட்டு நாணயக் கொள்கைகள், நிதிப் புலனாய்வு மற்றும் பிராந்திய அபிவிருத்தி போன்ற விடயப்பரப்புகளில் அனுபங்களைப் பெற்றுள்ளார்.

திரு சமரசிறியினால் எழுதப்பட்ட "මුදල් ගනුදෙනු, බැංකු සහ ආර්ථිකය", "මූලික ආර්ථික විද්‍යා මූලධර්ම විග්‍රහය" மற்றும் "ආර්ථික විද්‍යා මූලධර්ම සහ ප්‍රතිපත්ති" எனும் மூன்று புத்தகங்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், பல்வேறுபட்ட வெளியீடுகள் மற்றும் பத்திரிகைகளில் பொருளாதாரம் மற்றும் நிதியில் தலைப்புகளில் பல்வேறுபட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

### (3) செல்வி புஸ்பா வெல்லப்புலி

செல்வி புஸ்பா வெல்லப்புலி இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராவார், இவர் 34 ஆண்டு கால பொதுச் சேவைத் துறையில், ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர், பொதுத் திறைசேரியின் பொது நிதித்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வீட்டு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தைகள் நல அமைச்சின் உதவி ஆணையாளர் என பல்வேறுபட்ட பதவிகளை வகித்துள்ளார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணக்கு மற்றும் புள்ளிவிபரவியல் கல்வியில் கௌரவ விஞ்ஞானமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளதுடன், நெதர்லாந்து ரொட்டர்டாமில் உள்ள வீட்டு மற்றும் நகர அபிவிருத்திக் கற்றைகள் நிறுவனத்தில் நகர அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் மீயுயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியும் ஆவார்.

செல்வி வெல்லப்புலி தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளர் பதவியை வகிக்கின்றார். அத்துடன், இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையில் வெளியில் இருந்து வருகை தரும் பணிப்பாளராகவும் இருக்கின்றார்.

### (4) திரு டி என் ஆர் சிறிவர்தன

திரு டி என் ஆர் சிறிவர்தன பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியில் கலைமானி (கௌரவம்) பட்டம், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட எல்எல்எம் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மாணவருமாவார். இவர் தொழிற்துறையில் ஓர் சட்டத்தரணியாவார். திரு சிறிவர்தன கம்பனிகள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 1988ம் ஆண்டு கம்பனிகள் அத்தியட்சகராக இணைந்தார். தற்போது இவர் கம்பனிகளின்

# சபை அங்கத்தவர்கள் பற்றிய சுருக்கக்குறிப்பு தொடர்ச்சி

பதிவாளர் நாயகமாக பணிபுரிகின்றார். திரு சிறிவர்தன, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தவராகவும், இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையினதும் மற்றும் இலங்கை பிணையங்களும் பரிவர்த்தனைகளும் ஆணையத்தினதும் வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தவராகவும் பணியாற்றுகின்றார்.

### (5) தேசபந்து கலாநிதி அலி அஸ்கர் ஷபீர் குலாம்ஹுசைன்

தேசபந்து கலாநிதி அலி அஸ்கர் ஷ பீர் குலாம்ஹுசைன் ஆதாம் ஜப்பான், டோக்கியோவில் பிஎச்டி ஐக்கிய இராஜ்ஜியத்தின் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் பட்டத்தைப் பெற்றுள்ளார். கலாநிதி குலாம்ஹுசைன் "தேசபந்து மானவஹித்தவாதி, லங்காபுத்ர" போன்ற கௌரவத் தலைப்புகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இலங்கை காப்புறுதிச் சபை மற்றும் இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருக்கின்றார் அத்துடன் சமாதான நீதவான் (நாளாடாவிய) ஆகவும் உள்ளார்.

அத்துடன், கலாநிதி குலாம்ஹுசைன் ஆதாம் கப்பிடல் பிஎல்சி, ஆதாம் கார்பன்ஸ் (பிரைவட்) லிமிடட், சிலோன் அன்ட் பொரின் ட்ரா்ஸ் பிஎல்சி, ஆதம் எக்ஸ்போ (பிரைவட்) லிமிடட், ஸ்பைஸ் ஒப் லைப் (பிரைவட்) லிமிடட், நெட்வோர்க் கொமியூனிகேஸன்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆதம் அப்பரல்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆதம் மெட்டல்ஸ் (பிரைவட்) லிமிடட், ஜோர்ஜியோ மொரன்டி (பிரைவட்) லிமிடட், சோனான்ஷி இன்வெஸ்ட்டன்ஸ் (பிரைவட்) லிமிடட், சோனாக்ஷி ஜெம்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆதம் எயர் கண்டிஸனர்ஸ் (பிரைவட்) லிமிடட், ஆதம் ஒட்டோ மொபைல்ஸ் (பிரைவட்) லிமிடட், கொழும்பு அப்போதிகரிஸ் கம்பனி லிமிடட், பிசினஸ் சேம்பர் ஒப் கொமர்ஸ், ஹமில்டன் ரிசோர்ட்ஸ் (பிரைவட்) லிமிடட், சிலோன் அன்ட் பொரின் ரேட் சர்கி-டெக் (பிரைவட்) லிமிடட், கொழும்பு பிரைட் அனட் ட்ரான்ஸ்போர்ட் லிமிடட், டொட்வெல் அன்ட் கம்பனி லிமிடட் என்பவற்றில் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார்.

### (6) திரு ஜெரோமி போலிங்

லண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்தின் வியாபார நிர்வாக முதுமானிப் பட்டத்தை சிட்னி பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டுள்ளார்.

20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் காப்புறுதித்துறையில் பெற்றிருப்பதுடன், இக்காலத்தில் இலங்கை, மாலை தீவு மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளில் அமைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி/மீள்காப்புறுதி தரகர் எனும் இரு துறைகளிலும் பணியாற்றியுள்ளார்.

தற்போது, என்எச்ஜே இடர் முகாமைத்துவ சேவைகள் தனியார் நிறுவனம், ஒக்டகன் கென்சல்டன்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் என்ட்லஸ் அவுட்டோர் தனியார் நிறுவனம் என்பவற்றில் பணிப்பாளராக கடமைபுரிகின்றார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு






1. **திருமதி தமயந்தி பிரணாந்து**
   (பணிப்பாளர் நாயகம்)

2. **திருமதி. சமரி ஏக்கநாயக்க**
   (பணிப்பாளர் கண்காணிப்பு)

3. **திரு. ராஜன் நிருபசிங்கம்**
   உதவிப் பணிப்பாளர் சட்டம்)

4. **திரு சுதீர சேனாரத்ன**
   (பணிப்பாளர் புலனாய்வு)

5. **திரு ரணில் அங்குணவெல**
   (பணிப்பாளர் சட்டம்)

6. **திருமதி. சாயா வித்தானவாசம்**
   (பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்)

7. **செல்வி சரோஜா குணத்திலக்க**
   (காப்பீட்டுக் கணிப்பீட்டு ஆலோசனையாளர்)

# ஊழியர் குழாம்



1. திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
2. திருமதி சந்திமா கம்புருகமுவ
3. திருமதி பிரயங்கி டி. சில்வா
4. திருமதி. கோகிலா சிறிவர்தன
5. திருமதி டெசிகா ரத்நாயக்க
6. திருமதி. உபேந்திரா செனவிரத்ன
7. திரு. சமிந்த லால் குமார
8. செல்வி. உபலக்ஷி ரணசிங்க
9. திரு எத்திராஜ் ஶ்ரீகாந்தன்
10. திரு. சரித்த விக்ரமசிங்க
11. திருமதி சுஜீவா ரணசிங்க
12. திரு. எச்.பி. அசங்கா
13. திரு. சனத் உதயங்க
14. திருமதி. லக்மாலி அல்கம
15. திரு லக்ஷ்மன் விஜேசிங்க
16. திரு லக்மல் களுபோவில
17. திருமதி கௌஷாலி தயாரத்ன



# ஊழியர் குழாம்



18. திருமதி ஹசினி பெரேரா
19. திருமதி. சஷானி பிரேமலால்
20. திருமதி. ருவினி லியனகே
21. திருமதி மெரினா டயஸ்
22. திருமதி. திலினி வாகிஸ்ட
23. திருமதி டி.டபிள்யூ.எஸ்.எஸ். சுப்புலி
24. திருமதி. தனுஜா அன்டனி
25. திருமதி. வீணா டினேக்கா
26. திருமதி சியாமளி அத்தனாயக்க
27. திரு ரொஷான் த கொஸ்தா
28. திருமதி. ஷனிகா நாணயக்கார
29. திருமதி. மல்ஹாரி விக்ரமசிங்க
30. திரு. ஜே. எம் ஜயதிஸ்ஸ
31. திரு. சமன் சேனாதீர
32. திருமதி. லசந்தி தொட்டஹேவா
33. திரு. பிம்சார விஜேசிங்க
34. திருமதி சாரிகா வத்துஹேவா (சமூகமளிக்கவில்லை)
35. திருமதி. சத்துரி பண்டார (சமூகமளிக்கவில்லை)
36. திருமதி துசாரி விஜேகுணவர்தன (சமூகமளிக்கவில்லை)





# மீளாய்வுகள்


பொது மீளாய்வு 22
புள்ளிவிபர மீளாய்வு 28

தொழிற்பாடுகளின் மீளாய்வு
- மேற்பார்வை மீளாய்வு 60
- ஒழுங்கமைப்பு மீளாய்வு 64
- புலனாய்வு சார்ந்த மீளாய்வு 67
- சந்தை அபிவிருத்தியும் மற்றும் வெளியக உறவுகளும் மீளாய்வு 70
- நிர்வாக மீளாய்வு 72
- நிதியியல் மீளாய்வு 73

# பொது மீளாய்வு

## சட்ட மற்றும் ஒழுங்கமைத்தல் மீளமைப்பு நிர்வாகம்

### சட்டவாக்கம்

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் நோக்கத்துடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மையுடனும் தொழில் சார்ந்ததாகவும், விவேகமானதாகவும் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வது இலங்கை காப்புறுதிச் சபையின் (இதன் பின்னர் "சபை" என அழைக்கப்படும்) நோக்கமாகவும் பொறுப்பாகவும் உள்ளது.

2000 ஆண்டின் 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டம் (இதன் பின்னர் "சட்டம்" என அழைக்கப்படும்), காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் நட்டங்களை சீராக்குபவர்கள் ஆகியோருக்கு ஒழுங்கமைப்புடனும் மேற்பார்வையுடனும் தொடர்புடைய சட்டபூர்வமான வரம்புகளை வழங்குகின்றது.

இந்தச் சட்டம், 2007ம் ஆண்டு 27ம் இலக்கம் மற்றும் 2011ம் ஆண்டு 03ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டது.

### துணைச் சட்டவாக்கம்

காப்புறுதி தொழிலை வலுப்படுத்துவதற்கு சட்டத்திற்குள் அனேக திருத்தங்கள் உட்சேர்க்கப்பட்டது. இந்த அறிக்கையின் ஒழுங்குபடுத்தல் மீளாய்வில் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட சட்ட சீர் திருத்தங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### ஒழுங்குபடுத்தல் மறுசீரமைப்பு

#### விதிகள்

#### காப்புறுதி முகவர்களின் (தனிப்பட்டவர்கள் அல்லாத) பதிவிற்கான மாதிரியை குறித்துரைக்கும் விதிகள்

காப்புறுதிச் சபை 2015ம் ஆண்டு காப்புறுதி முகவர்களின் (தனிப்பட்டவர்கள் அல்லாத) பதிவு செய்தலுக்கான விதிகளை 27 மே 2015ம் திகதி மற்றும் இலக்கம் 1916/10 உடைய அதிவிசேட வர்த்தகமானி அறிவித்தலின் ஊடாக வெளியிட்டது. இந்த விதிகள் சட்டத்தின் 10 மே 2014ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1861/45ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகைமை விதிகளை பூர்த்திசெய்யும் 78(1)ம் பிரிவின் கீழ் தொடர்புடைய காப்புறுதி முகவர்களை (தனிப்பட்டவர்கள் அல்லாத) பதிவுசெய்வதற்கு காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் பராமரிக்கப்படும் காப்புறுதி முகவர்களின் (தனிப்பட்டவர்கள் அல்லாத) பதிவேட்டின் மாதிரியை அறிமுகப்படுத்தின.

#### காப்புறுதிக் கம்பனிகளுக்கு இடர் அடிப்படையினா மூலதனத்திற்கான விதிகளை அறிமுகப்படுத்தல்

சபை, 15 டிசம்பர் 2015ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1945/19ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக 2015ம் ஆண்டு கடன் தீர்வாற்றல் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளை வெளியிட்டது. உலக வங்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட இடர் அடிப்படையிலான மூலதன சட்டகத்தின் அடிப்படையில் இந்த இடர் அடிப்படையிலான மூலதன (RBC) விதிகள் அமைந்துள்ளன.

இந்த விதிகள் 1 ஜனவரி 2016ம் திகதியிலிருந்து ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களுக்கும் பிரயோகிக்கப்படும். அத்துடன், காப்புறுதி வழங்குனர்களுக்கு பிரயோகிக்கப்பட்ட 2002ம் ஆண்டின் கடன் தீர் எல்லை (நீண்ட கால காப்புறுதி) விதிகள் மற்றும் 2004ம் ஆண்டின் கடன் தீர் எல்லை (பொதுக் காப்புறுதி) விதிகள் இத்தால் மீளப்பெறப்படுகின்றது

#### ஒழுங்குவிதிகள்

#### சபைக்கு காப்புறுதி வழங்குனர்களினால் செலுத்தப்பட வேண்டிய வருடாந்த கட்டணத்தை அதிகரிப்பதற்கான ஒழுங்கு விதிகள்.:

சபை, 25 மார்ச் 2015ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1907/17ம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக காப்புறுதிச் சபையின் ஒழுங்குவிதிகளின் 2015ம் ஆண்டு திருத்தங்களை வெளியிட்டது.

முதலாவது தொழிற்பாட்டு கலெண்டர் வருடத்திற்கு காப்புறுதி வழங்குனர்களினால் ஒவ்வொரு வகை காப்புறுதி வியாபாரத்திற்கும் செலுத்த வேண்டிய வருடாந்தக் கட்டணம் ரூபா 100,000 ஆனது, 2011ம் ஆண்டு 3ம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் (இதன் பின்னர் திருத்தச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 53ம் பிரிவின் கீழ் புதிதாக வேறாக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் முதலாவது தொழிற்பாட்டு வருடத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் .10% வீதம் வருடாந்தக் கட்டணமாகவும் மற்றும் அதிலிருந்து மற்றும் இரண்டாவது கலெண்டர் வருட தொழிற்பாட்டில் எழுதப்பட்ட மொத்த தவணைக் கட்டண வருமானத்தில் .075% வீதமாக இருந்த வருடாந்தக் கட்டணம் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 0.10% வீதமாகவும் அதிகரிக்கப்பட்டு புதிய ஏற்பாடு சேர்க்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளது.

#### சட்டத்தின் 96A பிரிவின் கீழ் பணிப்புரைகளை வழங்குதல்

#### 2015 மார்ச் 26ம் திகதி வழங்கப்பட்ட #6/#6 (A) பணிப்புரை

**- காப்புறுதிக் கோரிக்கைகளை தீர்த்தல்**

சட்டத்தின் 96A பிரிவு நியதிகளுக்கு அமைவாக அனைத்து காப்புறுதி வழங்குனர்களுக்கும் கீழ்வரும் பணிப்புரையை சபை விநியோகித்தது.

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களினால் விநியோகிக்கப்பட்ட நீண்ட கால அல்லது பொதுக் காப்புறுதிக் கொள்கையில் இருந்து எழும் செலுத்த வேண்டிய உரிய கோரிக்கைத் தொகையை செலுத்த வேண்டும்

(i) கோரிக்கை உருவாக்கப்பட்டு மற்றும் விடுவிப்பு ஆணவணங்களின் பற்றுச்சீட்டு நேரத்திலிருந்து 14 நாட்களினுள்

(ii) கோரிக்கையாளர்களினால் அடையாளம் உருவாக்கப்படும் வரை

மேற்குறித்த பணிப்புரை 1962ம் ஆண்டு 25ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் 1987ம் ஆண்டு 30 இலக்க ஒழுங்குவிதிகளின் முன்மொழியப்பட்ட நீக்கல்களின் நோக்கத்துடன் விநியோகிக்கப் பட்டது.

#### சுற்றறிக்கைகள்

#### 9 ஒக்டோபர் 2015ம் திகதி விநியோகிக்கப்பட்ட 36ம் இலக்க சுற்றறிக்கை வெளிநாட்டு சுகாதார காப்புறுதி - 30 ஒக்டோபர் 2013ம் திகதி வெளியிடப்பட்ட 32ம் இலக்க சுற்றறிக்கையின் நீக்கம்

மீள் காப்புறுதி வியாபாரம் தவிர்த்து, சட்டத்தின் கீழ் இலங்கையில் உள்ள எந்த நபரும், சபையின் எழுத்து மூலமான அனுமதியின்றி நேரடியாக அல்லது மறைமுகமாக ஏதேனும் காப்புறுதி வியாபாரத்தை எந்தவொரு காப்புறுதி வழங்குனருடனும் காப்புறுதி வியாபாரத்தைப் பதிவு செய்யக்கூடாது.

5 ஜுன் 2002ம் திகதியுடைய 4ம் இலக்க சுற்றறிக்கை நியதிகளின் படி, காப்புறுதி வழங்குனர் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவினை மேற்கொண்டிராத போதிலும், அனுமதிப்பத்திரம் பெற்ற அல்லது வெளிநாட்டில் பதிவுசெய்த காப்புறுதி வழங்குனருடன் இலங்கையில் உள்ள யாரேனும் நபர் நேரடியாக அல்லது மறைமுகமாக சுகாதார மற்றும் பயண காப்புறுதியை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

5 ஜுன் 2002ம் திகதியுடைய 4ம் இலக்க சுற்றறிக்கை ...ம் திகதியுடைய 4ம் இலக்க சுற்றறிக்கையில் குறைபாடுகள் காணப்பட்டதனால், அது கீழ்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக அந்த காப்புறுதி வழங்குனர் / வழங்குனர்கள் பதிவு செய்திருக்காத போதிலும் இலங்கையில் உள்ள ஒரு நபர் நேரடியாக அல்லது மறைமுகமாக சுகாதார மற்றும் பயணக் காப்புறுதியைப் (சபையில் இருந்து முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல்) பெற்றுக்கொள்ளும் வகையில் 30 ஒக்டோபர் 2013ம் திகதி சுற்றறிக்கையினால் திருத்தம் செய்யப்பட்டது.

1. வெளிநாட்டுக்கு பயணம் செய்யும் நோக்கத்துடன்:
2. பயணம் செய்யும் காலத்திற்கு : மற்றும்
3. சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதித் தரகர் கம்பனிகளின் ஊடாக அந்த காப்புறுதி பெறப்படுமாயின்.

# பொது மீளாய்வு தொடர்ச்சி

அத்துடன், சுற்றறிக்கை 32 சபையில் பதிவுசெய்த காப்புறுதிக் கம்பனிகளிடம் அவ்வசதிகள் கிடைக்கப்பெறாவிடின், சட்டத்தின் 101ம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக சபையிடம் எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், இலங்கையில் உள்ள யாரேனும் ஒரு நபர் சுகாதார மற்றும் பயணக் கொள்கைகளை பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கின்றது.

காப்புறுதி முகவர் கம்பனிகளினாலும் மற்றும் தரகுக் கம்பனிகள் அல்லாத நிறுவனங்களினாலும் அவர்களின் இலங்கையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டு சுகாதார காப்புறுதிக் கொள்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையிடம் இருந்து அனுமதிகள் கோரப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வேண்டுகோள்களைக் கருத்தில் கொண்டதன் பின்னர் சுற்றறிக்கை 32ஐ இரத்துச்செய்து அதற்குப் பதிலாக புதிதாக 36 ம் இலக்க சுற்றுநிருபத்தை வெளியிட்டது.

36ம் இலக்க சுற்றறிக்கையில் உள்ள குறிப்பிடத்தக்க பண்புகள் பின்வருமாறு அமைகின்றது:

1. இலங்கையில் உள்ள ஒரு நபர், வெளிநாட்டு காப்புறுதி வழங்குனரிடமிருந்து அல்லது வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து ஏற்கனவே சுகாதார காப்புறுதியை இந்த சுற்றறிக்கை அமுலாக்கல் திகதிக்கு முன்னர் அதாவது 9 ஒக்டோபர் 2015ம் திகதிக்கு முன்னர் பெற்றிருந்தால், இந்த காப்புறுதியை நீடிப்பதற்கு / புதுப்பிப்பதற்கான கோரிக்கை அந்தத் தரகர் இதன் கீழ் விசேடமாக அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும், சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தரகர் கம்பனியின் ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. தரகர் கம்பனி, அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, சபைக்கு எழுத்து மூலமான வேண்டுகோளை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அந்த கோரிக்கை கீழ் வருவனவற்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

    i. வெளிநாட்டு காப்புறுதி வழங்கு னரிடமிருந்து அல்லது வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் அந்த சுகாதார காப்புறுதி வகை, சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள காப்புறுதி வழங்குனர்கள் எவரிடமும் இல்லை என்பதை இலங்கை காப்புறுதி சங்கம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

    ii. மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு காப்புறுதி வழங்குனரினால் அல்லது வெளிநாட்டு நிறுவனத்தினால் வழங்கப்படும் அந்த சுகாதார காப்புறுதிக் கொள்கை பற்றிய விபரங்கள்.

    iii. அந்த சுகாதார காப்புறுதி பொதியை வழங்கும், வெளிநாட்டு காப்புறுதி வழங்குனர் அல்லது வெளிநாட்டு நிறுவனம், அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளதுடன் மற்றும் அல்லது சர்வதேச காப்புறுதி கண்காணிப்பாளர்கள் சங்கத்தின் அங்கத்தவராக அந்த காப்புறுதி ஒழுங்குபடுத்தல் நிறுவனம் இருப்பதுடன் அதன் கீழ் சுகாதார காப்புறுதி பூட்கையை வழங்குவதற்கு வெளிநாட்டில் பதிவுசெய்துள்ளது.

    iv. இலங்கையில் உள்ள நபரின் சார்பில் காப்புறுதி தரகர் முன்வைக்கும் ஒவ்வொரு வெளிநாட்டு சுகாதார காப்புறுதிப் பொதிக்கான ஆரம்ப அதிகாரமளிப்புக் கட்டணம் அரசாங்க வரிகள் தவிர்த்து ரூபா 500,000 ஆகும்.

    v. முரண்பாட்டுத் தீர்வு நடைமுறை

3. மேற்குறிப்பிட்டதற்கு வழங்கப்பட்ட அதிகாரமளிப்பு ஒரு வருடத்திற்கு மட்டுமே செல்லுபடியாவதுடன், குறிப்பிட்ட ஒரு வகை வெளிநாட்டு சுகாதார காப்புறுதி பொதிக்கு மட்டுமே வழங்கப்படும். ஒரு காப்புறுதி தரகர் ஒன்றுக்கு மேற்பட்ட வெளிநாட்டு சுகாதார காப்புறுதிப் பொதியைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அதிகாரமளித்தலைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்

சுற்றறிக்கை 36 இல், சுகாதார காப்புறுதிக் காப்பீடு மீதான கொள்கை மாற்றம் தொடர்பாக நாணயமாற்று கட்டுப்பாட்டாளருக்கு சபை அறிவித்துள்ளதுடன், சுகாதார காப்புறுதி தொடர்பான வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு உரிய அறிவுறுத்தலை வழங்குமாறு நாணயக் கட்டுப்பாட்டாளரிடம் கோரப்பட்டுள்ளது.

### 23 நவம்பர் 205 இல் வெளியிடப்பட்ட 37ம் இலக்க சுற்றறிக்கை

அவர்கள் தங்களின் கம்பனியின் பெயரை மாற்றுவதற்கு முன்மொழிந்திருந்தால், அப்பெயர் மாற்றத்திற்கு முன்பாக, பெயர் மற்றும் மாற்றப்பட்டதன் நோக்கத்தை சபைக்கு அறிவிக்குமாறு கோரி அனைத்து காப்புறுதிக் கம்பனிகளுக்கும் மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கும் 37ம் இலக்க சுற்றறிக்கையை சபை வெளியிட்டது.

### சட்டத்தின் பிரிவு 82(5)ன் நியதிகளுக்கு அமைவாக காப்புறுதித் தரகர் கம்பனிகளின் மிகக் குறைந்த தேறிய மூலதன தேவை மீதான நிபந்தனைகள்

சபையினால் விதிக்கப்பட்ட நிபந்தனையின் விளைவாக, சில குறிப்பிட்ட காப்புறுதி கம்பனிகள் அவர்களின் பதிவின் போது செலுத்தப்பட்ட ரூபா 2500 மில்லியன் பங்கு மூலதன தேவைப்பட்டுக்கு மேலதிகமாக குறைந்தபட்சம் ரூ 1 மில்லியனை தேறிய மூலதனமாக பராமரித்தல் வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

எனினும், நீண்ட காலத்திற்கு முன்னர் பதிவு செய்திருந்த சில காப்புறுதி முகவர்கள் மேற்குறிப்பிட்ட தேறிய மூலதன தேவைப்பாட்டினை கொண்டிருக்கவில்லை. அதனால், ஒழுங்குபடுத்தல் தேவைகளை பிரயோகிப்பதில் ஒரே சீர்தன்மையைக் கொண்டிருப்பதற்காக, சட்டத்தின் பிரிவு 82(5) நியதிகளுக்கு அமைவாக அனைத்து காப்புறுதி தரகர்களுக்கும் நிபந்தனைகளை விதிப்பதற்கு சபை தீர்மானித்ததுடன், 30 செப்டெம்பர் 2015 இல் இருந்து குறைந்தபட்சம் மிகக்குறைந்த தேறிய மூலதனமாக ரூபா 1.125 மில்லலலியனையும் 30 செப்டெம்பர் 2016இல் இருந்து மிகக்குறைந்த தேறிய மூலதனமாக ரூபா 2.5 மில்லியனையும் பாராமரிக்குமாறு அவர்களைக் கோரியது.

### சந்தை கட்டமைப் பு

### காப்புறுதி வழங்குனர்கள்

சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமையவும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் கீழ், அத்தகைய வர்த்தகத்தை பதிவு அல்லது பதிவு செய்ய கருதும் எந்த ஒரு நபரும் அத்தகைய பதிவினை மேற்கொள்ளாதிருப்பாராயின் இலங்கையில் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள முடியாது.

சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக, இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

ஆண்டின் இறுதி அன்றுள்ளவாறு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்களாக 30 கம்பனிகள் பதிவு செய்துள்ளன. சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட பதிவு நீக்கம் 2009 இலிருந்து தொடர்ந்து நீடிக்கின்றது. வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வர்த்தக கம்பனிகளின் வகைகளை வரைபு 01 காண்பிக்கின்றது. தொழிற்படும் 30 காப்புறுதி கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தையும், பொதுவான காப்புறுதி வர்த்தகத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட 3 கம்பனிகளும், நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 12 கம்பனிகளும், பொதுவான காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 15 கம்பனிகளும் உள்ளடங்கும்.

# பொது மீளாய்வு தொடர்ச்சி

## வேறாக்கல்

திருத்தச் சட்டத்தின் பிரிவு 53ற்கு அமைவாக கலவை காப்புறுதிக் கம்பனிகள் இரு வேறு வகைகளுக்கான காப்புறுதி வியாபாரங்களுக்கான இரு வேறுபட்ட கம்பனிகளாக (இதன் பின்னர் வேறாக்கப்பட்ட காப்புறுதி கம்பனிகள் / வேறாக்கப்பட்ட காப்புறுதி கம்பனி) 2015 பெப்பரவரி அல்லது அதற்கு முன்னர் வேறாக்குமாறு கோரப்பட்டுள்ளது.

காப்புறுதி வியாபாரத்தின் சீரான பரிமாற்றத்திற்காக கைத்தொழிற்துறையின் ஆலோசனையுடன், கலவை காப்புறுதியாளர்களின் வேறாக்கல் தொடர்பாக வழிகாட்டல்களை சபை விநியோகித்தது.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் கலவை காப்புறுதி வழங்குனர்களினால் சட்டத்தின் 53ம் பிரிவுக்கு இணக்கமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், 3 கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டதுடன் மற்றும் 10 கம்பனிகளுக்கு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்குமான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

*வரைபு 1*

**காப்புறுதி வழங்குனர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**

காப்புறுதித் தரகர்கள்




## காப்புறுதி தரகர்கள்

2007 இன் 7ம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்டு காப்புறுதி தரகர் வர்த்தகத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதி தரகர் எனப்படும். காப்புறுதி வழங்குனர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது ஒரு காப்புறுதி கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரககர்கள் செயற்படுகின்றனர்.

ஆண்டிறுதியின் போது 57 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 39 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வர்த்தகம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 18 கம்பனிகள் பொது காப்புறுதி தரகு வர்த்தகத்தில் மட்டும் பதிவு செய்தன. வரைபு 2 ஆண்டின் போது காப்புறுதி தரகர்கள் மேற்கொண்ட காப்புறுதி தரகு வர்த்தகத்தின் வகைப்படுத்தல்களை காண்பிக்கின்றது.

*வரைபு 2*

**காப்புறுதித் தரகர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**




## காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தை பதிவு செய்தவர்களாவர். பதிவுசெய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.

சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களூடாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாக சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 16,879 ஆகவிருந்ததுடன், இது கடந்த ஆண்டின் (17.018) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 0.82% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்திய காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 45,433, இது கடந்த ஆண்டின் (42,958) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 5.76% அதிகரிப்பாகும்.

வரைபு 03 காப்புறுதி கம்பனிகளுடன் பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி முகவர்களை காட்டுகின்றது

*வரைபு 3*

**காப்புறுதி வழங்குனர்களுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி முகவர்கள்**




இந்த வருடம் கிட்டத்தட்ட 237 தனிப்பட்ட காப்புறுதி முகவர்கள் காப்புறுதி தரகுக் கம்பனிகளுடன் பதிவினை மேற்கொண்டுள்ளனர்.

## கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 07 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவையாவன ஏஐஏ(AIA) இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி, யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சீ, ஏசியன் அலையன்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ மற்றும் ஆர்பிக்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி (சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ, இது சிலிங்கோ லைப் இன்ஸ்யூரன்ஸ் லிமிட்ட் மற்றும் சிலிங்கோ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் கம்பனிகளின் நிர்வாகக் கம்பனியாக இருக்கின்றது. அத்துடன், இது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளது). பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப் படாததுமான காப்புறுதி வழங்குனர்களின் சதவீதத்தை வரைபு 4 காண்பிக்கின்றது.

*வரைபு 4*

**"பட்டியலிடப்படாத" காப்புறுதி வழங்குனர்களின் நிலை**



# பொது மீளாய்வு தொடர்ச்சி

1987 இன் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனையும் ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதி வழங்குனர் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. பெப்ரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர், கலவைக் காப்புறுதி கம்பனிகள் அதன் வியாபாரத்தை இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கி பெப்பரவரி 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பட்டியலிடப்படுதல் வேண்டும்.

திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

2011 ஜுன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றிற்கு, 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் அதன் பங்கு மூலதனத்தை மிகக் குறைந்தது ரூபா ஐந்நூறு மில்லியனை அதிகரிக்க வேண்டிய தேவை சபைக்கு உள்ளது.

2011 ஜுன் மாதத்தை தொடர்ந்து பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி கம்பனிகள், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தை வைத்துள்ளனர்.

### காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை (Cess)

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 09 ஜுலை 2002ம் திகதி உடைய 1244/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 02% மும் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 04% மும் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2015 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்புத் தொகை ரூபா 322 மில்லியன் ஆகும் அட்டவணை 1 செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பவற்றின் அசைவைக் காண்பிக்கின்றது.

### காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது. காப்புறுதி வைப்பாளர்களுக்கும், உத்தேச காப்புறுதி வைப்பாளர்களுக்கும் நன்மை அளிக்குமாயிருப்பின் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படலாம்.

அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதி தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களை தீர்த்தல்.

ஆ) சபையின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற் படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தை தீர்த்தல்.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்படும். 2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 2,643 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட (ரூபா 2,183 மில்லியன்) 21.07% அதிகரிப்பாகும்.

*1ம் அட்டவணை*

**செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்**

**காப்புறுதி தீர்வை**




பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்பு தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாய காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 1 ஜனவரி 2002, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன.

### சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் சபை, 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபை என்பவற்றுக்கு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட மாட்டாது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தினால் (NITF சட்டம்) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு திருத்தச் சட்டத்தினால் சபையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்டு வந்த நிதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்ளீர்ப்பு செய்யப்பட்டது. காப்புறுதி வழங்குனர்களினால் விநியோகிக்கப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான காப்புறுதி காப்புகளை வழங்கும் காப்புறுதி வழங்குனர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, பொது காப்புறுதி வியாபாரம் தொடர்பாக பதிவு செய்துள்ள காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் மீள் காப்புறுதி செய்ய வேண்டும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் மீள் காப்புறுதி செய்ய விரும்பும் பொறுப்பின் மீது 50% இற்கு மேற்படாத சதவீதம் ஒன்றை மீள் வாக்குறுதி செய்யும் தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலேயுள்ள ஏற்பாட்டிற்கு அமைவாக 2013 ஜனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு ஏற்ப, மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் சாதுரியமான மீள் காப்புறுதி ஒழுங்குகள் என்பனவற்றிற்கு காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் குறிப்பிட்டதொரு சதவீதத்தை அளிக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளனர். இந்த சதவீதம் 1 ஜனவரி 2013 இல் இருந்து 20% இல் இருந்து 30% மாக அதிகரிக்கப்பட்டது.

# பொது மீளாய்வு தொடர்ச்சி

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில; (NCRS)

வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், வாகன போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. வாகன காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதி கட்டணங்களின் 1% யைப் பங்களிப்பு செய்ய வேண்டும். வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சிலின் சபையில் காப்புறுதி சபை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இந்தப் பங்களிப்பு மோட்டார் வாகன விபத்துகளின் போது விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓடும் சந்தர்ப்பங்களில் நட்டஈட்டை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.

### நிதித்துறை புறக்கணிப்புக் கவுன்சில் (FSOC)

இலங்கை மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கு இடையிலான கவுன்சில் நிதித்துறை புறக்கணிப்புக் கவுன்சில்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த உயர் மட்டக் குழு, நிதிச் சந்தையின் சீரான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கை பணிப்புரைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முழு நிதி முறைமையினதும் தேவைக்கு அமைவாக அனைத்து நிதியியல் ஒழுங்கமைப்பு முகவர்களை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதித்துறை புறக்கணிப்புக் கவுன்சில் இலங்கை காப்புறுதிச் சபையின் சபை பிரதிநிதித்துவப்படுத்தும்.

### இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் சபையில் அங்கத்தினராவதற்கு தகுதி பெறுவார்கள்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொது காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்

### இலங்கை காப்புறுதி சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்:-

1. காப்புறுதி வழங்குனர்களின் உறுப்பினர்கள் மற்றும் காப்புறுதி செய்யும் பொது மக்களின் பொதுவான ஈடுபாடுகளையும் நலன்களையும் பாதிக்கும் விடயங்கள் குறித்து ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்காக காப்புறுதி வழங்குனர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டுதல்.

2. காப்புறுதி வியாபாரத்தில் சீரான, சிறந்த நடைமுறைகள் மற்றும் உயர் விழுமிய தராதரங்களை பேணி ஊக்குவிப்பதன் மூலம் காப்புறுதி செய்யும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விருத்தி செய்வது.

3. பொதுமக்கள் மத்தியில் காப்புறுதியின் தேவை மற்றும் மதிப்பு தொடர்பான விழிப்புணர்வை கட்டியெழுப்புவது.

4. சட்டம்/ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் என்பவற்றை கண்காணிப்பது மற்றும் தொழிலின் ஸ்திரத்தன்மையையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரிகளுடன் பிரதிநிதித்துவங்களை செய்வது.

5. ஏனைய நாடுகளின் காப்புறுதி பிரயோகங்களையும் உத்திகளையும் மீளாய்வு செய்வதும் மற்றும் பரீட்சிப்பதும் அவற்றில் இலங்கையின் சந்தைக்கு பொருத்தமான சிறந்த பிரயோகங்களை கடைப்பிடிப்பதும்.

6. தொழில்வல்லுனர்கள் மற்றும் இலங்கையில் உள்ள கல்வி நிறுவனங்கள்/ அமைப்புகள் மற்றும் மீள்காப்புறுதி பங்குதாரர்களுடன் பங்குதாரர்களாக இணைந்து கல்வி மற்றும் பயிற்சியினூடாக காப்புறுதி துறையில் தொழிலில் திறமையை ஊக்குவித்தல், உத்வேகமான முறையில் உதவியளித்தல் மற்றும் ஊக்குவித்தல்.

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

இலங்கை காப்புறுதியாளர் தரகர் சங்கமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு காப்புறுதி தரகர் சங்கமாகும். சட்டத்தின் 79 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி தரகர் பதிவு செய்தலை நாடும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும், சபையினால் காப்புறுதி தரகராக பதிவு செய்யப்படும் முன்னர், இச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் அங்கத்தவர்கள், இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற ஒழுக்க நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

### இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் பிரதான நோக்கங்கள்:

பொது மக்கள் மத்தியில் காப்புறுதி தரகர்களின் பங்களிப்பைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவது,

ஏனைய அங்கத்தினர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி திறமைகளையும், தொழிலாற்றல்களையும் உயர் மட்டத்தில் கட்டியெழுப்புவது.

அங்கத்தினர்கள் காப்புறுதி பாடநெறிகளை பின்பற்றவும், தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளவும் அங்கத்தினர்களை ஊக்குவிப்பதும் உதவுவதும்.
ஒழுங்கமைப்பாளர்கள், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் பொதுமக்களுடன் நல்லுறவையும், உறவுகளையும் பேணுவது.

### வழங்குனர்கள் பரஸ்பர நன்மைமற்றும் பயக்கும் இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது. இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதி காப்புறுதி வழங்குனர்களின் ஆண்டு சந்தா மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளில் இருந்து கிடைக்கிறது.

### இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள:

காப்புறுதி துறையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழில்புரிகின்ற நபர்களிடையே அவர்கள் காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் சொந்த நலனுக்காக மட்டுமின்றி அத்தகைய வியாபாரத்தை மிகுந்த பயனுறுதியுடன் நடத்திச் செல்லவும் தொழில் திறமையை ஏற்படுத்தி அதை பேணும் நோக்கிலும் செயற்திறன் முன்னேற்றம் பொதுவான அபிவிருத்தி என்பவற்றை ஊக்கப்படுத்துவதற்காக மத்திய அமைப்பொன்றை ஏற்படுத்தி பேணுவது.

காப்புறுதி பற்றிய அறிவை விருத்தி செய்வதற்காக டிப்ளோமா மற்றும் சான்றிதழ் தகமைகளுக்கு இட்டுச்செல்கின்ற பாடநெறிகளை நடத்துவது அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் நிறுவனத்தினூடாக காப்புறுதியின் எந்த வொரு கிளை தொடர்பான எந்தவொரு விடயத்தைப் பற்றிய தொழில்சார் கற்கையை ஊக்குவித்து அதற்கு உதவுவதற்காக பரீட்சைகளை நடத்தவது. தொழில்சார் விவகாரங்கள், நலன்கள். கடமைகள், ஆய்வு கட்டுரைகளை வாசித்தல் மற்றும் விரிவுரைகள் வழங்குதல் போன்ற கலந்துரையாடலுக்கான மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல், அங்கத்தவர்களின்

# பொது மீளாய்வு தொடர்ச்சி

பட்டியல்கள், இடாப்புகள் மற்றும் பதிவுகளை தொகுப்பது.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்கள் தொடர்பான தொழில்சார் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை பிரயோகிப்பதற்கும் அவர்களது நலன் மற்றும் நலநோம்புகை என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவர்களது மேம்பாட்டை வலுப்படுத்தவும், பொதுவாக காப்புறுதி மற்றும் இலங்கை காப்புறுதி நிருவனத்தின் அங்கத்தவர்களது நிலைமையை மேம்படுத்துவதற்கு இட்டுச் செல்லக் கூடியதான ஊக்குவிப்புகளை மேற் கொள்வதும்.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டய காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதி கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிருவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

சபையானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப்பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி ஒம்புட்ஸ்மன்

இலங்கை காப்புறுதி சங்கம் ஜனவரி 2005ம் ஆண்டு டாக்டர் விக்ரம வீரசூரியவை காப்புறுதி ஒம்புட்ஸ்மனாக நியமித்தது. இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒம்புட்ஸ்டன் என்பவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினால் காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு கொண்டுவரப்படும் முரண்பாடுகளை இலங்கை காப்புறுதிச் சங்கத்துடன் இணைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் தீர்த்துக்கொள்கின்றன.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)

காப்புறுதி மேற்பார்வையார்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதி கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதி தொழிலின் சிறந்த மேலான்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றன.

### காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் ஆசிய மன்றத்தின் 10வது வருடாந்த கூட்டம்

சபையினால் 10வது காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் ஆசிய மன்றத்தின் மாநாடு கொழும்பில் 2015 ஜுலை 27 மற்றும் 28ம் திகதிகளில் “காப்புறுதி ஒழுங்கமைப்பு பாதையை மாற்றியமைத்தல்” எனும் தலைப்பின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கௌரவ அரச நிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க அவர்கள் பிரதம அதிதியாக விழாவினை ஆரம்பித்து வைத்தார். ஆசிய வலயத்தில் உள்ள பதினான்கு காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்கள், காப்புறுதி கண்காணிப்பாளர்கள் சர்வதேச சங்கத்தின் செயலாளர் மற்றும் காப்புறுதி முன்னெடுப்பு , ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் என்பவற்றின் பிரதிநிதிகள் என்போரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பின்வரும் முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.:

- அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய நாட்டின் காப்புறுதித்துறையின் அபிவிருத்தி தொடர்பாக அனைத்து ஒழுங்கமைப்பாளர்களின் அறிமுகப்படுத்துகை
- சர்வதேச காப்புறுதி மூலதன நியமங்களை ஊக்குவித்தல் பற்றிய காப்புறுதிக் கண்காணிப்பாளர் சர்வதேச சங்கத்தின் அறிமுகப்படுத்துகை
- புதிய மூலதன நியமங்களை அமுல்படுத்தலில் காணப்படும் சவால்கள் பற்றிய குழுக் கலந்துரையாடல்
- பேரிழப்பு காப்புறுதி, விவசாயக் காப்புறுதி மற்றும் வரி – பிற்போடப்பட்ட ஆண்டுத்தொகை மீதான ஆசிய அபிவிருத்தியின் வட்ட மேசை மற்றும்
- காப்புறுதி முன்னெடுப்பாளர்களுக்கான முன்மொழியப்பட்ட சட்டகத்தை அபிவிருத்தி செய்வதற்கான குழுக் கலந்துரையாடல்.



கௌரவ அமைச்சர் மகிந்த சமரசிங்க



திருமதி இந்திராணி சுகததாச, தலைவர், இலங்கை காப்புறுதிச் சபை

மாநாட்டின் போது AFIR (www. afirweb.org) இன் அரசாங்க வெப்தளமும் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொருவரினதும் அனுபவங்கள் தொடாபாக சந்தித்துக் கற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் மற்றும் ஆசிய ஒழுங்கமைப்பாளர்கள் கலந்துரையாடிய கொழும்பு பிரகடன உடன்பாட்டுடன் நிரந்தரமான செயலகத்தை நிறுவுவதற்கான முன்மொழிவு உட்பட 10 வருடங்கள் பழமையான AFIR தொடர்பாக மிக நேர்மறையான விளைவுகளையும் மாநாடு வழங்கியது. தற்போது சீன காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் AFIR ற்கு தலைமைதாங்குகின்றார்.



# புள்ளிவிபர மீளாய்வு

## காப்புறுதி தொழில்குறித்த ஒரு கண்ணோட்டம்

இலங்கையின் காப்புறுதித் கைத்தொழிற்துறை 2015ம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் கடந்த ஆண்டின் 5.44% வீத வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் 16.12% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2015ம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூபா 122,390 மில்லியன் பெறப்பட்டது. (2014: ரூபா 105,399 மில்லியன்). நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி என்பன முறையே ரூபா 53,575 மில்லியன் மற்றும் ரூபா 68,815 மில்லியன் தவணைக் கட்டண வருமானமாக பெற்றுக்கொண்டதன் மூலம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைய முடிந்தது.

2015ம் ஆண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி தவிர்க்கை மூலம் ரூபா 1.784 மில்லியனை வருமானமாகப் பெற்றுக்கொண்டது. 2014ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 2,041 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் குறைவடைந்துள்ளது.

நீண்டகால காப்புறுதி வியாபாரம் 2014ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 44,596 மில்லியன் தவணைக் கட்டணத்தை விட அதிகமாக 2015% ஆண்டு 20.14% வீத வளர்ச்சியைக் காட்டி ரூபா 53,575 மில்லினை தவணைக் கட்டணமாக உழைத்துக்கொண்டது. நீண்டகால காப்புறுதித்துறையின் செயலாற்றுகை வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை உறுதிப்படுத்துவதற்காக தொழிற்பாட்டு முறைமை மேம்படுத்தல், வாடிக்கையாளர்களின் மாறும் தேவைக்கேற்ப புதிய காப்புறுதிப் பொதிகளை அறிமுகப்படுத்துவதுடன் தற்போதுள்ள பொதிகளைப் புதுப்பித்தல், காப்புறுதி தொடர்பாக வாடிக்கையாளர்களின் விழிப்புணர்வை மேம்படுத்தல் என்பவற்றுக்கு காப்புறுதி வழங்குனர்கள் மேற்கொண்ட முயற்சி மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் ஆயுட் காப்புறுதி பொதிகளுக்கு கேள்வியை அதிகரித்தமை காரணமாக வளர்ச்சியை காட்டியது.

பொதுக் காப்புறுதி வியாபாரமும் 2014ம் ஆண்டு பெற்றக்கொண்ட ரூபா 60,803 மில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு ரூபா 68,815 மில்லியனை உழைத்து 13.18% எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. பொதுக் காப்புறுதி வழங்குனர்கள் சந்தையில் காணப்படும் போட்டியின் இடையில், வியாபார முறைமையை மீள புதுப்பித்தல், தனிப்பட்ட சந்தைகளைக் கவர்தல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வியாபாரத்தை விரிவாக்கல் போன்ற பொறிமுறைகளின் ஊடாக அவர்களின் வருமானத்தை அதிகரித்துக்கொண்டனர்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதி தவணைக் கட்டணங்கள் காப்புறுதியின் ஊடுருவலைக் காட்டுவதுடன், 2015ம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதி மொத்த தவணைக் கட்டணங்கள் 1.09% வீதமாக இருந்ததுடன், இது 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% வீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது. ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் காப்புறுதியின் ஊடுருவல் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதுடன், இது வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான காப்புறுதி பொதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வியாபாரத்தை விரிவாக்குவதற்கு காப்புறுதி வழங்குனர்களுக்கு குறிப்பிடக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளது. 2015ம் ஆண்டு, நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் முறையே 0.48% (2014: 0.43%) மற்றும் 0.62% (2014: 0.58 %) வீத ஊடுறுவலை வெளிப்படுத்தியதுடன், இரண்டு காப்புறுதிகளும் ஊடுறுவல் மட்டத்தில் மேம்பாட்டைக் காட்டுகின்றது.

காப்புறுதி அடர்த்தியானது, சனத்தொகையில் தனி நபரின் தவணைக் கட்டண வருமானத்தைக் காட்டுவதுடன், இது 2015ம் ஆண்டு ரூபா 5,838 ஆகும். 2014ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 5,074 வுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 15.06% வீதம் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. இந்த வளர்ச்சியானது குறிப்பிடத்தக்க சனத்தொகை வளர்ச்சிக்கெதிராக அதிகரித்த தவணைக் கட்டண வருமானம் ஆகும்.

*1ம் அட்டவணை*

**தவணைக் கட்டண வருமானமும் ஊடுறுவலும்**

| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014 (ஆ) | 2015 (இ) |
|---|---|---|---|---|---|
| தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) - நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 35,162 | 37,477 | 41,676 | 44,596 | 53,575 |
| தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) - பொது காப்புறுதி (ரூ. மில்) | 46,929 | 53,213 | 58,284 | 60,803 | 68,815 |
| மொத்த தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (ரூ. மில்) | 82,091 | 90,690 | 99,960 | 105,399 | 122,390 |
| மொத்த தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 17.62 | 10.48 | 10.22 | 5.44 | 16.12 |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் (ரூபா.மில்லியன்)** | 199 | 464 | 1,042 | 2,041 | 1,784 |
| நடைமுறை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா. பில்லியன்) * | 7,219 | 8,732 | 9,592 | 10,448 | 11,183 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (%)* | 8.40 | 9.10 | 3.40 | 4.90 | 4.80 |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்தக் காப்புறுதித் தவணைக் கட்டணம்) | 1.14 | 1.04 | 1.04 | 1.01 | 1.09 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.49 | 0.43 | 0.43 | 0.43 | 0.48 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொது காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.65 | 0.61 | 0.61 | 0.58 | 0.62 |
| காப்புறுதி செறிவு (மொத்த தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம்/ சனத்தொகை) (ரூ.)) | 3,934 | 4,440 | 4,857 | 5,074 | 5,838 |
| சனத்தொகை “000 (ஆண்டின் மத்தியில்)* | 20,869 | 20,424 | 20,579 | 20,771 | 20,966 |

* மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

** தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உழைக்கப்பட்ட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி தவணைக் கட்டணத்தை மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (NTIF தவிர்த்து)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

### காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்

காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் மீள் காப்புறுதி வழங்குனர்களிடம் (NITF) இருக்கும் மொத்த சொத்துக்கள், உள்ளக துண்டாடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 31 டிசம்பர் 2015 அன்று ரூபா 464,944 மில்லியன் (2014: ரூபா 421,407 மில்லியன்) ஆவதுடன் இது 2014ம் ஆண்டுமன் ஒப்பிடுகையில் 10.33% வளர்ச்சியைக் கொண்டுள்ளது. பங்குதாரர்களின் தொகை உட்பட நீண்டகால காப்புறுதி வியாபாரத்துறையின் சொத்துக்கள் 31 டிசம்பர் 2015ம் திகதியில் ரூபா 305,897 மில்லியன் (2014: ரூபா 247,061 மில்லியன்) ஆக இருப்பதுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23.81% வீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது. பொதுக் காப்புறுதி வியபாபாரம் மற்றும் பொது மற்றும் கலவை காப்புறுதி வழங்குனர்களின் பங்குதாரர் பெறுமதியைக் கருத்தில் கொண்டால் 31 டிசம்பர் 2015ம் திகதியில் ரூபா 157,001 மில்லியனை கொண்டிருப்பதுடன் இது 2014ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 173,964 மில்லியன் சொத்துப் பெறுமதியோடு ஒப்பிடுகையில் 9.75% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

எனினும், மேற்குறித்த நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வீழ்ச்சி என்பவற்றைக் கருத்தில்கொண்டால், கலவை காப்புறுதி வழங்குனர்களின் பங்குரிமையாளர்களின் சொத்துக்கள் முன்னர் பொதுக் காப்புறுதி வியபாரத்தின் கீழ் கருதப்பட்டதுடன், 2015ம் ஆண்டு கலவை காப்புறுதி வழங்குனர்களை வேறாக்கியதன் காரணமாக எழுந்ததாகும். அத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள் காப்புறுதி வியாபாரத்தின் சொத்தக்களின் ஊடுறுவல் 31 டிசம்பர் 2015 இல் ரூபா 3,381 மில்லியனாக (2014: ரூபா 3,065 மில்லியன்) இருப்பதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.31% வீத வளர்ச்சியாகும்.

2011 இருந்து 2015 வரையான காப்புறுதி கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்களின் வளர்ச்சி வீதத்தை வரைபு 1 காட்டுகின்றது

*அட்டவணை 2*
**காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள்**

| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014 (ஆ) | 2015 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 165,519 | 190,642 | 216,275 | 247,061 | 305,897 |
| பொதுக் காப்புறுதி (ரூ. மில்) | 109,482 | 137,730 | 155,636 | 173,964 | 157,001 |
| மீள்காப்புறுதி (ரூ.மில்) | 655 | 640 | 1,453 | 3,065 | 3,381 |
| **மொத்தம்** | ***271,356** | ***322,986** | ***365,760** | ***421,407** | *** 464,944** |

அட்டவணை 3 இற்கு அமைவாக, உள்ளக உள்வகைப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்பட்டுள்ளன.

(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (NTIF தவிர்த்து)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

*வரைபு 1*
**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துகளும் மற்றும் சொத்துகளின் வளர்ச்சி வீதமும்**




(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (NTIF தவிர்த்து)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

### காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்களின் விநியோகம்

அட்டவணை 3 நீண்ட கால மற்றும் பங்குரிமையாளர்கள், பொதுக் காப்புறுதி மற்றும் பங்குரிமையாளர்கள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி உள்வகைப்படுத்தல் வகைகளின் கீழ் 31 டிசம்பர் 2014 மற்றும் 2015ம் திகதிகளில் காணப்பட்ட கம்பனிவாரியான சொத்துக்களின் விநியோகத்தைக் காட்டுகின்றது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் மிகப்பெரிய பங்கை தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளதுடன், இது 2015ம் ஆண்டு காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்தில் 36.03% வீதமாவதுடன் (2014: 38.43%) இச்சொத்துக்களின் பெறுமதி ரூபா 167,540 மில்லியன் (2014: ரூபா 161,967 மில்லியன்) ஆகும். 2015ம் ஆண்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் முறையே ரூபா 94,914 மில்லியன் (2014: 72,626 மில்லியன்) சொத்துக்கள் உள்ளன.

சிலிங்கோ லைப் காப்புறுதி கைத்தொழிற்துறையில் 17.33% வீத மொத்த சொத்துக்களைக் கொண்டிருப்பதுடன், இதன் பெறுமதி ரூபா 80,595 மில்லியன் ஆகும். அத்துடன் இது இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. ஏஐஏ நிறுவனத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 45,958 மில்லியன் ஆவதுடன், இது 9.88% வீத சொத்துக்களைக் கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. யூனியன் அசூரன்ஸ் நிறுவனம் மற்றும் ஜனசக்தி லைப் நிறுவனங்கள் முறையே ரூபா 31,014 மில்லியன் மற்றும் ரூபா 19,656 மில்லியனை 31 டிசம்பர் 2015 இல் கொண்டிருப்பதுடன், இவை மொத்த சொத்துக்களில் முறையே 6.67% மற்றும் 4.23% வீதங்களை கைப்பற்றி நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. 31 டிசம்பர் 2015ம் திகதியில் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்தில் 74.14% வீதத்தை இந்த ஐந்து நிறுவனங்களும் வைத்திருப்பதுடன், மிகுதி சொத்தில் 25.86% வீதத்தை ஏனைய இருபத்தைந்து நிறுவனங்களும் தங்களிடம் வைத்துக்கொண்டுள்ளன.

*அட்டவணை 3*

**கம்பனி ரீதியான மொத்தச் சொத்துக்களின் பகுப்பாய்வு**

| காப்புறுதி வழங்குனர் | 2014 (அ) | | | | | | 2015 (ஆ) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி மற்றும் பங்குரிமை யாளர் (ரூ.'000) | மீள் காப்புறுதி (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப் படுத்தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % | நீண்டகால காப்புறுதி பங்குரிமை யாளர் (ரூ.'000) | பொது காப்புறுதி மற்றும் பங்குரிமை யாளர் (ரூ.'000) | மீள் காப்புறுதி (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப் படுத்தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % |
| ஏஐஏ ஆயுள் | 38,436,443 | 9,229,720 | | - | 47,666,163 | 11.31 | 45,957,923 | | | - | 45,957,923 | 9.88 |
| ஏஐஏ பொது | | | | | - | | - | 5,647,487 | | - | 5,647,487 | 1.21 |
| ஏஐஜி | - | 449,598 | | - | 449,598 | 0.11 | | 234,134 | | - | 234,134 | 0.05 |
| அலையன்ஸ் பொது | - | 3,264,435 | | - | 3,264,435 | 0.77 | | 3,943,092 | | - | 3,943,092 | 0.85 |
| அலையன்ஸ் ஆயுள் | 1,467,969 | - | | - | 1,467,969 | 0.35 | 1,947,203 | | | - | 1,947,203 | 0.42 |
| அமானா பொது | 1,432,807 | 1,764,027 | | 107,552 | 3,089,282 | 0.73 | | 2,716,376 | | 119,289 | 2,597,087 | 0.56 |
| அமானா ஆயுள் | | | | | | | 2,521,827 | | | 57,696 | 2,464,131 | 0.53 |
| ஆர்பிகோ | 980,743 | - | | - | 980,743 | 0.23 | 1,184,539 | | | - | 1,184,539 | 0.25 |
| ஏசியன் ஆயுள் | 6,716,714 | 3,589,135 | | - | 10,305,849 | 2.45 | 9,814,620 | | | - | 9,814,620 | 2.11 |
| ஏசியன் பொது | | | | | | | | 2,489,014 | | - | 2,489,014 | 0.54 |
| சிலிங்கோ | 63,184,332 | 34,313,040 | | - | 97,497,372 | 23.14 | | | | | | |
| சிலிங்கோ பொது | | | | | | | | 18,849,220 | | - | 18,849,220 | 4.05 |
| சிலிங்கோ ஆயுள் | | | | | | | 80,595,478 | | | | 80,595,478 | 17.33 |
| கொண்டினெடல் | - | 2,037,110 | | - | 2,037,110 | 0.48 | | 2,544,689 | | - | 2,544,689 | 0.55 |
| கோர்பரடிவ் பொது | 999,455 | 2,839,229 | | - | 3,838,683 | 0.91 | | 3,005,196 | | - | 3,005,196 | 0.65 |
| கோப் ஆயுள் | | | | | | | 1,672,432 | | | - | 1,672,432 | 0.36 |
| எச்என்பி ஆயுள் | 5,930,808 | 2,583,550 | | 1,394,110 | 7,120,248 | 1.69 | 10,022,562 | | | - | 10,022,562 | 2.16 |
| எச்என்பி பொது | | | | | | | | 2,710,914 | | - | 2,710,914 | 0.58 |
| ஜனசக்தி ஆயுள் | 8,159,309 | 12,507,757 | | - | 20,667,067 | 4.90 | 19,656,286 | | | - | 19,656,286 | 4.23 |
| ஜனசக்தி பொது | | | | | | | | 11,212,847 | | - | 11,212,847 | 2.41 |
| எல்ஜசி | 1,899,682 | - | | - | 1,899,682 | 0.45 | 2,056,120 | | | - | 2,056,120 | 0.44 |
| எல்ஓஎல்சி | 1,042,182 | 2,653,278 | | 247,838 | 3,447,622 | 0.82 | | | | | | |
| எல்ஓஎல்சி பொது | | | | | | | | 3,120,836 | | - | 3,120,836 | 0.67 |
| எல்ஓஎல்சி ஆயுள் | | | | | | | 2,346,342 | | | 402,566 | 1,943,775 | 0.42 |
| எம்பிஎஸ்எல் | 395,278 | 1,337,651 | | - | 1,732,929 | 0.41 | 517,231 | 1,427,882 | | - | 1,945,114 | 0.42 |
| என்ஐடீஎப் (பி) | | 8,128,022 | 3,065,354 | | 11,193,376 | 2.66 | | 8,454,168 | 3,380,634 | - | 11,834,803 | 2.55 |
| ஓரியன்ட் | - | 1,015,302 | | - | 1,015,302 | 0.24 | | 1,150,664 | | - | 1,150,664 | 0.25 |
| பீப்பிள்ஸ் | - | 4,577,483 | | - | 4,577,483 | 1.09 | | 6,459,865 | | - | 6,459,865 | 1.39 |
| சனச | 742,655 | 1,047,995 | | - | 1,790,650 | 0.42 | 920,152 | 1,170,876 | | - | 2,091,028 | 0.45 |
| எஸ்எல்ஐசி | 90,142,534 | 71,988,109 | | 200,137 | 161,930,506 | 38.43 | 94,914,277 | 72,625,496 | | - | 167,539,773 | 36.03 |
| யூனியன் ஆயுள் | 25,530,258 | 10,638,421 | | 733,048 | 35,435,630 | 8.41 | 31,769,676 | | | 755,860 | 31,013,816 | 6.67 |
| யூனியன் பொது | | | | | | | | 9,238,376 | | - | 9,238,376 | 1.99 |
| **மொத்தம்** | **247,061,169** | **173,963,862** | **3,065,354** | **2,682,685** | **421,407,699** | **100** | **305,896,668** | **157,001,132** | **3,380,634** | **1,335,411** | **464,943,024** | **100** |

(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

குறிப்பு:
1. உள்வகைப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்பட்டுள்ளது.
2. 2015ம் ஆண்டு கலவைக் காப்புறுதி கம்பனிகளின் பங்குதாரர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டது.
3. 2014ம் ஆண்டு எலைன்ஸ் லைப், ஆர்ப்பிக்கோ மற்றும் எல்ஜசி தவிர்ந்த ஏனைய பங்குதாரர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 2*

**31 டிசம்பர் 2015ம் திகதியில் கம்பனி ரீதியாக சொத்துக்களின் செறிவின் பகுப்பாய்வு**




**காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதிகள்**

காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதி ரூபா 134,689 ஆக இருந்ததுடன், 2014ம் ஆண்டைவிட 4.86% வீதத்தால் அதிகரித்துள்ளது. (2014: ரூபா 128,445 மில்லியன்). அட்டவணை 4 இல் மொத்த பங்குதாரர்களின் நிதியம் உரிமைப் பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்கு என்பன 31 டிசமபர் 2015 இல் முறையே ரூபா 39,242 மில்லியன் மற்றும் ரூபா 95,447 மில்லியனைக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றது. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 46.88% வீத பெரிய பங்கினை கொண்டிருப்பதுடன், சிலிங்கோ லைப் மற்றும் என்ஜடிஎப் என்பன முழு பங்குதாரர்களின் நிதியில் 6.43% மற்றும் 6.30% வீதத்தை பதிவுசெய்துள்ளதனால் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதியில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு உரிமை கோருகிறன. சிலிங்கோ பொது மற்றும் ஜனசக்தி ஆயுள் நிறுவனங்கள் என்பன 31 டிசம்பர் 2015இல் முறையே 5.91% மற்றும் 5.58% வீதத்தை பதிவுசெய்துள்ளது. மேற்குறித்த ஐந்து காப்புறுதி நிறுவனங்களும் முதல் ஐந்து இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இலை மொத்த பங்குதாரர்களின் நிதியில் 71.10% வீதத்தை கைப்பற்றியுள்ளன.

வேறுவகையில் கூறுவதாயின், கலவை காப்புறுதியாளர்களை வேறாக்கும் நடவடிக்கைகள் 2015ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்ததனால், தனிப்பட்ட காப்புறுதி பங்குதாரர்களின் நிதியில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை காணமுடிந்தது. இதற்கு காரணம், முன்னர் கலவை காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதி பொது காப்புறுதி வியாபாரத்தின் கீழ் கவனத்தில் கொள்ளப்பட்டதாகும்.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*அட்டவணை 4*

**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள்**

| காப்புறுதி வழங்குனர்கள் | 2014 (அ) | | 2015 (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % | பங்கு மூலதனம் (ரூ. '000) | மொத்த ஒதுக்கங்கள் (ரூ. '000) | மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % |
| ஏஐஏ ஆயுள் | 4,835,259 | 3.76 | 511,922 | 5,850,950 | 6,362,871 | 4.72 |
| ஏஐஏ பொது | | | 1,878,017 | 52,262 | 1,930,279 | 1.43 |
| ஏஐஜி | 216,399 | 0.17 | 536,265 | (409,203) | 127,062 | 0.09 |
| அலையன்ஸ் பொது | 896,867 | 0.70 | 500,000 | 486,717 | 986,717 | 0.73 |
| அலையன்ஸ் ஆயுள் | 228,764 | 0.18 | 739,624 | (525,138) | 214,486 | 0.16 |
| அமானா பொது | 1,039,367 | 0.81 | 1,650,001 | 40,390 | 1,690,391 | 1.26 |
| அமானா ஆயுள் | | | 500,000 | 15,594 | 515,594 | 0.38 |
| ஆர்பிகோ | 621,296 | 0.48 | 675,565 | (22,912) | 652,653 | 0.48 |
| ஏசியன் ஆயுள் | 2,370,993 | 1.85 | 1,062,500 | 1,375,435 | 2,437,935 | 1.81 |
| ஏசியன் பொது | | | 800,000 | (214,611) | 585,389 | 0.43 |
| சிலிங்கோ | 25,269,840 | 19.67 | | | | |
| சிலிங்கோ பொது | | | 500,200 | 7,463,161 | 7,963,361 | 5.91 |
| சிலிங்கோ ஆயுள் | | | 500,001 | 8,154,425 | 8,654,426 | 6.43 |
| கொண்டினென்டல் | 897,988 | 0.70 | 750,000 | 286,499 | 1,036,499 | 0.77 |
| கோர்பரடிவ் பொது | 1,464,133 | 1.14 | 1,004,910 | 486,574 | 1,491,483 | 1.11 |
| கோப் ஆயுள் | | | 500,000 | (13,445) | 486,555 | 0.37 |
| எச்என்பி ஆயுள் | 2,406,356 | 1.87 | 1,171,875 | 1,339,468 | 2,511,343 | 1.86 |
| எச்என்பி பொது | | | 1,150,000 | (227,399) | 922,601 | 0.68 |
| ஜனசக்தி ஆயுள் | 5,206,641 | 4.05 | 4,854,139 | 2,661,582 | 7,515,721 | 5.58 |
| ஜனசக்தி பொது | | | 4,000,000 | 171,287 | 4,171,287 | 3.10 |
| எல்ஐசி | 698,866 | 0.54 | 500,000 | 192,038 | 692,038 | 0.52 |
| எல்ஓஎல்சி | 1,008,610 | 0.79 | | | | |
| எல்ஓஎல்சி பொது | | | 600,000 | 215,108 | 815,108 | 0.61 |
| எல்ஓஎல்சி ஆயுள் | | | 800,000 | (337,230) | 462,770 | 0.34 |
| எம்பிஎஸ்எல் | 459,735 | 0.36 | 1,080,022 | (727,273) | 352,749 | 0.26 |
| என்ஐடீஎப் (பி) | 7,723,035 | 6.01 | | 8,483,299 | 8,483,299 | 6.30 |
| ஓரியன்ட் | 627,949 | 0.49 | 750,000 | (232,710) | 517,290 | 0.38 |
| பீப்பிள்ஸ் | 1,409,322 | 1.10 | 1,350,000 | 888,865 | 2,238,865 | 1.66 |
| சனச | 637,444 | 0.50 | 745,058 | 111,080 | 856,138 | 0.64 |
| எஸ்எல்ஐசி | 64,216,314 | 50.00 | 6,000,000 | 57,143,901 | 63,143,901 | 46.88 |
| யூனியன் ஆயுள் | 6,210,217 | 4.83 | 1,000,000 | 2,464,929 | 3,464,929 | 2.57 |
| யூனியன் பொது | | | 3,131,948 | 272,914 | 3,404,863 | 2.54 |
| **மொத்தம்** | **128,445,395** | **100** | **39,242,047** | **95,446,557** | **134,688,603** | **100** |

(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஐடீஎப் தவிர்ந்த)

(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**பாரிய நிதித்துறைகளின் மொத்த சொத்துக்களின் விநியோகம்**

பொருளாதாரத்தில் பிரதான நிதியியல் துறைகளின் மொத்த சொத்துகள் 31 டிசம்பர் 2014 இல் பதிவுசெய்த ரூபா 12,015 பில்லியனோடு ஒப்பிடுகையில் 31 டிசம்பர் 2015ம் ஆண்டு ரூபா 13,662 பில்லியனைப் பதிவுசெய்து 13.71% வீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. அட்டவணை 05 மற்றும் வரைபு 3 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 31 டிசம்பர் 2015இல் நிதியியல் துறையில் வங்கித்துறை மொத்த சொத்துக்களாக ரூபா 9,503 பில்லியனை கொண்டிருப்பதுடன், இது மொத்த சொத்தில் 69.6% வீதமாகும். ஒப்பந்த சேமிப்பு நிறுனங்கள் நிதியில் துறையின் மொத்த சொத்துக்களில் 15.4% வீதத்தைப் பதிவுசெய்ததுடன், ரூபா 2,108.1 பில்லியன் பெறுமதியை கணக்கீட்டில் வெளிப்படுத்தியது. ஏனைய வைப்புகளை ஏற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் விசேட நிதியியல் நிறுவனங்களில் உள்ள மொத்த சொத்துக்கள் 31 டிசம்பர் 2015இல் முறையே ரூபா 1,042 பில்லியன் மற்றும் ரூபா 544 பில்லியன் ஆவதுடன் இது நிதியியல் துறையின் மொத்த சொத்துக்களில் 7.6% மற்றும் 4.0% வீதங்களைக் கொண்டுள்ளது. காப்புறுதிக் கம்பனிகள் 31 டிசம்பர் 2015இல் ரூபா 464.9 பில்லியன் சொத்துக்களைக் கொண்டிருந்ததுடன், இது நிதியியல் துறையின் மொத்த சொத்துக்களில் வீதம் 3.5% வீதமாகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியையும் காட்டுகின்றது.

*அட்டவணை 5*

**பாரிய நிதியியல் துறைகளின் மொத்த சொத்துகளின் பங்கீடு**

| நிதியியல் துறைகள் | சொத்துகளின் பங்கீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
| | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % | ரூ. பில்லியன் | % |
| வங்கித்துறை | 5,375.6 | 69.7 | 6,377.0 | 70.3 | 7,187.5 | 69.6 | 8,442 | 70.3 | 9,503 | 69.6 |
| ஏனைய வைப்புகளை ஏற்கும் நிதி நிறுவனங்கள் | 427.1 | 5.5 | 621.2 | 6.9 | 756.4 | 7.3 | 857 | 7.1 | 1,042 | 7.6 |
| விசேட நிதி நிறுவனங்கள் | 338.8 | 4.4 | 310.4 | 3.4 | 378 | 3.7 | 441 | 3.7 | 544 | 4.0 |
| ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்கள் | 1,299.4 | 16.8 | 1,429.6 | 15.8 | 1,632.5 | 15.8 | 1,853.6 | 15.4 | 2,108.1 | 15.4 |
| காப்புறுதி கம்பனிகள் | 271.4 (அ) | 3.6 | 323.0 (அ) | 3.6 | 365.8 (அ) | 3.6 | 421.4 (ஆ) | 3.5 | 464.9 (இ) | 3.4 |
| **மொத்தம்** | **7,712.3** | **100** | **9,061.2** | **100** | **10,320.2** | **100** | **12,015** | **100** | **13,662** | **100** |

* மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015

(காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து சபைக்கு கிடைத்த மீள்தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் காப்புறுதி கம்பனிகளின் சொத்துகள்)

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜடீஎப் தவிர்ந்த)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

*வரைபு 3*

**31 டிசம்பர் 2015ம் திகதியில் பாரிய நிதியியல் துறைகளின் சொத்துகளின் பங்கீடு**



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதி கம்பனிகளின் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்கள் தொடர்பான பகுப்பாய்வு**

31 டிசம்பர் 2015இல் நாடு முழுவதிலும் 1,872 கிளைகளை காப்புறுதிக் கம்பனிகள் தொழிற்படுத்தியதுடன், இது 31 டிசம்பர் 2014இல் தொழிற்படுத்தப்பட்ட கிளைகளின் எண்ணிக்கையான 1,465 உடன் ஒப்பிடுகையில் 27.78% வீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. அட்டவணை 6இல் காட்டப்பட்டவாறு, உயர் எண்ணிக்கையான கிளைகள் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளதுடன், இந்த 631 (2014: 488) எனும் எண்ணிக்கையானது நாடு முழுவதிலுமுள்ள மொத்தக் கிளைகளின் எண்ணிக்கையில் 33.71% வீதமாகும். தெற்கு மற்றும் வட மேல் மாகாணங்களில் முறையே 232 (2014:192) மற்றும் 188 (2014:133) கிளைகள் உள்ளன. இவை கிளை வலையமைப்பில் பாரிய கிளைகளைக் கொண்ட மாகாணங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைக் கொண்டுள்ளன. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் ஊவா மாகாணம் மிகக் குறைந்த எண்ணிக்கையான 108 (2014:76) கிளைகளைக் கொண்டுள்ளதுடன், இது கடந்த ஆண்டை விட 42.11% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகணங்களில் காப்புறுதி வியாபாரம் விரிவுபடுத்தப்பட்டதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகணங்களின் உள்ள கிளைகளின் எண்ணிக்கை முறையே 25.23% மற்றும் 19.23% வீதத்தினால் கடந்த ஆண்டைவிட அதிகரித்துள்ளது.

காப்புறுதிக் கைத்தொழிற்துறை பொருளாதாரத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்புகளை வழங்குகின்றது. 2015இல் காப்புறுதிக் கம்பனிகளில் மொத்தம் 15,830 (2014:15,650) ஊழியர்கள் பணியாற்றியதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.15% வீத அதிகரிப்பாகும். நாடு முழுவதிலிலும் உள்ள காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த ஊழியர்களில் 66.23% வீதமான ஊழியர்கள் மேல் மாகணத்தில் உள்ளதுடன் இவர்களின் எண்ணிக்கை 10,484 (2014: 10,287) ஆகும். 2015இல் தென் மற்றும் வடமேல் மாகாணங்கள் முறையே 986 (2014:1,143) மற்றும் 883 (2014:725) ஊழியர்களைக் கொண்டுள்ளதுடன், இது இரண்டாவது மற்றும் மூன்றாவது உயர் எண்ணிக்கையான ஊழியர்களைக் கொண்ட மாகாணங்களாக இருக்கின்றன. மிகக் குறைந்த ஊழியர்களின் எண்ணிக்கையை வடக்கு மாகாணம் கொண்டுள்ளதுடன், இங்குள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 430 (2014:400) ஆகும்.

அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளிலும் இணைக்கப்பட்டுள்ள மொத்த முகவர்களின் எண்ணிக்கை 45,433 (2014:42,958) ஆவதுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.76% வீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. கிளைகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையினைப் போன்றே அதிக எண்ணிக்கையான முகவர்கள் மேல் மாகாணத்தில் தொழிற்படுவதுடன், அவர்களின் எண்ணிக்கை 17,847 (2014: 16,578) ஆகும். 2015இல் தென் மற்றும் மத்திய மாகாணங்கள் முறையே 5,196 (2014: 5,275) மற்றும் 4,554 (2014:4,370) முகவர்களைக் கொண்டுள்ளதுடன், இது இரண்டாவது மற்றும் மூன்றாவது உயர் எண்ணிக்கையான முகவர்களைக் கொண்ட மாகாணங்களாக இருக்கின்றன. 2015ம் ஆண்டு மிகக் குறைந்த முகவர்களின் எண்ணிக்கையை ஊவா மாகாணம் கொண்டுள்ளதுடன், இங்குள்ள முகவர்களின் எண்ணிக்கை 2,258 (2014:2,197) ஆகும்.

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் 31 டிசம்பர் 2015 இல் உள்ள கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் பரவலை வரைபு 4 காட்டுகின்றது

*அட்டவணை 6*

**2014 மற்றும் 2015 டிசம்பர் 31 ம் திகதியில் செயற்பட்ட கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 |
| மத்திய மாகாணம் | 159 | 178 | 941 | 841 | 4,370 | 4,554 |
| கிழக்கு மாகாணம் | 104 | 124 | 506 | 480 | 2,310 | 2,383 |
| வட மத்திய மாகாணம் | 110 | 132 | 682 | 579 | 2,752 | 2,850 |
| வட மேற்கு மாகாணம் | 133 | 188 | 725 | 883 | 3,898 | 4,339 |
| வடக்கு மாகாணம் | 111 | 139 | 400 | 430 | 3,369 | 3,339 |
| சம்பரகமுவ மாகாணம் | 92 | 140 | 561 | 687 | 2,209 | 2,667 |
| தென் மாகாணம் | 192 | 232 | 1,143 | 986 | 5,275 | 5,196 |
| ஊவா மாகாணம் | 76 | 108 | 405 | 460 | 2,197 | 2,258 |
| மேல் மாகாணம் | 488 | 631 | 10,287 | 10,484 | 16,578 | 17,847 |
| **மொத்தம்** | **1,465** | **1,872** | **15,650** | **15,830** | **42,958** | **45,433** |

*வரைபு 4*

**31 டிசம்பர் 2015ம் திகதியில் இருந்த கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்**

அட்டவணை 5இல் காட்டப்பட்டவாறு, காப்புறுதி வழங்குனர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்களை அடைவதற்கு முகவர்கள், தரகர்கள், நேரடி சந்தைப்படுத்தல், வங்கிக் காப்புறுதி மற்றும் ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்தினர். கடந்த வருடங்களைப் போலவே இவ்வருடமும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் வாடிக்கையாளர்களை அடைவதற்கு பிரதான விநியோக ஊடகமாக முகவர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். 2015ம் ஆண்டில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்களில் 90.04% 2014: 91.62% வீதம் முகவர்களினால் பதிவுசெய்யப்பட்டதுடன், இது சந்தையில் அவர்களின் ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. நேரடி சந்தைப்படுத்தல் மற்றும் வங்கியுடனிணைந்த காப்புறுதி என்பன நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் முக்கிய ஊடகங்களாக இருப்பதுடன், இவை 2015ம் ஆண்டு மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்களில் முறையே 4.84%, மற்றும் 3.99% வீத பங்களிப்பினை வழங்கின. ஏனைய குழுக்கள், கூட்டிணைந்த நிறுவனங்கள் மற்றும் கிளைகள் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 0.85% வீதத்தை உழைத்துக்கொண்டதுடன், 2015ம் ஆண்டு தரகர்கள் மொத்த எழுதப்பட்ட தவணை வருமானத்தில் 0.86% வீதத்தினை மாத்திரமே உழைத்துக்கொண்டது.

நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் இல்லாவிடிலும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை அடைவதற்கு நேரடிச் சந்தைப்படுத்தல், முகவர்கள், தரகர்கள் மற்றும் ஏனைய விநியோக ஊடகங்கள் என்பன விநியோக ஊடகத்தில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளன. வரைபடம் 5இல் காட்டியவாறு, பொது காப்புறுதி வியாபாரத்தில் நேரடி சந்தைப்படுத்தல், ஏனைய விநியோக ஊடகங்கள், முகவர்கள், தரகர்கள், மற்றும் வங்கியோடிணைந்த காப்புறுதி என்பன முறையே 27.38%, 23.18%, 17.34% மற்றும் 3.81% வீத பங்களிப்பை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு வழங்கியுள்ளன.

*வரைபு 5*
**காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்**




| | நீண்டகாலம் 2014 | பொது 2014 | நீண்டகாலம் 2015 | பொது 2015 |
|---|---|---|---|---|
| முகவர்கள் | 91.62 | 29.45 | 90.04 | 28.29 |
| தரகர்கள் | 0.47 | 15.58 | 0.28 | 17.34 |
| நேரடி | 3.22 | 38.86 | 4.84 | 27.38 |
| வங்கியோடிணைந்த காப்புறுதி | 2.99 | 3.62 | 3.99 | 3.81 |
| ஏனையவை | 1.70 | 12.49 | 0.85 | 23.18 |

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் 2015ம் ஆண்டு ரூபா 53,575 மில்லியன் மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களை உருவாக்கியதுடன், இது 2014ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 44,596 மில்லியன் மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறந்த செயலாற்றுகை ஆகும். இது 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், அது 2014ம் ஆண்டு பதிவு செய்த 7.01% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு நீண்ட கால காப்புறுதிச் சந்தை 20.14% வீதம் எனும் மிகச் சிறப்பான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. கடந்த ஐந்து வருடங்களைக் கருத்தில் கொண்டால், அதில் நீண்கால காப்புறுதி வழங்குனர்கள் பதிவு செய்த மிக அதிகமான தொகையைக் கொண்ட வருடமாக 2015ம் ஆண்டு அமைந்துள்ளது.

இந்த தவணைக் கட்டண வளர்ச்சியானது புதிய பொதிகள், புத்தாக்கமுள்ள சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள், விசேடமாக முகவர் படையை விரிவாக்கல் உட்பட விநியோக ஊடகங்களின் விரிவாக்கல் போன்ற காரணிகளினால் உருவானதாகும். அத்துடன் 2015ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடாத்தப்பட்ட "ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு மாதம்", நீண்ட கால காப்புறுதி தொடாபாக மக்களிடையே அறிவு மற்றும் பாரிய விழிப்பணர்வை ஏற்படுத்தியதன் மூலம் நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் நேர்மறைப் பங்களிப்புக்கு பாதையமைத்துக் கொடுத்தது.

சிலிங்கோ நிறுவனம் 2015ம் ஆண்டு ரூபா 13,457 மில்லியன் (2014: ரூபா 12,003 மில்லியன்) எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களை உழைத்துக் கொண்டதுடன், நிறுவனம் நீண்டகால காப்புறுதி சந்தையில் தொடர்ந்தும் தன் மேலாண்மையினை உறுதிசெய்ததுடன், மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களில் 25.12% (2014: 26.92%) வீத பங்களிப்பினையும் வழங்கியது. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ரூபா 10,367 மில்லியன் எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக் கட்டணங்களை பிறப்பித்து இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெற்றதுடன், சந்தையில் 19.35% (2014: 18.21%) வீதத்தைத் தன்வசம் வைத்துக்கொண்டுள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தவணைக் கட்டண வருமானம் 2014ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 8,121 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 27.66% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. ஏஐஏ ஆயுள் நிறுவனம் சந்தையில் மூன்றாவது பங்கைப் (ரூபா 8,433 மில்லியன், 15.74%) பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதைத் தொடர்ந்த இடங்களை முறையே யூனியன் அசூரன்ஸ் லிமிடட் (ரூபா 6,964 மில்லியன், 13%) மற்றும் ஏசியன் ஆயுள் (ரூபா 4,091 மில்லியன், 7.64%) நிறுவனங்கள் பெற்றுக்கொண்டுள்ளன. எச்என்பி ஆயுள் மற்றும் ஜனசக்தி ஆயுள் நிறுவனங்கள் முறையே ரூபா 2,789 மில்லியன் (5.21%) மற்றும் ரூபா 2,536 மில்லியன் (4.73%) தவணைக் கட்டண வருமானத்தைப் பெற்றும் ஆறாம் மற்றும் ஏழாம் இடங்களை தக்கவைத்துக்கொள்ள முடிந்தது.

எல்ஓஎல்சி ஆயுள் நிறுவனம் குறிப்பிடப்கூடியளவில் தன் தவணைக் கட்டண வருமானத்தை ரூபா 1,210 மில்லியனாக (2014: ரூபா 592 மில்லியன்) உயர்த்திக்கொண்டதன் ஊடாக தனது சந்தைப் பங்கை 2.26% (2014: 1.33%) வீதமாக பதிவுசெய்ததுடன், நீண்ட கால காப்புறுதிச் சந்தையில் எட்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. வரைபு 6, மொத்த எழுதப்பட்ட தவண்ணைக் கட்டண சந்தைப் பங்கையும், அட்டவணை 7, 2011 இருந்து 2015 வரை நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தையும் விவரிக்கின்றது.

*அட்டவணை 7*

**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண ஊடுறுவலின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு**

| காப்புறுதியாளர் | 2011 | | 2012 | | 2013 | | 2014 (அ) | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தவணைக் கட்டணம் (ரூ.'00) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'00) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'00) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'00)) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ.'00) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ ஆயுள் | 7,846,447 | 22.32 | 6,495,863 | 17.33 | 6,863,047 | 16.47 | 7,266,574 | 16.29 | 8,433,333 | 15.74 |
| அலையன்ஸ் ஆயுள் | 351,299 | 1.00 | 532,142 | 1.42 | 828,790 | 2.00 | 823,456 | 1.85 | 919,143 | 1.72 |
| அமானா ஆயுள் | 303,786 | 0.86 | 364,759 | 0.97 | 542,986 | 1.30 | 679,029 | 1.52 | 928,294 | 1.73 |
| ஆர்பிக்கோ | - | - | 101,900 | 0.27 | 206,494 | 0.50 | 297,439 | 0.67 | 484,226 | 0.90 |
| ஏசியன் ஆயுள் | 1,579,191 | 4.49 | 2,034,084 | 5.43 | 2,520,283 | 6.05 | 3,048,148 | 6.84 | 4,091,042 | 7.64 |
| சிலிங்கோ ஆயுள் | 9,815,943 | 27.91 | 10,829,470 | 28.90 | 11,122,906 | 26.69 | 12,002,524 | 26.92 | 13,456,828 | 25.12 |
| கோப்பரடிவ் | 269,579 | 0.77 | 312,056 | 0.83 | 337,623 | 0.81 | 402,046 | 0.90 | 493,384 | 0.92 |
| எச்என்பி ஆயுள் | 1,290,367 | 3.67 | 1,500,028 | 4.00 | 2,014,547 | 4.83 | 2,342,867 | 5.25 | 2,788,716 | 5.21 |
| ஜனசக்தி ஆயுள் | 1,871,986 | 5.32 | 2,025,075 | 5.41 | 2,193,662 | 5.26 | 2,170,419 | 4.87 | 2,536,298 | 4.73 |
| எல்ஜிசி | 295,859 | 0.84 | 303,344 | 0.81 | 322,268 | 0.77 | 348,767 | 0.78 | 387,535 | 0.72 |
| எல்ஓஎல்சி ஆயுள் | 51,427 | 0.15 | 106,238 | 0.28 | 274,798 | 0.66 | 592,422 | 1.33 | 1,209,578 | 2.26 |
| எம்பிஎஸ்எல் | 143,156 | 0.41 | 192,780 | 0.52 | 251,720 | 0.60 | 294,299 | 0.66 | 203,235 | 0.38 |
| சனச | 128,113 | 0.36 | 203,616 | 0.54 | 283,975 | 0.68 | 260,867 | 0.58 | 311,910 | 0.58 |
| எஸ்எல்ஐசி | 6,743,073 | 19.18 | 7,369,031 | 19.66 | 8,397,718 | 20.15 | 8,121,159 | 18.21 | 10,367,498 | 19.35 |
| யூனியன் ஆயுள் | 4,471,627 | 12.72 | 5,106,323 | 13.63 | 5,515,063 | 13.23 | 5,945,499 | 13.33 | 6,964,390 | 13.00 |
| **மொத்தம்** | **35,161,853** | **100** | **37,476,709** | **100** | **41,675,880** | **100** | **44,595,515** | **100** | **53,575,410** | **100** |
| **வளர்ச்சி வீதம் (%)** | **12.87** | | **6.58** | | **11.20** | | **7.01** | | **20.14** | |

(அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஐடீஎப் தவிர்ந்த)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 6*

**2015 டிசம்பர் 31ம் திகதியன்று முடிவடைந்த ஆண்டில் கம்பனி ரீதியாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சந்தை பங்கு**




**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் முதல் ஐந்து பங்காளர்கள் மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குனர்களின் சந்தைப் பங்கு**

சிலிங்கோ ஆயுள், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஏஜஏ ஆயுள், யுனியன் ஆயுள், மற்றும் ஏசியன் ஆயுள் என்பன சந்தையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன. முதல் ஐந்து சந்தை ஆட்டக்காரர்களும் இணைந்து 2015ம் ஆண்டு சந்தையில் 80.85% (2014: 81.59%) வீதத்தை நீண்டகால காப்புறுதி தவணைக் கட்டண வருமானத்தில் பெற்றுக்கொண்டுள்ளதுடன், மிகுதி ஆட்டக்காரர்கள் இணைந்து 19.15% (2014:18.41%) வீதத்தைக் கைப்பற்றியுள்ளனர். இந்த முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட கம்பனிகள் மற்றும் ஏனையவற்றின் சந்தைப் பங்குகளின் பகுப்பாய்வு வரைபு 7இல் காட்டப்பட்டுள்ளது

*வரைபு 7*

**2011 – 2015 வரை முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக்கொண்ட கம்பனிகள் மற்றும் ஏனையவற்றின் சந்தைப் பங்குகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ ஆயுள் | இ.கா.கூ | ஏஜஏ ஆயுள் | யூனியன் ஆயுள் | ஏசியன ஆயுள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2011 | 27.91 | 19.18 | 22.32 | 12.72 | 4.49 | 13.38 |
| 2012 | 28.90 | 19.66 | 17.33 | 13.63 | 5.43 | 15.05 |
| 2013 | 26.69 | 20.15 | 16.47 | 13.23 | 6.05 | 17.41 |
| 2014(அ) | 26.92 | 18.21 | 16.29 | 13.33 | 6.84 | 18.41 |
| 2015(ஆ) | 25.12 | 19.35 | 15.74 | 13.00 | 7.64 | 19.15 |

(அ) மீளதரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

வரைபு 8 இல் காட்டப்பட்டவாறு, நீண்ட கால காப்புறுதி கம்பனிகளினால் 2015ம் ஆண்டு முதிர்ச்சி, மரணம், அடைக்களதாரர் நன்மைகள் போன்றன உட்பட வழங்கப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 20,937 மில்லியன் (2014: ரூபா 20,644) ஆகும். 2015ம் ஆண்டு முதிர்ச்சி நன்மைகளுக்கு வழங்கப்பட்ட தொகையானது ரூபா 11,683 மில்லியனாகவும் (2014: ரூபா 9,754 மில்லியன்) 19.77% வீதமாகவும் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்துள்ளது. இது இவ்வாண்டு வழங்கப்பட்ட மொத்தக் கோரிக்கைகளில் அரைவாசிக்கும் அதிகமாகும். அடைக்களதாரர் நன்மைகளுக்காக வழங்கப்பட்ட தொகையானது மொத்த வழங்களில் நாலிலொரு பங்கை மட்டுமே பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2014ம் ஆண்டு வழங்கப்பட்ட ரூபா 7,185 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு வழங்கப்பட்ட ரூபா 5,279 மில்லியன் 26.53% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

2015ம் ஆண்டு மரணத்திற்கு வழங்கப்பட்ட தெகையான ரூபா 1,795 மில்லியன் மொத்த வழங்கல் தொகையில் 8.58% வீதத்தைப் பிரதிபலிக்கின்றது. அத்துடன், மரணத்திற்கு வழங்கப்பட்ட தொகையானது கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 1,889 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிய அளவில் குறைவடைந்துள்ளது. ஆரோக்கிய நன்மைகள், முன் கொடுப்பனவுகள், மிகை ஊதியம் போன்ற ஏனைய நன்மைகள் 2014ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 1,379 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வருடனம் ரூபா 1,755 மில்லியனாக அதிகரித்துள்ளது.

*வரைபு 8*

**காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | 2011 | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (ஆ) |
|---|---|---|---|---|---|
| ஊனமுற்றவர்களுக்கான நன்மைகள் | 31,183 | 77,717 | 45,457 | 436,518 | 425,213 |
| மரணம் | 681,111 | 789,166 | 1,358,337 | 1,889,289 | 1,795,361 |
| ஒப்படைத்தல்கள் | 2,225,506 | 2,823,924 | 5,677,638 | 7,184,611 | 5,278,539 |
| முதிர்வு நன்மைகள் | 6,242,096 | 7,860,715 | 9,839,833 | 9,754,751 | 11,683,143 |
| ஏனையவை | 1,367,512 | 1,920,859 | 1,388,698 | 1,378,929 | 1,754,618 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தினால் தீர்க்கப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை**

2015ம் ஆண்டு நீண்ட கால காப்புறுதி வழங்குனர்களினால் 280,753 கோரிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், அட்டவணை 8 இல் காட்டப்பட்டவாறு இது கடந்த ஐந்து வருடங்களில் பதிவுசெய்த மிகப்பெரிய தொகையாகும். 2015ம் ஆண்டு முதிர்ச்சி மற்றும் மரணங்களுக்கான கோரிக்கைகள் முறையெ 105,308 மற்றும் 6,782 ஆக உள்ளன. அத்துடன், அடைக்களதாரர்களிடமிருந்து 43,651 கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இது 2015ம் வழங்கப்பட்ட தொகையில் 15.55% வீதத்தைப் பிரதிபலிக்கின்றது.

*அட்டவணை 8*

**காப்புறுதிக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| முதிர்வு நன்மைகள் | 98,363 | 102,465 | 102,050 | 107,353 | 105,308 |
| மரணம் | 4,328 | 4,358 | 5,284 | 5,795 | 6,782 |
| ஊனமுற்றவர்களுக்கான நன்மைகள் | 569 | 578 | 6,980 | 8,120 | 12,540 |
| ஒப்படைத்தல்கள் | 25,661 | 24,631 | 41,964 | 46,312 | 43,651 |
| ஏனையவை | 45,885 | 51,773 | 99,257 | 84,835 | 112,472 |
| **மொத்தம்** | **174,806** | **183,805** | **255,535** | **252,415** | **280,753** |

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள்**

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் செறிவு 31 டிசம்பர் 2015இல் ரூபா 305,897 மில்லியனாக (2014: ரூபா 247,061 மில்லியன்) இருப்பதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23.81% வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இவ்வருடமும், ஆயுள் நிதிச் சொத்துக்களில் 30மூ வீதத்தை அரச பிணையங்களில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும் எனும் கோரிக்கைக்கு அமைவாக பிரதான முதலீட்டு வகையாக அரச பிணையங்கள் அமைந்துள்ளதுடன், குறைந்தளவு இடர் காணப்படுகின்றது. 2015ம் ஆண்டு ரூபா 136,832 மில்லியன் (2014: ரூபா 111,153 மில்லியன்) பெறுமதியான சொத்துக்கள் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், இது மொத்த சொத்துக்களில் 44.73% (44.99%) வீதமாகும்.

2015ம் ஆண்டு, கூட்டிணைந்த தனிசுப் பிணையங்களில் முதலீடு செய்யும் நடைமுறை தொடர்ந்ததுடன், 2014ம் ஆண்டு கூட்டிணைந்த தனிசுப் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 40,473 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ரூபா 51,895 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது 27.37% வீத வளர்ச்சியாகும்.

2015ம் ஆண்டு தொடர்ந்தும் வைப்புகளுக்கான வட்டி குறைந்த வீதத்தில் காணப்பட்டதுடன், வைப்புகளின் மீதான முதலீடு 2014ம் ஆண்டு வைப்பு செய்யப்பட்ட ரூபா 37,474 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு அத்தொகை ரூபா 38,644 மில்லியனாக அதிகரித்துள்ளது.

பிரதான முதலீடுகளின் வகைப்படுத்தல் அரசாங்க பிணையங்கள், கூட்டிணைந்த தனிசுப் பிணையங்கள் மற்றும் வைப்புகள் என்பன திரட்டிய மொத்தமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் 74.32% (2014: 76.65%) வீதத்தை பதிவுசெய்துள்ளன.

2015ம் ஆண்டு, மூன்றாவது பெரிய முதலீட்டு வகையான உரிமைப் பங்குகளில் மீதான முதலீடு பங்குச் சந்தையின் நியாயமான செயலாற்றுகையினால் ரூபா 31,049 மில்லியனில் இருந்து ரூபா 40,595 மில்லியனாக அதிகரித்துள்ளது. கலவைக் காப்புறுதிக் கம்பனிகளின் வேறுபடுத்தலின் விளைவாக, துணை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அதிகரித்துள்ளது. அத்துடன் காப்புறுதியாளர்கள் விபரப்பட்டியலில் ஏனைய சொத்துக்களான காணி மற்றும் கட்டடங்கள், கொள்கை கடன்கள் மற்றும் காசு மற்றும் காசுக்கு சமனானவை என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளது. அட்டவணை 9 மற்றும் வரைபு 9 என்பன நீண்ட கால வியாபாரக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் செறிவினைக் காட்டுகின்றது.

*அட்டவணை 9*

**31 டிசம்பர் 2014 மற்றும் 2015ம் திகதிகளில் சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| | 2014 (அ) | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|
| **சொத்துகளின் வகை** | **ரூபா '000** | **%** | **ரூபா '000** | **%** |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 111,153,045 | 44.99 | 136,831,589 | 44.73 |
| உரிமைப் பங்குகள் | 31,048,723 | 12.57 | 40,595,129 | 13.27 |
| கூட்டிணைந்த தரிசுப் பிணையங்கள் | 40,743,451 | 16.49 | 51,895,159 | 16.96 |
| காணியும் கட்டிடமும் | 5,909,483 | 2.39 | 8,738,764 | 2.86 |
| வைப்புகள் | 37,473,905 | 15.17 | 38,643,918 | 12.63 |
| பொறுப்பு நம்பிக்கை கூறு | 2,220,790 | 0.90 | 2,392,162 | 0.78 |
| காப்புறுதி கடன்கள் | 5,708,113 | 2.31 | 5,498,162 | 1.80 |
| ஏனைய சொத்துகள் | 10,635,805 | 4.30 | 18,310,155 | 5.99 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 2,167,851 | 0.88 | 2,991,628 | 0.98 |
| **மொத்தம்** | **247,061,166** | **100.00** | **305,896,666** | **100** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

*வரைபு 9*

**31 டிசம்பர் 2015ம் திகதிகளில் சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

### நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் முதலீட்டு வருமானம்

2015இல் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மூலம் பிறப்பிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் குறைந்த வட்டி வீதம் மற்றும் பங்குச் சந்தையின் குறைந்த அசைவு காரணமாக மறைத் தாக்கத்தை வெளிப்படுத்தின. அட்டவணை 10இல் காட்டப்பட்டவாறு, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தினால் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீடான ரூபா 260,945 மில்லியன் (2013: ரூபா 194,653 மில்லியன்) மூலம் உழைத்துக்கொண்ட தொகை ரூபா 24,882 மில்லியன் ஆவதுடன், மொத்த முதலீட்டின் வருமானமான 9.54% வீதமாகும்.

2015இல், அரசாங்க கடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீடான ரூபா 123,922 மில்லியனிலிருந்து ரூபா 12,934 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது. திறைசேரிப் பிணையங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 12,063 ஆக இருப்பதுடன், இது 2015ம் ஆண்டு பெறப்பட்ட மொத்த முதலீட்டு வருமானத்தில் 48.5% வீதமாகும். எனினும், அரச பிணையங்களில் இருந்து பெற்றுக்கொண்ட முதலீட்டு வருமானம் 10.43% வீதத்தைப் பிரதிபலிப்பதுடன், இது 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11.25% வீழ்ச்சியாகும்.

காப்புறுதி வைப்பாளர்கள் கவர்ச்சிகரமான கூட்டிணைந்த பிணையச் சந்தைகளில் முதலீடு செய்வதற்கு விரும்பியதுடன், 2015ம் ஆண்டு கூட்டிணைந்த பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீடு ரூபா 9,475 மில்லியனால் அதிகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 46,319 மில்லியன் (2014: ரூபா 36,844) ஆகும். மேலும் இந்த கூட்டிணைந்த பிணையங்கள் மூலம் முதலீட்டு வருமானமாக ரூபா 5,465 மில்லியன் பெறப்பட்டதுடன், இது 2015ம் ஆண்டு முதலீட்டு வருமானத்தில் 11.80% வீதமாகும்.

2015இல் உரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 2014ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 3,956 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 869 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. பங்கு இலாப வருமானம், பங்கு வருமானமான ரூபா 1,464 மில்லியனையும் (2013: முதலீட்டு நட்டங்கள் ரூபா 595 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

2015ம் ஆண்டு கூறு நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம் 2014ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 531 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 101 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2014ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,261 மில்லியன் கூறு நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் மீதான சராசரி முதலீடு 2015ம் ஆண்டு ரூபா 2,306 மில்லியனாக அதிகரித்துள்ளது.

2015ம் ஆண்டு, வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 2.76% வீதமாக குறைவடைந்துள்ளதுடன், இத் தொகை ரூபா 38,059 மில்லியன் ஆகும். அத்துடன், 2014ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 4,563 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு முதலீட்டு வருமானம் ரூபா 3,507 மில்லியனாக குறைவடைந்துள்ளது.

2015ம் ஆண்டு ஏனைய முதலீடுகளில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம் காப்புறுதி வழங்குனரினால் மேற்கொள்ளப்பட்ட துணை நிறுவனங்களின் விற்பனை காரணமாக 2014ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 676 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு இத்தொகை 1,902 மில்லினாக குறித்துரைக்கத்தக்க அதிகரிப்பைக் காட்டியது.

*அட்டவணை 10*

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடு என்பவற்றின் சுருக்கம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

| வகைப்படுத்தல | 2014(அ) | | | 2015(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 11,512,106 | 102,346,152 | 11.25 | 12,934,054 | 123,992,317 | 10.43 |
| - திறைசேரி முறிகள் | 10,315,496 | | | 12,063,400 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 384,095 | | | 202,707 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 812,515 | | | 667,947 | | |
| **Equity** | 3,956,177 | 27,827,594 | 14.22 | 869,042 | 35,821,926 | 2.43 |
| - மூலதன இலாபம்/நட்டம் | 3,026,181 | | | (595,326) | | |
| - பங்கிலாபம் | 929,996 | | | 1,464,368 | | |
| **கூட்டிணைந்த தரிசுப் பிணையம்** | 4,600,656 | 36,843,640 | 12.49 | 5,464,638 | 46,319,305 | 11.80 |
| - தொகுதி கடன்கள் | 4,586,742 | | | 5,435,533 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 20,783 | | | 19,925 | | |
| - சொத்துகளை ஈடாக கொண்ட பிணையங்கள் | 5,910 | | | - | | |
| - அவ்வாறான ஏனைய நிதியில் பத்திரங்கள் | (12,779) | | | 9,180 | | |
| **காணிகளும் கட்டிடங்களும்** | 2,454 | 6,019,820 | 0.04 | (1,729) | 7,324,124 | (0.02) |
| **வைப்புகள்** | 4,563,205 | 39,140,139 | 11.66 | 3,507,413 | 38,058,912 | 9.22 |
| - வங்கி | 4,344,197 | | | 3,300,590 | | |
| - நிதி கம்பனிகள் | 219,008 | | | 206,823 | | |
| **பொறுப்பு கூறு நம்பிக்கை** | 531,077 | 2,261,415 | 23.48 | 101,312 | 2,306,476 | 4.39 |
| **தங்கம்** | (56) | 14,648 | (0.38) | - | - | - |
| **காப்புறுதி கடன்கள்** | 56,724 | 5,471,640 | 1.04 | 105,190 | 5,603,138 | 1.88 |
| **ஏனையவை** | 675,749 | 916,864 | 73.70 | 1,901,613 | 1,518,722 | 125.21 |
| **மொத்தம்** | **25,898,092** | **220,841,912** | **11.73** | **24,881,533** | **260,944,920** | **9.54** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்

(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**விநியோகிக்கப்பட்ட காப்புறுதி பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

இவ்வருடம் ஆயுள் காப்புறுதி வழங்குனர்கள் முகவர் படையின் தரத்தினை விசேடமாக மேம்படுத்துவதன் ஊடாக அவர்களின் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தல் மற்றும் விரிவுபடுத்தலின் ஊடாக வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறுபட்ட முன்னெடுப்புகளை மேற்கொண்டனர். இந்த முயற்சியின் காரணமாக 2014ம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 545,303 புதிய கொள்கைகளுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு இந்த எண்ணிக்கை 650,786 ஆக உயர்ந்ததுடன், இதன் அதிகரிப்பு வீதம் 19.34% ஆகும். அட்டவணை 10இல் காட்டப்பட்டவாறு, 2015ம் ஆண்டு பயனுறுதிபெற்றுள்ள மொத்தக் காப்புறுதிகளின் எண்ணிக்கை 2,808,840 (2014: 2,604,667) ஆகும். அத்துடன் கடந்த ஐந்து வருடத்தில் பதிவுசெய்த உயர் எண்ணிக்கையாகும்.

2015ம் ஆண்டு பயனுறுதி பெற்ற காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 13.4% வீதமாகும். அத்துடன், பயனுறுதி பெற்றுள்ள நீண்ட கால காப்புறுதியின் எண்ணிக்கை மொத்த தொழிலாளர் படை 2014ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள 29.6% வீதத்துடன் ஒப்பிடுகையில் 3.1% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

*வரைபு 10*

**விநியோகிக்கப்பட்ட காப்புறுதி பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | 2011 | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (ஆ) |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள புதிய ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை | 526,023 | 514,516 | 546,292 | 545,303 | 650,786 |
| நடைமுறையிலுள்ள ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை | 2,355,449 | 2,438,340 | 2,477,695 | 2,604,667 | 2,808,840 |
| மொத்த சனத் தொகையின் % வீதத்தில் நடைமுறையில் உள்ள ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை * | 11.3 | 11.9 | 12.0 | 12.5 | 13.4 |
| தொழிலாளர்களின் % வீதத்தில் நடைமுறையில் உள்ள ஆயுட் பூட்கைகளின் எண்ணிக்கை * | 27.5 | 28.8 | 28.1 | 29.6 | 32.7 |

* மூலம்: ஆண்டின் மத்தியில் தொழிற்படையினரும் மற்றும் சனத்தொகையும் - குடிமதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காலங்கடந்த காப்புறுதிக் பூட்கை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

கடந்த ஐந்து வருடங்களில் காணப்பட்ட காலம்கடந்த காப்புறுதிக் கொள்கைகளின் விபரங்கள் வரைபு 11இல் காட்டப்பட்டுள்ளது. இந்த வருடம், 358,748 காலங்கடந்த காப்புறுதிகள் இருந்ததுடன், மொத்த காப்புறுதிக் கொள்கைகளில் மொத்த காலங்கடந்த காப்புறுதிக் கொள்கைகளின் வீதம் 12.77% ஆவதுடன், இது 2014ம் பதிவுசெய்த 13.92% வீதத்துடன் ஒப்பிடுகையில் இது சிறிதளவான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. 2014ம் ஆண்டு காலாவதியான புதிய கொள்கைகளின் எண்ணிக்கையான 103,500 உடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு காலங்கடந்த காப்புறுதி எண்ணிக்கையான 103,500 என்பது சிறிய முன்னேற்றம் ஆகும். அத்துடன், இந்த காலவதியான கொள்கைகளில் வீதமானது 2014ம் ஆண்டு காணப்பட்ட 18.98% வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் அதன் வீதம் 14.17% வீதமான முன்னெற்றம் அடைந்துள்ளது.

*வரைபு 11*

**2011 இருந்து 2015ம் வரை காலங்கடந்த காப்புறுதிக் பூட்கைகளின் எண்ணிக்கை மற்றும் காலங்கடந்த விகிதம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**




| | | 2011 | 2012 | 2013 | 2014 (அ) | 2015 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| ■ | காலங்கடந்த புதிய காப்புறுதி பூட்கைகள் | 82,080 | 94,936 | 107,906 | 103,500 | 92,222 |
| □ | காலங்கடந்த மொத்த காப்புறுதி பூட்கைகள் | 371,196 | 332,707 | 366,506 | 362,664 | 358,748 |
| -■- | வழங்கப்பட்ட புதிய காப்புறுதி பூட்கைகளின் கீழ் காலங்கடந்த புதிய பூட்கைகளின் சதவீதம் | 15.6 | 18.45 | 19.75 | 18.98 | 14.17 |
| -□- | அமுலாக்கப்பட்ட மொத்த காப்புறுதி பூட்கைகளின் கீழ் மொத்த காலங்கடந்த புதிய பூட்கைகளின் சதவீதம் | 15.76 | 13.64 | 14.79 | 13.92 | 12.77 |

(அ) சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கணிப்பீட்டு வருவாய்களில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு
(ஆ) ஏற்பாட்டு இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் நிலைமை - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

சபையினால் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக, கணிப்பீடு செய்யப்பட வேண்டிய தேவையுள்ள கடன்தீர் எல்லை தேவைப்பாட்டுடன் இணங்கி செயற்பட வேண்டும் என காப்புறுதிக் கம்பனிகள் கோரப்படுகின்றன. 2014 டிசம்பர் 31 மற்றும் 2015ம் திகதியில் உள்ளவாறு நீண்டகால காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் விகிதம் மற்றும் காப்பீட்டு பொறுப்புகள் என்பவற்றை அட்டவணை 11 காண்பிக்கின்றது. 2015ம் ஆண்டு மொத்த பூட்கை பொறுப்புகள் ரூபா 170,095 ஐ பதிவுசெய்ததுடன், அதற்கு முன்னைய ஆண்டு இத்தொகை ரூபா 152,454 ஆக இருந்தது. இது கடந்த ஆண்டை விட 11.57% வீத வளர்ச்சியைக் காட்டுகின்றது.

*அட்டவணை 11*

**2014 டிசம்பர் 31 மற்றும் 2015 அன்றுள்ளவாறு, கம்பனி ரீதியாக கடன் தீர் நிலைபாடும் மற்றும் காப்பீட்டு பொறுப்புகள் என்பவற்றின் பகுப்பாய்வு – நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குனர் | 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (அ) | | 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தீர் விகிதம் | காப்புறுதி பொறுப்புகளின் பெறுமதி (ரூ. '000) | கிடைக்கக்கூடிய கடன்தீர் எல்லை (ரூ. '000) | தேவைப்படும் கடன் தீர் எல்லை (காப்புறுதி பொறுப்பு *0.05) (ரூ. '000) | கடன் தீர் விகிதம் | காப்புறுதி பொறுப்புகளின் பெறுமதி (ரூ. '000) |
| ஏஐஏ ஆயுள் | 4.32 | 25,120,062 | 7,938,606 | 1,392,166 | 5.70 | 27,843,311 |
| அலையன்ஸ் ஆயுள் | 2.30 | 980,741 | 88,833 | 70,172 | 1.27 | 1,403,433 |
| அமானா ஆயுள் | 1.10 | 555,610 | 161,678 | 29,267 | 5.52 | 585,338 |
| ஆர்ப்பிகோ | 34.27 | 283,540 | 394,263 | 23,728 | 16.62 | 474,558 |
| ஏசியன் ஆயுள் | 2.66 | 4,913,375 | 447,020 | 298,185 | 1.50 | 5,963,695 |
| சிலிங்கோ ஆயுள் | 10.50 | 40,315,535 | 22,942,452 | 2,201,381 | 10.42 | 44,027,618 |
| கோப் ஆயுள் | 1.05 | 798,243 | 272,354 | 51,824 | 5.26 | 1,036,476 |
| எச்என்பி ஆயுள் | 2.29 | 5,040,184 | 736,314 | 342,273 | 2.15 | 6,845,464 |
| ஜனசக்தி ஆயுள் | 2.54 | 6,822,472 | 630,047 | 398,395 | 1.58 | 7,967,906 |
| எல்ஜசி | 12.28 | 1,141,273 | 587,122 | 64,976 | 9.04 | 1,299,526 |
| எல்ஓஎல்சி ஆயுள் | 5.74 | 682,942 | 317,371 | 60,328 | 5.26 | 1,206,569 |
| எம்பிஎஸ்எல் | 0.13 | 336,932 | 40,820 | 19,025 | 2.15 | 380,499 |
| சனச | 3.59 | 693,098 | 245,236 | 43,687 | 5.61 | 873,747 |
| எஸ்எல்ஐசி | 13.22 | 46,300,512 | 24,872,920 | 2,409,380 | 10.32 | 48,187,592 |
| யூனியன் ஆயுள் | 4.74 | 18,469,562 | 3,004,872 | 1,099,955 | 2.73 | 21,999,099 |
| **மொத்தம் / முழுமையாக** | **8.57** | **152,454,081** | **62,679,908** | **8,504,742** | **7.37** | **170,094,831** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## பொது காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் உள்ள காப்புறுதி நிறுவனங்கள் மொத்தமாக ரூபா 68,815 மில்லியனை 2014ம் ஆண்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக பதிவுசெய்துள்ளதுடன், இது 2014ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 60,803 மில்லியனோடு ஒப்பிடுகையில் 13.18% வீத வளர்ச்சியை அட்டவணை 12 காட்டுகின்றது. இந்த வளர்ச்சி அனைத்து வகையான பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் இருந்தும் கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டண வருமானத்தில் இருந்து கிடைக்கப்பெற்றதுடன், மோட்டார் வாகனக் காப்புறுதி 2014ம் ஆண்டில் பதிவுசெய்த 7.37% வீதத்தை விட அதிகரித்த வளர்ச்சியான 19% வீதத்தை 2015ம் ஆண்டு வெளிப்படுத்தியது. 2015ம் ஆண்டு அதிக வாகனங்கள் பதிவு செய்யப்பட்டமையின் காரணமாக இந்த அதிகரிப்பு விளைந்தது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், 2015ம் ஆண்டு பொதுக் காப்புறுதிகள் தொடாபான வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் தவணைக் கொடுப்பனவுகள் மீதான வருமானம் ரூபா 3,017 மில்லியன் (2014: ரூபா 2,835 மில்லியன்) என உறுதிசெய்திருப்பதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.41% வீத வளர்ச்சியைக் காட்டியது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதிகூடிய சந்தைப் பெறுமதியை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் கொண்டிருந்துதுடன், இது மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் 19,77% (2014: 19.92%) வீதமவதுடன், இத்தொகை ரூபா 13,606 மில்லியன் (2014: ரூபா 12,114 மில்லியன்) ஆகும்.

சிலிங்கோ நிறுவனம் பொது காப்புறுதிச் சந்தையில் இரண்டாவது இடத்தை 2015ம் ஆண்டு பெற்றுக் கொண்டுள்ளதுடன், இதன் சந்தை பங்கு 18.78% (2014:18.80%) ஆவதுடன், இது ரூபா 12,922 மில்லியனை (2014: ரூபா 11,432 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக உழைத்திருந்து.

ஜனசக்தி ரூபா 7,372 மில்லியனை (2014: ரூபா 6,432 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக உழைத்ததுடன், 10.71% (2014: 10.68%) சந்தை பங்கினைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

யூனியன் பொது மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் என்பன பொதுக் காப்புறுதித் துறையில் முறையே ரூபா 5,557 மில்லியன் (2014: ரூபா 4,951 மில்லியன்) மற்றும் ரூபா 4,451 மில்லியனை (2014: ரூபா: 4,896 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களாகப் பெற்றுக்கொண்டு, சந்தைப் பங்கில் 8.08% (2014: 8.14% ) மற்றும் 6.60% (2014:8.05%) வீதத்தை பதிவு செய்தன் மூலம் இவை முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைக் கைப்பற்றியுள்ளன.

2015ம் ஆண்டில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமாக முதல் ஐந்து கம்பனிகளும் 63.94% (2014: 65.59%) வீதத்தை ஒன்று சேர்த்து பதிவு செய்ததுடன், மிகுதி 36.06% வீதமும் ஏனைய பதின்மூன்று கம்பனிகளினாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

வரைபு 12 2015ம் ஆண்டு காப்புறுதிக் கம்பனிகள் பொது காப்புறுதி வியாபாரத்தில் கம்பனி ரீதியாக பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு பற்றி விளக்குகின்றது.

*அட்டவணை 12*

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடு என்பவற்றின் சுருக்கம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதி வழங்குனர் | 2011 (அ) | | 2012 (அ) | | 2013 (அ) | | 2014 (ஆ) | | 2015 (இ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (%) |
| ஏஐஏ பொது | 2,456,347 | 5.23 | 2,143,252 | 4.03 | 2,428,675 | 4.17 | 2,655,577 | 4.37 | 3,297,840 | 4.79 |
| ஏஐஜி | 942,901 | 2.01 | 819,448 | 1.54 | 880,060 | 1.51 | 414,805 | 0.68 | 3,141 | 0.00 |
| அலையன்ஸ் பொது | 1,379,406 | 2.94 | 1,397,127 | 2.63 | 1,964,907 | 3.37 | 2,723,406 | 4.48 | 3,244,844 | 4.72 |
| அமானா பொது | 916,754 | 1.95 | 1,125,838 | 2.12 | 1,432,135 | 2.46 | 1,285,418 | 2.11 | 1,438,732 | 2.09 |
| ஏசியன் பொது | 582,257 | 1.24 | 1,133,240 | 2.13 | 1,556,386 | 2.67 | 1,638,126 | 2.69 | 1,908,901 | 2.77 |
| சிலிங்கோ பொது | 9,558,942 | 20.37 | 10,434,917 | 19.61 | 10,311,479 | 17.69 | 11,431,680 | 18.80 | 12,921,561 | 18.78 |
| கொண்டினென்டல் | 1,149,121 | 2.45 | 1,545,225 | 2.90 | 1,330,515 | 2.28 | 1,761,747 | 2.90 | 2,309,413 | 3.36 |
| கோர்பரடிவ் பொது | 922,859 | 1.97 | 1,135,011 | 2.13 | 1,272,941 | 2.18 | 1,358,932 | 2.24 | 1,692,035 | 2.46 |
| எச்என்பி பொது | 1,623,830 | 3.46 | 1,635,306 | 3.07 | 1,767,361 | 3.03 | 2,182,915 | 3.59 | 2,541,313 | 3.69 |
| ஜனசக்தி பொது | 5,086,207 | 10.84 | 5,773,429 | 10.85 | 6,318,626 | 10.84 | 6,491,556 | 10.68 | 7,372,182 | 10.71 |
| எல்ஓஎல்சி பொது | 364,735 | 0.78 | 1,295,133 | 2.43 | 1,485,521 | 2.55 | 1,815,486 | 2.99 | 2,476,961 | 3.60 |
| எம்பிஎஸ்எல் | 636,738 | 1.36 | 1,049,147 | 1.97 | 1,132,789 | 1.95 | 961,225 | 1.58 | 1,159,209 | 1.68 |
| ஓரியன்ட் | 3,599,928 | 7.67 | 3,518,528 | 6.61 | 4,973,357 | 8.53 | 4,895,760 | 8.05 | 4,540,558 | 6.60 |
| பீபல்ஸ் | 1,749 | 0.00 | 308,547 | 0.58 | 355,001 | 0.61 | 491,127 | 0.81 | 746,935 | 1.09 |
| சன்ச | 2,284,578 | 4.87 | 2,795,448 | 5.25 | 3,085,041 | 5.30 | 3,286,063 | 5.40 | 3,637,403 | 5.29 |
| எஸ்எல்ஐசி | 232,374 | 0.49 | 308,142 | 0.58 | 322,592 | 0.55 | 344,041 | 0.57 | 360,302 | 0.52 |
| யூனியன் | 11,134,583 | 23.73 | 12,359,188 | 23.23 | 12,549,763 | 21.53 | 12,113,994 | 19.92 | 13,606,205 | 19.77 |
| **மொத்தம்** | 4,055,443 | 8.64 | 4,436,052 | 8.34 | 5,116,966 | 8.78 | 4,950,741 | 8.14 | 5,557,189 | 8.08 |
| **வளர்ச்சி வீதம் (%)** | **46,928,752** | **100** | **53,212,978** | **100** | **58,284,115** | **100** | **60,802,599** | **100** | **68,814,724** | **100** |
| **மொத்தம் வளர்ச்சி வீதம் (%)** | **21.46** | | **13.39** | | **9.53** | | **4.32** | | **13.18** | |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜஐடீயைப் தவிர்த்து)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 12*

**2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சந்தைப் பங்கு - பொது காப்புறுதி வியாபாரம்**



# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் முதல் ஐந்து பங்காளர்களின் சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குனர்கள்**

2011 இருந்து 2015 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் ஆதிக்கம் செலுத்தும் முதல் ஐந்து பங்காளர்கள் மற்றும் ஏனைய காப்புறுதிக் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட சந்தைப் பங்குகள் தொடர்பான விபரங்கள் வரைபு 13இல் காட்டப்பட்டுள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சிலிங்கோ பொது, ஜனசக்தி பொது, யூனியன் பொது மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் என்பன பொது எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் பிரதான ஐந்து பங்குதாரர்களாக இருக்கின்றனர். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2011ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இதன் பங்கு 19.77% வீதமாகும். 2015ம் ஆண்டு சிலிங்கோ நிறுவனம் 18.78% வீத சந்தைப் பங்குகளுடன் தனது இரண்டாம் இடத்தைப் பாதுகாத்துக்கொண்டது. 2015ம் ஆண்டு ஜனசக்தி நிறுவனம் மற்றும் யூனியன் பொது நிறுவனங்கள் தொடர்ந்தும் மூன்றாம் மற்றும் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளாட்டன், அதன் சந்தைப் பங்குகள் முறையே 10.71% (2014: 10.68%) மற்றும் 8.08% (2014: 8.14%) வீதமாக இருந்தன. அத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சந்தையில் 6.60% (2014: 8.05%) பங்குகளைக் கொண்டு ஐந்தாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் இது 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையயில் 1.45% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களின் ஏனைய காப்புறுதி கம்பனிகளின் பங்குகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவது குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும்.

*வரைபு 13*

**2011 இருந்து 2015 வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் உச்ச பங்களிப்பாளர்கள் ஐவரினதும் சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதியாளர்களினதும் பங்களிப்பு - பொது காப்புறுதி வியாபாரம்**




| | எஸ்எல்ஐசி | சிலிங்கோ பொது | ஜனசக்தி. பொது | யூனியன் பொது | தே.கா.ந.நி (ஆ) | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2011 (அ) | 23.73 | 20.37 | 10.84 | 8.64 | 7.67 | 28.75 |
| 2012 (அ) | 23.23 | 19.61 | 10.85 | 8.34 | 6.61 | 31.36 |
| 2013 (அ) | 21.53 | 17.69 | 10.84 | 8.78 | 8.53 | 32.63 |
| 2014 (ஆ) | 19.92 | 18.80 | 10.68 | 8.14 | 8.05 | 34.41 |
| 2015 (இ) | 19.77 | 18.78 | 10.71 | 8.08 | 6.60 | 36.06 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜடீஎப் தவிர்த்து)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்
(ஈ) SRCC ரு 7 - வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்

2011 இருந்து 2015 வரை பொது காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் அதன வளர்ச்சி வீதத்தை அட்டவணை 13 மற்றும் வரைபு 14 என்பவை காண்பிக்கின்றன. தீ அபாயம், கப்பற்துறை, மோட்டார் வாகனம் மற்றும் நானாவித வகுப்புகள் என்பன பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகள் ஆகும்.

அத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்ட வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் தவணைக் கொடுப்பனவுகள் என்பன அட்டவணை 13 மற்றும் வரைபு 14 இல் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

கடந்த வருடத்தைப் போலவே மோட்டார் வாகனக் காப்புறுதி பொதுக் காப்புறுதி துறையில் ஆதிக்கம் செய்ததுடன், 2015ம் ஆண்டு பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் வாகனக் காப்புறுதி வியாபாரம் ரூபா 42,585 மில்லியன் (2013: ரூபா 33,157 மில்லியன்) அதிகூடிய மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 61.88வு வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சந்தையில் பிரதான இடத்தைப் பெற்றுக்கொண்டது. 2014ம் ஆண்டைவிட 2015ம் ஆண்டு 18.99% வீத வளர்ச்சியை மோட்டார் காப்புறுதித்துறை பெற்றுள்ளது.

2015ம் ஆண்டில், நானாவித காப்புறுதி வியாபாரம், ரூபா 14,573 மில்லியன் (2014: ரூபா 13,915 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை பதிவுசெய்ததன் மூலம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் 21.18% வீதத்தை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 4.75% வீத எல்லை வளர்ச்சியைக் காட்டுகின்றது.

2015 ஆம் ஆண்டில் ரூபா 6,579 மில்லியனை (2014: ரூபா 6,353 மில்லியன்) பதிவுசெய்த தீ அபாயக் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் 9.56% (2014: 10.45%) வீதத்தை பெற்றுக்கொண்டது. கடல் அபாயக் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூபா 2,061 மில்லியனை (2014: ரூபா 1,912 மில்லியன்) பிறப்பித்ததுடன், இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானத்தில் 3% (2014: 3.14%) வீதமாக இருப்பதுடன், 2014ம் ஆண்டில் பதிவுசெய்த தொகையானது 7.81% வீதத்தினால் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், 2015ம் ஆண்டு பொதுக் காப்புறுதிகள் தொடாபான வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் தவணைக் கொடுப்பனவுகள் மீதான வருமானம் ரூபா 3,017 மில்லியன் (2014: ரூபா 2,835 மில்லியன்) என உறுதிசெய்திருப்பதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6.41% வீத வளர்ச்சியைக் காட்டியது.

*அட்டவணை 13*

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 5,379,788 | 5,474,094 | 6,303,725 | 6,353,292 | 6,578,842 |
| கடல் சார்ந்தவை | 1,679,794 | 1,927,096 | 1,796,969 | 1,911,944 | 2,061,222 |
| வாகனம | 27,356,318 | 31,844,102 | 33,331,917 | 35,786,941 | 42,584,532 |
| நானாவிதம | 10,506,321 | 11,686,509 | 14,307,720 | 13,915,221 | 14,573,260 |
| **கூட்டுத் தொகை** | **44,922,221** | **50,931,801** | **55,740,331** | **57,967,398** | **65,797,856** |
| SRCC & T | 2,006,531 | 2,281,177 | 2,543,784 | 2,835,201 | 3,016,868 |
| **மொத்தம்** | **46,928,752** | **53,212,978** | **58,284,115** | **60,802,599** | **68,814,724** |

| வகுப்பு | வளர்ச்சி (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 7.33 | 1.75 | 15.16 | 0.79 | 3.55 |
| கடல் சார்ந்தவை | 12.07 | 14.72 | (6.75) | 6.40 | 7.81 |
| வாகனம் | 29.12 | 16.40 | 4.67 | 7.37 | 18.99 |
| நானாவிதம் | 15.82 | 11.23 | 22.43 | (2.74) | 4.73 |
| **கூட்டுத் தொகை** | **22.18** | **13.38** | **9.44** | **4.00** | **13.51** |
| SRCC & T | 7.29 | 13.69 | 11.51 | 11.46 | 6.41 |
| **மொத்தம்** | **21.46** | **13.39** | **9.53** | **4.32** | **13.18** |

| வகுப்பு | சதவீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(அ) |
| தீ அபாயம் | 11.46 | 10.29 | 10.82 | 10.45 | 9.56 |
| கடல் சார்ந்தவை | 3.58 | 3.62 | 3.08 | 3.14 | 3.00 |
| வாகனம் | 58.29 | 59.84 | 57.19 | 58.86 | 61.88 |
| நானாவிதம் | 22.39 | 21.96 | 24.55 | 22.89 | 21.18 |
| **கூட்டுத் தொகை** | **95.72** | **95.71** | **95.64** | **95.34** | **95.62** |
| SRCC & T | 4.28 | 4.29 | 4.36 | 4.66 | 4.38 |
| **மொத்தம்** | **100** | **100** | **100** | **100** | **100** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜஉஎப் தவிர்ந்த)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்
(ஈ) SRCC & T - வேலை நிறுத்தம், கலவரம், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 14*

**வகுப்பு ரீதியாக 2011 இல் இருந்து 2015 வரை மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணை கட்டணத்தின் பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்**




| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014 (ஆ) | 2015 (இ) |
|---|---|---|---|---|---|
| தீ அபாயம் சார்ந்தவை | 11.46 | 10.29 | 10.82 | 10.45 | 9.56 |
| கடல் சார்ந்தவை | 3.58 | 3.62 | 3.08 | 3.14 | 3.00 |
| வாகனம் | 58.29 | 59.84 | 57.19 | 58.86 | 61.88 |
| நானாவிதம் | 22.39 | 21.96 | 24.55 | 22.89 | 21.18 |
| SRCC & T | 4.28 | 4.29 | 4.36 | 4.66 | 4.38 |
| தொழில் வளர்ச்சி (பொது காப்புறுதி) | 21.46 | 13.39 | 9.53 | 4.32 | 13.18 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஐடீஎப் தவிர்ந்த)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

**நானாவித காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வு**

அட்டவணை 14ஆனது 2014 மற்றும் 2015ம் ஆண்டுகளில் நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறுபட்ட காப்புறுதி பிரிவுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை வெளிப்படுத்துகின்றது. நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் சுகாதாரமும், அறுவை சிகிச்சையும், தனிப்பட்டவர்களின் விபத்துகள், விமானத்தின் பிரதான பாகங்கள், தலைப்புகள், காசுப் போக்குவரத்து என்பன சில பிரதான காப்புறுதிப் பிரிவுகளாகும். 2015ம் ஆண்டு வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி மற்றும் துணைக்காப்புறுதி கட்டணங்களை உட்படுத்தாமல், ரூபா 14,573 மில்லியனை (2014: ரூ.13,915 மில்லியன்) நானாவித காப்புறுதி வியாபாரம் தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டைப் போல் இவ்வருடமும், நானாவித காப்புறுதி வியாபாரத்தின் கீழ் சுகாதாரமும், அறுவை சிகிச்சையும் பிரிவு உயர் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை பெற்றுக்கொண்டது. 2015ம் ஆண்டு இத்தொகை ரூபா 8,285 மில்லியன் ஆக இருந்ததுடன், இது 2015ம் ஆண்டு, வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி தவணைக் கட்டணம் உட்பட முழு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 55.60% வீதத்தைப் பதிவுசெய்தது. நானாவித காப்புறுதி வியாபாரத்தின் ஏனைய காப்புறுதிப் பிரிவுகள் 2015ம் ஆண்டு 1,520 மில்லியனை (2014: ரூ 2,373 மில்லியன்) பதிவுசெய்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இது வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி தவணைக் கட்டணம் உட்பட முழு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 10.20% வீதத்தைப் பதிவு செய்ததுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 35.94% வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2015ம் ஆண்டு மூன்றாம் இடத்தை தனிப்பட்ட விபத்துகள் காப்புறுதி ரூபா 1,338 மில்லியன் (2014 : ரூ 1,263 மில்லியன்) வருமானத்தை பெற்றுக்கொண்டு தன்வசமாக்கிக்கொண்டது.

*அட்டவணை 14*

**நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வு 2014 - 2015**

| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூ. '000 | |
|---|---|---|
| **வகைப்படுத்தல்** | **2014 (அ)** | **2015 (ஆ)** |
| சுகாதாரமும் அறுவை சிகிச்சையும் | 7,193,386 | 8,284,561 |
| தலைப்பு | 390,491 | 415,569 |
| தனிப்பட்ட விபத்துகள் | 1,263,406 | 1,338,009 |
| ஒப்பந்தகாரர்களின் இடர் | 172,772 | 213,337 |
| தொழில்சார் நட்டோத்தரவாதம் | 251,586 | 160,176 |
| பயண காப்புறுதி | 302,037 | 389,156 |
| நேர்மைக்கான உத்தரவாதம் | 73,704 | 137,180 |
| களவு | 259,640 | 252,502 |
| பாதுகாப்பில் உள்ள காசு உள்ளடங்களாக இடையில் உள்ள காசு | 388,982 | 399,385 |
| இடையில் உள்ள பொருட்கள் | 69,916 | 75,101 |
| உற்பத்தி பொறுப்புகள் | 49,948 | 53,632 |
| பொது மக்களுக்கான பொறுப்புகள் | 159,683 | 266,540 |
| வங்கியாளர்களின் நட்டோத்தரவாதம் | 325,318 | 342,786 |
| விமானத்தின் பகுதி | 577,559 | 575,595 |
| டபிளியு.சி.ஐ | 375,507 | 477,941 |
| ஏனையவைகள் | 2,372,637 | 1,519,825 |
| **உப மொத்தம்** | **14,226,573** | **14,901,295** |
| கழி : தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் மொத்த தவணை கட்டணம் | (293,448) | (294,773) |
| உபகாப்புறுதித் தவணைக் கட்டணம் | (17,903) | (33,262) |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தில் மொத்த நானாவித காப்புறுதி** | **13,915,222** | **14,573,260** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஐடீஎப் தவிர்ந்த)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டவை - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 15 மற்றும் வரைபு 15 இல் 2011 இருந்து 2015 வரை காப்புறுதிக் கம்பனிகளினால் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதியாளர்களினால் உழைக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம், பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பிரதான வகை பிடித்துவைக்கும் மட்டம் காட்டப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டு, பொதுக் காப்புறுதி வழங்குனர்களினால் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி மற்றும் துணைக்காப்புறுதி கட்டணங்களை உட்படுத்தாமல், உழைக்கப்பட்ட ரூபா 65,798 மில்லியன் (2014: ரூபா 57,967 மில்லியன்) தொகையில் ரூபா 10,358 மில்லியன் (2014: ரூபா 9,519 மில்லியன்) மீள்காப்புறுதியாளர்களினால் உழைக்கப்பட்டதுடன் இது மொத்த வைப்பில் 84.26% (2014: 83.58%) வீதமாகும்.

கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், மோட்டார் வாகனக் காப்புறுதித்துறையில் அதிகூடிய பிடித்து வைத்தல் வீதம் பதிவுசெய்யப்பட்டதுடன், இது காப்புறுதி கம்பனிகளினால் இடர் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் மட்டத்தைப் பிரதிபலிப்பதுடன், இது 97.46% (2014: 98.22%) வீதமாகும். நானாவித காப்புறுதி பிடித்துவைத்தல் விகிதம் 79.74% (2014 : 81.07%) வீதமாக இருந்ததுடன், இரண்டாம் இடத்தைப் பதிவுசெய்ததுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.33% வீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

கடல் சார் காப்புறுதியின் பிடித்து வைத்தல் விகிதம் 2014 இல் 38.71% ஆக பதிவுசெய்யப்பட்டதுடன், இது 2015ம் ஆண்டு 41.25% வீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பிடித்து வைத்துக்கொள்ளலில் விழ்ச்சியைப் பதிவுசெய்தபோதும் கடல்சார் காப்புறுதித்துறை மீள்காப்புறுதி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் தொகை கடல்சார் காப்புறுதியில் 2014ம் ஆண்டு ரூபா 1,172 மில்லியன் பதிவுசெய்ததுடன், 2015ம் ஆண்டு வளர்ச்சியாக ரூபா 1,211 மில்லியனைப் பதிவுசெய்தது.

கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் தீ அபாய காப்புறுதி 2015ம் ஆண்டும் குறைந்த பிடித்துவைத்த விகிதத்தைப் பதிவு செய்ததுடன், இது 22.32% வீதமாக இருந்ததுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.21% வீத வளர்ச்சியை பிரதிபலித்தது.

*அட்டவணை 15*

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டவை - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 5,379,788 | 5,474,094 | 6,303,725 | 6,353,292 | 6,578,842 |
| கடல் சார்ந்தவை | 1,679,794 | 1,927,096 | 1,796,969 | 1,911,944 | 2,061,222 |
| வாகனம் | 27,356,318 | 31,844,102 | 33,331,917 | 35,786,941 | 42,584,532 |
| நானாவிதம் | 10,506,321 | 11,686,509 | 14,307,720 | 13,915,221 | 14,573,260 |
| **உப மொத்தம்** | **44,922,221** | **50,931,801** | **55,740,331** | **57,967,398** | **65,797,856** |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் | 2,006,531 | 2,281,177 | 2,543,784 | 2,835,201 | 3,016,868 |
| **மொத்தம்** | **46,928,752** | **53,212,978** | **58,284,115** | **60,802,599** | **68,814,724** |

| வகுப்பு | மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 4,090,136 | 4,140,877 | 4,823,732 | 5,075,545 | 5,110,528 |
| கடல் சார்ந்தவை | 847,392 | 1,326,369 | 998,976 | 1,171,768 | 1,210,958 |
| வாகனம் | 387,211 | 478,478 | 864,394 | 636,603 | 1,083,455 |
| நானாவிதம் | 2,302,942 | 2,752,627 | 2,700,309 | 2,634,795 | 2,953,005 |
| **மொத்த மீள்காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **7,627,681** | **8,698,351** | **9,387,411** | **9,518,711** | **10,357,946** |

| வகுப்பு | பிடித்து வைத்தல் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 1,289,652 | 1,333,216 | 1,479,993 | 1,277,747 | 1,468,314 |
| கடல் சார்ந்தவை | 832,402 | 600,727 | 797,994 | 740,176 | 850,264 |
| வாகனம் | 26,969,107 | 31,365,623 | 32,467,523 | 35,150,338 | 41,501,077 |
| நானாவிதம் | 8,203,379 | 8,933,883 | 11,607,411 | 11,280,426 | 11,620,255 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **37,294,540** | **42,233,449** | **46,352,921** | **48,448,687** | **55,439,910** |

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சதவீதத்தில் பிடித்துவைத்தல் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 23.97 | 24.36 | 23.48 | 20.11 | 22.32 |
| கடல் சார்ந்தவை | 49.55 | 31.17 | 44.41 | 38.71 | 41.25 |
| வாகனம் | 98.58 | 98.50 | 97.41 | 98.22 | 97.46 |
| நானாவிதம் | 78.08 | 76.45 | 81.13 | 81.07 | 79.74 |
| **ஒட்டு மொத்த தக்க வைத்துக் கொண்ட விகிதம்** | **83.02** | **82.92** | **83.16** | **83.58** | **84.26** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்

(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜஇஎப் தவிர்ந்த)

(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

குறிப்புகள்:

வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களுக்கு மீள் காப்புறுதி தவணைக் கட்டண விபரங்கள் பிரயோகிக்கப்படமாட்டாது.

## புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 15*

**மீள் காப்புறுதி தவணைக் கட்டணமும் காப்புறுதி வழங்குனர்களினால் பிடித்து வைத்துக்கொண்டவை - பொது காப்புறுதி வியாபாரம்**




| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014 (ஆ) | 2015 (இ) |
|---|---|---|---|---|---|
| மொத்த மீள்காப்புறுதி தவணைக் கட்டணம் | 7,627,681 | 8,698,351 | 9,387,410 | 9,518,711 | 10,357,946 |
| மொத்த தக்க வைத்துக் கொண்ட தவணைக் கட்டணம | 37,294,540 | 42,233,449 | 46,352,922 | 48,448,687 | 55,439,910 |
| ஒட்டு மொத்த தக்க வைத்துக் கொண்ட விகிதம | 83.02 | 82.92 | 83.16 | 83.58 | 84.26 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜஎைப் தவிர்ந்த)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

**தேறிய தவணைக் கட்டண பெறுகைகள், உள்ளடக்கப்பட்ட தேறிய கோரிக்கை, தேறிய கோரிக்கைகளின் விகிதம், தேறிய செலவுகளின் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு பொது காப்புறுதி வர்த்தகத்தின் அனைத்து வகுப்புகளினதும் மொத்த தேறிய தவணைக் கட்டண பெறுகைகளாக 2014 இல் இருந்த ரூபா 49,497 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2015 இல் ரூபா 54,148 மில்லியனாக அதிகரித்ததுடன், இது 9.18% வீத அதிகரிப்பை இவ்வாண்டில் வெளிப்படுத்தியது. மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் ரூபா 37,946 மில்லியனை (2014: 33,821 மில்லியன்) பதிவுசெய்து, மொத்த தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் 70.08% வீதத்தைப் பிரதிபலித்து உயர் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்தது.

2014 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தேறிய கோரிக்கையான ரூபா 30,016 மில்லியனுடன் 2015 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 33,897 மில்லியனை ஒப்பிடுகையில் 12.93% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் ரூபா 24,593 மில்லியனைப் (2014: ரூபா 20,281 மில்லியன்) பதிவுசெய்து மொத்த தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் 72.55% வீதத்தைப் பிரதிபலித்து உயர் தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பதிவுசெய்தது.

தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணத்தின் வீதமாக தேறிய கோரிக்கையை பிரதிபலிக்கும் தேறிய கோரிக்கை விகிதத்தை நானாவிதக் காப்புறுதி வியாபாரம் 2015இல் பெற்றுக்கொண்டதுடன், தேறிய கோரிக்கை விகிதம் 2015ம் ஆண்டு 77.12% (2014 : 78.41%) வீதமாகும். இது 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரம் தேறிய கோரிக்கைகள் விகித்தில் 2014ம் ஆண்டு பதிவுசெய்த 59.97% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 64.81% வீதத்தைப் பிரதிபலித்து அதிகரிப்பைக் காட்டியது. மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணம் ரு 37,821 ஆக இருந்ததுடன், 2014ம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 33,821 உடன் ஒப்பிடுகையில் 12.19% வீதத்தினால் அதிகரித்தது. அத்துடன் மோட்டார் வாகனக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரிக்கைகள் 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.26% வீதத்தினால் அதிகரித்ததுளடளது.

தீ அபாய காப்புறுதி 45.77% தேறிய கோரிக்கை வீதத்தை 2015ம் ஆண்டு பதிவுசெய்ததுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 57.78% வீத குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டியது. கடற் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரிக்கைகள் 35.24% வீத தேறிய கோரிக்கை வீதத்தை பிரதிபலித்ததுடன், இது கடந்த ஆண்டு வீதமான 35.37% வீதத்தை ஒத்ததாக இருந்தது.

2014ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக ஏற்பாடு காரணமாக வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் காப்புறுதியின் தேறிய கோரிக்கைகள் 2014 பதிவுசெய்த 2.11% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 0.01% வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணை 16 மற்றும் வரைபு 16இல் பிரதிபலித்தவாறு, 2015இல் பொதுக் காப்புறுதித்துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய செலவுகளான ரூபா 19,522 மில்லியன் (2014: ரூபா 23,991 மில்லியன்) 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18.63% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் உட்பட பொதுக் காப்புறுதித்துறையின் தேறிய செலவு விகிதமும் 2014ம் ஆண்டு பதிவுசெய்த 48.37% வீதத்துடன் ஒப்பிடுகையில் 36.05% வீதமாக குறைந்துள்ளது. தேறிய கோரிக்கைகள் விகிதம் மற்றும் தேறிய செலவுகள் விகிதம் என்பவற்றின் கூட்டு மொத்தமான தேறிய கூட்டுமொத்த விகிதம் 2014ம் ஆண்டு பதிவுசெய்த 108.89% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 98.65% வீதமாக குறைந்துள்ளது. தேறிய கூட்டுமொத்த விகிதம் 100% வீதத்திற்கு மேல் அதிகரித்துள்ளதென்பது, அது உழைத்துக் கொண்ட தவணைக் கட்டணத்தை விடவும் செலவுகள் பொதுக் காப்புறுதித்துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதாகும்.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*அட்டவணை 16*

**தேறிய தவணைக் கட்டன பெறுகைகள், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | தேறிய தவணைக்கட்டன பெறுகைகள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 1,145,285 | 1,452,556 | 1,405,887 | 1,241,985 | 1,283,057 |
| கடல் சார்ந்தவை | 804,444 | 546,598 | 806,277 | 753,643 | 804,393 |
| வாகனம் | 23,790,270 | 29,499,705 | 31,346,284 | 33,821,396 | 37,945,841 |
| நானாவிதம் | 7,670,795 | 8,192,094 | 10,845,577 | 11,087,494 | 10,936,252 |
| **உப மொத்தம்** | **33,410,794** | **39,690,953** | **44,404,025** | **46,904,518** | **50,969,543** |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் (d) | 1,864,652 | 2,185,222 | 2,406,477 | 2,692,730 | 3,178,495 |
| **மொத்தம்** | **35,275,446** | **41,876,175** | **46,810,502** | **49,597,248** | **54,148,038** |

| வகுப்பு | ஏற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கோரல்கள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 482,646 | 506,092 | 810,281 | 717,626 | 587,194 |
| கடல் சார்ந்தவை | 232,189 | 321,562 | 432,748 | 266,560 | 283,458 |
| வாகனம் | 15,544,386 | 18,351,251 | 19,514,319 | 20,281,109 | 24,592,825 |
| நானாவிதம் | 5,683,867 | 6,176,879 | 6,170,826 | 8,694,096 | 8,433,888 |
| **உப மொத்தம்** | **21,943,088** | **25,355,784** | **26,928,174** | **29,959,391** | **33,897,365** |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் | (141,694) | 37,076 | 2,332 | 56,897 | (240) |
| **மொத்தம்** | **21,801,394** | **25,392,860** | **26,930,506** | **30,016,288** | **33,897,125** |

| வகுப்பு | தேறிய கோரல் விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| தீ அபாயம் | 42.14 | 34.84 | 57.63 | 57.78 | 45.77 |
| கடல் சார்ந்தவை | 28.86 | 58.83 | 53.67 | 35.37 | 35.24 |
| வாகனம் | 65.34 | 62.21 | 62.25 | 59.97 | 64.81 |
| நானாவிதம் | 74.10 | 75.40 | 56.90 | 78.41 | 77.12 |
| **உப மொத்தம்** | 65.68 | 63.88 | 60.64 | 63.87 | 66.51 |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் (d) | (7.60) | 1.70 | 0.10 | 2.11 | (0.01) |
| **மொத்தம்** | **61.80** | **60.64** | **57.53** | **60.52** | **62.60** |

| விபரம் | தேறிய செலவுகள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் தவிர்ந்த அனைத்து வகை பொது காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 12,105,102 | 14,807,142 | 17,359,623 | 21,322,543 | 19,035,896 |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் | 329,202 | 386,071 | 414,422 | 2,668,435 | 486,474 |
| **மொத்தம்** | **12,434,304** | **15,193,213** | **17,774,045** | **23,990,978** | **19,522,370** |

| விபரம் | தேறிய செலவுகள் / விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(இ) |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் தவிர்ந்த அனைத்து வகை பொது காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 36.23 | 37.31 | 39.09 | 45.46 | 37.35 |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் | 35.25 | 36.28 | 37.97 | 48.37 | 36.05 |

| விபரம் | தேறிய ஒன்றிணைந்த / விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2011 (அ) | 2012 (அ) | 2013 (அ) | 2014(ஆ) | 2015(ஆ) |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் தவிர்ந்த அனைத்து வகை பொது காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 101.91 | 101.19 | 99.74 | 109.33 | 103.86 |
| வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் | 97.05 | 96.92 | 95.50 | 108.89 | 98.65 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) (ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜுடீஎப் தவிர்ந்த)
(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்
(ஈ) SRCC & T - வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களுக்கு மீள் காப்புறுதி தவணைக் கட்டண விபரங்கள் பிரயோகிக்கப்படமாட்டாது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 16*

**தேறிய பெறப்பட்ட தவணைக் கட்டணம், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள், தேறிய செலவுகள், தேறிய கோரல் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**




(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்

(ஆ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜடீஎப் தவிர்ந்த)

(இ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை – பொதுக் காப்புறுதி வியாபாரம்.**

அட்டவணை 17, 2011 இருந்து 2015 வரை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உருவாக்குவதில் பங்களிப்பு வகித்த வேறுபட்ட உபதுறைகளின் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகளைச் சேர்ந்த பொதுக் காப்புறுதி வியாபார பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையானது 2014ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4,897,188 இருந்து 2015ம் ஆண்டு 5,191,170 ஆக அதிகரித்துள்ளது.

பொதுக் காப்புறுதி வியாபார பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையானது கடந்த ஐந்து வருடங்களில் படிப்படியாக அதிகரித்துள்ளதை அட்டவணை 17 காட்டுகின்றது. மொத்தக் காப்புறுதி பூட்கைகளில், 87.97% வீதத்தை பிரதிபலிக்கும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஒரு தனி உப வகையாக மோட்டார் வாகனக் காப்புறுதியானது அதிகளவான பூட்கைகளைக் கொண்டிருக்கும் வகையாக இருப்பதோடு, மோட்டார் வாகனக் காப்புறுதியானது 2,478,380 மூன்றாம் தரப்பு காப்புறுதிப் பூட்கைகளையும் மற்றும் 2,088,534 விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கி மொத்தமாக 4,566,914 பூட்கைகளை 2015ம் ஆண்டில் கொண்டிருந்தது.

2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015இல் தீ அபாயம், கடல் அபாயம் மற்றும் நானாவித காப்புறுதி வியாபாரப் பூட்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும், பணியாளருக்கான நட்டவீட்டுக் காப்புறுதிப் பூட்கை 2014 உடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு குறைவடைந்துள்ளது

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*அட்டவணை 17*

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை – பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| தீ அபாயம் | 205,657 | 186,478 | 177,749 | 188,578 | 215,047 |
| கடல் அபாயம் | 169,748 | 154,528 | 158,893 | 186,447 | 190,334 |
| மோட்டார் வாகனம் | | | | | |
| மூன்றாம் தரப்பு | 2,086,490 | 1,997,502 | 2,126,037 | 2,229,153 | 2,478,380 |
| விரிவான | 1,213,255 | 1,476,423 | 1,669,022 | 1,775,009 | 2,088,534 |
| பணியாளர் நட்டவீடு | 17,197 | 17,422 | 18,717 | 16,087 | 14,784 |
| நானாவிதம் | | | | | |
| சுகாதாரம் | 7,925 | 10,262 | 11,609 | 13,716 | 17,155 |
| சுகாதாரம் அல்லாதது | 204,782 | 198,406 | 167,414 | 188,198 | 186,936 |
| **மொத்தம்** | **3,905,054** | **4,041,021** | **4,329,441** | **4,597,188** | **5,191,170** |

**பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் சொத்துகள்**

2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான பங்குடமையாளர்களின் சொத்துக்களையும் உள்ளடக்கிய பொது காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் திரட்டல் விபரங்களை அட்டவணை 18 மற்றும் வரைபு 17 காட்டுகின்றது. 2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான பொது காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் திரட்டல் தொகையான ரூபா 157,001 மில்லியனானது (2014 : ரூபா 173,964 மில்லியன்) 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.75% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இந்த வீழ்ச்சி முன்னர் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் கவனத்தில் கொள்ளப்பட்ட பங்குதாரரின் சொத்துக்கள் 2015ம் ஆண்டு கலவைக் கம்பனிகளின் வேறாக்கலின் பின்னர் நீண்ட கால வியாபாரத்தின் கீழ் கவனத்தில் கொள்ளப்படுவதன் காரணமாக எழுந்ததாகும்.

2015ம் ஆண்டு பிரதான முதலீடுகளாக உரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் காணப்படுவதுடன், இந்த ரூபா 46,295 மில்லியன் மொத்த சொத்துக்களின் விபரத்தில் 29.49% வீதத்தை பிரதிபலிக்கின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் இரண்டாவது பெரிய சொத்தாக அரசாங்கப் பிணையங்கள் காணப்படுவதுடன், 31 டிசம்பர் 2015ம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 38,042 மில்லியன் ஆவதுடன், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19.74% வீத வளர்ச்சியை அடைந்துள்ளது. சட்டத்தில் குறிப்பிட்டவாறும் மற்றும் தீர்மானம் 1ற்கு அமைவாகவும், வருடம் முழுவதிலும் காப்புறுதிக் கம்பனிகள் குறைந்தபட்சம் தொழில்நுட்ப முதலீட்டில் 20% வீதத்தை அரச பிணையங்களில் முதலீடு செய்திருப்பது தொடர்பாக சபை உறுதிப்படுத்துகின்றது.

2015ம் ஆண்டு ரூபா 14,729 மில்லியன் (2014: ரூபா 20,756) வைப்புகள் மொத்தச் சொத்தில் 9.38% வீதத்தைக் கொண்டிருப்பதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.55% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. இதற்கு காரணம் கடந்த ஆண்டில் நிலவிய குறைந்த வட்டி வீதமாகும்.

பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் ஏனைய பிரதான சொத்துக்களாக காணி மற்றும் கட்டடம் மற்றும் கூட்டிணைந்த தரிசுப் பிணையங்கள், ஏனைய சொத்தக்கள் மற்றும் மீள்காப்புறுதிப் பெறுகைகள் காணப்படுகின்றன. இவை 31 டிசம்பர் 2015இல் மொத்த சொத்துக்களில் 6.83%, 5.84%, 5.52% மற்றும் 4.57% வீதத்தை பதிவு செய்தன.

*அட்டவணை 18*

**2014 மற்றும் 2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் சொத்துகள்**

| | 2014 (அ) | | 2015 (ஆ) | |
|---|---|---|---|---|
| **சொத்துகளின் வகை** | ரூபா.'000 | % | ரூபா.'000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 31,769,804 | 18.26 | 38,042,180 | 24.23 |
| உரிமைப் பங்குகள் | 47,879,441 | 27.52 | 46,294,932 | 29.49 |
| கூட்டிணைந்த தரிசுப் பிணையங்கள் | 7,965,919 | 4.58 | 9,170,186 | 5.84 |
| காணிகளும் கட்டிடங்களும் | 11,996,569 | 6.90 | 10,717,660 | 6.83 |
| வைப்புகள் | 20,756,018 | 11.93 | 14,728,905 | 9.38 |
| கூறு நம்பிக்கைப் பொறுப்பு | 2,362,112 | 1.36 | 1,831,049 | 1.17 |
| தங்கத்தில் முதலீடுகள் | 110,491 | 0.06 | 2,491 | 0.00 |
| கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதிகள் | 6,590,214 | 3.79 | 7,174,876 | 4.57 |
| காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் இடையீட்டாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள், | 13,580,926 | 7.81 | 14,854,319 | 9.46 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 5,234,702 | 3.01 | 3,031,498 | 1.93 |
| ஏனைய சொத்துக்கள் | 23,219,013 | 13.34 | 8,671,785 | 5.52 |
| காசும் காசுக்கு நிகரானவைகளும் | 2,498,656 | 1.44 | 2,481,252 | 1.58 |
| **மொத்தம்** | **173,963,865** | **100** | **157,001,133** | **100** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜஎைப் தவிர்ந்த)

(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 17*

**பொது காப்புறுதி வியாபாரத்தின் மற்றும் பங்குரிமையாளர்களின் சொத்துகளின் செறிவு - 31 டிசம்பர் 2015**




**பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் முதலீட்டு வருமானம்**

அட்டவணை 19 ஆனது, பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் சராசரி முதலீட்டுகள் 2015ம் ஆண்டு ரூபா 122,895 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டதுடன், 2014ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ரூபா 113,411 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.36% வீதத்தினால் அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட முதலீடுகளில் இருந்து மொத்த முதலீட்டு வருமானமாக ரூபா 7,102 மில்லியன் (2014: ரூபா 8,759 மில்லியன்) 2015ம் ஆண்டு பெறப்பட்டதுடன், இது மொத்த முதலீட்டு உழைப்பாக 5.78 வீதத்தை பதிவுசெய்துள்ளது.

உரிமைப்பங்குகளில் சராசரி முதலீடு 2015ம் ஆண்டு ரூபா 47,087 மில்லியனாக (2013 :ரூபா 41,427 மில்லியன்) இருந்ததுடன், இது பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குதாரர்களின் பெரிய முதலீட்டு வகையாக தொடர்ந்தும் இருந்தது. உரிமைப் பங்குகளில் இருந்து பிறப்பிக்கப்பட்ட முதலீட்டு வருமானம் 3.36% வீதமாகும். 2015இல் அரச பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீடு ரூபா 34,906 மில்லியனாவதுடன் (2014 : 29,966 மில்லியன்) அரசாங்க பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா 2,657 மில்லியன் (2014: 2,973 மில்லியன்) ஆவதுடன், இந்த முதலீட்டில் இருந்து பெறப்பட்ட வருமானம் 7.61% வீதமாக இருப்பதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.92% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பனவற்றில் மேற்கொள்ளப்பட்ட சராசரி முதலீட்டு வைப்புப் பெறுமதியானது 2015ம் ஆண்டு ரூபா 17,742 மில்லியன் ஆவதுடன், 2014ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,856 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 10.64% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2015இல் வைப்புகளில் இருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம் ரூபா 1,025 மில்லியனாவதுடன் (2014: ரூபா 1,640), குறிப்பிடத்தக்க 37.37% வீத வீழ்சியைப் பதிவுசெய்கின்றது. இது 2014ம் ஆண்டு ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானமான 8.26% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2.48% வீத வீழ்ச்சி காணப்படுகின்றது.

அத்துடன், 2015ம் ஆண்டு கூட்டுப் பிணையங்கள், காணி மற்றும் கட்டங்கள், கூறு நம்பிக்கைப் பொறுப்புகள் மற்றும் ஏனைய முதலீடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானங்களின் வீதம் முறையே 11.86%, 0.05%, 6.91% மற்றும் 62.13% ஆகும்..

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*அட்டவணை 19*

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகள் - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகைப்படுத்தல் | 2014(அ) | | | 2015(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 2,972,870 | 29,966,376 | 9.92 | 2,657,461 | 34,905,992 | 7.61 |
| - திறைசேரி முறிகள் | 1,608,179 | | | 1,626,662 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 535,623 | | | 345,291 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 829,068 | | | 685,508 | | |
| **பங்குரிமை** | 2,431,584 | 41,426,961 | 5.87 | 1,580,380 | 47,087,187 | 3.36 |
| - முலதன இலாபம்/நட்டம் | 1,061,387 | | | 190,854 | | |
| - பங்கிலாபம் | 1,370,197 | | | 1,389,526 | | |
| **கூட்டிணைந்த தரிசுப் பிணையம்** | 1,010,606 | 6,969,483 | 14.50 | 1,016,453 | 8,568,052 | 11.86 |
| - தொகுதி கடன்கள் | 985,538 | | | 991,438 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 8,635 | | | 21,129 | | |
| - சொத்துகளை ஈடாக கொண்ட பிணையங்கள் | 10,333 | | | | | |
| - அவ்வாறான ஏனைய நிதியில் பத்திரங்கள் | 6,100 | | | 3,886 | | |
| **காணிகளும் கட்டிடங்களும்** | 10,913 | 11,537,337 | 0.09 | 6,050 | 11,357,114 | 0.05 |
| **வைப்புகள்** | 1,639,876 | 19,855,959 | 8.26 | 1,025,338 | 17,742,461 | 5.78 |
| - வங்கி | 1,368,330 | | | 782,906 | | |
| - நிதி கம்பனிகள் | 271,546 | | | 242,432 | | |
| **பொறுப்பு கூறு நம்பிக்கை** | 238,938 | 2,202,467 | 10.85 | 144,797 | 2,096,580 | 6.91 |
| **தங்கம்** | (606) | 71,355 | (0.85) | | 56,491 | |
| **ஏனையவை** | 455,216 | 1,380,770 | 32.97 | 672,011 | 1,081,601 | 62.13 |
| **மொத்தம்** | 8,759,397 | 113,410,708 | 7.72 | 7,102,490 | 122,895,478 | 5.78 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜடீஎப் தவிர்ந்த)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

குறிப்புகள்:
SLIC, MBSL மற்றும் சனச எனும் கலவை காப்புறுதிக கம்பனிகளின் பங்குதாரர்களின் முதலீட்டு வருமானம், சராசரி முதலீடுகள் பொது காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை – பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 20, 2014 மற்றும் 2015 டிசம்பர் 31இல் தனிப்பட்ட பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் விகிதம் மற்றும் தொழில்நுட்ப ஒதுக்கங்களின் விபரங்களை பதிவு செய்கின்றது. 2014இல் 2.8 விகிதமாக இருந்த பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் சராசரி கடன்தீர் விகிதம் 31 டிசம்பர் 2015இல் 2.59% விகிதமாக குறைவடைந்துள்ளது. எனினும் நான்கு காப்புறுதிகளினால் கடன் தீர் எல்லை தேவையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதுடன், சபை அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அனைத்து பொது காப்புறுதியாளர்களின் ஒன்றுசேர்த்த தொழில்நுட்ப ஒதுக்குத் தொகையான ரூபா 46,756 மில்லியன் 31 டிசம்பர் 2015இல் பதிவுசெய்யப்பட்டதுடன், 201இல் பதிவுசெய்யப்பட்ட தொழில்நுட்ப ஒதுக்கான ரூபா 42,200 மில்லியனை விட 16.31% வீத நேர்மறை அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*அட்டவணை 20*

**2015 மற்றும் 2014 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கடன் தீர் நிலைபாடு மற்றும் தொழில்நுட்ப ஒதுக்குகளின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2014(அ) | | 2015 (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்தீர் விகிதம் (ஏஎஸ்எம்/ஆர்எஸ்எம்) | தொழில்நுட்ப ஒதுக்குகள் (ரூ'000) | கிடைக்கக் கூடிய கடன் தீர் எல்லை (ஏஎஸ்எம்) (ரூ'000) | தேவைப்படும் கடன் தீர் எல்லை (ரூ'000) | கடன்தீர் விகிதம் (ஏஎஸ்எம்/ஆர்எஸ்எம்) | தொழில்நுட்ப ஒதுக்குகள் (ரூ'000) |
| ஏஜஏ பொது | 3.13 | 1,833,987 | 1,419,434 | 520,089 | 2.73 | 2,055,784 |
| ஏஜஜி | 2.78 | 72,002 | 97,752 | 50,000 | 1.96 | 37,146 |
| அலையன்ஸ்-பொது | 1.44 | 1,278,412 | 596,005 | 414,133 | 1.44 | 1,721,995 |
| அமானா பொது | 1.01 | 493,240 | 235,338 | 256,999 | 0.92 | 548,157 |
| ஏசியன் பொது | 1.71 | 999,641 | 220,604 | 357,299 | 0.62 | 1,160,041 |
| சிலிங்கோ பொது | 1.48 | 6,110,117 | 2,911,584 | 2,114,069 | 1.38 | 6,504,627 |
| கொண்டிண்டல் | 2.52 | 761,969 | 808,295 | 344,545 | 2.35 | 1,014,865 |
| கோர்பரடிவ் பொது | 1.24 | 1,076,600 | 192,258 | 331,227 | 0.58 | 1,229,298 |
| எச்என்பி | 3.24 | 1,150,323 | 662,337 | 441,411 | 1.50 | 1,407,205 |
| ஜனசக்தி பொது | 1.71 | 4,327,793 | 2,983,964 | 1,308,855 | 2.28 | 4,785,305 |
| ஏல்ஓஎல்சி பொது | 1.45 | 1,326,137 | 608,241 | 440,389 | 1.38 | 1,885,375 |
| எம்பிஎஸ்எல் | 1.18 | 539,107 | 87,897 | 123,975 | 0.71 | 454,850 |
| ஓரியன்ட் | 4.05 | 259,891 | 297,276 | 120,344 | 2.47 | 432,036 |
| பீபல்ஸ் | 1.60 | 2,581,583 | 1,269,729 | 701,661 | 1.81 | 2,870,881 |
| சனச | 2.84 | 177,876 | 82,897 | 53,966 | 1.54 | 162,689 |
| எஸ்எல்ஜசி | 3.80 | 11,929,930 | 10,490,470 | 2,743,171 | 3.82 | 13,646,766 |
| யூனியன் பொது | 3.17 | 3,152,537 | 2,722,386 | 926,530 | 2.94 | 3,471,493 |
| என்ஜடீஎப் | 4.90 | 2,128,643 | 7,758,204 | 1,639,840 | 4.73 | 3,367,198 |
| **மொத்தம்** | **2.80** | **40,199,788** | **33,444,671** | **12,888,503** | **2.59** | **46,755,711** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (என்ஜடீஎப் தவிர்ந்த)
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

**புதியதும், மீள் புதுப்பிக்கப்பட்டதும் மற்றும் நடைமுறையில் உள்ள பூட்கைகளும் பற்றிய விபரம் - பொது காப்புறுதி வியாபாரம்**

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட உப வகைகளைச் சேர்ந்த புதிய காப்புறுதி பூட்கைகள், புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் மற்றும் அமுலில் உள்ள பூட்கைகளை அட்டவணை 21 வெளிப்படுத்துகின்றது. 2015 ஆம் ஆண்டில் பொது காப்புறுதி வியாபாரத்தின் நடைமுறையில் இருந்த பூட்கைகளின் மொத்த எண்ணிக்கையான 5,123,180 உடன் ஒப்பிடும் போது, 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பொது காப்புறுதி வியாபாரத்தின் நடைமுறையில் இருந்த காப்பீடுகளின் மொத்த எண்ணிக்கை 4,459,684 ஆக இருந்ததுடன் 14.88% வீதத்தினால் அதிகரிப்பையும் வெளிப்படுத்தியது.

2015ம் ஆண்டு அதிக காப்புறுதி பூட்கைகளைக் கொண்டதாக மோட்டார் காப்புறுதி பூட்கைகள் அமைவதுடன், இது 2,064,460 மூன்றாம் தரப்பு பூட்கைகளையும் 2,064,460 விரிவான பூட்கைகளையும் உள்ளடக்கி மொத்த காப்புறுதிப் பூட்கைகளில் 88.57% வீதத்தை தன்வசம் வைத்துள்ளது. 2014ம் ஆண்டு 182,808ஆக இருந்த தீ அபாயக் காப்புறுதியானது 2015ம் ஆண்டு 226,638 ஆக அதிகரித்துள்ளது. நானாவித காப்புறுதி பூட்கைகளில் உள்ள தொழில்புரிவோருக்கான நட்டவீடு மற்றும் கடல் அபாயக் காப்புறுதி உட்பட அமுலில் உள்ள காப்புறுதிகளின் எண்ணிக்கை மொத்தக் காப்புறுதியில் 3.89% மற்றும 3.11% வீதமாகும்.

இந்த வருடம் 2,460,564 புதிய காப்புறுதி பூட்கைகள் காப்புறுதிக் கம்பனிகளினால் எழுதப்பட்டதுடன், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 23.85% வீத அதிகரிப்பாகும். 2014ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட 2,615,005 பூட்கைகளுடன் ஒப்பிடுகையில் 2,779,509 பூட்கைகள் புதுப்பிக்கப்பட்டது.

*அட்டவணை 21*

**புதிய காப்பீடுகளின் எண்ணிக்கையும் மீள்புதுப்பிக்கப்பட்டதும் மற்றும் நடைமுறையில் உள்ளதுமான பூட்கைகள் - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ளவை | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ளவை |
| தீ அபாயம் | 69,731 | 122,025 | 182,808 | 85,041 | 144,348 | 226,638 |
| கடல் சார்ந்தவை | 183,957 | 2,286 | 157,806 | 187,167 | 3,879 | 159,563 |
| **வாகனம்** | 1,597,703 | 2,413,204 | 3,902,997 | 2,033,228 | 2,575,150 | 4,537,596 |
| மூன்றாம் தரப்பு | 895,971 | 1,329,523 | 2,227,949 | 1,079,452 | 1,393,729 | 2,473,136 |
| விரிவானவை | 701,732 | 1,083,681 | 1,675,048 | 953,776 | 1,181,421 | 2,064,460 |
| WCI உள்ளடங்களாக நானாவிதம் | 135,390 | 77,490 | 216,073 | 155,128 | 56,132 | 199,383 |
| **மொத்தம்** | **1,986,781** | **2,615,005** | **4,459,684** | **2,460,564** | **2,779,509** | **5,123,180** |

**மீள்காப்புறுதி வியாபாரம்**

முதன்மை காப்புறுதி வழங்குனர்களுக்கு மீள்காப்புறுதிக் காப்பீட்டை வழங்கக்கூடிய இலங்கையில் உள்ள ஒரேயொரு நிறுவனம் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையாகும். 31 டிசம்பர் 2012ம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1791/4 வர்த்தமானி அறிவித்தலின் படி, அனைத்து முதன்மை காப்புறுதி வழங்குனர்களும் அவர்களுடைய மொத்தப் பொறுப்பில் 30% வீதத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள்காப்புறுதி செய்தல் வேண்டும்.

2015ம் ஆண்டு, 2014ம் ஆண்டு பெறப்பட்ட மீள்காப்புறுதி வருமானமான ரூபா 2,041 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு பெறப்பட்ட 1,784 மில்லியன் 12.59% வீத வீழ்ச்சியினை வெளிப்படுத்துகின்றது. இந்த தவணைக் கட்டண வருமானத்தின் 15.88% வீத வீழ்ச்சியானது 2015ம் ஆண்டு 8,007 (2014 : 9,519 மில்லியன்) பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் உப வகைகளான தீ அபாயக் காப்புறுதி போன்றவற்றினால் ஏற்பட்டதாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பெறுமதி 2014ம் ஆண்டு ரூபா 3,065 மில்லியனாக இருந்ததுடன், 2015ம் ஆண்டின் இறுதியில் இது 10.31% வீத வளர்ச்சியுடன் ரூபா 3,381 மில்லியனைப் பெற்றுக்கொண்டது. 2014ம் ஆண்டின் இறுதியில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ரூபா 2,640 மில்லியனை (2014 : ரூபா 1,955 மில்லியன்) அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்ததுடன், இதன் மூலம் முதலீட்டு வருமானமாக ரூபா 186 மில்லியனை (2014 : ரூபா 79 மில்லியன்) பெற்றுக்கொண்டது. அதன்படி, 2015ம் ஆண்டு முதலீட்டு வருமான வீதம் 8.10% (2014 : 5.74 %) ஆகும்.

2015ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு கிடைக்கப்பெற்ற 278 மீள்காப்புறுதி கோரிக்கைகளுக்கு ரூபா 796 மில்லியனை மீள்காப்புறுதி கோரிக்கைகளாக செலுத்தியது. அத்துடன், தேசிய கோரிக்கைகளின் பெறுமதி 2015ம் ஆண்டு ரூபா 1,265 மில்லியன் (2014: ரூபா 774 மில்லியன்) ஆவதுடன், கோரிகை வீதம் 68.30% (2014 : 45.75%) ஆகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரம் 2015ம் ஆண்டு ரூபா 539 மில்லியன் செலவை மேற்கொண்டதுடன், இது 2014ம் ஆண்டு மேற்கொண்ட ரூபா 279 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 93.19% வீத வளர்ச்சியைக் கொண்டிருப்பதுடன், இதன் விளைவாக செலவு வீதம் 29.10% (2014 16.43%) ஆக இருந்தது. அதன்படி, 2015ம் ஆண்டு, கோரிபகை வீதம் மற்றும் செலவு வீதம் என்பவற்றின் மொத்த கோரிக்கை வீதம் 97.40% வீதமாகும். 2014ம் ஆண்டு பதிவு செய்த 62.18% வீதத்துடன் ஒப்பிடுகையில் 35.11% வீத வளர்ச்சி அடைந்துள்ளது.

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

## காப்புறுதி தரகுக் கம்பனிகள்

### காப்புறுதி தரகுக் கம்பனிகளின் செயலாற்றுகை

2015ம் ஆண்டு, சந்தையில் ஐம்பத்தியேழு காப்புறுதி தரகர் கம்பனிகள் தொழிற்பட்டதுடன், இவை ரூபா 16,330 மில்லியன் பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உழைத்துக் கொண்டன. இது 2014ம் ஆண்டு காப்புறுதி தரகர் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட ரூபா 14,717 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு 10.96% வீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட முறையே ரூபா 206 மில்லியன் மற்றும் ரூபா 16,124 மில்லியன் தொகைகளை உள்ளடக்கியிருந்தது. இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களில் 98.74% வீதத்தை பொதுக் காப்புறுதி வியாபாரம் பெற்றிருந்ததுடன், 1.26% வீதத்தை மட்டுமே நீண்டகால காப்புறுதி வியாபாரம் பெற்றிருந்தது.

கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், காப்புறுதி தரகர் கம்பனிகளின் பங்களிப்பை எடுத்துக்கொண்டால், 2015இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் (ரூபா 53,575 மில்லியன்) இதன் பங்களிப்பு குறிப்பிடக்கூடியளவில் அல்லாது 0.38% வீத வளர்ச்சியை மட்டுமே மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றிருந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் (SRCC&T தவணைக் கட்டணம் உட்பட) மொத்தத் தவணைக் கட்டணமாக ரூபா 68,815 மில்லியன் பெறப்பட்டபோது, காப்புறுதித் தரகர் கம்பனிகள் இதில் 23.43% வீதத்தை மட்டுமே பெற்றுக்கொண்டன.

2015இல், இருபத்தி மூன்று காப்புறுதி தரகர் கம்பனிகள் ரூபா 100 மில்லியனை விட அதிகமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உழைத்திருந்ததுடன், இவை ஒன்று சேர்த்து ரூபா 15,188 மில்லியனை பெற்றிருந்தன. மிகுதி முப்பத்திநான்கு காப்புறுதி தரகர் கம்பனிகளும் அட்டவணை 22இல் வெளிப்படுத்தியவாறு ரூபா 1,142 மில்லியனைப் பெற்றுள்ளன.

*அட்டவணை 22*

**காப்புறுதி தரகு கம்பனியின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - 2015**

| | | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (*) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம் | |
| | தரகுக் கம்பனியின் பெயர் | ரூபா ('000) | சந்தைப் பங்கு (%) | ரூபா ('000) | சந்தைப் பங்கு (%) | ரூபா ('000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏடிஇசட் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 7,310 | 3.56 | 302,331 | 1.88 | 309,641 | 1.90 |
| 2 | எடிகன் ஸ்பென்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 375 | 0.18 | 379,527 | 2.35 | 379,902 | 2.33 |
| 3 | அல்பின்கோ இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | - | - | 555,990 | 3.45 | 555,990 | 3.41 |
| 4 | எசட்லைன் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | - | - | 1,247,902 | 7.74 | 1,247,902 | 7.64 |
| 5 | சி.எப் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 46 | 0.02 | 2,231,407 | 13.84 | 2,231,453 | 13.67 |
| 6 | கொலம்பூர் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 1,324 | 0.64 | 273,173 | 1.69 | 274,497 | 1.68 |
| 7 | கமர்சியல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 63,782 | 31.02 | 1,946,679 | 12.07 | 2,010,461 | 12.32 |
| 8 | டெல்மேஜ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 16,438 | 8.00 | 991,549 | 6.15 | 1,007,987 | 6.17 |
| 9 | ஈகுவிடி இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | - | - | 129,878 | 0.81 | 129,878 | 0.80 |
| 10 | ஈசாஜி கரம்ஜி & கம்பனி (பிரை) லிமிடட் | 16,720 | 8.13 | 359,505 | 2.23 | 376,225 | 2.30 |
| 11 | பின்லே இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | 16,425 | 7.99 | 1,389,042 | 8.61 | 1,405,467 | 8.61 |
| 12 | போர்சைட் இன்சூரன்ஸ் மற்றும் ரீஇன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | - | - | 169,173 | 1.05 | 169,173 | 1.04 |
| 13 | க்ளோபல் இன்ஸ்யூரன்ஸ் சேர்விஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 27 | 0.01 | 103,789 | 0.64 | 103,816 | 0.64 |
| 14 | லைப் அன்ட் ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 799 | 0.39 | 137,610 | 0.85 | 138,409 | 0.85 |
| 15 | மொர்க்கண்டைல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | - | - | 174,170 | 1.08 | 174,170 | 1.07 |
| 16 | நேசன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | 10,573 | 5.14 | 1,223,715 | 7.59 | 1,234,288 | 7.56 |
| 17 | பிடயசிட் இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | 1,299 | 0.63 | 219,870 | 1.36 | 221,169 | 1.35 |
| 18 | புரடெக்சன்ஸ் அன்ட் எஸ்யூரன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | - | - | 1,166,721 | 7.24 | 1,166,721 | 7.15 |
| 19 | ரிலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 11,536 | 5.61 | 397,602 | 2.47 | 409,138 | 2.51 |
| 20 | சேனரட்ன இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 5,257 | 2.56 | 503,327 | 3.12 | 508,584 | 3.10 |
| 21 | செங்கடகல இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | - | - | 718,966 | 4.46 | 718,966 | 4.40 |
| 22 | ஸ்ரட்டஜிக் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 19,701 | 9.58 | 200,934 | 1.25 | 220,635 | 1.35 |
| 23 | ஸெனித் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | 1,084 | 0.53 | 192,477 | 1.19 | 193,561 | 1.19 |
| | **உப மொத்தம்** | **172,696** | **84.00** | **15,015,337** | **93.12** | **15,188,033** | **93.01** |
| | **ஏனைய காப்புறுதி தரகு கம்பனிகள் (34)** | **32,889** | **16.00** | **1,108,754** | **6.88** | **1,141,643** | **6.99** |
| | **கூட்டு மொத்தம்** | **205,585** | **100** | **16,124,091** | **100** | **16,329,676** | **100** |

* காப்புறுதி தரகர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக எழுதப்பட்ட தவணைக் கட்டண விபரங்கள் அமைந்துள்ளது

# புள்ளிவிபர மீளாய்வு தொடர்ச்சி

*வரைபு 18*

**2006 இருந்து 2015 வரை காப்புறுதி தரகர் கம்பனிகளினால் பிறப்பிக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**




| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொ.எ.த.க (ரூ.மில்லியன்) | 144 | 158 | 195 | 188 | 243 | 296 | 195 | 191 | 158 | 206 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொ.எ.த.க (ரூ.மில்லியன்) | 6,028 | 7,393 | 8,781 | 8,698 | 9,317 | 10,193 | 12,532 | 14,189 | 14,559 | 16,124 |
| மொ.எ.த.கட்டணத்திற்கு தரகர் கம்பனிகளின் பங்களிப்பு வீதம் (%) | 14.34 | 14.55 | 15.43 | 15.44 | 14.43 | 12.78 | 14.03 | 14.39 | 13.96 | 13.34 |

காப்புறுதி கம்பனிகளின் முதலெழுத்துப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| ஏஐஏ ஆயுள் | : | ஏஐஏ இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி |
| ஏஐஏ பொது | : | ஏஐஏ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| ஏஐஜி | : | ஏஐஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| அலையன்ஸ் பொது | : | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| அலையன்ஸ் ஆயுள் | : | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| அமானா பொது | : | அமானா டக்காபுல் பிஎல்சி |
| அமானா ஆயுள் | : | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி |
| ஆர்பிக்கோ | : | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| ஏசியன் ஆயுள் | : | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| ஏசியன் பொது | : | ஏசியன் அலையன்ஸ் ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சிலிங்கோ | : | சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| சிலிங்கோ பொது | : | சிலிங்கோ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சிலிங்கோ ஆயுள் | : | சிலிங்கோ லைப் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| கொண்டினன்டல் | : | கொண்டிநென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் |
| கோர்பரேடிவ் பொது | : | கோர்பரேடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| கோர்ப் லைப் | : | கோர்ப்லைப் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| எச்என்பி ஆயுள் | : | எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| எச்என்பி பொது | : | எச்என்பி ஜெனரல் அஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| ஜனசக்தி ஆயுள் | : | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி |
| ஜனசக்தி பொது | : | ஜனசக்தி ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| எல்ஐசி | : | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட் |
| எல்ஓஎல்சி | : | எல்ஓஎல்சி அசட் ஹோல்டிங் லிமிடட் |
| எல்ஓஎல்சி பொது | : | எல்ஓஎல்சி ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| எல்ஓஎல்சி ஆயுள் | : | எல்ஓஎல்சி லைப் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| எம்பிஎஸ்எல் | : | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் |
| என்ஐடிஎப் | : | நெஷனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் பண்ட் |
| ஓரியன்ட் | : | ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| பீபல்ஸ் | : | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் |
| சனச | : | சீமாசகித்த சனச ரக்ஷன சமாகம |
| எஸ்எல்ஐசி | : | ஸ்ரீ லங்கா இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட் |
| யூனியன் ஆயுள் | : | யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி |
| யூனியன் பொது | : | யூனியன் அசூரன்ஸ் ஜெனரல் லிமிடட் |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு

**மேற்பார்வை மீளாய்வு**

**காப்புறுதிக் கம்பனிகள்**

## 1. விபரத்திரட்டுகளின் மீளாய்வு

**அ. வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் கணிப்பீட்டு அறிக்கைகள்**

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக சகல காப்புறுதி வழங்குனர்களும் தமது வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டு மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டு நிறைவடைந்து அடுத்து வருகின்ற ஆறு மாதங்களினுள் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும். எனினும், சபையினால் வழங்கப்பட்ட வேறுபடுத்தல் வழிகாட்டலுக்கு அமைவாக, வேறுபடுத்தப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் அவர்களுடைய மேற்குறித்த விபரத்திரட்டை நிதி ஆண்டு முடிவடைந்து அடுத்து வருகின்ற நான்கு மாதங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்.

விபரத்திரட்டுகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன், அவற்றின் செம்மை மற்றும் சபையின் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதையும் உறுதிப்படுத்தவதற்கு அவற்றை சபை பரீசிக்கின்றது. மீளாய்வின் போது அவதானிக்கப்படும் நியதிச் சட்ட தேவைகளில் இருந்தான விலகல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறு கோரப்படுகின்றது. காப்புறுதி வழங்குனர்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், சபையின் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்குகின்றமையை உறுதிப்படுத்தவதற்கு பின்னூட்டு நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விபரத்திரட்டுகளின் மீளாய்வின் போது அவதானிக்கப்படும் பிரச்சனைகளை சபை கூட்டங்களின் போதும், அமைவிடத்திலான பரீசித்தல்களின் போதும் உரிய கம்பனிகளுக்கு அறிவித்தது.

**ஆ) இடர் மதிப்பீட்டு சாராம்சம்**

காப்புறுதி வழங்குனர்கள் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 31ம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் இடர் மதிப்பீட்டு சாராம்சத்தை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றர். இடர் மதிப்பீட்டு சாரம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களில் இருந்து நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு மற்றும் உரிமையாண்மை, வியாபாரச் சுருக்கக் குறிப்பு, சிரேஸ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல்கள் மற்றும் விநியோகித்தல் போன்ற தொழிற்பாடுகள், கோரிக்கை நிர்வாகம், இடர் முகாமைத்துவம் போன்றவற்றை உய்த்தறிவதன் மூலம் காப்புறுதி வழங்குனரின் தொழிற்பாட்டு பொது நோக்கத்தை சபை பெற்றுக்கொள்ளுகின்றது.

**இ) மீள்காப்புறுதி ஒழுங்குகள் தொடர்பான மீளாய்வு**

சட்டத்தின் பிரிவு 31(1) க்கு அமைவாக, சபைக்கு வருடாந்தம் மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பாக அறிவிக்குமாறு கோரப்படுகின்றது. காப்புறுதி வழங்குனர்கள் சபையினால் வழங்கப்பட்ட மீள்காப்புறுதி நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யுமாறு கோரப்படுகின்றனர். சபையினால் குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தல் தேவையை திருப்பதிப்படுத்தும் வகையில் மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீள்காப்புறுதி அணவலைப் பூர்த்தி செய்கின்றதுடன், அணவல்கள் உரிய வகைகளுக்கு பெறப்பட்டு காப்புறுதி வழங்குனர் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு சபை இக்குறித்த ஆணவணங்களை மீளாய்வு செய்கின்றது. யாதேனும் இணக்கப்பாடின்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை குறித்த கால வரையறைக்குள் மேற்கொள்ளுமாறு உரிய கம்பனிகளுக்கு சபையினால் அறிவித்தல் வழங்கப்படும்.

அத்துடன், நீண்ட கால மற்றும் பொது காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடும் காப்புறுதி கம்பனிகள் அனைத்து facultative மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தலில் ஈடுபட்டுள்ளமை தொடர்பாக காலாண்டு விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

**ஈ) காலாண்டு விபரத்திரட்டுகள்**

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து தினங்களுக்குள் காலண்டு விபரத்திரட்டினை சபைக்கு சமர்ப்பிக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன. 2015ம் ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நான்கு காலாண்டு விபரத்திரட்டுகளும், மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் அதன் காலாண்டு செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரின் காலாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக சபை நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டினதும் விபரத்திரட்டு அடிப்படையிலான தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பனவற்றை பகுப்பாய்வு செய்தது. மேலும், முழுமையான பகுப்பாய்வு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றன குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், முன்னைய காலாண்டு வீகிதங்களுடன் ஒப்பீடும் செய்யப்பட்டது.

அத்துடன், கடன்தீர் நிலமை, திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை வீதங்கள் பயன்படுத்தப்பட்டு, அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நிலை பரீட்சிக்கப்படுவதன் மூலம் ஒவ்வொரு காலாண்டிலும் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரின் நிதி நிலமை பகுப்பாய்வு செய்யப்பட்டது. காலாண்டு விபரத்திரட்டுகளை மீளாய்வு செய்யும் பொழுது சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் காணப்படும் யாதேனும் இணக்கப்பாடற்றதன்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், குறித்த காலவரையறைக்குள் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கும் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2006ம் ஆண்டு 6ம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் சட்டத்தின ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அவர்கள் இணங்குகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் இரண்டு இணக்கப்பாட்டு சான்றிதழினை வழங்குமாறு கோரப்படுகின்றர். மேலும், காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் நான்கு காலாண்டுகளுக்கும் மேற்கொண்ட திறமைமிக்க மீள்காப்புறுதி ஒழுங்குகள் தொடர்பான விபரங்களையம் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றர்.

**உ) மாதாந்த விபரத்திரட்டுகள்**

சபையின் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாக எட்டு காப்புறுதிக் கம்பனிகள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்ததுடன் அதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் மாதாந்த விபரத்திரட்டைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்த விபரத் திரட்டுகளை, அவற்றின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கு அவை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றனவா என சபை மீளாய்வை மேற்கொள்ளுகின்றது. விபரத்திரட்டுகளில் அவதானிக்கப்படும் இணக்கப்பாடின்மை மற்றும் வேறுபாடுகள் தொடர்பாக உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டு குறித்த கால வரையறைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்.

## 2. கடன்தீர் எல்லை விதிகளுடன் இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

கடன்தீர் எல்லை (பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள்) விதிகளுக்கு அமைவாக, பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் கடன்தீர் எல்லையை பேணுதல் வேண்டும் என காப்புறுதி வழங்குனர்கள் கோரப்படுகின்றர். காப்புறுதி வழங்குனர்கள் அவர்களின் கடன்தீர் எல்லை கணிப்பீட்டினை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகளுடன் சமர்ப்பித்தல்

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

வேண்டும். கடன்தீர் எல்லை விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு சபை இவ்வாறான கணிப்பீட்டினை பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்கின்றது. காப்புறுதி வழங்குனர்கள் அவசியமான கடன்தீர் எல்லையை பூர்த்திசெய்வதற்கு தவறும் பொழுதில் அல்லது கணிப்பீடானது தவறாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் கடன்தீர் எல்லையுடன் இணங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கும்.

## 3. முதலீட்டு குறிப்பீடுகளுடன் இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

### அ) அரச பிணையங்களில் முதலீடு

சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கு அமைவாக, அரச பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்களில் 20% வீதத்திற்கு குறையாத தொகையையும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் சொத்துக்களில் 30% வீதத்திற்கு குறையாத தொகையையும் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றனர். சட்டத்தின் 25ம் பிரிவுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அரச பிணையங்களில் முதலீடுகளை சபை மிகவும் உண்ணிப்பாக கண்காணிக்கின்றது. இதற்காக, அரசாங்க பிணைய முதலீடுகளில் அறிவிக்கப்பட்டுள்ள தொகைகளின் சரித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வைப்புக் கூற்றுகளின் அறிக்கைகளை சபை மீளாய்வு செய்கின்றதுடன், அரசாங்க பிணையங்களில் முதலீட்டு உரித்துடமையையும் நிட்சயப்படுத்திக் கொள்கின்றது. மீளாய்வின் போது யாதேனும் இணக்கப்பாடினிமை அல்லது வேறுபாடுகள் அவதானிக்கப்படின், குறிப்பிட்ட கால வரையறைக்குள் உரிய திருத்தத்திற்கான நடவடிக்கையை எடுக்குமாறு உரிய காப்புறுதி வழங்குனர்கள் சபையினால் அறிவுறுத்தப்படுவர்.

### ஆ) தீர்மானங்களுக்கு அமைவான ஏனைய முதலீடுகள்

பொதுக் காப்புறுதி வியாபாரம் அல்லது நீண்ட கால வியாபாரம் என்பவற்றைக் கொண்டு நடாத்தும் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களின் தொழில்நுட்ப ஒதுக்குகளிள் சொத்துக்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகளை 2011 மார்ச் 01ம் திகதி 1வது தீர்மானத்திற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் முதலீடுகளை மேற் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். 1ம் தீர்மானத்திற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களினால் முதலீடுகள் மேற் கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப் படுத்துவதற்காக சபையினால் மீளாய்வு மேற்கொள்ளப்படுவதுடன், யாதேனும் இணக்கப்பாடின்மை அவதானிக்கப்படின் குறிப்பிட்ட கால வரையறைக்குள் அவசியமான திருத்தங்களை மேற் கொள்ளுமாறு உரிய காப்புறுதி வழங்குனர்களுக்கு அறிவிக்கும்.

## 4. நிதியியல் பகுப்பாய்வுகள்

சபையினால் கையாளப்பட்ட விசாரணைகள் / முறைப்பாடுகள் என்பவற்றின் ஒரு பகுதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலும் நிதியில் மதிப்பீடுகளை சபை மேற்கொண்டது. பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட மேலதிக நிதித் தகவல்களின் பகுப்பாய்வானது சபை தீர்மானங்களுக்கு வருவதற்கு வசதியளித்தது. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு வழமையான வெளி விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டது.

## 5. இடர் அடிப்படையிலான மூலதனத்தில் மூலதன போதுமை தேவைப்பாடுகள

நடைமுறையிலுள்ள விதிமுறைகள் அடிப்படையிலான நிர்வாகத்திற்குப் பதிலாக, இலங்கை காப்புறுதித்துறையை மேற்பார்வை செய்வதற்கு இடர்கூர் உணர்வு மிகக்குறைவான மூலதன நிர்வாகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் உலக வங்கியின் உதவியுடன் 2009ம் ஆண்டு சபையினால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்டம் நான்கு பிரதான கட்டங்களை உள்ளடக்கியுள்ளது. திட்டமிட்டபடி உரிய திகதியில் பல மைல் கற்கள் கடக்கப்பட்டது. 2014ம் ஆண்டிலிருந்து இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. 2014ம் ஆண்டு இடர் அடிப்படையிலான மூலதனக் கருத்திட்ட அமுலாக்கத்திற்கான கட்டாய சமாந்தர ஓட்டமானது ஆரம்பிக்கப்பட்டு, 2015ம் ஆண்டு இறுதி வரை சமாந்தர ஓட்டம் தொடரப்பட்டது. 2016ம் ஆண்டில் இருந்து அனைத்து காப்புறுதி வழங்குனர்களும் கடன்தீர் எல்லை விதி 2015 (இடர் அடிப்படையிலான மூலதனம்) இன் வரையறுத்து ஒப்புக்கொண்ட இடர் அடிப்படையிலான மூலதன தேவையுடன் இசைவடைய வேண்டும் என்பது கட்டாயமானதாகும்.

கடன் தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகள் 2015ற்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி நிறுவனமும் குறைந்தபட்சம் ரூபா 500 மில்லியனை மொத்த கிடைக்கத்தக்க மூலதனமாகவும் மற்றும் பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களின் மூலதன போதுமை விகிதத்தின் 120% மாகவும் பராமரித்தல் வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. இந்த தேவையைக் கண்காணிப்பதற்காக சபையானது RBC பொதுவான முன்வடிவுகளை வடிவமைத் துள்ளதுடன் அனைத்து காப்புறுதிக் கம்பனிகளினாலும் இடர் அடிப்படையிலான மூலதன விபரத்திரட்டை சபைக்கு சமர்ப்பிக்கையில் கேள்விக் கொத்து பயன்படுத்தப்படுகின்றது. இரண்டு கம்பனிகளைத் தவிர்த்து அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரத்திற்கான முன்வடிவுகளை கேள்விக்கொத்துகளுடன் இணைத்து 2015ம் ஆண்டின் நான்கு காலாண்டுகளிலும் சமர்ப்பித்தன. சபை கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுடன் அந்த கணிப்பீடுகள் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு சபை மீளாய்வுகளையும் பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டது. காப்புறுதி வழங்குனர்கள் மூலதனப் போதுமையை பூர்த்தி செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குவார்களாயின் அல்லது கணிப்பீடுகள் தவறாக இருந்தால், குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் இடர் அடிப்படையிலான மூலதனத்துடன் இணங்குவதற்கு கம்பனி என்ன வழிமுறைகளை மேற்கொள்ளும் என்பது தொடாபாக மூலதனத் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு சபை அவர்களுக்கு அறிவுறுத்தியது.

அத்துடன், CAR வீத அறிக்கையிடல், TAC பகுப்பாய்வு மற்றும் இடர் கட்டணங்களின் சுருக்கம் உட்பட சமாந்தர ஓட்டத்தின் விளைவுகள் தொடர்பாகவும் காப்புறுதி வழங்குனர்களுடன் மேற்கொள்ளும் காலாண்டு சந்திப்புகளின் போது RBC தொடர்பாக யாதேனும் அபிவிருத்திகள் மற்றும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நடவடிக்கைகள் தொடர்பாகவும் காப்புறுதித்துறையாளர்களைப் பாராட்டியது.

RBC யுகத்தின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டது.

### அ) பூஜ்ஜிய கூப்பன் இடர் அற்ற வட்டி வீத விளைவு வளைவு

2015 கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளின் கீழ் கணிப்பீட்டுக்கு இடர் இல்லாத வட்டி வீத வருமான எல்லை கோரப்படுகின்றது. 32ம் விதிக்கு அமைவாக, இலங்கை காப்புறுதிச் சபையின் முன்னனுமதியுடன் பொருத்தமான கணித மாதிரி மாறிலியுடன் கூடிய தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் பிணைய வீதங்கங்களை பயன்படுத்தி இடர் அற்ற வட்டி வீத வருமான வளைவை அபிவிருத்தி செய்யுமாறு அல்லது சபையினால் வெளியிடப்பட்ட இடர் அற்ற வட்டி வீத வருமான வளைவை பயன்படுத்துமாறு காப்புறுதியாளர்கள் கோரப்படுகின்றனர்.

இரண்டு வருட சமாந்தர ஓட்டத்தின் போது, இடர் அடிப்படையிலான மூலதனத்தை கணிப்பீடு செய்வதற்கு வேறுபட்ட வருமான வளைவுகளை காப்புறுதி வழங்குனர்கள் பயன்படுத்தியதுடன், இடர் அற்ற வட்டி வீத வருமான வளைவை வெளியிடவில்லை. அதன் பின்னர், 32ம் விதிக்கு அமைவாக பயன்படுத்தத்தக்கூடியவகையில் இடர் அற்ற வட்டி வீத வருமான வளைவை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய வங்கியின் உதவியை சபை கோரியது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

**ஆ) சான்றிதழுக்கான தேவைப்பாட்டின் மீதான தெளிவுபடுத்தல் - 2015 கடன்தீர் எல்லை வருமானத்தின் (இடர் அடிப்படையிலான மூலதனம்) 6 (1) ம் விதி**

காலாண்டு மதிப்பீடு உள்-வீடு / உள்ளக காப்புறுதிக் கணிப்பீட்டார்களினால் மேற்கொள்ளப்படுவதுடன், வருட இறுதி பெறுமதி செயற்பாடுகள் வெளிவாரி நியமிக்கப்பட்ட கணிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது எனக்கூறி 6 (1) ம் விதி மீது காப்புறுதிக் கம்பனிகள் கேள்விகளை எழுப்பின. அதனால், அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) யின் 6(1) விதியின் கீழ் காப்புறுதி கணிப்பீட்டு சான்றிதழ் தேவையை ஏற்றுக்கொள்ளுமாறு காப்புறுதிக் கம்பனிகளுக்கு தெளிவாக்கல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**இ) இடர் அடிப்படையிலான மூலதனத்தின் மீது அமுலாக்கல் உபாயமார்க்கம்**

காப்புறுதிக் கம்பனிகள் இடர் அடிப்படையிலான மூலதனத்தின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட மூலதன போதுமை தேவைப்பாட்டினை பராமரிப்பதற்கு தவறுமாயின், இணக்கப்பாடின்மை அவதானிக்கப்படின், அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய கம்பனிகளுக்கு சபையினால் அறிவித்தல் வழங்கப்படும். அதனால், குறைந்தபட்ச தேவைகளின் அடிப்படையில் இடர் அடிப்படையிலான மூலதனம் மீதான அமுல்படுத்தல் உபாயமார்க்கத்தை தயாரிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது. இதன் மூலம் நிதியியல் நிலமையில் குறிப்பிட்ட வீழ்ச்சிக்கு அல்லது கடன்தீர் நிலமைகள் முறிவு நிலைமைக்கு இட்டுச் செல்வதற்கு முன்னர் சபையினால் மேற்பார்வை தலையீட்டினை மேற்கொள்ளுவதற்கு இயலுமாகும்.

பிரச்சினையில் உள்ள காப்புறுதிக் கம்பனிகளை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் காண முடிவதுடன், இது முக்கியமான அமுல்படுத்தல் பிரச்சனைகள் எழுவதற்கு முன்னர் மற்றும் இது வளர்ச்சி அடைந்து பரிமாணம் அமைவதற்கு முன்னர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரயோக ரீதியான வினைத்திறன் மிக்க தீர்வுகளை அறிமுகப்படுதல் இந்த அமுல்படுத்தல் உபாயமார்க்கத்தின் நோக்கம் ஆகும்.

## 6. அமைவிட கண்காணிப்பு

இவ்வருடம் இடர் அடிப்படையிலான முறையியில் அடிப்படையில் ஆறு காப்புறுதிக் கம்பனிகளில் அமைவிட கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இடர் அடிப்படையிலான கண்காணிப்பு கருத்திட்டத்தின் ஒரு பகுதியாக உலக வங்கியின் ஆலோசனையாளர்களின் பங்களிப்புடன் இரு அமைவிட கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டது. 2015ம் ஆண்டின் அமைவிட கண்காணிப்பினை மேற்கொண்டதன் பிரதான நோக்கமாக இடர் அடிப்படையிலான மூலதன விதிகளை அமுல்படுத்துகையில் அவற்றுடன் இசைவதற்கு காப்புறுதிக் கம்பனிகளின் தயார்நிலையை மதிப்பீடு செய்வதல் அமைந்திருந்தது. அத்துடன், இந்த அமைவிட கண்காணிப்புகளின் ஊடாக சட்டங்களின் ஏற்பாடுகள், சபையினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் காப்புறுதி வழங்குனரின் தொழிற்பாடுகள், முறைமைகள், பூட்கைகள் மற்றும் நடைமுறைகள் இணங்குகின்றதா என சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. மேலும், காப்புறுதி வழங்குனர்களின் தொழிற்பாடுகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகள் தொடர்பான மேலதிக தகவல்களைச் சேகரிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள், உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்கள் மற்றும் கணிப்பீட்டாளர்களுடன் சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், அமைவிடக் கண்காணிப்புகளின் போது பணத் தூய்தாக்கலைத் தடுத்தலுக்கான வழிகாட்டல்களை காப்புறுதிக் கம்பனிகள் பின்பற்றுகின்றனவா எனவும் உறுதிப்படுத்தப்பட்டது.

அமைவிட கண்காணிப்பில் இருந்து பெற்றுக்கொண்ட அவதானிப்புகள் தொடர்பாக, அமைவிட கண்காணிப்பு அறிக்கையின் ஊடாக காப்புறுதி வழங்குனர்கள் மேம்படுத்த வேண்டிய பரப்புகள் தொடர்பான சபையின் விதப்புரைகளை உரிய நிறுவனத்திற்கு வழங்கும். அத்துடன், அமைவிடக் கண்காணிப்புகளின் போது விலகல்கள் அவதானிக்கப்படின் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

## 7. இலங்கை மத்திய வங்கிக்கு தகவல்களை வழங்குதல்

சபை காலாண்டு விபரத்திரட்டுகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட, காலாண்டு அடிப்படையிலான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை நிலைப்படுத்தல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும். காப்புறுதி கைத்தொழிற்துறையின் செயற்பாடுகளை தீர்மானிப்பதற்கு சபை மொத்த சொத்துகள், தவணைக் கட்டண வருமானம், இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் விகிதப் பகுப்பாய்வுகள் போனறவற்றை சபை பகுப்பாய்வு செய்தது.

## 8. கைத்தொழில் கைநூல் 2015

2014 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கு சமர்ப்பிப்பதற்கு காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் சபையினால் சேகரிக்கப்பட்டதுடன், காப்புறுதிக் கைத்தொழிற்துறையாளர்களினதும், பங்குதாரர்களினதும் நன்மைக்காக “கைத்தொழிற்துறை கைநூல்” வெளியிடப்பட்டது. கைநூல் மொத்த சொத்துக்கள், காப்புறுதி வியாபாரத்தின் வேறுபட்ட வகைகளின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம், காப்புறுதிக் கம்பனிகளின் விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதியியல் நிலமைக் கூற்று மற்றும் நிறுத்தி வைத்தல் விகிதம், கோரிக்கை விகிதம், கலப்பு விகிதம் போன் விகிதங்களையும் உள்ளடக்கிய தகவல்களைக் கொண்டிருந்தது.

## 9. கலவையான காப்புறுதிகளை வேறுபடுத்தல்

2015 ஜனவரி 1ம் திகதியில் இருந்து ஏழு கலவைக் காப்புறுதிக் கம்பனிகள் தங்கள் காப்புறுதி வியாபாரத்தை இரு வகையான காப்புறுதி வியாபாரங்களாக வேறாக்கியதுடன், ஏனைய இரு கலவைக் காப்புறுதிக் கம்பனிகள் அவர்களுடைன கலவை வியாபரத்தை 2015ம் ஆண்டினுள் இரு வேறு கம்பனிகளாக வேறுபடுத்தின. இந்த நிறுவனங்கள் சபையினால் வழங்கப்பட்ட வேறாக்கல் வழிகாட்டலுக்கு அமைவாக குறித்துரைக்கப்பட்ட விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டன. வேறாக்கலை மேற்கொண்ட அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் இந்த தேவைப்பாட்டுடன் பூர்த்தி செய்தன. சபை வழங்கப்பட்ட ஆவணங்களை மீளாய்வு செய்து அவதானிப்புகளை மேற்கொண்டதுடன், அவசியமாயின் அவை உரிய காப்புறுதி வழங்கல் கம்பனிகளுக்கு அவசிய நடவடிக்கைகளுக்காக அவை அறிவிக்கப்பட்டது.

பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களின் சொத்துக்களை வினைத்திறனுடன் மாற்றம் செய்யுமாறு சபை வேறாக்கல் கம்பனிகளுக்கு அறிவித்தமையினால், அவை இலங்கை நாணய பரிமாற்றல் சபை மற்றும் மத்திய வைப்பு முறைமையின் சில தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான தேவை எழுந்தது. அதனால், பொது மற்றும் நீண் கால காப்புறுதி வியாபாரத்திற்கு சொந்தமான சொத்துக்களை மாற்றம் செய்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆட்சேபணை இல்லை எனும் கடிதத்தை நிறுவனங்கள் கோரின. இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆட்சேபணை இல்லை எனும் கடிதம் விநியோகிக்கப்பட்டது.

## 10. இடர் அடிப்படையிலான மேற்பார்வைக் கருத்திட்டம்

உலக வங்கியின் ஒத்துழைப்புடன், சபையின் மேற்பார்வை தொழிற்பாட்டை பலப்படுத்துவதற்காக 2013ம் ஆண்டு முதன் முதலாக இடர் அடிப்படையிலான மேற்பார்வை கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் ஏப்பிரல் 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டதுடன், சபையின் இடர் அடிப்படையிலான மேற்பார்வை பரப்பினுள் மீள்காப்புறுதி வைப்புகளுக்கான தேவைப்பாடுகள், மீள்காப்புறுதியாளர்கள் மீதான ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் மேற்பார்வை, முதலீடுகள் மற்றும் முதலீட்டுடன்

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

தொடர்புபடுத்தப்பட்ட உற்பத்திகள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. அத்துடன், முன்னைய இடர் அடிப்படையிலான மூலதன கருத்திட்டத்தின் ஒரு பகுதியான, இந்தக் கருத்திட்டம் இடர் அடிப்படையிலான மூலதன விதிகளை பூர்த்திசெய்தல் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

11. காலாண்டு, வருடாந்த மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல் அறிக்கையிடல் மாதிரி வடிவங்களின் திருத்தங்கள் சபையினால் வழங்கப்பட்ட உரிய தீர்மானங்களுக்கு அமைவாக காலாண்டு விபரத்திரட்டுகள், வருடாந்த விபரத்திரட்டுகள் மற்றும் கணிப்பீட்டு அறிக்கையிடல் மாதிரிகளை சமர்ப்பிப்பதற்கு காப்புறுதிக் கம்பனிகள் கோரப்பட்டுள்ளன. 2016 ஜனவரி 1ம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படும் இடர் அடிப்படையிலான கடன்தீர் எல்லை அமுல்படுத்தலுடன், மேலே குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தல் அறிக்கைகளையும் பொருத்தமான வகையில் திருத்துவதற்கு கோரப்பட்டுள்ளன. அதனால், இடர் அடிப்படையிலான மூலதன விதியின் அமுல்படுத்தலை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், சபை அறிக்கையிடல் மாதிரிகளை மீளாய்வு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

**12. காப்புறுதிக் கம்பனிகளின் முதலீடுகள் மற்றும் காப்புறுதி நிதியத்தின் முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்கள்**

கைத்தொழிற்துறையின் பெறுமதிக்கு சிறந்த பழக்கங்களை மேற்கொள்வதற்கு, 2015ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஆயுள் மற்றும் பொது காப்புறுதிக் கம்பனிகளின் காப்புறுதி நிதியம் / முதலீடுகள் என்பவற்றை முகாமைத்துவம் செய்வது தொடர்பாக சபையின் ஆலோசனை கணிப்பீட்டின் உதவியுடன் சபை செயலமர்வுகளை நடாத்தியது. 140ற்கும் மேற்பட்ட கைத்தொழிற்துறை பிரதிநிதிகள் இதில் பங்குபற்றியதுடன், இரு அமர்வுகள் நடாத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து கீழ்வரும் நோக்கங்களை பூர்த்திசெய்யும் வகையில் வழிகாட்டல் வரைபு தாயாரிக்கப்படுகின்றது.

**அ. காப்புறுதிக் கம்பனிகளின் முதலீடு தொடர்பான வழிகாட்டல்கள்**

இடர் அடிப்படையிலான மூலதனம் மற்றும் இடர் அடிப்படையிலான மேற்பார்வை சட்டகத்தின் ஒன்றிணைந்த பகுதியாக முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து எழும் இடரை முகாமைத்துவம் செய்வது தொடர்பான தரமான தேவைப்பாடுகளை குறைத்துரைத்து வழிகாட்டல் வரைபு தயாரிக்கப்பட்டது.

முதலீட்டு நடவடிக்கைகளின் அளவு, பண்பு அளவு மற்றும் சிக்கல்தன்மை என்பவை உள்ளடங்களாக பரந்த அளவிலான காரணிகளில் தங்கியுள்ள முதலீட்டை முகாமைத்துவம் செய்வதற்கு வேறுபட்ட அணுகுமுறைகளை காப்புறுதிக் கம்பனிகள் பின்பற்றுதல் வேண்டும். எனினும், சபைப் பணிப்பாளர்கள் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல், இடர் முகாமைத்துவத்தை திடமாக்குவதற்கான கொள்கைகள் மற்றும் போதியளவு கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு போன்ற அடிப்படை கோட்பாடுகள் வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டது.

**ஆ) காப்புறுதி நிதியத்தின் முகாமைத்துவம் மீதான வழிகாட்டல்கள்**

காப்புறுதி நிதியம், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் காப்புறுதி நிதியத்தின் செலவுகளை பொருத்தமான வேறாக்கல் ஊடாக காப்புறுதி வழங்குனரின் வியாபாரத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உரிய முறையிலான பண்புகள் தொடர்பான பண்பார்ந்த தேவைப்பாடுகளை குறித்துரைப்பதற்கு இந்த வழிகாட்டல் வரைபு தயாரிக்கப்பட்டது.

இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களின் இறுதி வடிவம் தயாரிக்கப்படும்.

## காப்புறுதித் தரகர் கம்பனிகள்

**1. காலாண்டு விபரத்திரட்டுகள், மாதாந்த விபரத்திரட்டுகள், இடைக்கால நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள**

2010 பெப்பரவரி 25ம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதி தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளையும் இடைக்கால நிதியியல் கூற்றுக்களையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

அனேகமான காப்புறுதி தரகர் கம்பனிகள் தங்கள் காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் இடைக்கால நிதியியல் கூற்றுகளை சபைக்கு இறுதி நாளுக்கு முன்னராக சமர்ப்பித்தன. அவர்களின் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவை சட்டம், ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றமையை கண்காணிப்பதற்கும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகளை சபை மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் சபையினால் அவதானிக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவற்றினை திருத்துமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் சபையினால் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றினை திருத்துமாறு நடவடிக்கை எடுக்குமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

**2. தவணைக் கட்டணங்களின் சேகரிப்பினைக் கண்காணித்தல**

சட்டத்தின் 89ம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதி வழங்குனர்களுக்காக காப்புறுதி தவணைக் கட்டணங்களை காப்புறுதி தரகர் கம்பனிகள் சேகரித்து உரிய காப்புறுதி வழங்குனர்களுக்கு சேகரித்து இரு வாரங்களினுள் வரவு வைத்தல் வேண்டும். இந்த காலாண்டு விபரத்திரட்டுகள் மற்றும் அமைவிட கண்காணிப்புகள் மூலம் சட்டத்தின் 89ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதித் தரகர் கம்பனிகள் இணங்குகின்றனவா என சபை உண்ணிப்பாக கண்காணிக்கின்றது. இந்த பிரிவுக்கு அமைவாக இணங்காத காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு எதிராக அவசியமான நடவடிக்கைகளை சபை எடுக்கும்.

**3. அமைவிட கண்காணிப்புகள்**

சபையின் ஒழுங்குவிதிகள் இணங்கப்படு கின்றதா என மதிப்பிடுவதற்காக 2015ம் ஆண்டினுள் சபை எட்டு அமைவிட கண்காணிப்புகள் காப்புறுதி தரகர் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டது. அமைவிட கண்காணிப்புகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள், உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் திருத்தச் செயற்பாடுகளுக்காக சபையின் விதப்புரைகள் கம்பனிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலும் பொருத்தமான ஒழுங்காற்றல் நடவடிக்கைகள் சபையினால் மீறல்களுக்காக மேற்கொள்ளப்பட்டது.

**4. பதிவினை புதுப்பித்தல்**

2016ம் ஆண்டு அவற்றின் தொழிற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக அவர்களின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் காப்புறுதி தரகர் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது. புதுப்பிப்பதற்கு முன்னர் அவற்றின் நிதியியல் நிலமையை தீர்மானிப்பதற்காக, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகள் என்பனவற்றை சபை பகுப்பாய்வு செய்தது

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## ஒழுங்கமைப்பு மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகளை பதிவுசெய்தல்

இவ்வருடம் திருத்தச் சட்டத்தின் 53ம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதி வழங்குனராக மூன்று கம்பனிகள் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் ஒரு புதிய விண்ணப்பம் பதிவினை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தக் கம்பனி நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அனுமதியைக் கோரியுள்ளதுடன், விண்ணப்பம் பரிசீலனையின் கீழ் உள்ளது.

இணைப்பு 1: சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/ வகைகள் என்பவற்றை வழங்குகின்றது.

### புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகளை பதிவுசெய்தல் மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவினைப் புதுப்பதித்தல்

சபை 27 ஏப்ரல் 2012ம் திகதியில் இருந்து நபர்களை காப்புறுதி முகவர்களாக பதிவுசெய்வதற்கான புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. அதனால் இவ்வருடத்தினுள் காப்புறுதி தரகர்களாக நபர்கள் தொழிற்படுவதற்கான புதிய பதிவுகள் வழங்கப்படவில்லை. எனினும், ஒரு பதிவு செய்த காப்புறுதிக் கம்பனி (பொது காப்புறுதி வியாபாரத்திற்கு) நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கு பதிவுசெய்வதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை சபையினால் ஏற்றுக்காள்ளப்பட்டு அனுமதியை வழங்கியது.

இவ்வருடத்தினுள் 2016ம் ஆண்டுக்காக பதிவுகளை புதுப்பிப்பதற்கு 57 காப்புறுதித் தரகர் கம்பனிகளின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அனைத்துக் கம்பனிகளுக்கும் 2016ம் ஆண்டுக்கான பதிவு புதுப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதுடன், அவை சட்டத்தின் கீழ் அவசியமான தேவைகளை பூர்த்திசெய்துள்ளதா என நோக்கப்பட்டது.

இணைப்பு II: சபையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதி தரகர் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/ வகைகள் வழங்கப்பட்டுள்ளது.

### வலியுறுத்தல் நடவடிக்கைகள்

#### காப்புறுதிக் கம்பனிகள்

#### இடைநிறுத்தல்கள்

இந்த ஆண்டின் போது சபையினால் இடை நிறுத்தங்கள் எவையும் விதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 2009 ஆம் ஆண்டில் சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட இடைநிறுத்தல் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

இவ்வருடத்தினுள் சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்தின் கோரிக்கையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதிக் கோரிக்கை களுக்கான மதிப்பீடுகள் இறுதியாக்கப்பட்டன. சிலிங்கோ டக்காபுல் லிமிடட் தனது சங்க அமைப்பு விதிகளைத் திருத்தங்களை மேற்கொண்டு மற்றும் சபைக்கு புதிய பணிப்பாளர்களை நியமித்தபின்னர் பதிவாளர் ஆணையாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் கோரிக்கைகளுக்கான தீர்ப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்.

#### பணிப்புரைகள்

காப்புறுதி சட்டத்தின் 57 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி கம்பனிகள் நான்கிற்கு சபையினால் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கம்பனிகள்,

- அந்தக் கம்பனி சபையின் எழுத்து மூலமான முன்னனுமதியின்றி யாதேனும் இணைக் கம்பனிகள், துணைக் கம்பனிகள் அல்லது தாய்க் கம்பனி அல்லது குழுமக் கம்பனி அங்கத்தவர் உள்ளடங்களாக யாதேனும் தொடர்புடைய கம்பனியுடன் யாதேனும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.
- அந்தக் கம்பனி சபையின் எழுத்து மூலமான முன்னனுமதியின்றி யாதேனும் கொடுக்கல் வாங்கல்களை குறித்துரைத்த நிறுவனம் உள்ளடங்களாக யாதேனும் நிறுவனத்துடன் மேற்கொள்ளுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.
- பங்குதாரர் கம்பனியின் சபையில் இந்து அந்த பணிப்பாளர் இராஜினாமா செய்யும் படி கோரப்பட்டுள்ளார். மற்றும்

  (i) அந்தக் கம்பனி மாதாந்த விபரத்திரட்டுகளை சமர்ப்பிப்பதற்கும் : மற்றும்

  (ii) சபையின் எழுத்து மூலமான முன்னனுமதியின்றி அவர்கள் அவர்களுடைய குழுமத்தின் கீழ் வரும் நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல் தடைசெய்யவும் கோரப்பட்டுள்ளனர்.

  சட்டத்தின் 57ம் பிரிவுக்கு அமைவாக, கீழ்வருவனவற்றை விரிவாக விபரித்து காப்புறுதிக் கம்பனிக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

- கீழ்வருவன உள்ளடங்களால இலங்கை காப்புறுதிச் சபைக்கு விரிவான திட்டத்தை வழங்குமாறு

  அ) இலங்கையில் அதன் தொழிற்பாடுகளை எவ்வாறு முடிவுறுத்தல் : மற்றும்

  ஆ) எதிர்காலத்தில் எழும் கோரிக்கைகள் மற்றும் அனைத்து நிலுவைக் கோரிக்கைகளை எவ்வாறு தீர்த்தல்.

- நீதிமன்றத்திற்கு முடிவுறுத்தல் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் சட்டத்தின் 68ம் பிரிவுக்கு அமைவாக இலங்கை காப்புறுதி சபையின் அனுமதியை முதலில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

முடிவுறுத்தல் தொடர்பான சட்ட நடைமுறைகள் முடிவடையும் வரையில் இலங்கைக்கு வெளியே பணத்தை அனுப்ப வேண்டாம் என அதே கம்பனிக்கு இன்னொரு பணிப்புரை வழங்கப்பட்டது.

நிதிக் கம்பனி ஒன்றுடன் எதிர்கால வருமான பெறுகைகளை ஈடுவைத்து ஈட்டுப் பிணையொன்றில் ஒரு காப்புறுதிக் கம்பனி கைச்சாத்திட்டுள்ளதை சபை அவதானித்தது. நிதிக் கம்பனியினால் சாட்டப்பட்டுள்ள அந்த பிணையங்கள் மேற்குறிப்பிட்ட ஈட்டுப் பிணையில் உள்ள நிபந்தனைகளின் கீழ் வரும் மொத்த தொகையை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக உள்ளது எனவும் ஈட்டுப் பிணை விடுவிக்கப்படும் வரை யாதேனும் சுமைகளுக்கு அந்த சொத்துக்கள் கட்டுப்படவில்லை எனவும் வெளிவாரி கணக்காய்வாளரிடமிருந்து உத்தரவாதத்தை வழங்குமாறு கோரி காப்புறுதிக் கம்பனிக்கு சபை சட்டத்தின் 57ம் பிரிவின் கீழ் பணிப்புரையை வழங்கியது.

பொது மக்கள் அல்லது தேசிய நலங்கள் அல்லது காப்புறுதி வைப்பாளர்களின் நலன்கள் அல்லது காப்புறுதி வழங்குனரின் நலனுக்கு தீங்கு இழைப்பது போன்ற நட்டத்தை ஏற்படுத்த கூடிய முறைகளில் எந்தவொரு காப்புறுதி வழங்குனர்களும் நடப்பார்களாயின் அக் காப்புறுதி வழங்குனர்களுக்கு சபை பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரத்தை சட்டத்தின் 57 வது பிரிவு வழங்குகின்றது.

சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் வழங்கப்பட்ட பணிப்புரைகளை பின்பற்றுகின்றனரா என்பதை கண்காணிப்பதற்காக, காப்புறுதி கம்பனிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்பாக, உன்னிப்பானதும் மற்றும் தொடர்ச்சியானதுமான கண்காணிப்பு ஒன்று சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

#### எச்சரிக்கைகள்

- சட்டத்தின் 31 (1அ) பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டாய தவிர்க்கை தேவைப்பாட்டினை மீறி மீள்காப்புறுதியாளருடன் விருப்பத்திற்குரிய மீள்காப்புறுதி ஒழுங்குகளை மேற்கொண்டமைக்காக காப்புறுதிக் கம்பனிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

  சட்டத்தின் 31 (1அ) பிரிவுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதியாளரும், மீள்காப்புறுதியை மேற்கொள்ளும் மீள்காப்புறுதியாளர்கள், மீள்காப்புறுதி செய்யப்படும் பெறுப்புக்கு அமைவாக. அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக ஐம்பது வீதத்திற்கு விஞ்சாத தொகையை தேசிய காப்புறுதி சபை நிதியத்தின் சபையில் மீள்காப்புறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

  அந்த இலக்கம் 1791/4 உடைய வர்த்தமானி அறிவித்தலில், இது 01 ஜனவரி 2013ம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு பொது மீள் காப்புறுதியில் எழும் மொத்த

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

பொறுப்பின் மீது காப்புறுதியாளரினால் 30% கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும், காப்புறுதி வழங்குனர் நீண்ட கால மீள் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு வருபவை தவிர்த்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள் காப்புறுதி செய்யப்படுதல் வேண்டும். முன்னர் இந்த வீதம் 20% ஆகும்.

- சட்டத்தின் 29ம் பிரிவு மற்றும் சட்டத்தின் 78 (4) ம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட இலக்கம் 1255/3 மற்றும் செப்டெம்பர் 2002 இல் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் 2ம் விதி என்பவற்றை மீறியமைக்காக காப்புறுதிக் கம்பனிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

  கடன் கொடுப்பனவுக்கு போதியளவு பாதுகாப்பு இருக்கின்றது எனத் திருப்திப்படுத்தப்பட்டால், அதன் கீழ் சபையினால் முன்னனுமதியைப் பெற்றுக்கொண்டால் அன்றி, காப்புறுதியாளர் அந்தக் காப்புறுதிக் கம்பனியில் பணிப்பாளர் பதவியில் இருக்கும் யாரேனும் நபருக்கு, அல்லது அந்த நபர் யாதேனும் பதவியை வகிக்கும் கம்பனிக்கு காப்புறுதி வழங்குனரினால் வழங்கப்பட்ட ஆயுள் காப்புறுதி கொள்கையை பிணையாக கொண்ட கடன் தவிர்ந்த யாதேனும் கடனை வழங்குதல் கூடாது என சட்டத்தின் 29 (1) ம் பிரிவு குறிப்பிடுகின்றது.

  சட்டத்தின் 78 (4) ம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட இலக்கம் 1255/3 மற்றும் செப்டெம்பர் 2002 இல் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் 2ம் விதி, இலங்கை காப்புறுதி சபையினால் அனுமதியளிக்கப்பட்ட யாதேனும் நிறுவனம் அல்லது இலங்கை காப்புறுதி நிறுவனம் என்பவற்றினால் நடாத்தப்படும் ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்தால் அன்றி அந்த நபரை காப்புறுதி முகவராக பதிவுசெய்தல் கூடாது எனக் குறிப்பிடுகின்றது.

- சட்டத்தின் 38 (1) ம் பிரிவுடன் முரண்பட்டமை மற்றும் 01.03.2011ம் திகதி வெளியிடப்பட்ட தீர்மானம் என்பவற்றை மீறியமைக்காக சபை இன்னுமோர் காப்புறுதி நிறுவனத்திற்கு எச்சரிக்கைகயை விடுத்தது.

  சட்டத்தின் 38 (1) ம் பிரிவு, தனியாக அல்லது பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு மேலதிகமாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும்,

(அ) “நீண்ட கால காப்புறுதி நிதியம்” என அழைக்கப்படும் வேறான நிதியத்தைப் பேணுதல் வேண்டும். அத்துடன், அந்தக் காப்புறுதி வழங்குனரினால் நடாத்தப்படும் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் இருந்து கிடைக்கப்பெறும் பணம் முழுவதையும் அந்த நிதியில் வைப்பிலிடல் வேண்டும் : மற்றும்

(ஆ) ஏனைய வகைக் காப்புறுதி வியாபாரங்களின் சொத்துக்களில் இருந்து நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களை தனியாகப் பேணுதல் வேண்டும்.

01.03.2011 ம் திகதி தீர்மானத்திற்கு அமைவாக, பொது காப்புறுதி வியாபாரத்தை அல்லது நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை கொண்டு நடாத்தும் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும் மீதிச் சொத்துக்களை முறையே, யாதேனும் தனி முதலீடுகள் அந்த முதலீடு அட்டவணை ஏ யில் விபரிக்கப்பட்டவாறு, முதலீட்டு வகைக்கு அமைவாக தொழில்நுட்ப ஒதுக்குகளில் அல்லது நீண்ட கால காப்புறுதி நிதியத்தில் உச்சளவு வீதத்தில், தொழில்நுட்ப ஒதுக்குகளில் அல்லது நீண்ட கால காப்புறுதி நிதியத்தில் முதலீடு செயதல் வேண்டும்.

## காப்புறுதி தரகு கம்பனிகள்

### இடைநிறுத்தல்கள்

- சட்டத்தின் 86(2) ம் பிரிவை மீறியமைக்காக காப்புறுதி தரகர் கம்பனி 2015 நவம்பர் 5 ம் திகதியில் இருந்து 2015 நவம்பர் 23ம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டது.

  சட்டத்தின் 86 (2) ம் பிரிவுக்கு அமைவாக, நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள், தகமைவாய்ந்த கணக்காய்வாளரினால் சான்றுபடுத்த, காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை ஐந்தொகை, இலாப நட்டக் கணக்கு மற்றும் நிதியில் கூற்றுகளுக்கான குறிப்புகளை உள்ளடக்கி சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

- இன்னொரு காப்புறுதிக் கம்பனி, காலாண்டு விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்காமை மற்றும் சபையினால் விநியோகிக்கப்பட்ட ஏனைய நிபந்னைகளுடன் இணங்காமை காரணமாக சட்டத்தின் 84(1)ம் பிரிவை மீறியமைக்காக இடைநிறுத்தப்பட்டதுடன், இந்த இடைநிறுத்தல் பல தடவைகள் நீடிக்கப்பட்டது. இது வரை அவர்கள் காலாண்டு விபரத்திரட்டை சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் சபையினால் வழங்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கவில்லை என்பதனால் சபை அவர்களின் பதிவை 03 ஜுலை 2015ம் திகதியில் இருந்து இரத்துச்செய்தது.

### எச்சரிக்கைகள்

காப்புறுதிச் சட்டத்தின் 86 (1) ஆம் பிரிவுடன் இணங்கி செயற்பட தவறியமைக்காக 04 தரகுக் கம்பனிகளுக்கு சபையினால் எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.

காப்புறுதிச் சட்டத்தின் 86 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2010 பெப்பரவரி 25ம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வாத்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, காப்புறுதிக் கம்பனியின் தலைமை அலுவலர் அல்லது பணிப்பாளரினால் சான்றுபடுத்தப்பட்ட காலாண்டு விபரத்திரட்டையும் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதி தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளையும் இடைக்கால நிதியியல் கூற்றுக்களையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

அத்துடன், காப்புறுதிச் சட்டத்தின் 86 (2) ஆம் பிரிவுடன் இணங்கி செயற்பட தவறியமைக்காக 02 தரகுக் கம்பனிகளுக்கு சபையினால் எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.

03 வேறுபட்ட நிகழ்வுகளுக்கு சபையினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தால், அந்தக் காப்புறுதிக் கம்பனியினை இடைநிறுத்தவதற்கு, இரத்துச்செய்வதற்கு அல்லது பதிவுசெய்தல் புதுப்பித்தலை மீளப்புதுப்பித்தலை நிராகரிப்பதற்கு சட்டத்தின் 84(1) ம் பிரிவு சபைக்கு அதிகாரத்தை வழங்குகின்றது.

### பணிப்புரைகள்

மறை தேறிய மூலதன நிலையை அவதானித்ததனால், ஆறு மாதங்களுக்கு மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடுமாறும் மற்றும் குறைந்த பட்ச தேறிய மூலதன தேவைப்பாட்டை பேணுமாறும் பிரிவு 96 அ பிரிவுக்கு அமைவாக இரு காப்புறுதித் தரகர் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டது.

### ஒழுங்குபடுத்தல் / ஆலோசனை அளவீடுகள்

1. அனைத்து காப்புறுதிக் கம்பனிகளுக்கும் வழங்கப்பட்ட பணிப்புரை 01ற்கான விண்ணப்பத்திலிருந்து விலக்களிப்பை கோரிய காப்புறுதி கம்பனிக்கு அனுமதி சபையினால் வழங்கப்பட்டது.

   சட்டத்தின் 99 (1) ம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக, பொது மக்களை தவறாக வழிநடத்தும் அல்லது பிழையான அல்லது பொய்யான யாதேனும் தகவல்களை அல்லது சாதனங்களை உள்ளடக்கிய விளம்பரங்களை காப்புறுதி வழங்குனர்கள், காப்புறுதி முகவர்கள் மற்றும் தரகர்கள் வெளியிடக்கூடாது. பணிப்புரை இலக்கம் 01ற்கு அமைவாக காப்புறுதியாளர்கள் சட்டத்தின் பிரிவு 99(1) ற்கு இணங்குகின்றது என்பதை பிரதான நிறைவேற்று அதிகாரியின் சான்றுபடுத்தலை சமர்ப்பிக்க வேண்டும். 2014ம் ஆண்டிலிருந்து முடிவுறுத்தும் நிலையில் இருக்கும் கம்பனிக்கு எந்தவொரு விளம்பரங்களையும் பத்திரிகையில் அல்லது வானொலியில் அல்லது யாதேனும் ஊடகத்தில் வெளியிடக்கூடாது என கம்பனியை சபை கேட்டுக்கொண்டது.

2. வளைகுடாவில் பணிபுரியும் இலங்கை இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வெளிநாட்டு காப்புறுதியாளர்களினால் விநியோகிக்கப்படும் காப்புறுதி பூட்கை தொடர்பாக சேவைகளை வழங்கும் காப்புறுதி அல்லது மீள்காப்புறுதி

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

கம்பனிகளுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்திற்கு வருவதற்கு முன்னர் காப்புறுதிக் கம்பனி சபையின் அனுமதியை சட்டத்தின் 12(4) ம் பிரிவின் கீழ் பெற்றிருக்க வேண்டும்.

சட்டத்தின் 12 (4) ம் பிரிவு நியதிகளுக்கு அமைவாக, சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நபர், சட்டத்தின் கீழ் பதிவு கோரப்பட்ட காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடைய அல்லது மேலதிகமாக யாதேனும் வியாபரத்தை கொண்டு நடாத்தின், எழுத்து மூலமான முன்னனுமதியின்றி காப்புறுதி தவிர்ந்த வேறு வடிவத்திலான வியாபாரங்களை கொண்டு நடாத்தலாகாது.

இங்கு குறிப்பிட்ட சேவை காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடைய நிதியியல் வியாபாரமாகக் கருதப்படும்.

3. காப்புறுதிக் கம்பனியின் புதிய இரு துணைக் கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதை சபை தடுத்தாக காப்புறுதி வழங்கும் கம்பனியின் ஒருவர் காப்புறுதி நிறுவனத்திற்கும் மற்றும் சபைக்கும் எதிராக நீதிமன்ற ஆணையினைப் பெற்றிருந்தார். எனினும் பின்னர் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை மீளப் பெற்றுக்கொண்டார்.

4. காப்புறுதி வழங்குனர் இரு பிணைகளை புதிய தொடர்மாடி வீட்டுத் தொகுதியொன்றின் நிர்மாணிப்பின் மீது வழங்கியிருந்தார். இதுவரை காப்புறுதியாளர் உத்தரவாதப்படுத்திய தொகையை நிராகரித்திருந்தனால், கோரிக்கையாளர் முரண்பாடு தொடர்பாக சபைக்கு அறிவித்திருந்தார். நிபந்தனைகளுக்கு அமைவாக, எழுத்து மூலத்தில் கேள்விகள் மீது பிணைகள் கொடுப்பனவு செய்ய வேண்டிவை என்பதுடன், ஒப்பந்தகாரரின் கோரிக்கைக்கு அமைவாக கொடுப்பனவுகள் காப்புறுதி வழங்குனரினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனால் பிணையின் கீழ் கோரிக்கையாளரின் கேள்விக்கு மதிப்பளிக்குமாறு காப்புறுதி வழங்குனருக்கு சபை பிரிவு 98இன் கீழ் கட்டளையிட்டது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கோரிக்கைகள் முழுமையாக காப்புறுதியாளருக்கு வழங்கப்பட்டு பிரச்சினை தீர்க்கப்பட்டதுடன், எதேட்சையதிகார நடுவர் தீர்ப்பின் பணிப்புரைப்படி கோரிக்கையாளர் அதே தொகையை வேறொரு கணக்கில் வைப்பு செய்தார்.

5. புதிதாக உருவாக்கப்பட்ட கம்பனிகளை பட்டியலிடுதல் தொடர்பான தேவைப்பாடுகள் தொடர்பான தெளிவுபடுத்தல் இலங்கை காப்புறுதி அசோசியேசனால் கோரப்பட்டது. சட்டத்தின் 15 அ பிரிவுக்கு அமைவாக, 2011 பெப்பரவரி மாதத்தில் அல்லது அதற்குப் பின்னர் காப்புறுதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்ட, சட்டத்தின் 15ம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும் மூன்று வருடங்களினுள் அவர்கள் தங்களை பங்குப் பரிவர்த்தணையில் பட்டியலிடல் வேண்டும். இந்த ஏற்பாடுகள் கலவைக் கம்பனிகளாக இருந்து வேறாக்கப்பட்ட கம்பனிகளுக்கும் பிரயோகிக்கப்படும்.

அத்துடன், திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 52ற்கு அமைவாக, 2011ம் ஆண்டில் இருந்த காப்புறுதி வழங்குனர்களும் 2016 பெப்பரவரியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுதல் வேண்டும். அத்துடன், தொழிற்பாட்டு ஆகுசெலவுகளை கால வரையறையின்றி மேற்கொள்ளுவதற்கு அனுமதிக்குமாறும் மற்றும் கலவைக் கம்பனிகளுக்கான பகிரப்பட்ட தொழிற்பாட்டு செலவுகளுக்கு வழங்கப்பட்டிருந்த் 5 வருட எல்லையை நீக்கப்படுதல் வேண்டும் எனவும் அவர்கள் கோரியிருந்தனர். எனினும், இந்தக் கோரிக்கையை கவனத்தில் கொள்வதற்கு அது இன்னும் முதிர்ச்சியடையாததனால் சபை இன்றும் அதற்கு இணங்கவில்லை.

6. முன்னர் கலவைக் காப்புறுதி வழங்குனர்களாக இரு காப்புறுதி சேவைகளையும் வழங்கிய காப்புறுதி முகவர்கள் தற்போது ஒரு பொதுக் காப்புறுதி வழங்குனராகவும் மற்றும் ஒரு ஆயுள் காப்புறுதி வழங்குனராகவும் பணிபரிவதற்கு சட்டம் திருத்தப்படுமா என இலங்கை காப்புறுதி அசோசியேசன் கேள்வி எழுப்பியிருந்தது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இதுவரை முன்மொழியப்பட்ட திருத்தம் அங்கீகரிக்கப்படாததனால், முன்னர் கலவைக் காப்புறுதி வியாபாரத்திற்கு பதிவுசெய்த காப்புறுதி முகவர்களை சட்டம் அமுலுக்கு வரும் வரையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் செய்வதற்கு அனுமதிப்பது எனக் காப்புறுதி சபை தீர்மானித்துள்ளது.

7. ஒரு கம்பனி அதன் அனுமதிக்கத்தகாத குத்தகை ஆதனத்தை அனுமதிக்கத்தக்க ஆதனமாக ஒரு வருடத்திற்கு கையாளுவதற்கும், இந்த ஆதனத்திற்கு எதிராக வியாபாரக் காரணங்களுக்காக கம்பனி கடன் வாங்குவதற்கும் அனுமதிப்பதை கவனத்தில் கொள்வதற்கும், கம்பனியின் இடர்தீர் எல்லை விதிகளைத் தீர்மானிக்கும் கணிப்புகளை மேற்கொள்ளும் பொழுது இந்தக் கடன் பெறுதல்கள் மற்றும் அனுமதிக்கத்தகாத சொத்துக்களை கணிப்பில் கொள்ளாமல் இருப்பதற்குமான அனுமதியை சபையிடம் கோரியிருந்தது. சபையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு எதிராக இந்த கோரிக்கை அமைந்திருந்ததால் சபை அதனை அனுமதி வழங்குவதை நிராகரித்தது.

8. அடிப்படை உரிமைகள் வழங்கில் இருந்து உயர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட முன்னால் பணிப்பாளர், காப்புறுதி வழங்கும் கம்பனியின் முன்னால் பணிப்பாளர், தனது பணிக்கொடை மீதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் சபை முழுமையான விசாரணைகள் முடிவடையாததனால் கோரிக்கையை நிறைவேற்றுவதில்லை என தீர்மானித்தது.

9. ஒரு காப்புறுதிக் கம்பனிக்கு, யாதேனும் புதிய கிளையை அல்லது உப அலுவலகத்தை திறப்பதற்கு முன்னர் சபைக்கு அறிவிக்குமாறும், யாதேனும் Koz அல்லது யாதேனும் ஏனைய வகை கம்பனிகளை ஒருங்கிணைப்பதாயின் எழுத்து மூலமான முன்னனுமதி பெற வேண்டும் என 2014ம் ஆண்டு மீளப் புதுப்பிக்கப்பட்ட நான்கு பணிப்புரைகளை 2009ம் ஆண்டு சபை வழங்கியிருந்தது. காப்புறுதிக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை மீளாய்வு செய்த காப்புறுதிச் சபை, அதன் சார்புடைய கம்பனிகளில் இருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வதை அனுமதித்து வழங்கப்பட்ட பணிப்புரையை நீக்குவதற்கு தீர்மானித்தது.

10. காப்புறுதிப் பூட்கையாளரினால் ஒரு காப்புறுதிப் பூட்கை இரத்து செய்யப்பட்டால், ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளில் நடவடிக்கை எடுக்கப்படும் காலம் (cooling off) தொடர்பாக நியம கால அளவு காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், நியாயமான காலப்பகுதியை வழங்குவதற்கு காப்புறுதிக் கம்பனிகளுடன் தீர்க்கா லோசனை செய்யப்பட்டது. காப்புறுதி பூட்கையாளரிடமிருந்து பூட்கை ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதில் இருந்து இருபத்தியொரு நாட்களை நியம கால அளவாக (cooling off period) ஏற்றுக்கொள்ளுமாறு சபை அங்கீகாரத்தை வழங்கியது.

11. திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதில் உள்ள நியமங்களின்படி பணிப்பாளர்களை நியமிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12. சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதில் உள்ள நியமங்களின் படி பிரதான அலுவலரை நியமிப்பதற்காக காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## புலனாய்வு சார்ந்த மீளாய்வு

தற்போதுள்ள மற்றும் உத்தேச பூட்கை வைப்பாளர்களின் நன்மைகளை பாதுகாக்கும் நோக்கத்திக் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் கோரிக்கையாளர்கள் இருவருக்கிடையில் தோன்றும் முரண்பாடுகளை தீர்த்துவைப்பதற்காக கோரிகையாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கும் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் சபைக்கு உள்ளதனால் வழங்கப்பட்ட கோரிகை முரண்பாட்டினைத் தீர்த்து வைப்பதற்காக அனைத்துத் தரப்பினரினதும் பிரச்சினைகளையும் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் சபையினால் வழங்கப்படும். அத்துடன், யாரேனும் காப்புறுதி வழங்குனர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக யாதேனும் தவறான நடவடிக்கைள் அல்லது ஒழுங்கீனங்கள் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என சபை புலனாய்வு செய்யும்.

சபைக்கு யாதேனும் முரண்பாடுகள் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் (காப்புறுதி வழங்குனருக்கு, காப்புறுதி தரகருக்கு அல்லது முகவருக்கு எதிராக), எதிர் தரப்பினருக்கு அவர்களின் தீர்மானம் தொடர்பாக அதற்கான காரணத்தை சான்றழிக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் கட்டியெழுப்புமாறு கோரப்படுவர். அவசியமாயின் இரு தரப்பினரிடமிருந்தும் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் பெறப்படும். அத்துடன், தேவைப்படுமாயின் சபை தீர்மானத்திற்கு வருவதற்காக அரச அதிகாரசபைகள் மற்றும் தனிப்பட்ட நிபுணர்கள் என்பவர்களுடனும் ஆலோசனைகளை மேற்கொள்ளும்.

### 2015 ஆம் ஆண்டினுள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளும் தீர்க்கப்பட்டவைகளும்

2015ஆம் ஆண்டின்போது, மொத்தமாக 266 புதிய முறைபாடுகள் சபைக்கு கிடைக்கப்பெற்றதுடன், அதில் 274 விடயங்கள் இவ்வருடத்தினுள் தீர்க்கப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் சபையின் தலையீடு காரணமாக 54 கோரிக்கைகள் காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்டது. சபையின் தலையீடு காரணமாக 2015ம் ஆண்டினுள் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் ஒன்றுசேர்த்த பெறுமதி ரூபா 28.3 மில்லியன் ஆகும்.

*வரைபு 01: கடந்த ஐந்து வருடங்களில் சபைக்கு கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்கள்*




கடந்த ஐந்து வருடங்களில் சபைக்கு மொத்தமாக 1,335 விடயங்கள் கிடைக்கப்பெற்றது. வரைபு 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2013ம் ஆண்டு அதிகூடிய கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றதுடன் அதன் பின்னர் படிப்படியாக அது வீழ்ச்சியடைந்ததைக் காட்டுகின்றது.

*வரைபு 02: 2015 ஆம் ஆண்டின் போது கிடைக்குப் பெற்ற விடயங்களின் பகுப்பாய்வு மாதாந்த ரீதியாக*




இந்த ஆண்டினுள் சபைக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாதாந்த அடிப்படையில் வரைபு 2இல் காட்டப்பட்டுள்ளது. அதிகப்படியான முறைப்பாடுகள் நவம்பர் மாதம் கிடைக்கப்பெற்றதுடன், ஜனவரி மாதத்தில் 11 முறைப்பாடுகள் மட்டுமே கிடைக்கப்பெற்றது. வரைபு 2 வருடத்தின் இறுதியில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையை காட்டுகின்றது. வருடத்தில் நடுப்பகுதியில் சபையின் இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக விழிப்பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் பின்னர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை இது காட்டுகின்றது.

*வரைபு 03: 2015ம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் வகைப்படுத்தல்*




2015ம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் வகைப்படுத்தல், 2014ம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு வரைபு 3இல் காட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த முறைப்பாடுகளில் முறையே 151 (57%) மற்றும் 86 (32%) முறைப்பாடுகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்றவையாகும். இங்கு வழங்கப்பட்டவற்றில் 29(11) முறைப்பாடுகள் பொது முறைப்பாடுகளாகும், இவற்றை காப்புறுதி வியாபாரத்துடன் வகைப்படுத்துவதற்கு முடியாது. உதாரணம்: காப்புறுதி முகவர்களின் தகைமைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு. 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கிடைக்கப்பெற்ற விடயங்களின் மொத்தக்கலவை விகிதம் மாற்றமடைந்துள்ளது. அதாவது நீண்ட கால காப்புறுதி வியாபாரம் 57% (2014ம் ஆண்டு இருந்த 40% இருந்து) வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் பொது வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் 32% (2014ம் ஆண்டு இருந்த 52% இருந்து) வீதத்தினால் குறைவடைந்துள்ளது

### நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான விதப்புரைகள்

கீழே அட்டவணை 1இல், நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பாக கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக 'பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளாமை' மற்றும் ' தவணைக் கட்டணங்களின் மீள்செலுத்தல் / இரத்துசெய்தல் அல்லது பூட்கைகளின் மீள்புதுப்பித்தல்' என்பவை தொடர்பான முறைப்பாடுகளாக இருந்தன.

*அட்டவணை 1 – நீண்டகால காப்புறுதி வியாபாரம் தொடர்பான முறைப்பாடுகள்: பிரச்சனைகள் ரீதியாக*

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| பொறுப்பினை ஏற்றுக் கொள்ளாமை | 34 | 39.54 |
| மீள்கொடுப்பனவு/இரத்துச் செய்தல் அல்லது புதுப்பித்தல் | 34 | 39.54 |
| கோரிக்கை /முதிர்ச்சி/ சரணடையும் பெறுமதி தொடர்பாக உடன்பாடின்மை | 6 | 6.97 |
| தவணைக் கொடுப்பனவின் கொடுப்பனவு/தவறான ஒதுக்கு | 4 | 4.65 |
| ஏனையவை | 8 | 9.30 |
| **மொத்தம்** | **86** | **100.00** |

நீண்ட கால காப்புறுதிப் பூட்கைகள் தொடர்பாக காப்புறுதி வழங்குனர்களினால் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாமைக்கு பிரதான காரணமாக அமைவது முன்மொழிவுப் பத்திரத்தில் அவசியமான காரணிகளை வெளிப்படுத்தாமை

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

ஆகும். சபையினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் படி, முன்மொழிவுப் பத்திரத்தில் அவர்களுடைய உடல்நலம் அல்லது மருத்துவ வரலாறு தொடர்பாக அவசியமான விடயங்களை சில காப்புறுதிப் பூட்கையாளர்கள் வெளிப்படுத்தாமை தெரியவந்தது. காப்புறுதி ஒப்பந்தங்களில் உச்ச நன்னோக்கம் எனும் கோட்பாடு பிரதான பண்பாக இருந்து வருகின்றதுடன், பிரதான காரணிகளை வெளிப்படுத்தாமையானது காப்புறுதியை இடைநிறுத்துவதற்கு வழிவகுப்பதுடன், கோரிக்கைகளை நிராகரிப்பதற்கு காரணமாக அமைகின்றது. சில நிகழ்வுகளில், காப்புறுதி முகவர்கள் முழுமையாக வெளிப்படுத்தல் அல்லது வெளிப்படுத்தப்படாமையின் விளைவு என்பன தொடர்பாக தெளிவாக அதன் முக்கியத்துவத்தை விளக்காமை தெரியவந்துள்ளது. எனினும் வெளிப்படுத்தாமையானது மோசடியான எண்ணத்துடன் அல்லது அதனை நோக்கமாக கொண்டு எனக் கருதாது சபை முடிந்தவரையில் காப்புறுதி வழங்குனரிடமிருந்து கோரிக்கைக்கு நிவாரணத்தைப் பெற்றுத்தருவதற்கு சபை உதவுகின்றது.

நீண்ட கால காப்புறுதிப் பூட்கைகள் தொடர்பாக காப்புறுதி வழங்குனர்களினால் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாமைக்கு மற்றுமொரு பிரதான காரணமாக அமைவது கோரிக்கை சமயத்தில் குறித்த கால தவணைக் கட்டணங்களை உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாமையினால் பூட்கையானது காலவதியடைந்ததுள்ளமை அல்லது செயலற்றுள்ளமையாகும். இந்த முரண்பாட்டின் பொழுது காப்புறுதி முகவர் (காப்புறுதி வழங்குனரின் பிரதிநிதி) காப்புறுதி பூட்கையாளாரினால் வழங்கப்பட்ட தவணைக் கட்டணத்தை காப்புறுதிக் கம்பனிக்கு செலுத்தாமை காரணமாக அமைந்திருந்தால், தவணைக் கட்டணம் கிடைக்கப்பெற்றால் அல்லது கிடைக்கப்பெறவில்லை எனினும் காப்புறுதி வழங்குனர் நியாயமாக கோரிக்கைக்கு பதிலளிக்குமாறு சபையினால் கோரப்படுவார்.

ஏறத்தாள 7% வீதமான முறைப்பாடுகள் பூட்கைகளை இரத்து செய்தல் அல்லது கொடுப்பனவு செய்யப்பட்ட தவணைக் கட்டணத்தை மீளக்கோருதலுடன் தொடர்புடையவையாகும். இந்த கோரிக்கைகளுக்கு பிரதான காரணம் காப்புறுதி எண்ணக்கரு பற்றிய போதிய அறிவின்மையாகும். நீண்ட கால காப்புறுதிப் பூட்கைளை இரத்துச் செய்தல் மற்றும் வழங்கப்பட்ட தவணைக் கொடுப்பனவுகளை மீளப் பெற்றுக்கொடுத்தல் என்பன பூட்கையின் நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் மட்டுமே மேற்கொள்ள முடியும். சில காப்புறுதிப் பூட்கையாளர்கள் காப்புறுதிப் பூட்கை என்பது வங்கி வைப்பைப் போன்றது என தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளனர். சில முறைப்பாடுகளில் இருந்து, காப்புறுதி முகவர்கள் காப்புறுதிப் பூட்கை ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களின் பிக்கர் தவணைக் கட்டணங்களை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என தவறான தகவல்களையம் உத்தரவாதங்களையும் வழங்கியுள்ளமை எனத் தெரியவந்துள்ளது. காப்புறுதியை இரத்துச் செய்வதற்கு அடுத்த பிரதான காரணமாக அமைவது காப்புறுதிப் பூட்கையாளரினால் ஆரம்பிக்கும் பொழுது உடன்பட்ட தொகையை நிதியியல் பிரச்சினை காரணமாக தொடர்ந்து செலுத்த முடியாமை அமைந்துள்ளது. இந்த காப்புறுதிப் பூட்கையாளர்கள், நீண்ட கால காப்புறுதி அர்ப்பணிப்புக்கு வழங்கப்படும் நன்மைகள் வழங்கப்படுமாயின் தொடர்ச்சியில்லாத தவணைக் கட்டணங்களை செலுத்துவதற்கு உடன்பட்டார்கள். எனினும், ஒரு சில துயரமான நிலையிலமைந்த கோரிக்கைகள் தவிர்த்து ஏனைய கோரிக்கைகளுக்கு உதவ முடியாத நிலையில் சபை உள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரதான பிரச்சினைகளை கவனத்தில் உடனடியாக கொள்வதற்காக, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் கீழ்வரும் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. அவை காப்புறுதி முன்மொழிவுப் பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் முன்மொழிவுப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளையும், பூட்கை நிபந்தனைகளையும் தெளிவாக விளங்கிக்கொள்வதன் முக்கியத்துவம் முன்மொழிவுப் பத்திரத்தில் பிரதானமான விபரங்களை வெளிப்படுத்துவதன் முக்கியத்துவம் காப்புறுதிப் பூட்கையை இரத்துச் செய்வதற்கான நிபந்தனைகள் காப்புறுதி தொடர்பான அடிப்படை எண்ணக்கரு தவணைக் கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்துவதன் முக்கியத்துவம் செலுத்துவதற்கு இயலுமான பூட்கையை மட்டும் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் வங்கியில் பண வைப்பு மற்றும் காப்புறுதி பூட்கை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு என்பனவாகும். அத்துடன், காப்புறுதி வழங்குனர்கள், தரகர்கள் மற்றும் முகவர்கள் வியாபார ஒழுக்கம் தொடர்பாக எதிர்கால ஒழுங்குபடுத்தல் தலையீடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை சபை மேற்கொண்டது.

சபை தெளிவுபடுத்தல்களையும் விளங்கங் களையும் வழங்குவதற்காக கோரிக்கைகள், முதிர்ச்சி பெறுமதி மற்றும் சரணடைதல் பெறுமதி என்பவை தொடர்பான உடன்பாடின்மை தொடாபாக காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து அவசியமான விபரங்கள் பெறப்பட்டது. இதிலிருந்து சில முறைப்பாடுகள் (4) தவணைக் கட்டணங்கள் தொடர்பான பிழையான விளக்கம் இடைத்தரகர்களினால் வழங்கப்பட்டமையினாலும் கிடைக்கப்பெற்றமையாவதுடன். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் (24) குறிப்பிடக்கூடியளவில் குறைவடைந்துள்ளது. மோசடிகளை குறைப்பதற்காகவும், வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு கொடுப்பனவு முறைகளை காப்புறுதியாளர்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்காகவும் கடுமையான விதிகள் சபையினால் அமுல்படுத்தப்பட்டமை இந்த எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது.

### பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான விதப்புரைகள்

பண்டத்தின் வகையை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு தொடர்பான விபரங்கள் அட்டவணை 4இல் காட்டப்பட்டுள்ளது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளில், அதாவது பெரும்பாலானவை (75%) வாகனக் காப்புறுதி பூட்கை தொடர்பானவையாகும். இவை இவ்வருடத்தில் சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளில் 40% வீதமானவையாகும். பொது காப்புறுதி வியாபாரம் தொடர்பாக பிரச்சினைகள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ளது.

*அட்டவணை 1 – பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான முறைப்பாடுகள்: காப்புறுதி வகைகளின் அடிப்படையில்*

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| பொறுப்பினை ஏற்றுக் கொள்ளாமை | 105 | 69.54 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பாக திருப்தியின்மை | 27 | 17.88 |
| கோரிக்கைக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் | 12 | 7.95 |
| ஏனையவை | 7 | 4.63 |
| **மொத்தம்** | **151** | **100.00** |

பொதுக் காப்புறுதி தொடர்பாக வழங்கப்பட்ட முறைப்பாடுகளில் பிரதானமானவை (70%) 'பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாமை' தொடர்பானவையாகும். காப்புறுதி வழங்குனர்களினால் இந்த மோட்டார் வாகனக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமைக்கு, மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்தியமை, சாரதியிடம் செல்லுபடியான வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமை மற்றும் சாரதி பதிலீடு என்பவை காரணமாக அமைந்திருந்தன. காப்புறுதி வழங்குனர்கள் விபத்தின் நேரம், காப்புறுதி பொறுப்பாணைக்காக அழைப்பு நேரம் மற்றும் தகவல்கள் சேகரிக்கப்பட்ட நேரம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டு விபரங்கள் மற்றும் தனிப்பட்ட புலன்விசாரணை விபரங்கள் (யாதேனும் இருந்தால்) என்பவற்றை மோட்டார் வாகனக் கோரிக்கை தொடர்பான பொறுப்புகளை தீர்மானிப்பதற்கு கவனத்தில் கொண்டிருந்தன. பொதுவாக சாரதி மது அருந்தியிருந்தால் அல்லது செல்லுபடியாகக்கூடிய வாகன அனுமதிப்பத்திரம் இல்லாதுவிடின், காப்புறுதியாளருக்கு இழப்பு தொடர்பாக அறிவிப்பதற்கு அல்லது பொலிஸ் நிலையத்திற்கு விபத்து தொடர்பாக அறிவிப்பது என்பவற்றில் தேவையற்ற காலதாமதம் ஏற்படும். காப்புறுதியாளர் மேற்குறிப்பிட்ட இரு சந்தர்ப்பத்திலும் பொறுப்பை

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

வழங்குவதற்கு தேவையுடையவராகமாட்டார். எனினும், காப்புறுதிப் பூட்கையாளரின் காலதாமதமாக சில நியாயமான காரணங்களை கொண்டவர்களின் கோரிக்கைகளும் இதனால் காலதாமதமடைகின்றது. அதனால் இதன் முக்கியத்துவம் தொடர்பாக சபையினால் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது. மோட்டார் கோரிக்கையின் நிராகரிப்புக்கு மற்றொரு பொதுவான காரணமாக காப்புறுதி பூட்கையானது தவணைக் கட்டணங்களை செலுத்தாமை காரணமாக இரத்துச்செய்யப்பட்டமை தவிர்த்து கோரிக்கையாளர் வாகனத்திற்கு காப்புறுதி பெற்றுக்கொள்ளும் விருப்பத்தைக் கொண்டிராமை அமைகின்றது.

பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக திருப்தியின்மை காரணமாக 17.88% வீத முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. மொத்த இழப்பு கோரிக்கைகள் தொடர்பாக, விபத்து நடந்த தினத்தன்று வாகனத்தின் சந்தைப் பெறுமதியை மற்றொரு சுயாதீன மதிப்பீட்டாளரைக் கொண்டு மதிப்பீடு செய்து உடன்பாட்டுக்கு வருமாறு காப்புறுதிக் கம்பனியைக் கோரி ஒருங்கிணைப்புகளை சபை மேற்கொண்டது. ஏனைய கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டால், பிரதான உடன்பாடின்மைக்கு காரணமாக, உரிமையாளரின் பங்களிப்பு அல்லது பூட்கைக்கு பிரயோகிக்கக்கூடிய மேலதிக பூட்கை பற்றிய அறிவின்மை மற்றும் திருத்தச் செலவுக்கான மதிப்பீடு மீதான சீராக்கங்கள் தொடர்பாக கோரிக்கையாளர்களுக்கு போதியளவு தகவல்கள் வழங்கப்படாமை என்பன அமைந்திருந்தன. சபையின் தலையீட்டினால் தாமதமான கோரிக்கைகள் (12) தீர்க்கப்பட்டன.

அத்துடன், காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் கோரிக்கையாளர்களுக்கு உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தல்கள், என்பன கோரிக்கைகள் தொடர்பாக காப்புறுதி வழங்குனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தவிர்க்கப்பட்டுள்ளமைமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தன.

### ஏனைய பங்குபற்றல்கள்

2015ம் ஆண்டு இரு பிரதான வியாபாரங்களின் வகைப்படுத்தப்பட்டவைகளுக்கு மேலதிகமாக 29 விடங்கள் சபைக்கு கிடைக்கப்பெற்றது. இவற்றினுள் நிதியை தவறான முறையினால் கையாளுதல் செய்தமைக்காக இடைநிறுத்தப்பட்ட முன்னால் காப்பறுதி முகவரினால் மீள காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் இணைவதற்காக மேற்கொண்ட வழங்கப்பட்ட மேன்முறையீடு இதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. காப்புறுதிப் பூட்கையாளர்களின் நன்மை கருதி அவ்வாறான மேன்முறையீடுகளை கவனத்தில் கொள்ளும் நிலையில் சபை இல்லை. சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்கு அமைவாக ஏனைய விடயங்களுக்கு அவசியமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

### வியாபார ஒழுங்குவிதிகளின் நடத்தை

- *முகவர் பிரச்சனைகள்*

காப்புறுதி முகவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக இலங்கை காப்புறுதிச் சபை, இலங்கை காப்புறுதிச் சங்கம், இலங்கை காப்புறுதி முகவர்கள் சங்கம் மற்றும் இலங்கை காப்புறுதி நிறுவனம் என்பவற்றின் அங்கத்தவர்களை உள்ளடக்கி கூட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. குழுவின் கூட்டங்கள் நடைபெற்றதுடன், இது சபையினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இவ்வருடம், காப்புறுதி முகவர்களுக்கான 'இடைநிறுத்தல் மற்றும் மனக்குறை என்பவற்றை கையாளும் நடைமுறைகள்' மற்றும் 'ஒழுக்க நெறிகள்' என்பவற்றினை முன்வரைவினை குழு மீளாய்வு செய்தது.

- *காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் தரகர்களின் முறைப்பாடுகளை கையாளவதற்கான வழிகாட்டல்கள்*

வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான 19வது காப்புறுதியின் பிரதான கோட்பாட்டின் குறித்துரைத்த தேவைகளாக வாடிக்கையாளர்களை நியாயமாக நடத்துதல், முன்விற்பனை செயற்பாடு மற்றும் காப்புறுதிக் பூட்கை சேவை வழங்கல் என்பவற்றின் வெளியீடுகள் மற்றும் அணவல்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. காப்புறுதி வழங்குனர்களின் தற்போதைய நடைமுறைகள் மற்றும் வழக்கங்களை கவனத்தில் கொண்டு, முறைப்பாடுகளை கையாளுதல் தொடாபாக காப்பறுதி வழங்குனர்கள் மற்றும் தரகர்கள் பின்பற்றுவதற்கான சபையினால் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டது. காப்புறுதித்துறையின் ஆலோசனையுடன் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

- *புலனாய்வாளர்களின் நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டல்கள்*

காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் பங்குபற்றும் அனைத்து நபர்களும் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் பிரதி விம்பத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் பொது மக்களின் நம்பிக்கையை பலப்படுத்துவதன் ஊடாக காப்புறுதிக் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்தல் எனும் வகிபாகத்தைக் கொண்டுள்ளனர். மோசடியான கோரிக்கைகள் தொடர்பாக தீர்மானிப்பதற்கும் மற்றும் கண்டு பிடிப்பதற்கும் கோரிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ செயற்பாட்டில் புலனாய்வாளர்கள் முக்கியமான வகிபாகத்தை வகிக்கின்றனர். எனினும் சில வேளைகளில் அவர்களின் பணியின் போது சில காப்புறுதி புலனாய்வாளர்கள் சில ஏற்றுக்கொள்ள முடியாத நடைமுறைகளைப் பின்பற்றுவதை சபை அவதானித்துள்ளது. உதாரணமாக போலி அடையாளப்படுத்தல், இது காப்புறுதிக் கைத்தொழிற்துறையில் உள்ள தொழிற்துறை சார்ந்தவர்களுக்கு மறுதலையான தாக்கத்தை விளைவிக்கும். அதனால் சபை, காப்புறுதி வியாபாரத்தில் சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கான குறைந்தபட்ச நியமங்களை அறிமுப்படுத்துவதற்காக புலனாய்வாளர்களுக்கான ஒழுக்கவிதிகள் மீதான வழிகாட்டுதலை தயாரித்துள்ளது. காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் ஆலோசனையுடன் இறுதி முன்மொழிவு தயாரிக்கப்பட்டு வழிகாட்டல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

- *வாடிக்கையாளர்களுக்கு நியாயமான முறையில் நடாத்துவதற்காக ICP 19.1 மற்றும் 19.2 என்பற்றின் பிரயோகம் தொடர்பான இடைவெளிப் பகுப்பாய்வு மற்றும் விதப்புரைகள்*

காப்புறுதி துறையினை ஒழுங்கு படுத்துவதற்கும் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டகத்தினுள் காப்புறுதியின் பிரதான கோட்பாட்டுகளைக் காப்புறுதி கண்காணிப்பாளர்களின் சர்வதேச சங்கம் அபிவிருத்தி செய்துள்ளது. வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான 19வது காப்புறுதியின் பிரதான கோட்பாட்டின் குறித்துரைத்த தேவைகளாக வாடிக்கையாளர்களை நியாயமாக நடத்துதல், முன்விற்பனை செயற்பாடு மற்றும் காப்புறுதிக் பூட்கை சேவை வழங்கல் என்பவற்றின் வெளியீடுகள் மற்றும் அணவல்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. சபை காப்புறுதி கண்காணிப்பாளர்களின் சர்வதேச சங்கத்தினால் நடாதாத்தப்பட்ட ICP 19 மீளாய்வில் பங்குபற்றியது. இதன் வெளியீடுகளில் இருந்து இடைவெளி அவதானிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகளின் கீழ் வாடிக்கையாளர்களை நியாயமாக நடாத்துவதற்கு 19.1 மற்றும் 19.2 நியமங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தேவைகளுடனான ஒழுங்குபடுத்தல் சட்டகம் தயாரிக்கப்பட்டது.

### ஏனைய நிகழ்வுகள்

- *முறைப்பாடுகளைக் கையாளும் உள்ளக நடைமுறையை மீளாய்வு செய்தல்*

முறைப்பாடுகளைக் கையாளுவதற்கான உள்ளக நடைமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் அமுல்படுத்தப்பட்டது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## சந்தை அபிவிருத்தியும் மற்றும் வெளியக உறவுகளும் மீளாய்வு

காப்புறுதி விழிப்புணர்வு என்பது கைத்தொழில் அபிவிருத்தியில் தாக்கத்தை உருவாக்கும் பிரதான காரணியாகும். காப்புறுதி மற்றும் இதன் இடரை பரிமாற்றும் பொறிமுறை நன்மைகள் தொடர்பாக விழிப்புணர்வு பற்றாக்குறை மக்களிடம் காணப்படுகின்றது. காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்கு காப்புறுதித் தேவை மீதான பொது மக்களின் விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும் என்பதனால் மீளாய்வுக்குட்பட்ட இந்த வருடத்தில் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சபை மேற்கொண்டது. அத்துடன், காப்புறுதிச் சந்தையை ஊக்குவிப்பதற்காக, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பூட்கையை பெற்றுக்கொள்ளல் மற்றும் பராமரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதான விடயங்களை விழிப்பூட்டுவதன் மூலம் தற்போதுள்ள மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் விருப்பத்தை பாதுகாத்தலை நோக்காகக் கொண்டிருந்தன. திருப்திகரமான காப்புறுதி அணவலைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான விழிப்பூட்டல் போன்று காப்புறுதி கொள்கைகளின் கீழ் அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக காப்புறுதி பூட்கையாளர்கள் விழிப்பூட்டப்பட்டனர்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

#### பிரதேச செயலாகங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள்

பிரதேச செயலகங்களில் உள்ள அரச அலுவலர்களை இலக்காகக் கொண்டு தனது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை சபை தொடர்ந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச செயலகத்தின் உதவியுடன் சபை ஒழுங்குசெய்தது. இந்த பங்குதாரர்களுக்கு சபையின் வகிபாகம் (காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் ஒழுங்கமைப்பாளர்), காப்புறுதியின் நன்மைகள், காப்புறுதிப் பூட்கையாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் என்பவை தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்டதன் ஊடாக சபை ஊழியர்கள், கிராமங்களில் வாழும் மக்களின் அனுபவத்தை உணர்ந்த அரசாங்க கள உத்தியோகத்தர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது.

பன்னிரெண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலக மட்டத்தில் வெலிகம,



பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்டம்

அத்தனகல, வெலிமட, பானந்துறை, பன்னல, கந்தளாய், மாவனல்ல, அம்பேகமுவ, மீரிகம, நாகொட, எஹெலியகொட மற்றும் மதவாச்சி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 866 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியது. அந்தப் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவை அலுவலர், திவிநகும/சமுர்த்தி, விவசாய அபிவிருத்தி அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் அண்ணளவாக 1,730 அரசாங்க அலுவலர்கள் பங்குபற்றினர்.

### ஏனைய நிகழ்ச்சித்திட்டம்

பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரதான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, கீழ்வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் இந்த வருடத்தின் பிற்பகுதியில் சபை நடாத்தியது.

- ஹம்பாந்தோட்டை வர்த்தக சம்மேளத்துடன் இணைந்து ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள வியாபார சமூகத்திற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தப்பட்டது.



ஹம்பாந்தோட்டை சம்மேளன நிகழ்ச்சி

- கொழும்பு 08 இல் அமைந்துள்ள சுசமயவர்தன மகா வித்தியாலயத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- பென்தோட்டை பிரதேச சபை விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக அந்த பிரதேசத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்கள் என்பவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

#### மின்னிலத்திரனியல் ஊடாகங்கள் ஊடான விழிப்புணர்வு

பொது மக்கள் விழிப்புணர்வுக்கு வினைத்திறன் உள்ள ஊடகமாக மின்னிலத்திரனியலை சபை அடையாளம் கண்டுகொண்டது. மீளாய்வுக்குட்பட்ட இந்த வருடத்தில் மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டத்தில் சபை அலுவலர்கள் பங்குபற்றினர்.

- இலங்கை ரூபவாகினிக் கூட்டுத் தாபனத்தினால் ஒளிபரப்பப்பட்ட 'வியாபார உலகம்' தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சியில் சபை பங்குபற்றியது.
- இலங்கை ரூபவாகினிக் கூட்டுத் தாபனத்தினால் ஒளிபரப்பப்பட்ட 'நுக செவன்' நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சி.
- இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒளிபரப்பு செய்யப்பட்ட வானொலி நேரடி கலந்துரையாடல் 'சுபாஹரதி' நிகழ்ச்சி.

அத்துடன், ஜுலை மற்றும் நவம்பர் மாதங்களில் 'சிட்டி எப் எம்' ஒரு மணித்தியாள செய்தித் தலைப்பின் பின்னர் ஒரு நாளைக்கு பத்துத் தடவை தற்போதைய மற்றும் உத்தேச காப்பீட்டாளர்களை பாதுகாக்கும் குறுஞ்செய்திகள் ஒளிபரப்பு செய்யப்பட்டது. சபைக்கு கிடைக்கப்பெற்ற விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை பார்க்கையில் பொது மக்களிடையே அதிகரித்த விழிப்புணர்வை அறிந்துகொள்ள முடிந்தது.



வானொலி / தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

### அச்சக ஊடாகத்தின் ஊடான விழிப்புணர்வு

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் சபை கீழ்வரும் பத்திரிகை செய்திகள் மற்றும் பத்திரிகை அறிவித்தல் என்பற்றை பிரசுரித்தது.

### பத்திரிகை வெளியீடுகள்

- 2015 ஜுலை மாதத்தில், '2014 ஆம் ஆண்டின் போது காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றல்கள்' என்ற பத்திரிகை வெளியீடு வெளியிடப்பட்டது.
- 2015 ஒக்டோபர் மாதத்தில் 2015 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டின் போது 'காப்புறுதி தொழிலின் செயலாற்றல்' என்ற பத்திரிகை வெளியீடு வெளியிடப்பட்டது.

### பத்திரிகை அறிவித்தல்கள்

- 2015 ஏப்பிரல் மாதத்தில் 'விழிப்பாக இரு' எனும் தலைப்பில் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பட்டியலை உள்ளடக்கிய பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டது.
- 'ஆயுள் காப்புறுதி' யை முனைவுறுத்தும் அறிவித்தல் : ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம், காப்புறுதிப் பூட்கையைப் பெற்றுக்கொள்ளும் பொழுது எவற்றைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும், காப்புறுதி பூட்கையாளாகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் - 2015 ஏப்பிரல் மாதம் வெளியிடப்பட்டது.

### 10வது காப்புறுதி ஒழுங்குபடுத்துனர்களுக்கான ஆசிய மாநாட்டுக்கான ஊடக அனவல

சபையின் தலைமையில் மேற்குறித் கூட்டம் கொழும்பில் ஜுலை மாதம் ஆசிய காப்புறுதி ஒழுங்குபடுத்துனர்களுக்காக நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வுக்காக கீழ்வரும் அச்சக ஊடகங்கள் அச்சிடப்பட்டது.

- AFIR பற்றிய அறிமுக கட்டுரை
- இந்த நிகழ்வு தொடர்பான பத்திரிகை செய்தி வெளியீடு
- பிரதான விருந்தினர்கள் பங்குபற்றுனர்களின் செய்திகளைக் கொண்ட நிகழ்வு தொடர்பான முழுப் பக்க துணை பத்திரிகைத்தாள்
- நிகழ்வு தொடர்பான பத்திரிகைக் கட்டுரைகள்

### வெளியீடுகள்

கீழ்வரும் பிரதானமாக விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் போது, வெளியீடுகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

- மூன்று மொழிகளிலும் 'காப்புறுதி கொள்கையை கொள்வனவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்' மீதான போஸ்டர்
- மோட்டார் காப்புறுதி தொடர்பான துண்டுப் பிரசுரம்
- 'காப்புறுதி கொள்கையை கொள்வனவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்' மீதான துண்டுப் பிரசுரம்
- 'காப்புறுதி முன்மொழிவுப் படிவத்தை பூரணப்படுத்துகையில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்' மீதான துண்டுப் பிரசுரம்
- 'இலங்கை காப்புறுதிச் சபை' துண்டுப் பிரசுரம்





வெளியீடுகள்/அறிவிப்புகள்

மேற்குறிப்பிட்ட வெளியீடுகள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் பார்ப்பதற்கும் மற்றும் பதிவிறக்கம் செய்வதற்குமாக சபையின் உத்தியோகபூர்வ வெப் தளத்தில் www.ibsl.gov.lk பதிவேற்றப்பட்டுள்ளது.

### ஏனைய நடவடிக்கைகள்

### உற்பத்தி இடைவெளி பகுப்பாய்வு

2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறையை ஒழுங்கமைத்தல் திருத்தச் சட்டத்தின் 37ம் பிரிவு நியதிகளுக்கு அமைவாக, காப்புறுதிக் கொள்கையாளர்களின் விருப்பத்தை பூர்த்திசெய்யும் வகையில் பாதுகாப்பு போதுமையாக உள்ளதாக என பரீட்சிக்கும் நோக்கத்துடன் அனைத்து காப்புறுதிப் பண்டங்களும் சபையில் கோவைப்படுத்தப்பட்டுள்ளது. காப்புறுதிப் பூட்கையாளர்களின் தேவைக்கமைவாக அல்லது விசேட தேவைக்கமைவாக காப்புறுதிப் பண்டங்கள் அபிவிருத்ததி செய்யப்படல் வேண்டும் என காப்புறுதி சந்தைப்படுத்தல் எண்ணக்கரு சிபாரிசு செய்கின்றது. காப்புறுதிப் பூட்கையாளர்களின் விருப்பத்தை பூர்த்திசெய்யும் வகையில் அந்தப் பண்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் நன்மைக் கட்டமைப்பு என்பவற்றுக்கு இடையிலான இடைவெளியை அடையாளம் காண்பதற்காக, கோவைப்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட பண்டங்களில் ஒரு பண்ட வகை வருடாந்தம் கற்கை செய்யப்படுகின்றது. கைத்தொழிற்துறையின் ஆலோசனையுடன் கற்கையில் பெறப்பட்ட கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் விதப்புரைகள் அமுல்செய்யப்படும்.

### பொதுமக்கள் விசாரணைகளுக்கு பதிலளித்தல்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், காப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து விசாரணைகள் செய்யும் பொது மக்கள், காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் பங்குரிமையாளர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட விசாரணைகளையும். முறைப்பாடுகளையும் சபை கவனத்தில் கொண்டது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## நிர்வாக மீளாய்வு

### பணிக் குழுவினர்

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன். இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்றது.

தேவைப்படும் தொழிற் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை சபை எடுத்தது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவிகளுக்கு ஒரு பணிப்பாளர் மற்றும் இரண்டு நிறைவேற்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாட் தொகுதியினரின் வலு 41 ஆகும்.

கீழே உள்ள அட்டவணையில் பணியாட் தொகுதியினரின் கல்வி மற்றும் தொழில் சார்ந்த தகைமைகள் காட்டப்பட்டுள்ளது

| ஊழியர்களின் எண்ணிக்கை | கல்வி சார்ந்த:தொழில் சார்ந்த தகைமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின்படிப்பு பட்டங்களும் முதலாவது பட்டமும், மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும | பட்டப்பின் படிப்பு பட்டங்களும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப் பின்படிப்பு மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டமும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும | முதலாவது பட்டம் | தொழில் சார்ந்த தகைமைகள் |
| 41 | 05 | 02 | 02 | 10 | 08 | 03 |

### பயிற்சி

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்கள் அறிவையும் தொழில்சார்ந்த திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது சபையின் பூட்கையாகும். இவ்வருடக் காலப்பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகைப்படுத்தல் | 2014 (ரூ.) | 2015 (ரூ.) |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 2,204,709/- | 1,752,935/- |
| மாநாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி | 7,701,049/- | 8,144,101/- |

### பணியாட் தொகுதியினரின் நலன்கள்

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி பூட்கை, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்களாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பணியாட் தொகுதியினருடனும், அவர்களின் குடும்பத்தினருடனும் நல்லுறவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் சபை வழங்குகின்றது.

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

## நிதியியல் மீளாய்வு

### காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்

காப்புறுதி தொழில் சட்டத்தின் பிரகாரம், காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்படுகின்ற, அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்கும் உடனடியாகத் தேவைப்படாத எந்தவொரு பணமும் விவேகமான முறையில் சிறந்த வருவாயை ஈட்டுவதற்காக சபையினால் முதலீடு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் இந்த ஆண்டில் அத்தகைய நிதிகளை உரியவாறு சபை முதலீடு செய்ததுடன், பின்வரும் வரைபு 01 செஸ் சேகரிப்பு மற்றும் ஈட்டப்பட்ட வருமானம் ஆகியவற்றை விபரமாக காட்டுகின்றது

*வரைபடம் 01*

**2011-2015 வரையிலான காலப்பகுதியில் பெற்றப்பட்ட செஸ் வருமானமும் முதலீட்டு வருமானமும்**




| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (ரூ.மி) | 217 | 237 | 246 | 274 | 322 |
| முதலீட்டு வருமானம் (ரூ.மி) | 80 | 136 | 236 | 158 | 145 |

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செஸ் வருமானம் வளர்ச்சி அடைந்ததையும் வட்டி வீதங்களின் வீழ்ச்சி காரணத்தினால் முதலீட்டு வருமானம் 2014ம் இருந்து 2015 வரை சற்று வீழ்ச்சி அடைந்ததை வரைபு 1 காட்டுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களில் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி அதிகரித்திருப்பதை வரைபு 2 காட்டுகின்றது.

*வரைபு 2*

**2011 - 2015 காலப்பகுதிக்கான காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி**




| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் மதிப்பு (ரூ.மி) | 1,276 | 1,622 | 1,778 | 2,183 | 2,643 |

2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு, கீழே தரப்பட்டுள்ளது.

*வரைபு 3*

**2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது**




### சபையின் வருமானம்

சபையின் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் பின்வரும் வழிவகைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- காப்புறுதி வழங்குனர் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளிடம் இருந்து கிடைக்கும் பதிவுக் கட்டணம்.
- காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படும் வருடாந்தக் கட்டணம்.
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவுகளை புதுப்பிக்கும் வருடாந்த பதிவு கட்டணம்.
- மிகை நிதியங்களை முதலீடு செய்வதன் மூலமான வட்டி வருமானம்.

2011 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் பிரிவுகளை வரைபு 4 காட்டுகின்றது.

*வரைபு 4*

**2011 - 2015 வரையிலான காலப் பகுதிக்கான சபையின் வருமானம்**




| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| ஆண்டிற்கான கட்டணம் (ரூ.மில்) | 35 | 61 | 70 | 73 | 104 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (ரூ.மில்) | 3 | 5 | 4 | 4 | 9 |
| ஏனைய வருமானம் (ரூ.மில்) | 1 | 2 | 1 | 2 | 2 |
| கொடைகளின் அங்கீகாரம் (ரூ.மில்.) | 6 | 7 | 5 | 4 | 5 |
| மொத்த வருமானம் (ரூ.மில்) | 44 | 75 | 80 | 83 | 119 |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு தொடர்ச்சி

அறவிட வேண்டிய வருடாந்த கட்டண வீதம் 0.75% இருந்து 0.1% வீதமாக அதிகரிக்கப்பட்டதனால், 2015ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருடாந்த கட்டணத்தில் அதிகரிப்பு காணப்பட்டது..

**சபையின் செலவினம்**

2011 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்தச் செலவானது அதிகரித்துள்ளது. வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான பற்றாக் குறைக்கு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து நிதி அளிக்கப்படுகின்றது.

2011 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்தச் செலவை வரைபு 5 காட்டுகின்றது.

*வரைபு 05*

**2011 - 2015 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்த செலவினம்**




| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவினங்கள் (ரூ.மி) | 74 | 94 | 105 | 107 | 123 |



# நிதியியல் தகவல்கள்


| | |
|---|---|
| நிதி நிலைமையின் கூற்று | 76 |
| முழுமையான வருமானக் கூற்று | 77 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 78 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று | 79 |
| கணக்கீட்டு பூட்கைகள் | 80 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 82 |

# நிதி நிலமையின் கூற்று

31 டிசம்பர் 2015ம் திகதியில் உள்ளவாறான

| | குறிப்புகள் | 31.12.15 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.14 ஆம் திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1 | 11,274,097 | 13,501,813 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - வாடகையும் நடைமுறை வைப்புகளும் | 2 | 1,091,418,880 | 14,759,880 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்கள் | 3 | 445,902 | 274,845 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகளும் மற்றும் ஏனையவைகளும் | 2 & 22 | 1,551,778,353 | 2,168,146,893 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 & 22 | 21,841,991 | 26,625,594 |
| அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | | 1,000,000 | - |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 5 | 575,848 | 38,313 |
| **மொத்த சொத்துக்கள்** | | 2,678,335,071 | 2,223,347,338 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகள்** | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் | 6 | 2,643,197,233 | 2,182,906,773 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | | 7,389,652 | 7,389,652 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| மாணியம் | 7 | 4,965,789 | 6,480,560 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | 8 & 22 | 8,035,447 | 5,757,098 |
| | | 13,001,236 | 12,237,657 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| முற்பணப் பெறுகை | | 7,526,285 | 11,726,535 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 9 | 7,220,665 | 9,086,721 |
| | | 14,746,950 | 20,813,256 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 2,678,335,071 | 2,223,347,338 |

இந்த நிதியியல் கூற்றுகளின் தயாரிப்பிற்கும் வெளியிடலுக்கும் இலங்கை காப்புறுதி சபையின் அங்கத்தவர்கள் பொறுப்பேற்கின்றனர்.

மேலேயுள்ள ஐந்தொகை பக்கம் 80 இலிருந்து 88 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகள் மற்றும் குறிப்புகளுக்கு இயைந்ததாக வாசிக்கப்பட வேண்டும்



**இந்ராணி சுகததாச**
தலைவி



**புஸ்பா வெல்லப்பிலி**
அங்கத்தவர்

கொழும்பு, இலங்கை
26 பெப்ரவரி 2015

# முழுமையான வருமானக் கூற்று

31 டிசம்பர் 2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 31.12.15 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா | 31.12.14 முடிவடைந்த ஆண்டிற்கானது மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருவாய் | 10 & 16 | 113,149,245 | 77,586,076 |
| அங்கீகரிக்கப்பட்ட மாணியங்கள் | 7 & 22 | 4,527,482 | 4,398,353 |
| வட்டி வருமானம் | | 1,559,380 | 1,359,409 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியில் இருந்து மாற்றப்பட்டவை | 6 & 22 | 3,513,004 | 24,200,995 |
| ஏனைய வருமானம் | 11 | 225,376 | 151,722 |
| **மொத்த வருமானம்** | | 122,974,487 | 107,696,556 |
| **செலவினம்** | | | |
| பணியாளர் செலவு | 12 & 22 | (70,205,520) | (59,306,548) |
| தொழில்சார் கட்டணங்கள் | 13 | (2,388,225) | (2,181,575) |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | 14 | (49,986,744) | (45,858,876) |
| நிதியும் ஏனையவையும் | 15 | (206,872) | (186,428) |
| **மொத்த செலவினம்** | | (122,787,361) | (107,533,427) |
| வரிக்கு முன்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | 187,126 | 163,129 |
| வரிவிதிப்பு | | (187,126) | (163,129) |
| வரிக்கு பின்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | - | - |
| **ஆண்டுக்கான தேறிய மிகை** | | - | - |

80 இலிருந்து 88 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன

# காசுப்பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 31.12.15 திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.14 திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| காலத்திற்கான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | - | - |
| பெறுமான தேய்விற்கான ஏற்பாடு | | 5,214,297 | 4,696,716 |
| ஓய்வூதிய நன்மைக்கான ஏற்பாடு | | 2,278,349 | 2,564,617 |
| நீக்கப்படுவதன் மீதான இலாபம் / நட்டம் | | (15,028) | 73,035 |
| ஓய்வூதிய நன்மை கொடுப்பனவு செய்யப்பட்டது | | - | (152,839) |
| மீள்மதிப்பீட்டுக்கான ஆகு செலவு | | - | (6,000) |
| மானியங்களின் அங்கீகரிப்பு | | (4,527,482) | (4,398,353) |
| வருமான வரி | | 187,126 | 163,129 |
| வட்டி வருமானம் | | (1,559,380) | (1,359,409) |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | 1,577,882 | 1,580,897 |
| செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றம | | | |
| பொருட் பதிவேடுகளில் (அதிகரிப்பு) / குறைப்பு) | | (171,058) | 138,207 |
| கிடைக்க வேண்டியவற்றின் (அதிகரிப்பு) / குறைப்பு) | | 4,760,311 | (11,520,120) |
| முற்பண பெறுகைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு) | | (4,200,249) | 6,864,118 |
| அட்டுறுக்கள் மற்றும் கடன்பட்டோரின் அதிகரிப்பு / (குறைப்பு) | | (1,866,056) | 1,087,707 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | | (1,477,052) | (3,430,088) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | | 100,830 | (1,849,192) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | | (1,000,000) | - |
| வட்டி வருமானம் | | 1,395,547 | 1,226,203 |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் விற்பனையிலிருந்தான வருமானங்கள் | | 41,158 | 3,000 |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கொள்வனவு | | (3,012,711) | (937,098) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (2,576,006) | 292,106 |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதன மாற்றம் | | 3,012,711 | 937,098 |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | 3,012,711 | 937,098 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | | 537,535 | (619,988) |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவைகளும் | | 38,313 | 658,301 |
| வருட இறுதியில் காசும் சாசுக்கு சமனானவைகளும் | | 575,848 | 38,313 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 5 | 575,848 | 38,313 |

80 இலிருந்து 88 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப் பாய்ச்சல் கூற்று

31 டிசம்பர் 2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்புகள் | 31.12.15 திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.14 திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் தேறிய அதிகரிப்பு | | 460,290,461 | 405,206,443 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | 460,290,461 | 405,206,443 |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்களின் மீதான வட்டி பெறுகைகளின் (அதிகரிப்பு)/குறைவுகள் | | 22,849,356 | 44,652,630 |
| செஸ் பெறுகைகளின் (அதிகரிப்பு) / குறைவு | | (10,300,000) | (15,500,000) |
| வாடகை வைப்புகளின் (அதிகரிப்பு) / குறைவு | | - | (3,671,220) |
| நிதிய முகாமைத்தவ கணக்கு மீதியின் அதிகரிப்பு / (குறைவு) | | 5,734,821 | (4,210,677) |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தில் இலிருந்து மாற்றப்படக்கூடிய தொகையின் அதிகரிப்பு / (குறைவு) | | (8,944,939) | 11,373,276 |
| | | 9,339,238 | 32,644,009 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | 469,629,699 | 437,850,451 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | (1,677,958,452) | (292,650,451) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | 1,208,400,000 | (145,200,000) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | (469,558,452) | (437,850,451) |
| காசும், காசுக்கு சமனானவையில் இருந்தும் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | | 71,247 | - |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும் | | 1,000,000 | 1,000,000 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | 1,071,247 | 1,000,000 |
| வங்கியிலுள்ள காசு | 2 | 1,071,247 | 1,000,000 |

80 இலிருந்து 88 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு பூட்கைகளும் குறிப்புகளும் நிதியில் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# கணக்கீட்டு பூட்கைகள்

## 1. முக்கிய கணக்கீட்டு பூட்கைகள்

### 1.1 தயாரிப்பிற்கான அடிப்படை

சபையின் நிதித்துறை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு வரலாற்று அடிப்படையில் கிட்டிய ரூபாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கணக்கீட்டு பூட்கைகள் தேவைப்படும் இடங்களில் தொடர்ந்துவரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.2 இணங்குவிற்பிற்கான அறிக்கை

சபையின் நிதித்துறை கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு ஏற்றவிதத்தில் தயாரிக்கப் பட்டுள்ளதோடு, அத்தகைய சொல்லப்பட்ட தரப்படுத்தல்களுக்கு இணங்கியும் செயற்படுகின்றன.

### 1.3 அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான சகல நிகழ்வுகளும் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டு பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல் என்பனவற்றின் தேவையின் அடிப்படையில் நிதித்துறை அறிக்கைகளில் அவசியமானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.4 ஒப்பீட்டு இலக்கங்கள்

ஒப்பீட்டு இலக்கங்கள் அனைத்தும் நடப்பு நிதி வருட வெளிப்படுத்தலின் மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

### 1.5 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வருமான வரிக்கான ஏற்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பங்கிலாபம் அல்லது வட்டியிலிருந்து கிடைக்கும் இலாபத்திலிருந்தான வருமானம் தவிர்ந்த ஏனைய வருமானங்களுக்கு வருமான வரியிலிருந்து சபைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 1.6 வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல்

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால், அவை கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட நேரத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

## 2. ஆதனங்கள் மற்றும் மதிப்பீட்டிற்கான அடிப்படை

### 2.1 ஆதனம், பொறிகள், உபகரணங்கள்

*உரித்துடைய ஆதனம், பொறிகள் உபகரணங்கள்*

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் திரட்டிய பெறுமதி தேய்வு கழிக்கப்பட்டு கிரயத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்விலை என்பது அவற்றை வாங்குவதற்கான பணத்துடன் திட்டமிடப்பட்ட உபயோகத்தில் கொண்டுவருவதில் உள்ளடக்கியதாகும்.

2014ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் தொடர்பாக மீள்மதிப்பீடு தொழில்சார் தகைமை பெற்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. மீள் மதிப்பீட்டின் மூலம் அதிகரித்த மோட்டர் வாகனங்களின் பெறுமதி ஒதுக்கில் சேர்க்கப்பட்டது. அடுத்த தொழிற்படும் வருடத்தினுள் அனைத்து நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டையும் பூர்த்திசெய்வதற்கு சபை எதிர்பார்க்கின்றது.

#### பெறுமானத் தேய்வு

கீழ்க்காணும் விகிதத்தில் நேர் கோட்டு அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது.

| | % வருட விகிதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடங்கள், பொருத்துகைகள் | 12.5 |
| அலுவலக மற்றும் ஈடிபி (EDP) உபகரணங்கள் | 25 |
| பயிற்சி உபகரணங்கள் | 25 |

சொத்து கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகிறது. அதேவேளை, அகற்றும் திகதி வரை பெறுமானத் தேய்வு கணக்கிடப்படும். கொண்டு செல்லப்படும் தொகையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அகற்றப்படுவதிலிருந்தான வருமானங்கள் மற்றும் நட்டங்கள் தீர்மானிக்கப்படும்.

### 2.2 முதலீடுகள்

அரசாங்க பிணையங்களில் மேற்கொள்ளப் பட்ட முதலீடுகள் குறைந்த ஆகுசெலவாக அல்லது முகப் பெறுமதியில் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், வருட இறுதியில் வட்டி அட்டுறு செய்யப்படும்.

### 2.3 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் அனைத்தும் குறைந்த மட்டக் கொள்விலை அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதி என்பதில் காட்டப்பட்டுள்ளன. முதலில் பெறப்பட்டு முதலில் அகற்றப்பட்டவை அடிப்படையில் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் கணக்கிடப்படுகிறது.

### 2.4 பெறுகைகள்

பெறுகைகள் அனைத்தும் மதிப்பிடப் பட்ட உத்தேச பெறுமதியில் காண்பிக்கப் பட்டுள்ளன

### 2.5 காசும் காசுக்குச் சமனானவையும்

காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற் கான காசும் காசுக்குச் சமனானவையும் என்பது, வங்கியிலுள்ள பணம் மற்றும் கையிருப்பிலுள்ள பணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

## 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 3.1 ஓய்வூதிய நன்மைகள்

#### 3.1.1 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய ஊழியர் ஒருவரின் தொடர்ச்சியான ஐந்து வருடகால சேவை பூர்த்தியடைந்ததும், பணிக்கொடைக்கான பொறுப்பு ஆரம்பமாகும். ஒரு வருட சேவையைப் பூர்த்திசெய்யத அனைத்து ஊழியர்களுகடகும் நிதி ஆண்டின் இறுதியில் அவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளத்தின் அடிப்படையில் அவர்களின் சம்பளத்தின் அரைப் பங்குக்கு சமனான தொகைக்கு ஏற்ப பொறுப்பு ஏற்பாடு உருவாக்கப்படும்.

# கணக்கீட்டு பூட்கைகள் தொடர்ச்சி

### 3.1.2 அறுதியிடப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

சகல நிரந்தர ஊழியர்களும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்க உரிமையுடையவர்களாவார். ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பை சபை வழங்குகிறது.

### 3.2 பொறுப்புகள்

நிதிநிலமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் எனக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகள், கோரிக்கையின் பேரில் செலுத்தப்பட வேண்டியவையும் அல்லது அறிக்கையிடும் காலத்திலிருந்து இருந்து ஒரு வருட காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவையுமாகும். நடைமுறையல்லாத பொறுப்புகளாவன, அறிக்கையிடும் காலத்திலிருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் கொடுப்பனவுகளுக்குரிய நிலுவைத் தொகைகளாகும்.

நிதியில் அறிக்கையைத் தயாரிப்பதில் சகல தெரிந்த பொறுப்புகளும் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 மானியங்கள்

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்களும் சிறு காப்புறுதித் திட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களும் மானியங்கள் எனக் கருதப்பட்ட சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள உபயோக காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

## 4. வருமானமும் செலவினமும்

### 4.1 வருமான அங்கீகாரம்

வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

### 4.2 செலவினங்களை இனங்காணல்

செலவினத்திலும் பார்க்கக் கூடிய அளவிலான வருமானத்தைத் தீர்மானித்து சபையை நடத்துவதில் ஏற்பட்ட சகல செலவினங்களும் வருவாய்க்கு விதிக்கப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன.

### 4.3 காசுப்பாய்ச்சல் அறிக்கை

காசுப்பாய்ச்சல் அறிக்கை மறைமுக வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

| | மோட்டார் வாகனங்கள் ரூபா | தளபாடங்கள், இணைப்புகள் மற்றும் பொருத்துக்கள் ரூபா | அலுவலக உபகரணங்கள் (ஈடிபியும் ஏனையவையும்) ரூபா | பயிற்சி உபகரணங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **ஆகுசெலவு** | | | | | |
| 2015 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி | 10,000,000 | 12,489,186 | 21,386,791 | 141,450 | 44,017,427 |
| சேர்ப்புகள் | - | 1,274,556 | 1,738,155 | - | 3,012,711 |
| நீக்கல்கள் | - | (102,552) | (20,758) | - | (123,310) |
| 2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 10,000,000 | 13,661,190 | 23,104,187 | 141,450 | 46,906,828 |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | |
| 2015 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி | 893,773 | 9,991,208 | 19,489,184 | 141,450 | 30,515,615 |
| ஆண்டுக்கான மாற்றம் | 2,500,000 | 1,439,010 | 1,275,287 | - | 5,214,297 |
| நீக்கல்கள் | - | (96,042) | (1,139) | - | (97,181) |
| 2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **3,393,773** | **11,334,176** | **20,763,332** | **141,450** | **35,632,731** |
| **2015 டிசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி** | **6,606,227** | **2,327,013** | **2,340,856** | **-** | **11,274,097** |
| 2014 டிசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி | 9,106,227 | 2,497,978 | 1,897,609 | - | 13,501,813 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | | குறிப்புகள் | 31.12.15 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.14 ஆம் திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|---|
| 2 | **காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகளும் ஏனையவையும் நடைமுறையல்லா சொத்துகள்** | | | |
| | வாடகையும் மின்சார வைப்புகளும் | | 14,759,880 | 14,759,880 |
| | திறைசேரிப் பிணைகள் | | 1,076,659,000 | - |
| | | | 1,091,418,880 | 14,759,880 |
| | **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| | அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் | 22 | 1,411,999,903 | 810,700,451 |
| | நிலையான வைப்புகள் மீதான முதலீடு | 22 | - | 1,208,400,000 |
| | அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளின் மீது வட்டி பெறுவனவுகள் | 22 | 59,114,564 | 81,963,920 |
| | பெறத்தக்க செஸ் வரி | 16 | 86,800,000 | 76,500,000 |
| | நிதிய முகாமைத்துவ கணக்கு மீதி | | 952,525 | 6,687,347 |
| | வங்கியிலுள்ள நிலுவை | | 1,071,247 | 1,000,000 |
| | | | 1,559,938,239 | 2,185,251,718 |
| | கழி: | | | |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | 22 | 8,159,886 | 17,104,826 |
| | | | 1,551,778,353 | 2,168,146,893 |
| | மொத்த சொத்துக்கள் | | 2,643,197,233 | 2,182,906,773 |
| 3 | **பொருட்பதிவேடுகள்** | | | |
| | அச்சிடுதல், காகிதாதிகள் மற்றும் கணனிப் பாகங்கள் | | 358,832 | 261,005 |
| | முத்திரைகள் | | 87,070 | 13,840 |
| | | | 445,902 | 274,845 |
| 4 | **ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| | வைப்புகள் | | 190,744 | 185,481 |
| | ஏனைய பெறத்தக்கவைகள் | | 309,684 | 274,334 |
| | பிடித்து வைத்த வரி அறவீடுகள் | | 1,208,602 | 1,082,063 |
| | பெறுமதி கூட்டப்பட்ட வரி கட்டுப்பாடு | | 815,602 | 1,239,629 |
| | வட்டி பெறுவனவுகள் - அரசாங்க பிணையங்கள் | | 4,228 | - |
| | பணியாளர் கடன்கள் * | | 4,948,645 | 4,911,857 |
| | நிலையான சொத்துகள் கொள்வனவிற்கான முற்பணம் | | 1,554,512 | 1,441,005 |
| | நிதிய முகாமைத்துவ கணக்கு மீதி | | 4,650,087 | 386,400 |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | 22 | 8,159,886 | 17,104,826 |
| | | | 21,841,991 | 26,625,594 |
| | *பணியாளருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| | ஜனவரி 1 ஆம் திகதிஅன்றுள்ளவாறு மீதி | | 4,911,857 | 3,682,040 |
| | ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | | 3,232,000 | 4,151,000 |
| | | | 8,143,857 | 7,833,040 |
| | ஆண்டுகாலப்பகுதியில் மீள் கொடுப்பனவு | | (3,195,212) | (2,921,183) |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு மீதி | | 4,948,645 | 4,911,857 |
| 5 | **காசும் காசுக்கு சமனானவைகளும்** | | | |
| | வங்கிகளிலுள்ள காசு | | | |
| | இலங்கை வங்கி | | 575,848 | 38,313 |
| | | | 575,848 | 38,313 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | | குறிப்புகள் | 31.12.15 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா | 31.12.14 ஆம் திகதியில் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|---|
| 6 | **காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்** | | | |
| | ஆரம்ப நிலுவை | 22 | 2,182,906,773 | 1,776,115,148 |
| | வருடத்தின் போது கிடைத்த செஸ் | 16 | 321,747,380 | 273,912,607 |
| | திறைசேரி உண்டியல் முதலீடு மீதான வட்டி | | 70,257,878 | 15,155,232 |
| | ரெப்போ மற்றும் அழைப்பு கணக்கு மீதான வட்டி | | 34,917,246 | 38,138,752 |
| | திறைசேரி பிணை முதலீடுகள் மீதான வட்டி | | 7,036,326 | - |
| | நிலையான வைப்புகள் மீதான வட்டி | | 32,827,399 | 104,682,472 |
| | நிதிய முகாமைத்தவ கணக்கின் மீதான வட்டி | | 49,800 | 57,070 |
| | | | 2,649,742,802 | 2,208,061,281 |
| | கழிக்க: | | | |
| | செயற்பாட்டு செலவுகளுக்கான மாற்றல்கள் | 22 | 3,513,004 | 24,200,995 |
| | மூலதன செலவுகளுக்கான மாற்றல்கள் | | 3,012,711 | 937,098 |
| | மொத்த மாற்றல்கள - காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் | | 6,525,714 | 25,138,093 |
| | வங்கி கட்டணங்கள் | | 19,855 | 16,415 |
| | | | 6,545,569 | 25,154,508 |
| | இறுதி மீதி | | 2,643,197,233 | 2,182,906,773 |
| 7 | **மானியங்கள்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | 22 | 6,480,560 | 9,941,815 |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மூலதனச் செலவுகள் | | 3,012,711 | 937,098 |
| | கழி: வருடத்தின்போது கணக்கிணக்கம் செய்யப்பட்டவை | | (4,527,482) | (4,398,353) |
| | வருட இறுதியில் நிலுவை | | 4,965,789 | 6,480,560 |
| | **குறிப்பு - மானியங்களை இனங்காணல்** | | | |
| | பின்வரும் விகிதங்களில் வருமான செயலாற்றுகைக் கூற்றில் மாணியங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. | | | |
| | (அதாவது உரிய சொத்தின் பயன்நிறைந்த காலத்தின் மேலாக எனும் முறையியில் அடிப்படையில்) | | | |
| | மோட்டார் வாகனம் | | 25% | |
| | அலுவலக உபகரணம் - ஏனையவையும் ஈடிபியும் | | 25% | |
| | தளபாடம், பொருத்துகள் மற்றும் இணைப்புகள் | | 12.5% | |
| | பயிற்சி உபகரணங்கள் | | 25% | |
| 8 | **ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | | 5,757,098 | 4,930,502 |
| | ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட ஏற்பாடு | | 2,278,349 | 979,434 |
| | (-)ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவு | | - | (152,839) |
| | வருட இறுதியில் நிலுவை | | 8,035,447 | 5,757,098 |
| 9 | **ஏனைய நடப்பு பொறுப்புகள்** | | | |
| | திரட்டிய செலவினங்கள் | | 6,169,951 | 8,224,664 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.சே.நி. | | 660,714 | 568,981 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.ந.நி. | | 99,108 | 85,348 |
| | கொடுக்க வேண்டிய உ.பொ.செ.வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரி | | 207,889 | 194,954 |
| | ஏனையவை | | 83,003 | 12,775 |
| | | | 7,220,665 | 9,086,721 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | குறிப்புகள் | முடிவடைந்த ஆண்டு 31.12.15 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.14 மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| **10 வருமானம்** | | | |
| காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து வருடாந்த கட்டணம் | | 103,811,505 | 73,440,757 |
| பதிவு செய்தல் மற்றும் பதிவு புதுப்பித்தல் கட்டணங்கள் | | 9,337,740 | 4,145,319 |
| | | 113,149,245 | 77,586,076 |
| **11 ஏனைய வருமானம்** | | | |
| வாகன கடன் மீதான வட்டி | | 25,583 | 28,862 |
| இடர் கடன் மீதான வட்டி | | 142,229 | 103,325 |
| அகற்றப்படல் மீதான இலாபம் | | 15,028 | - |
| நானாவித வருமானம | | 42,537 | 19,535 |
| | | 225,376 | 151,722 |
| **12 ஊழியச் செலவுகள்** | | | |
| ஊழியர் சம்பளங்கள் | | 38,492,392 | 31,045,384 |
| ஊழியர் சேமலாப நிதியம் 12% | | 4,667,638 | 3,833,446 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் 3% | | 1,166,910 | 958,362 |
| தலைவியின் செலவினம் - படிகள் | | 1,004,589 | 900,000 |
| தலைவியின் செலவினம் - எரிபொருள் | | 239,090 | 347,220 |
| சபை அங்கத்தவர்கள் - அமர்வதற்கான கொடுப்பனவு | | 457,500 | 413,500 |
| இடைக்கால கொடுப்பனவுகள் | | 91,315 | - |
| மேலதிக வேலை நேரம் | | 147,337 | 123,941 |
| ஊழியர் மருத்துவ செலவினங்கள் | | 1,644,315 | 1,545,903 |
| ஊழியர் மருத்துவ காப்புறுதி | | 839,140 | 655,636 |
| தீ மற்றும் தனிப்பட்ட காப்புறுதி | | 483,391 | 450,411 |
| ஊழியர் நலன்புரிச் சேவை | | 1,513,780 | 1,345,887 |
| ஊழியர் பயிற்சிகளும் சந்தாவும் | | 1,752,935 | 2,204,709 |
| சபை அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர் - வெளிநாட்டு பயணங்கள் | | 8,144,101 | 7,701,049 |
| செயற்பாட்டு அடிப்படையிலான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | | 2,047,954 | 1,754,948 |
| விளம்பரங்கள் - ஆட்சேர்ப்புகள் | | 223,620 | 324,945 |
| பணிப்பாளர்களின் குடியிருப்பு தொலைபேசிகள் | | 220,950 | 166,410 |
| விடுமுறை காசாக்குதல் | | 637,964 | 764,260 |
| பணிப்பாளரின் வாகன படி | | 3,291,096 | 2,925,000 |
| பணிப்பாளரின் எரிபொருள் படி | | 861,154 | 866,101 |
| பணியாட் தொகுதியினரின் பணிக்கொடை கொடுப்பனவு | 22 | 2,278,349 | 979,434 |
| | | 70,205,520 | 59,306,548 |
| **13 தொழில்சார் விதிப்பனவுகள்** | | | |
| உசாவுகை கட்டணங்கள் | | 2,388,225 | 2,181,575 |
| | | 2,388,225 | 2,181,575 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| | குறிப்புகள் | முடிவடைந்த ஆண்டு 31.12.15 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.14 மீள்குறிப்பிடப்பட்ட ரூபா |
|---|---|---|---|
| **14 செயற்பாட்டு செலவினங்கள்** | | | |
| வாடகை | | 27,740,409 | 23,976,701 |
| வாகன தரிப்பிட கட்டணம் | | 345,621 | 332,185 |
| தொலைபேசி செலவினங்களும் இணையதளமும் | | 1,567,818 | 1,633,011 |
| மின்சாரம் | | 1,327,103 | 1,356,878 |
| அலுவலக பராமரிப்பு | | 402,472 | 459,213 |
| அச்சிடலும் காகிதாதிகளும் | | 2,990,021 | 2,871,798 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு | | 3,769,091 | 1,836,159 |
| பொழுது போக்கு | | 91,770 | 248,237 |
| பயணங்கள் - உள்ளூர் | | 102,658 | 81,919 |
| ஈடிபி மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | | 1,030,533 | 1,088,963 |
| ஐஏஐஎஸ் (IAIS) இல் சர்வதேச உறுப்புரிமை | | 2,541,784 | 2,487,748 |
| ஐஐஏபி (IIAP) இல் சர்வதேச உறுப்புரிமை | | - | 33,125 |
| விளம்பரங்கள் - ஏனையவை | | - | 109,200 |
| கூட்டங்களுக்கான செலவினங்கள் | | 1,812,680 | 953,295 |
| பத்திரிகைகள் மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா கட்டணம் | | 122,768 | 139,820 |
| தபால் மற்றும் தபால் கொண்டு செல்லும் கட்டணங்கள் | | 187,740 | 1,039,937 |
| கணக்காய்வு கட்டணம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி | | 43,800 | 470,000 |
| கணக்காய்வு கட்டணம் - உள் | | (1,035,000) | - |
| பெறுமான தேய்வு | | 5,214,297 | 4,696,716 |
| வர்த்தக வரி | | (17,000) | - |
| பொதுவான செலவுகள் | | 144,618 | 104,244 |
| சட்ட செலவுகள் | | 205,069 | 166,861 |
| புலனாய்வு செலவுகள் | | 19,314 | 4,572 |
| மேற்பார்வை செலவுகள் | | 199,018 | 383,293 |
| வாகன பராமரிப்பு | | 77,159 | 157,174 |
| வாகன காப்புறுதி | | 229,143 | 309,245 |
| வாகனம் ஓடும் கட்டணங்கள் | | 185,783 | 270,829 |
| தேச நிர்மாண வரி | | 688,075 | 574,717 |
| அகற்றல் மீதான நட்டம் | | - | 73,035 |
| | | 49,986,744 | 45,858,876 |
| **15 நிதி மற்றும் ஏனைய செலவினங்கள்** | | | |
| வங்கிக் கட்டணங்கள் | | 206,872 | 186,428 |
| | | 206,872 | 186,428 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

## 16. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியதிலிருந்து கிடைக்க வேண்டியவை

2011 ம் ஆண்டு 3ம் இலக்க (திருத்தச் சட்டத்தின் 12 (1)ம் பிரிவுக்கு அமைவாக, தேசிய காப்புறுதி நம்பிகைக நிதியம் சுஐஐ சட்டத்தின் கீழ் பதிவுசெய்த நபராக கருதப்படுவதுடன், 2011ம் ஆண்டில் இருந்து வருடாந்தக் கட்டணத்தையும் செஸ்ஸை யும் செலுத்துவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொறுப்புடையது.

2011 இருந்து 2013 வரை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த கட்டங்கள் மற்றும் செஸ் தொகை தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கணக்காய்வு கணக்குகள் இறுதியாக்கப்படாததனால், 2015ம் ஆண்டுக்கான வருடாந்தக் கட்டணம் மற்றும் 2014 மற்றும் 2015ம் ஆண்டுக்கான செஸ் பெறுகைகள் தீர்மானிக்கப்படவில்லை.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் 2011 இருந்து 2013 வரை செலுத்தப்பட வேண்டிய தொகை பேச்சுவார்த்தைக் கட்டத்தில் உள்ளது.

## 17. வரி விதிப்புகள்

006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வருமான வரிக்கான ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 17.1 இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல் மீதான அரசாங்க பிணையங்கள் மீது பிடித்து வைத்தல் வரிக்கான கருத்தியல் வரவு

2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 137வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்களிலிருந்த வட்டி வருமானத்திற்கு அதாவது குறிப்பிட்ட மதிப்பீட்டு ஆண்டில் சபையின் வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானம் இருக்கும் பட்சத்தில் கருத்தியல் வரவொன்றைப் பெறுவதற்கு சபைக்கு உரித்துண்டு.

அதற்கமைவாக, அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிருந்து சபை பெற்ற தேறிய வருமானம், நிதி கூற்றுகளில் ஒட்டு மொத்தமாகக் கணிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டிற்கான கருத்தியல் வரவு ரூபா 149,436/- என 2015 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுகளில் இனங்காணப்பட்டுள்ளது.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த வட்டி வருமானம் தேறிய பெறுமதியில் கணக்கிடப்பட்டுள்ளது.

## 18. மூலதனக் கடப்பாடுகள்

2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மூலதனக் கடப்பாடுகள் எவையுமில்லை.

## 19. அவசர தேவைக்கான பொறுப்புகள்

2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அவசர தேவைக்கான பொறுப்புகள் எவையுமில்லை.

## 20. அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுகளில் சீராக்கங்கள் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு அறிக்கையிடும் காலத்திற்கு பின்னர் எவ்வித சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

## 21. தொடர்புடையவர்களின் வெளிப்படுத்தல்கள்

புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து 20 ஜனவரி 2015 இல் இருந்து திரு. பி. டி. டப்ளியு. எ. சில்வா, திரு. எஸ். ஆர் ஆட்டிகல, திரு. நலின் ஆட்டிகல மற்றும் திரு. டி. என். ஆர். திரு. சமந்த குமாரசிங்க அவர்களின் இராஜினாமாவை வழங்கியிருந்தனர். சபையானது கீழ்வருமாறு கட்டமைக்கப்பட்டது.

திருமதி இந்ராணி சுகததாச – தலைவி

திரு பீ சமரசிறி - பதவி வழி உறுப்பினர் (மத்திய வங்கியின் சிரேஸ்ட பிரதி ஆளுனர்) – 09 மார்ச் 2015 இல் இருந்து

திரு டி என் ஆர் சிறிவர்தன - பதவி வழி உறுப்பினர் (கம்பனிகள் பதிவாளர் நாயகம்)

திரு ஜெரமி போலிங் - 10 பெப்பரவரி 2015 இல் இருந்து

டாக்டர் அலி அஸ்கர் ஷபீர் குலாம்ஹு஁சைன் - 20 மார்ச் 2015 இல் இருந்து

திரு அசங்க அபேகுணசேகர – 07 ஏப்பிரல் 2015 இருந்து 31 ஒகஸ்ட் 2015 வரை

பின்வரும் அட்டவணை இவ் ஆண்டில் சபையின் அங்கத்தினர்களால் வகிக்கப்பட்ட பதவிகளை விபரிக்கின்றது.

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனங்களின் பெயர் | பதவி |
|---|---|---|
| திருமதி இந்திராணி சுகததாச | களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிடட்<br>தேசிய அபிவிருத்தி வங்கி (பிஎல்சி.) | பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| செல்வி புஸ்பா வெல்லப்பிலி | இலங்கை வங்கி<br>வாகனப் உமிழ்வுப் பரிசோதனை நம்பிக்கை நிதியம்<br>பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு | பணிப்பாளர்<br>தலைவர்<br>திறைசேரிப் பிரதிநிதி (கண்காணிப்பாளர்) |
| திரு பி சமரசிறி | இலங்கை வங்கியாளர் நிறுவனம்<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தணை ஆணைக்குழு | உப தலைவர்<br>அங்கத்தவர் (29 செப்டெம்பர் 2015 இருந்து) |
| திரு. டி. என். ஆர். சிறிவர்தன | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு<br>இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை<br>இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் | சபை அங்கத்தவர்<br>சபை அங்கத்தவர்<br>சபை அங்கத்தவர் |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி

| அங்கத்தவரின் பெயர் | தொடர்புடைய நிறுவனங்களின் பெயர் | பதவி |
|---|---|---|
| திரு ஜெர்மி போலிங் | ஒக்டகன் கென்சல்டன்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் என்ட்லஸ் அவுட்டோர் தனியார் நிறுவனம்<br>என்எச்ஜே இடர் முகாமைத்துவ சேவைகள் தனியார் நிறுவனம் | பணிப்பாளர்<br><br>பணிப்பாளர்<br><br>பணிப்பாளர் |
| டாக்டர் அலி அஸ்கர் ஷபீர் குலாம்ஹுசைன் | ஆதாம் கப்பிடல் பிஎல்சி<br>சிலோன் அன்ட் பொரின் ட்ரர்ஸ் பிஎல்சி<br>ஆதாம் இன்வெஸ்ட்மன்ட் பிஎல்சி<br><br>ஓரியன்ட் கார்மன்ட்ஸ் பிஎல்சி<br><br>பிசினஸ் சேம்பர் ஒப் கொமர்ஸ்<br>இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்<br><br>ஆதம் எக்ஸ்போ (பிரைவட்) லிமிடட்<br>ஆதாம் கார்பன்ஸ் (பிரைவட்) லிமிடட்<br>ஆதாம் கப்பிடல் மைக்ரோ கிரெடிட் (பிரைவட்) லிமிடட்<br>நெட்வோர்க் கொமியூனிகேஸன்ஸ் (பிரைவட்) லிமிடட்<br>ஆதம் மெட்டல்ஸ் (பிரைவட்) லிமிடட்<br>ஆதாம் எயர் கண்டிசனர் (பிரைவட்) லிமிடட்<br>ஆதம் அப்பரல்ஸ் (பிரைவட்) லிமிடட்<br>ஆதம் ஒட்டோ மொபைல்ஸ் (பிரைவட்) லிமிடட்<br>சோனான்ஷி ட்ரஸ்ட் (பிரைவட்) லிமிடட்<br>ஆதாம் ட்ரஸ்ட் (பிரைவட்) லிமிடட்<br>வெல்வின் (பிரைவட்) லிமிடட்<br>ஜோர்ஜியோ மொரன்டி (பிரைவட்) லிமிடட<br>ஸ்பைஸ் ஒப் லைப் (பிரைவட்) லிமிடட்<br>சிலோன் அன்ட் பொரின் ரேட் சர்கி-டெக் (பிரைவட்) லிமிடட்<br>கொழும்பு அப்போதிகரிஸ் கம்பனி லிமிடட்<br>கொழும்பு பிரைட் அனட் ட்ரான்ஸ்போர்ட் லிமிடட்<br>டொட்வெல் அன்ட் கம்பனி லிமிடட்<br>ஹமில்டன் ரிசோர்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் | பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>(06 ஜூலை 2015 வரை)<br>பணிப்பாளர்<br>(17 நவம்பர் 2015 வரை)<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>(31 மார்ச் 2015 வரை)<br><br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br><br>பணிப்பாளர்<br><br>பணிப்பாளர்<br><br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br><br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br><br>பணிப்பாளர்<br>பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| திரு அசங்க அபேகுணசேகர | வழங்கப்படவில்லை | |
| திரு. பி.டி.டப்ளியு.ஏ. சில்வா | இலங்கை வங்கியாளர் நிறுவனம்<br>இலங்கை கடன் தகவல் பணியகம்<br>அபி வெனுவென் அபி முகாமைத்து சபை<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம்<br>பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு - விசேட நிலையான அமைச்சரவை - தேடி பெற்றுக் கொள்ளல் குழுவில் நியமனம்<br>வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் | தலைவர்<br>தலைவர்<br><br><br><br>அங்கத்தினர்<br><br><br>சபை அங்கத்தினர் |
| திரு. நலின் ஆட்டிகல | மூன்றாம் நிலை மற்றும் தொழில் பயிற்சி கல்வி ஆணையம | குழு அங்கத்தவர் |
| திரு. சமந்த குமாரசிங்க | நேட்சர்ஸ் பியுட்டி கிரியேஷன் லிமிட்டட்<br>மல்டி கெமி இன்டநெஷனல் லிமிட்டட்<br>மல்டி கெமி எக்ஸ்போர்ட் பிரைவட் லிமிட்டட்<br>எக்கோ ப்ரொடெக்ட் என்ஜினியரிங் பிரைவட் லிமிட்டட்<br>லங்கா பயோ பேர்ட்டிலைசர்ஸ் (பிரைவட்) லிமிடட் | தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவா/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர் |

ஆண்டின் போது சொல்லப்பட்ட நிறுவனங்களுடன், சந்தை வீதங்களிலான சாதாரண வியாபார நடவடிக்கைகளின் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கொடுக்கல்வாங்களும் பதிவு செய்யப்படவில்லை.

## 22. மீள்விளக்க அறிக்கை

2015ம் ஆண்டிலிருந்து இலங்கை கணக்கு நியமங்களுக்கு (SLFRS and LKAS) பதிலாக பொதுத்துறை பணக்கு நியமங்களுடன் இணங்குவதற்கு ஏற்ற வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சபை தீர்மானித்ததுடன், முதலீடுகள் குறைந்த ஆகுசெலவு அல்லது முகப்பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன் கிடைக்க வேண்டிய வட்டி வேறாக வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 19ம் இல் குறிப்பிடப்பட்ட ஊழியருக்கான நன்மைகளுக்கு “எதிர்பார்க்கப்பட்ட அலகு கடன் முறைமை”யைப் பயன்படுத்தவதற்குபதிலாகபக்கம் 80 இல் உள்ள கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான குறிப்பு இலக்கம் 3.1.1 இல் (பணிக்கொடை சட்டத்தில் உள்ள கொடுப்பனவுகளுடன் இணங்குமாறு) குறிப்பிட்டவாறு பணிக்கொடை ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டது. அதற்கமைவாக, 2014ம் ஆண்டு மற்றும் அதற்கு பின்னரான ஆண்டுகளுக்கான பணக்கொடை ஏற்பாடுகள் முறையே 300,147.00 மற்றும் 1,585,184.00 வினால் அதிகரித்ததுடன், அதிகரித்த இத்தொகையுடன் உரியதொகை பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. : ரிஆர்இ(2)சி/ஐபிஎஸ்எல்/2015/23 | මගේ අංකය / உமது இல / Your No. : | දිනය / திகதி / Date : 2016 நொவம்பர் 23 |

தலைவர்,

இலங்கை காப்புறுதிச் சபை

**இலங்கை காப்புறுதிச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை காப்புறுதிச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1 ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2016 ஆகஸ்ட் 01 திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் அந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் கீழ் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஓட்டுமொத்த சமர்ப்பித்தலின் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்ச்சி

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கைக் காப்புறுதிச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்ாகன அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு கொள்கை

கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சபையினால் வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 2011 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குரியதாக கிடைக்க வேண்டியவையாக இனங்காணப்பட்ட ரூபா 21,788,225 தொகையான செஸ் வருமானம் மற்றும் ரூபா 2,911,605 வருடாந்த கட்டண வருமானம் என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் நிதியத்தினால் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 7,668,309 தொகையான செஸ் வருமானம், நடப்பாண்டின் வருமானத்தில் மேற்கொண்ட சீராக்கமாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடு

2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தும் 2014 ஆம் ஆண்டிலிருந்தும் காணப்படுகின்ற காப்புறுதி வருமானம் முற்பெறுவனவுகள் முறையே ரூபா 484,511 மற்றும் ரூபா 1,550,06 தொகைகள் சபையின் வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இனங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்கமின்மை |
|---|---|
| (அ) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்திய அதிகாரச் சட்டம் | |
| (i) 33(2) உப பிரிவு | காப்புறுதியாளரின் பணிப்பாளராக யாராவது ஒருவரைப் பிரரேரிப்பதற்கும், தெரிவு செய்வதற்கும் அல்லது பெயரிடல் தொடர்பாக காப்புறுதியாளரிடமிருந்து சபைக்கு அறிவித்தலொன்று கிடைத்த சந்தர்ப்பத்தில் சபையினால் அவ்வறிவித்தல் கிடைத்த முப்பது (30 நாட்களுக்குள் அந்த நியமித்தல், தெரிவு செய்தல் அல்லது பெயரிடல், அங்கீகரித்தல் அல்லது அங்கீகாரத்தை நிராகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், இரண்டு காப்புறுதிக் கம்பனிகளும் அவ்வாறான நியமித்தலுக்கான விண்ணப்பங்கள் சபைக்கு கிடைத்திருந்த போதும், அதனை செயற்படுத்துவதற்கு 1 வருடம் முதல் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 38(1) (ஆ) பிரிவு | நீண்டகால காப்புறுதி தொழில் தொடர்பாக உள்ள சொத்துக்கள், ஏனைய ஏதாவது வகுப்பொன்றில் காப்புறுதித் தொழில் தொடர்பான சொத்துக்களிலிருந்து வேறுபடுத்தி வைத்திருக்க வேண்டிய போதிலும் 11 பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளில் 8 கம்பனிகள் 2015 ஆம் ஆண்டின் போது தனித்தனியாகப் பதிவு செய்திருந்த போதிலும், 03 கம்பனிகள் அவ்வாறு பதிவு செய்திருக்கவில்லை. |
| (iii) 103(2) ஆம் பிரிவு மற்றும் 2005 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 1412/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்தமானியின் 10 ஆம் பிரிவு | காப்புறுதிப்பூட்கை உரித்தாளரின் பாதுகாப்பு நிதியத்தில் செலவிலுள்ள பணம், காப்புறுதிப்பூட்கையாளரின் பொதுப் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது சபையினால் செயற்பாட்டு பற்றாக்குறைக்காக ரூபா 3,513,004 தொகையும் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 3,012,711 தொகையும் நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்ச்சி

(ஆ) பொது முயற்சிகளின் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| (i) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | நிர்வாகக் கைநூல் தயாரிக்கப்பட்டு அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரி செயலாளருக்குச் சமர்ப்பித்து இணக்கப்பாடு பெறப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு கிடைத்திருக்காத போதும் அதில் உள்ளக்கப்பட்ட பிரகாரம் சபையின் 31 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 50,000 வீதம் ரூபா 1,550,000 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி/2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | வீட்டுத் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி அல்லது இணையத்தள வசதிகள் பெற்றுக் கொள்ளும் போது கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட உபகரணங்கள் மற்றும் பாகங்களுக்காக செலவிடுவதற்கு ஏற்பட்ட கிரயம் உரிய உத்தியோகத்தரினால் செலவிடப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் 4 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 111,032 கிரயமான 04 கையடக்கத் தொலைபேசிகளுக்குரிய பணம் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வாக்கு முன் இலாபம் ரூபா 187,126 மிகையாக இருந்ததுடன் அததற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 163,129 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வரிக்கு முன் இலாபம் ரூபா 23,997 ஆன அதிகரிப்பைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் காப்புறுதிக் கம்பனிகளிலிருந்து கிடைக்கின்ற வருடாந்தக் கட்டணம் ரூபா 35,563,169 அதிகரித்திருந்த போதிலும் காப்புறுதிப் பூட்கையாளர்களிடமிருந்து நிதியத்திற்கு மாற்றுதல்கள் ரூபா 20,687,991 குறைவடைந்தமையும், ஊழியர் ஊதியம் ரூபா 10,898,972 மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,127,872 தொகையினால் அதிகரித்தமையும் மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்படும் போது 2013 ஆம் ஆண்டில் வரிக்கு முன் இலாபம் 38 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், மீண்டும் அது 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு / வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம ஆண்டில் ரூபா 42,311,901 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 75,606,943 வரை 79 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் நோக்கங்கள் மற்றும் பொறுப்புக்களாக, இலங்கையில் காப்புறுதித் தொழிலை கௌரமாகவும் காப்புறுதிச் சான்றிதழைப் பெறுபவர்களினதும் தொடர்புகள் பாதுகாக்கப்படும் விதத்தில் தொழில் ரீதியாகவும், முன்னெச்சரிக்கை முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றமையைக் கண்காணிப்பதாகும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காப்புறுதிப் பூட்கையாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற காப்புறுதி உரிமைக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளின் போது அதனை புலனாய்வு செய்வதற்கு நியதிச்சட்டரீதியான அதிகாரங்கள் சபைக்குக் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 41 முறைப்பாடுகள் 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது காப்புறுதி மற்றும் காப்புறுதித் தொழில் தொடர்பாக பாடசாலை சமூகத்திற்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 11 பாடசாலைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதனுள் உள்ளடங்காத பாடசாலையொன்றில் அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்ச்சி

(இ) தற்போது காப்புறுதித் தொழிலில் பயன்படுத்துகின்ற ஒழுங்குபடுத்துதல் சட்டகம் (Regulatory Frame Work) காப்புறுதி அதிகாரிகளின் சர்வதேச சங்கத்தின் (IAIS) காப்புறுதி மூலத் தத்துவங்களுடன் (ICPS) ஒப்பீடு செய்து பாவனையாளர்களுக்கு நியாயமான உபசரணையொன்றினை (FTC) வழங்குவதற்கு முடியுமான வகையில் வடிவமைத்தல் செயல் நடிவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு பணியாக இருந்த போதிலும் அந்த வடிவமைப்பு தொடர்பாக ஆய்வினைச் செய்து தயாரிக்கப்பட்ட அறிக்கை 2015 திசெம்பர் 08 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய எஞ்சிய நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 2 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தேவையினை உரியவாறு இனங்காணாமல் 2012 அம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட ரூபா 2,277,122 கிரயமான 1667 ஆண்டறிக்கைப் பிரதிகள் எஞ்சியிருந்தமையினால் அதற்காக செய்யப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகயிருந்தது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துண்டுப் பிரசுரங்கள் மூலம் காப்புறுதி தொடர்பாக சமூகத்திற்கு தெளிவுபடுத்தவதற்காக மீளாய்வாண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் அச்சிடுவதற்கு திட்டமிடப்பட்ட "சுகாதார காப்புறுதி தொடர்பான நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகள் மற்றும் காப்புறதிப்பூட்கை உரித்தாளியாக உங்களது உரிமை, விருப்பு மற்றும் உரித்து தொடர்பாக தெளிவு பெறவும்" என்ற துண்டுப்பிரசுரம் 2016 யூலை மாத்தில் அச்சிடப்பட்டிருந்ததுடன் 2016 யூலை 28 ஆந் திகதி வரையிலும் தெளிவுபடுத்துவதற்கான நடிவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காப்புறுதித் தொழிலினதும் காப்புறுதிப்பூட்கை உரிமையாளர்களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு காப்புறுதிப் பூட்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கம்பனிகளில் காப்புறுதிகளை மீளாய்விற்கு உட்படுத்தவதற்காக ஆண்டின் போது தீ காப்புறுதி தொடர்பான சிபாரிசுகளை மீளாய்வு செய்தல் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் அந்த நடிவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது சபையினால் தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றிற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய அடிப்படை உரிமைகள் வழக்கின் போது உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் அக்கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போலியான காப்புறுதி உரித்துக்களை முறையாக தீர்ப்பதற்கு அக்கம்பனியின் சொத்துக்களை அகற்றுவதற்காக சபையினால் 2013 யூலை 06 ஆந் திகதி கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட போலியான 142 உரித்துக்களில் எதுவித இழப்பீடுகளையும் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 16 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு சபை தவறியிருந்தது.

(ஈ) சபையினால் 2012 ஏப்பிரல் 22 ஆந் திகதி பிரசுரிக்கப்படட பத்திரிகை அறிவித்தலின்படி, காப்புறுதியாளர்கள் பதிவு செய்தல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அது 2016 மார்ச் மாதம் வரையிலும் அகற்றப்படாதிருந்த கம்பனியொன்றிற்கு நீண்டகால காப்புறுதிக்காக 2015 மே மாதம் முதல் சபையில் பதிவுகள் வழங்கப்பட்டிருந்தது. 2015 மே மாதம் முதல் 2016 மே மாதம் வரை ஒரு வருட காலத்தில் அக்கம்பனி நீண்ட கால காப்புறுதிக்காக செயற்படாதிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்காக பதிவினைப் பதுப்பித்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) சபையினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற கடன் தீர்க்கும் பரிசோதனை (Solvency Test) சட்டங்களும் ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதன மாதிரி (RBC) விதிகளின் பிரகாரமும் சகல காப்புறுதியாளர்களினாலும் ஆகக் குறைந்த கடன் தீர்க்கும் நிலை பேணப்பட வேண்டியிருந்த போதிலும் மொத்த மூலதன பெறுமதியும் தொடர்ச்சியாக முறிவடைந்த கம்பனியொன்றாகவும் கடன் தீர்த்தல் விகிதம் (Solvency Retio) 2015 ஆம் ஆண்டின்போது பேணப்பட வேண்டிய மட்டத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்ட கம்பனியொன்று தொடர்பாக சபையினால் எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவனத்தினால் மீளாய்வாண்டிற்குரிய காலாண்டு ரீதியான அறிக்கை மற்றும் இணக்கச் சான்றிதழ் (Compliance Certification) சபைக்கு வழங்கப்பட்டிருக்காத போதிலும் இது தொடர்பாக சபையினால் எதிர்கால நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) காப்புறுதியாளரினால் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுகளுக்காக பொதுவாக பாவனைக்கு எடுக்கக்கூடிய வழிகாட்டிக் கோவையொன்றைத் தயாரிப்பதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய திருத்திய வரைபு அறிக்கை 2016 யூன் 14 ஆந் திகதி காப்புறுதித் தொழில் தொடர்பான தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டிருந்தமையால் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அது செயற்படு நிலையில் காணப்படவில்லை.

(ஏ) காப்புறுதியாளரினால் உரித்துக்கோரும் விண்ணப்பம் தொடர்பாக வெளித்தரப்பினர் ஊடாக புலனாய்வை முறையாக மேற்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் சபை திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய வரைபு வழிகாட்டிக் கோவையின் இறுதி அங்கீகாரம் 2016 யூலை 28 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்ச்சி

## 4.4 பதிவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் பதவிகளுக்கரிய ஆட்சேர்க்கும் நடைமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெற்றிடமாகக் காணப்பட்ட பணிப்பாளர் (சட்டம் மற்றும் அமுலாக்கல்) பதவிக்காக 2015 மே 18 ஆம் திகதி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆட்சேர்த்தல்களுக்குரிய பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் வயது எல்லை “35 வருடங்கள் முதல் 50 வருடங்கள் வரை” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்காகக் கிடைத்த விண்ணப்பங்களுக்கிடையே தகைமை பெற்ற 9 உத்தியோகத்தர்கள் இருந்ததுடன் அவர்களிடையே நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதறகு நடிவடிக்கை எடுக்காது 33 வயதினையுடைய உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்குப் புறம்பாக 2012 ஒக்தோபர் மாதம் முதல் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி வரை இலத்திரனியல் தபால் மூலம் சமர்ப்பித்த உடன்படிக்கையின் அடிப்படையில் ஆயுட்கணிப்பு ஆலோசகர் பதவிக்காக பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அவரின் வருகை மற்றும் வெளிச் செல்கை உறுதிப்படுத்தப்படாமல் 2012 ஒக்தோபர் முதல் 2015 திசெம்பர் வரை ரூபா 7,514,871 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றல்லாத ஆயுட்கணிப்பாளர் பதவிக்காக 2015 யூன் முதல் 2016 யூன் மாதம் வரை மாதாந்தம் ரூபா 15,000 தொகையான படியொன்றின் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருக்கும் போது ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்குப் புறம்பாக 2016 சனவரி 01 ஆச் திகதி முதல் மாதாந்தம் ரூபா 200,000 படியொன்றைச் செலுத்தி 02 வருட காலத்திற்காக நபரொருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1. செயல்நடிவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் செயல் நடிவக்கைத் திட்டம் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டில் 53 விடயங்களில் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையில் மிகை நிதிஏற்பாடு காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்ததை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | நிதியத்திற்குரிய செலவினங்களைத் தீர்ப்பதற்காகவும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவினங்களுக்காகவும் நிதியை ஒதுக்குதல். |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும், நியமனத் திகதியை கவனத்திற் கொள்ளாமலும் சம்பள அதிகரிப்புக்களைச் செலுத்துதல். |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | (i) அங்கீகாரமின்றி வருடாந்த கட்டணங்களை மீளச் செலுத்துதல்.<br>(ii) வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படாமை. |



**ஒப்பம்: எச் எம். காமினி விஜேசிங்ஹ**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்களுக்கு சபையின் பதிலளிப்பு

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| **2.2** | **நிதி வெளிப்படுத்தல் தொடர்பான கருத்தை அறிவித்தல்** | |
| **2.2.1** | **கணக்கீட்டு கொள்கை** | |
| | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சபையினால் வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் இருந்து 2011 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குரியதாக கிடைக்க வேண்டியவையாக இனங்காணப்பட்ட ரூபா 21,788,225 தொகையான செஸ் வருமானம் மற்றும் ரூபா 2,911,605 வருடாந்தக் கட்டண வருமானம் என்பன நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் நிதியத்தினால் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 7,688,309 தொகையான செஸ் வருமானம், நடப்பாண்டின் வருமானத்தில் மேற்கொண்ட சீராக்கமாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 14 (2) (C) பந்திக்கு அமைவாக வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது சபையினால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 53,220,457 செஸ் வருமானமான ரூபா 10,349,888 தின் வருடாந்த கட்டணம் எங்கள் கணக்கினால் அடையாளம் காணப்படாமையாகும்.<br><br>இந்த நிலைமையின் கீழ் கிடைக்கப்பெற வேண்டிய பெறுமதி தொடர்பாக சரியான மதிப்பீடு மற்றும் கிடைப்பனவு தொடர்பாக உறுதிப்படுத்தல் எதிர்பார்க்க முடிவது அதன் பணிப்பாளர் சபையின் பத்திரத்திற்குரிய பணிப்பாளர் சபையின் தீர்மானம் அதன் அடுத்த பணிப்பாளர் சபையின் கூட்டத்தின் போது உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னராகும். விடயம் இவ்வாறு இருக்கையில் நாங்கள் இதற்கு முன்னர் 2015 மற்றும் 2016 ஜனவரி மாதத்தில் அறிவித்தவாறு பெறுமதி தொடர்பான சரியான மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் கடினமாதல் மற்றும் இவ்வாறான பெரிய பெறுமதியை அவ்வாறான வருமானம் கிடைக்கபெறுவது தொடர்பாக உரிய உறுதிப்படுத்தலின்றி நிதிக்கூற்றில் அடையாளம் காணுதல் எண்ணக்கருவுக்கு இசைவாக இல்லாமையினால் அந்த வருமானம் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் அது தொடர்பான வெளிப்படுத்தல் குறிப்பின் ஊடாக இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்கும் வகையில் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2011, 2012ம் வருடங்களுக்காக கிடைக்க வேண்டிய செஸ் பெறுமதிக்கு சமனான அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட தொகைக்கு சீர்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் 2015ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கிடைக்கப்பெற்ற செஸ் வருமானம், இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இசைவாக மதிப்பீட்டில் மாற்றமாக (changing estimate) கருதப்பட்டு வருடத்தின் வருமானம் சீர்படுத்தப்பட்டுள்ளது |
| **2.2.** | **கணக்கீட்டு குறைபாடு** | |
| | 2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தும் 2014 ஆம் ஆண்டிலிருந்தும் காணப்படுகின்ற காப்புறுதி வருமானம் முற்பெறுவனவுகள் முறையே ரூபா 484,511 மற்றும் ரூபா 1,550,060 தொகைகள் சபையின் வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 'ரூபா 1,550,060 எனக் குறிப்பிடப்பட்ட தொகை ரூபா 1,555,060 எனத் திருத்தப்படுதல் வேண்டும்.<br><br>2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறையை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் இலக்கம் 81 மற்றும் 83ம் பந்திகளுக்கு அமைவாகவும் இலக்கம் 1414/9 உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 2 (டி) விதிக்கு அமைவாகவும், காப்புறுதி முகவர் நிறுவனத்தில் பதிவு செய்தல் அல்லது பதிவினை புதுப்பித்தல் மற்றும் புது காப்புறுதி நிறுவனத்தை பதிவுசெய்வதற்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் பொழுது உரிய கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். அவ்வாறு கிடைக்கப்பெறும் தொகை உரிய நிறுவத்தை பதிவுசெய்தல் அல்லது பதிவினை புதுப்பித்தல் என்பவற்றை காப்புறுதி சபை அங்கீகரிப்பதற்கு முன்னர் கணக்கில் வரவாக பதியப்படுகின்றது. உரிய அனுமதி வழங்கப்பட்டவுடன் உரிய தொகை நிறுவனத்தின் வருமான கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>அத்துடன், 2014ம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் இருந்து நிலவும் ரூபா 2,039,571 பெறுமதியுடைய ரூபா 1,500,000 விற்கு சமமான ரூபா 500,000 வீதம் காப்புறுதி நிறுவனங்கள் 3 சபையின் நியதிகளுக்கு அமைவாக பொது மற்றும் நீண்ட காலம் என வேறாக பதிவு செய்தல் வேறுபடுத்தல் தேவையின் காரணமாக பதிவு செய்த தொகையாகும்.<br><br>அதில் ஒரு காப்புறுதி நிறுவனம் வேறாக பதிவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதுடன், ஏனைய காப்புறுதி நிறுவனங்களுக்கு போதியளவு மூலதன பெறுமதியில்லை. விடயம் இவ்வாறு இருக்கையில் சபையினால் பதிவு அனுமதிக்கப்பட்டது, உரிய பெறுமதி வருமானமாக அடையாளம் காணப்பட்டது.<br><br>மிகுதி ரூபா 539,571 தொடர்பாக உரிய தொகை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் மீள வழங்குதல் அல்லது 2017ம் ஆண்டு பதிவு புதுப்பிக்கப்படும் பொழுது அந்த நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையில் இதனைக் குறைப்பதற்கு அறிவுறுத்தல் வழங்குதல் அல்லது எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கை தொடாபாக கலந்துரையாடப்படுவதனால், இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

# 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| **2.3** | **சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை** | |
| (a) | 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறையை ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் அதன் திருத்தம் | |
| (i) | 33(2) உப பிரிவு<br><br>காப்புறுதியாளரின் பணிப்பாளராக யாராவது ஒருவரைப் பிரேரரிப்பதற்கும், தெரிவு செய்வதற்கும் அல்லது பெயரிடல் தொடர்பாக காப்புறுதியாளரிடமிருந்து சபைக்கு அறிவித்தலொன்று கிடைத்த சந்தர்ப்பத்தில் சபையினால் அவ்வறிவித்தல் கிடைத்து முப்பது (30) நாட்களுக்குள் அந்த நியமித்தல், தெரிவுசெய்தல் அல்லது பெயரிடல், அங்கீகரித்தல் அல்லது அங்கீகாரத்தை நிராகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், இரண்டு காப்புறுதிக் கம்பனிகளும் அவ்வாறான நியமித்தலுக்கான விண்ணப்பங்கள் சபைக்கு கிடைத்திருந்த போதும், அதனை செயற்படுத்துவதற்கு 1 வருடம் முதல் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வரை தாமதிக்கப்பட்டிருந்தது. | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் அவர்களின் பணிப்பாளர் சபைக்கு புதிய 5 அங்கத்தவர்களின் பெயர்களை சிபாரிசு செய்து, 20 பெப்பரவரி 2015ம் திகதி பணிப்பாளர் சபைக்கு எழுத்து மூலமான கடிதத்தை சமர்ப்பித்துள்ளது. இந்த வேண்டுகோள் இலங்கை காப்புறுதிச் கூட்டுத்தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிதி அமைச்சின் ஆலோசனையின் கீழ் விடுக்கப்பட்டது.<br><br>எனினும், கூட்டுத்தாபனத்தினால் அந்தப் பணிப்பாளர்களை நியமிப்பதற்கு சபை அங்கீகாரத்தை வழங்குவதற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அவற்றினை 27 மே 2015ம் திகதி சமர்ப்பிப்பதாக அறிவித்திருந்தது. எனினும் அத்தினத்தில் புதிய 4 பணிப்பாளர்களுக்கு உரிய ஆவணங்களை மட்டுமே சமர்ப்பித்திருந்ததுடன், அவையும் பூரணப்படுத்தப்படவில்லை.<br><br>அந்த விண்ணப்பத்தில் காணப்படும் குறைபாடுகளுக்கான ஆவணங்களைக் கோரி அவற்றை பூர்த்தி செய்தவுடன் 23 ஒக்டோபர் 2015ம் திகதி பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அனுமதியைக் கோரி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அக்காலத்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றதனாலும் அக்காலத்தில் கூட்டுத்தாபனம் பொது தொழில்முயற்சிகள் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் சாட்டப்பட்டிருந்ததனாலும், புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதனால், அந்த 5 பணிப்பாளர்களின் நியமனத்தை காலதாமதப்படுத்துவது என பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.<br><br>அத்துடன், 20 நவம்பர் 2015ம் திகதி கடிதம் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதேவேளை பொது தொழில்முயற்சிகள் அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசனைப் படி முன்னர் பெயரிப்பட்ட பணிப்பாளர்களில் திரு இமல் பொன்சேகா அவர்கள் 5 நவம்பர் 2015ம் திகதி தொடக்கம் இராஜினாமா செய்வதனால், அதற்குப் பதிலாக மேலும் இரு பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தப் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அவற்றை பூரணப்படுத்தியதன் பின்னர் 2016 மார்ச் மாதத்தில் அதற்கான அனுமதி காப்புறுதிச் சபை பணிப்பாளர்களிடம் கோரப்பட்டது. அத்துடன், எங்களினால் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் நிறைவேற்று அதிகாரமுள்ள மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களின் எண்ணிக்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு இணங்கவில்லை என்பது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டது. அந்த நியமனங்களுக்கு 31 மார்ச் 2016 அன்று அனுமதி அளிக்கப்பட்டது.<br><br>அந்த காப்புறுதி நிறுவனங்கள் இரண்டும் வேறுபடுத்தவதற்கு அவசியமான மூலதனத்தைக் கொண்டிருக்கவில்லை. அதனால் சபையினால் அவர்களுக்கு சட்டத்தின் 53ம் பிரிவின் படி இணங்குவதற்கான இறுதி கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.<br><br>மற்றைய நிறுவனம் அரச காப்புறுதி நிறுவனமாகும். இது தொடர்பாக உரிய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 38 (2) (ஆ) பிரிவு<br><br>நீண்ட கால காப்புறுதி தொழில் தொடர்பாக உள்ள சொத்துக்கள், ஏனைய ஏதாவது வகுப்பொன்றில் காப்புறுதித் தொழில் தொடர்பான சொத்துக்களிலிருந்து வேறுபடுத்து வைத்திருக்க வேண்டிய போதிலும் 11 பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளில் 8 கம்பனிகள் 2015 ஆம் ஆண்டின் போது தனித்தனியாக பதிவு செய்திருந்த போதிலும், 03 கம்பனிகள் அவ்வாறு பதிவு செய்திருக்கவில்லை. | சபையின் ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் நேரடியாக / மறைமுகமாக சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டதுடன், அதனால் அந்தச் செலவுகள் காப்புறுதி பூட்கையாளர்களின் மற்றும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களின் நன்மையைப் பெற்றுக்கொடுப்பதற்காக மற்றும் காப்புறுதிக் கைத்தொழிற்துறையை ஒழுங்குபடுத்தல் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட செலவாகும். |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| (iii) | 103 (2) (ஆ) பிரிவு மற்றும் 2005 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 1412/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 10 ஆம் பிரிவு<br><br>காப்புறுதிப்பூட்கை உரித்தாளரின் பாதுகாப்பு நிதியத்தில் செலவிலுள்ள பணம், காப்புறுதிப் பூட்கையாளரின் பொதுப் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது சபையினால் செயற்பாட்டு பற்றாக்குறைக்காக ரூபா 3,513,004 தொகையும் மூலதனச் செலவீனங்களுக்காக ரூபா 3,012,711 தொகையும் நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. | சபையின் ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் நேரடியாக / மறைமுகமாக சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டதுடன், அதனால் அந்தச் செலவுகள் காப்புறுதி பூட்கையாளர்களின் மற்றும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களின் நன்மையைப் பெற்றுக்கொடுப்பதற்காக மற்றும் காப்புறுதிக் கைத்தொழிற்துறையை ஒழுங்குபடுத்தல் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட செலவாகும்.<br><br>மேற்குறித்தவாறு சபையின் தொழிற்பாட்டு செலவு இலக்கம் 1412/30 உடைய வர்த்தமானி அறிவித்தலின் 10 வது விதியின் மூலம் அணவல் செய்யப்படுவதனால், அந்த செலவுகளை தீர்ப்பதற்கு காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் உள்ள பணம் பயன்படுத்தப்பட்டதுடன், சபையின் ஒரேயொரு வருமான வழியான பதிவுசெய்தல் கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணம் என்பவற்றினால் தீர்த்துக்கொள்ள முடியாத செலவுகளை, அதாவது அந்த வருடத்தின் பற்றாக்குறை மட்டும் காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து பெறப்படுகின்றது என்பதை தயவுசெய்து கருத்தில்கொள்ளவும் |
| (b) | பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| (i) | 2003 யூன் 02 ஆந்திகதிய பீசுடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி<br><br>நிர்வாக கைநூல் தயாரிக்கப்பட்டு அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் திறைசேரிச் செயலாளருக்கு சமர்ப்பித்து இணக்கப்பாடு பெறப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 30ஆம் திகதி வரையிலும் திறைசேரிச் செயலாளரின் இணக்கப்பாடு கிடைத்திருக்காத போதும் 31 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 50,000 வீதம் 1,550,000 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 50,000 விழாக்கால முற்கொடுப்பனவை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி உள்ளதுடன், அது நிர்வாக கைநூலில் உள்ள ஒரு பிரிவாகும். எனினும், 02.12.2004ம் திகதி திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் நிதி அமைச்சில் நிர்வாக கைநூல் மற்றும் விழாக்கால முற்கொடுப்பனவு தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் அக்கொடுப்பனவானது 2009ம் ஆண்டில் இருந்து மேற்கொள்ளப்படுவதுடன், இது தொடர்பாக எவ்வித எதிர்ப்பினையும் வெளியிடவில்லை என்பதுடன், நிர்வாகக் கைநூல் திறைசேரி பிரதிச் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலக்கு அமைவாக திருத்தம் செய்யப்பட்டு மீள அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உரிய திருத்தங்கள் நிர்வாக கைநூலில் உள்ளடக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | 2015 மே 25 ஆந் திகதிய பீசுடீ/12/ 2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி<br><br>வீட்டுத் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி அல்லது இணையத்தள வசதிகள் பெற்றுக்கொள்ளும் போது கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட உபகரணங்கள் மற்றும் பாகங்களுக்காக செலவிடுவதற்கு ஏற்பட்ட கிரயம் உரிய உத்தியோகத்தரினால் செலவிடப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் 4 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 111, 032 கிரயமான 04 கையடக்க தொலைபேசிகளுக்குரிய பணம் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய தொலைபேசிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் 28.01.2015ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், கொள்வனவு செய்வதற்கான கட்டளை 03.06.2015ம் திகதி வழங்கப்பட்டது. இந்த கொள்வனவுக்கு உரிய பெறுகை நடைமுறை உரிய முறையின் பின்பற்றப்பட்டு அனுமதி பெறப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொள்வனவு தொடர்பாக அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் கொள்வனவு சுற்றுநிருபம் விநியோகிக்கப்பட்ட காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால், அந்த கைத்தொலைபேசிகளுக்கான கட்டணத்தை அறவிட வேண்டாம் என அவர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

# 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| **3.** | **நிதி மீளாய்வு** | |
| **3.1** | **நிதி விளைவுகள** | |
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வரிக்கு முன் இலாபம் ரூபா 187,126 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 163,129 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வரிக்கு முன் இலாபம் ரூபா 23,997 ஆன அதிகரிப்பைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் காப்புறுதிக் கம்பனியில் இருந்து கிடைக்கின்ற வருடாந்தக் கட்டணம் ரூபா 35,563,169 அதிகரித்திருந்த போதிலும் காப்புறுதிப் பூட்கையாளர்களிடமிருந்து நிதியத்திற்கு மாற்றுதல்கள் ரூபா 20,687,991 குறைவடைந்தமையும், ஊழியர் ஊதியம் ரூபா 10,898,972 மற்றும் செயற்பாடுச் செலவீனம் ரூபா 4,127, 872 தொகையினால் அதிகரித்தமையும் மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.<br><br>மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் வரிக்கு முன் இலாபம் 38 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், மீண்டும் அது 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 42,311,901 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 75,606,943 வரை 79 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | பகுப்பாய்கு குறிப்பாகும். |
| **4.** | **செயற்பாட்டு மீளாய்வு** | |
| **4.1** | **செயலாற்றல்** | |
| | ஐ2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் நோக்கங்கள் மற்றும் பொறுப்புகளாக, இலங்கையின் காப்புறுதிக் கைத்தொழிலை கௌரவமாகவும், காப்புறுதிச் சான்றிதழைக் கொண்டிருப்பவர்களுக்கும் எதிர்காலத்தில் காப்புறுதிச் சான்றிதழைப் பெறுபவர்களினதும் தொடர்புகள் பாதுகாக்கப்படும் விதத்தில் தொழில் ரீதியாகவும், முன்னெச்சரிக்கை முறையிலும் மேற்கொள்ளப்பகின்றமையைக் கணக்காணிப்பதாகும்.<br><br>மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன | |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** | **இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு** |
|---|---|---|
| (அ) | காப்புறுதிப் பூட்கையாளரினால் சமர்ப்பிக்கப்படுகின்ற காப்புறுதி உரிமைக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளின் போது அதனை புலனாய்வு செய்வதற்கு நியதிச்சட்ட ரீதியான அதிகாரங்கள் சபைக்கு காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகளில் 41 முறைப்பாடுகள் 2016 யூன் 27 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2015ம் ஆண்டு சபைக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளில் 27.06.2016ம் திகதியன்று விசாரணை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட 41 முறைப்பாடுகளின் தற்போதைய நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.<br>• 11 முறைப்பாடுகள் - விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், உரிய விதப்புரைகள் (2016 ஓகஸ்ட் மாத பணிப்பாளர் கூட்டத்தின் போது) பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.<br>• 8 முறைப்பாடுகள் - விசாரணை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளதுடன், உரிய விதப்புரைகள் (2016 ஜூலை மாத பணிப்பாளர் கூட்டத்தின் போது) பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>• 5 முறைப்பாடுகள் - உரிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளது.<br>• 3 முறைப்பாடுகள் - மேலதிக விசாரணைக்காக மூன்றாம் தரப்பினரிடம் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.<br>• 5 முறைப்பாடுகள் - விசாரணைகளைத் தொடர்வதற்கு அவசியமான தகவல்கள் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெறுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.<br>• 4 முறைப்பாடுகள் - விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் முறைப்பாட்டாளரிடம் இருந்து உறுதிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கான அவர்களுடைய பதில் எதிர்பார்க்கப் படுகின்றது.<br>• 5 முறைப்பாடுகள் - உரிய தரப்பினரின் பங்களிப்புடன் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | மீளாய்வாண்டின் போது காப்புறுதி மற்றும் காப்புறுதித் தொழில் தொடர்பாக பாடசாலை சமூகத்திற்கு அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதனுள் உள்ளடங்காத பாடசாலையொன்றில் அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. . | காப்புறுதி கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றியும் காப்புறுதியின் அடிப்படை எண்ணக்கரு பற்றியும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. அதற்காக சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நாடுமுழுவதிலுமுள்ள பிரதான பாடசாலைகள் (கொழும்பு மற்றும் வெளியில்) பலவற்றில் உள்ள பாடசாலை அதிபர்களை தொலைபேசி ஊடாக தொடர்புகொண்ட போது, தற்போது உள்ள பாட விடயங்கள் மற்றும் பாடத்திற்கு அப்பால் உள்ள விடயங்களுக்கு மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஈடுபடுத்த உள்ளதனால், காப்புறுதி பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரத்தை ஒதுக்குவது கடினம் எனப் பெரும்பான்மையானோர் பதிலளித்தனர். பாடசாலை அதிபர்களின் இந்தப் பதில் தொடர்பாக கலந்துரையாடுவதுடன், ஆரம்பத்தில் கொழும்புக்கு வெளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் எங்கள் நோக்கத்தினை தெளிவுபடுத்துவதற்கும், அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கும் கடிதங்களை அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், காப்புறுதிச் சபையினால் நாடுமுழுவதிலுமுள்ள பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்படும் பிரதான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாக இது இருப்பதுடன், ஆரம்பத்தில் வருடத்திற்கு 2 அல்லது 3 பாடசாலைகளை இலக்காகக் கொண்டு அவற்றினை நடாத்துதல் பொருத்தமானது என விளங்கியது. 2 அல்லது 3 நிகழ்ச்சித்திட்டங்களை மட்டும் நடாத்தும் நோக்கத்துடன் 11 பாடசாலைகளுக்கு மட்டும் கடிதம் அனுப்பப்பட்டது. எனினும், இதுவரை நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் இருந்து பெற்றுக்கொண்ட அனுபவத்தில் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்படும் நிகழ்சித்திட்டங்கள் மிகச்சிறந்த ஆகுசெலவு வினைத்திறன் மற்றும் பிரயோசனமானது எனத் தெரியவந்தது. |
| (இ) | தற்போது காப்புறுதி தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் சட்டகம் (Regulatory Frame Work) காப்புறுதி அதிகாரிகள் சர்வதேச சங்கத்தின் (IAIS) காப்புறுதி மூலத் தத்துவங்களுடன் (ICPS) ஒப்பீடு செய்து பாவனையாளர்களுக்கு நியாயமான உபசரணையொன்றினை (FTC) வழங்குவதற்கு முடியுமான வகையில் வடிவமைத்தல் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு பணியாக இருந்த போதிலும் அந்த வடிவமைப்பு தொடர்பாக ஆய்வினைச் செய்து தயாரிக்கப்பட்ட அறிக்கை 2015 டிசம்பர் 08ம் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்திருந்த போதிலும் அதற்குரிய எஞ்சிய நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரணைப் பிரிவின் 2016ம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தின் படி வாடிக்கையாளர்களுக்கு நியாயமான உபசரிப்பை (FTC) வழங்குவதற்கான வழிகாட்டலை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, 08 டிசம்பர் 2015ம் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைக்கு அமைவாக, ஒரு வழிகாட்டலைத் தயாரிப்பதற்கு அவசியமான காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் இடைநிலை நிறுவனங்களினால், (Intermediaries) தற்போது செயற்படுத்தப்படும் கொள்கை மற்றும் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி அனைத்து காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் இடைநிலை நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டதுடன், தற்போது அத்தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. அந்த தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன், அதன் பின்னர் அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். . |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| **4.2** | **சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்** | |
| | தேவையினை உரியவாறு இனங்காணமல் 2012 ஆம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட ரூபா 2,227,122 கிரயமான 1667 ஆண்டறிக்கைப் பிரதிகள் எஞ்சியிருந்தமையினால் அதற்காக செய்யப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகவிருந்தது. | வருடாந்த அறிக்கையை அச்சிடும் பொழுது மூன்று மொழிகளிலும் அச்சிடுவதற்கு பொது பணி ஆகுசெலவினைப் பயன்படுத்த வேண்டியுள்ளதனால், அது உரிய விலை மனுக் கோரலில் தெளிவாக அவதானிக்கப்படுகின்றது. ஆங்கில மொழியிலான 350 பிரதிகளை அச்சிடுவதற்கான ஆகுசெலவு ரூபா 1,150 ஆகவும் சிங்கள மற்றும் தமிழ் 100 பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கான ஆகுசெலவு ரூபா 3,450 ஆகும். அதன்படி எண்ணிக்கை குறையும் பொழுது ஒன்றின் விலை அதிகரிக்கின்து என்பது உங்களுக்கு விளங்கும் என நம்புவதுடன், இதற்கு முன்னர் அச்சிடப்பட்ட ஆங்கிலப் பிரதிகளின் எண்ணிக்கையை 500 இருந்து 350 ஆகவும் சிங்கள பிரதிகளின் எண்ணிக்கையை 200 இருந்து 100 ஆகவும் குறைத்து 2014ம் ஆண்டு விலைக்கேள்வி கோரப்பட்டதுடன், அச்சிடும் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது உங்களுக்கு தெளிவாகும்.<br><br>இலங்கை காப்புறுதிச் சபை காப்புறுதி கைத்தொழிலை ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக சிறந்த தரத்திலான வருடாந் அறிக்கையை காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதித் தரகர் நிறவனங்களுக்கு வழங்குதல் வேண்டும் எனும் நோக்கத்துடன் வருடாந்த அறிக்கை அச்சிடுதல் மேற்கொள்ளப்படுவதுடன் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றது.<br><br>பார்வையற்றோர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக பிறைல் முறையில் அமைந்த புத்தகங்களை தயாரிப்பதற்கு இதுவரை பயன்படுத்தப்படாத 1,1667 வருடாந்த அறிக்கைகள் வழங்கப்பட்டது. இவ்வாறான 120gsm தடிப்புடைய பக்கங்களைப் பயன்படுத்து அவர்களுக்கு உரிய புத்தகங்களை பிறைல் முறையில் தயாரிக்க முடியும். |
| **4.3** | **செயற்பட்டு செயற்திறனின்மைகள்**<br>கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) | பின்வரும் பிரசுரங்கள் மூலம் காப்புறுதி தொடர்பாக சமூகத்திற்கு தெளிவுபடுத்தவதற்காக மீளாய்வாண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் அச்சிடுவதற்கு திட்டமிட்ட “சுகாதார காப்புறுதி தொடர்பான நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகள் மற்றும் காப்புறுதிப் பூட்கை உரித்தாளியாக உங்களது உரிமை, விருப்பு மற்றும் உரித்து தொடாபாக தெளிவு பெறவும்” என்ற துண்டுப்பிரசுரம் 2016 யூலை மாதத்தில் அச்சிடப்பட்டிருந்ததுடன் 2016 யூலை 28 ஆந் திகதி வரையிலும் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | திட்டமிட்டவாறு உரிய கையேட்டுப் பிரதியை ஆங்கில் மொழியில் தயாரித்து வரைவு 2015ம் ஆண்டு முதல் அரையாண்டில் தயாரிக்கப்பட்டது. எனினும் நாடு முழுவதிலும் இந்த கைநூலை விநியோகிப்பதனால், அதிகளவான தொகை ஒரே தடவையில் அச்சிடுவதனால், உள்ளடக்கமாகாது மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனால், காலத்திற்கு காலம் கைத்தொழிற்துறையில் ஒழுங்குபடுத்தல் தேவை மாற்றமுற்றதனால் அதற்கமைவாக அச்சிடப்பட்ட வரைவு காலத்திற்கு காலம் மாற்றமுற்றதனால், இத்துறையின் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையாக இருப்பதனால், அதனுடைய உள்ளடக்கம் தொடர்பாக விசேட கவனத்தை செலுத்த வேண்டி இருந்ததுடன், அந்த கைநூலின் உள்ளடகம் தொடர்பாக அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டிருந்த கைநூலினை சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் மொழிபெயர்ப்பு செய்வதற்கு வெளிவாரி மொழிபெயர்பாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், அந்த மொழிபெயர்ப்பில் அவசியமான கருத்து தெரிவிக்கப்படல் வேண்டும் என்பதனால் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்படும் பொழுது 2016 மார்ச் மாதம் வரை காலம் சென்றுவிட்டது. அத்துடன், அச்சிடுவதற்கு விலை மனுவைக் கோரப்பட்டதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட அச்சகத்திற்கு டென்டர் 2016 ஏப்பிரல் மாதம் வழங்கப்பட்டதுடன், தற்போது கைநூலினை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளது. |
| (ஆ) | காப்புறுதித் தொழிலினதும் காப்புறுதிப்பூட்கை உரிமையாளர் களினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு காப்புறுதி பூட்கைகளை மேம்படுத்தும் நோக்கில் கம்பனிகளில் காப்புறுதிகளை மீளாய்விற்கு உட்படுத்தவதற்காக ஆண்டின் போது தீ காப்புறுதி தொடர்பான சிபாரிசுகளை மீளாய்வு செய்தல் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு தீக் காப்புறுதி பூட்கை தொடர்பாக 2015ம் ஆண்டினுள் மீளாய்வு செய்யப்பட்ட அதற்குரிய விதப்புரை உள்ளடங்களான அறிக்கை 2015 நவம்பர் மாதமளவில் தயாரிக்கப்பட்டுவிட்டது. அதில் அடங்கிய விதப்புரைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் மேலும் மீளாய்வு செய்து மேம்படுத்தும் நோக்கத்துடன். இந்த அறிக்கை சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கருத்தினைப் பெற்றக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடல்களின் பின்னர் உரிய விதப்புரைகள் உள்ளடங்கிய அறிக்கை இறுதி வரைவு பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக 2016 மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட விதப்புரைகள் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| (இ) | 2009 ஆம் ஆண்டின் போது சபையினால் தனியார் காப்புறுதி கம்பனியொன்றிற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய அடிப்படை உரிமைகள் வழக்கின் போது உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் அக்கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போலியான காப்புறுதி உரித்துக்களை முறையாக தீர்ப்பதற்கு அக்கம்பனியின் சொத்தக்களை அகற்றுவதற்காக சபையினால் 2012 யூலை 06 ஆந் திகதி கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட போலியான 142 உரித்துக்களில் எவ்வித இழப்பீடுகளையும் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 16ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு சபை தவறியிருந்தது. | உரிய நிறுவனத்திற்கு புதிய பணிப்பாளரை நியமிப்பதற்கு கோரப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்தில் கொள்கையில் சபையினால் 2013 பெப்பரவரி 07ம் திகதி கடிதத்தின் மூலம் நிறுவனத்தின் ஒன்றுதிரட்டிய சட்டத்தின் பிரத்யொன்று அதன் சட்டத்திற்கு அமைவாக (நிறுவனத்தின் செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட) புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கான செயன்முறை மற்றும் புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கு சபை அனுமதிக்கு அனுப்பும் பொழுது சட்டத்தின் 33 பி (1) பிரிவிற்கு அமைவாக வழங்க வேண்டிய ஆவணங்களை அனுப்புமாறு கோரப்பட்டது. அதனை அனுப்புவதற்கு நிறுவனம் காலதாமதமானதனால், 2013 ஏப்பிரல் 3ம் திகதி ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. நிறுவனத்தில் பதில் எங்களுக்கு 2013 ஏப்பிரல் 8ம் திகதி கிடைத்தது. வழங்கப்பட்ட தகவல்களில் காணப்பட்ட குறைபாடு மற்றும் புதிய பணிப்பாளரை நியமிப்பதற்கு உரிய பணிப்பாளர் சபையின் முன்மொழிவு என்பவற்றைக் கோரி 2013 மே 2ம் திகதி மீண்டும் கடிதம் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. அத்துடன், தற்போது இந்த நிறுவனத்தில் ஒரெயொரு செயற்பாட்டு பணிப்பாளர் மட்டும் இருப்பதனால், புதிய பணிப்பாளரை நியமிப்பதற்கு உரிய வகையில் கூட்டிணைந்த சட்டத்தை மாற்றி அதனை கம்பனிகள் பதிவாளர் ஊடாக சான்றுபடுத்தி எங்களுக்கு அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டது.<br><br>நிறுவனம் அதற்கான பதிலை 2015 ஜுலை 02ம் திகதி அனுப்பியது. எனினும் சட்டத்தின் பிரதியை கம்பனி பதிவாளர் நாயகம் உறுதிப்படுத்தாததனால், அதனை சான்றுபடுத்தி அனுப்புமாறு கம்பனிக்கு 2015 ஓகஸ்ட் 05ம் திகதி அறிவிக்கப்பட்டது.<br><br>எனினும் 2007 இருந்து 2014 வரையிலான வருடாந்த கணக்கு அறிக்கையை கம்பனி பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கத் தவறியமையினால், கம்பனி பதிவாளர் நாயகத்தினால் பதிவுசெய்வதில் பிரச்சினைகள் காணப்பட்டதனால் பதிய பணிப்பாளரை நியமிப்பதற்கான அனுமதியை சபையினால் இது வரை வழங்குவதற்கு இயலாமல் போனது.<br><br>விடயம் இவ்வாறு இருக்கையில், இது தொடாபான தற்போதைய நிலை தொடாபாக வினவி 2016 ஜுலை மாதம் கடிதத்தை அனுப்புவதற்கு தீர்மானித்திருப்பதுடன், இது தொடர்பாக கம்பனி பதில் அனுப்பவில்லை எனில், நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு, காப்புறுதிச் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br>அத்துடன், தற்போது நிறுவனத்தில் ஒரேயொரு செயற்பாட்டு பணிப்பாளர் மட்டும் இருப்பதனால், உரிமைகளைத் தீர்க்கும் செயற்பாடுகள் தொடர்பாக அந்த நிறுவனத்துடன் செயற்படுவதற்கு, சட்டத்தை திருத்தி புதிய பணிப்பாளரை நியமித்தால் மாத்திரமே முடியும். |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| (ஈ) | சபையினால் 2012 ஏப்பிரல் 22 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் படி, காப்புறுதியாளர்கள் பதிவு செய்தல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அது 2016 மார்ச் மாதம் வரையிலும் அகற்றப்படாதிருக்கும் போது சாதாரண காப்புறுதிக்காக மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்த கம்பனியொன்றிற்கு நீண்டகால காப்புறுதிக்காக 2015 மே மாதம் முதல் சபையில் பதிவுகள் வழங்கப்படடிருந்தது. 2015 மே மாதம் முதல் 2016 மே மாதம் வரை ஒரு வருட காலத்தில் அக்கம்பனி நீண்ட கால காப்புறுதிக்காக செயற்படாதிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிற்காக பதிவினைப் புதுப்பித்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 114வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பொழுது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2012 ஏப்பிரல் 27ம் திகதியில் இருந்து செயற்படும் வகையில், புதிய காப்புறுதி தரகர் நிறுவனங்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோருதல் சபையினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.<br><br>எனினும், அது வரை பதிவினைப் பெற்றுள்ள காப்புறுதி தரகர் நிறுவனங்கள் பதிவினைப் பெற்றுக்கொள்வதற்காக 2014 நவம்பர் மாதம் காப்புறுதிச் சபைக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்தது. இந்த நிறுவனம் அப்போது 2007 ஜுலை 19ம் திகதியில் இருந்து செயற்படும் வகையில் பொது காப்புறுதி தரகர் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு சபையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டிருந்த நிறுவனம் ஆகும். அத்துடன், அவர்களின் விண்ணப்பத்திற்கு இடமளிப்பதன் மூலம் அவர்கள் 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்திற்கு உரிய தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருந்தமையினால், 148ம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2015 மே மாதம் 20ம் திகதியில் இருந்து 2016 மே 19ம் திகி வரை அந்த நிறுவனம் நீண்ட கால காப்புறுதி தரகர் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு பதிவு வழங்கப்பட்டது.<br><br>2016 வருடத்திற்கான நீண்ட கால காப்புறுதி தரகர் வியாபாரத்திற்கு பதிவைப் புதுப்பிப்பதற்கு, நிறுவனத்தினால் 2016 மார்ச் மாதம் காப்புறுதிச் சபைக்கு விண்ணபத்தை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில், அந்த நிறுவனம் 2016 மே மாதத்தில் இருந்து 2016 ஏப்பிரல் வரையான அவர்களின் முதலாம் ஆண்டில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதன்படி அது தொடர்பாக விளக்கமளிக்குமாறு 2016 ஏப்பிரல் 11ம் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது. அதன்படி அதற்குரிய காரணங்களை விளக்கி 2016 ஏப்பிரல் 18ம் திகதி கடிதம் மூலம் விளக்கமளிக்கப்பட்டதுடன், அதன் விபரங்கள் கீழ்வரும் வகையில் அமைந்திருந்தது.<br><br>1. இந்த நிறுவனம் நீண்ட கால காப்புறுதி தரகர் வியாபாரத்திற்கு பதிவினை மேற்கொண்டதற்கான காரணம் நிறுவனத்தின் வியாபாரத்தை வியாப்பிப்பதற்காகவாக என்றும்,<br>2. உரிய காலப்பகுதியில் பொது காப்புறுதி தரகர் வியாபாரத்திற்கு புதிய வியாபார சந்தர்ப்பங்கள் பல கிடைத்ததனால் இது தொடர்பாக கவனத்தை செலுத்த முடியவில்லை என்றும்,<br>3. நிறுவனத்தினால் அனுபவம் உள்ள ஆலோசனையாளர்கள் மற்றும் முகவர்கள் நீண்ட கால காப்புறுதி முகவர் வியாபாரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன், ஏப்பிரல் மாதத்தினுள் லாப் நிறுவனத்தின் Group life insurance மற்றும் வேறு தனி நபர்களின் காப்புறுதி பூட்கை தொடர்பாக பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது என்றும்,<br>4. புதிய வாடிக்கையாளர்களின் மற்றும் ஊழியர்களின் வசதிக்காக புதிய வியாபார நிறுவனம் பெருப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>இவ்விடயங்களை கருத்தில் கொண்டு, நீண்ட கால காப்புறுதி தரகர் வியாபாரத்திற்கான பதிவு புதுப்பிக்கப்பட்டது. |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| (உ) | சபையினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற கடன் தீர்க்கும் பரிசோதனை (Solveny Test) சட்டங்களும் ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதன மாதிரி (RBC) விதிகளின் பிரகாரமும் சகல காப்புறுதியாளர்களினாலும் ஆகக் குறைந்த கடன் தீர்க்கும் நிலை பேணப்பட வேண்டியிருந்த போதிலும் மொத்த மூலதனப் பெறுமதியும் தொடர்ச்சியாக முறிவடைந்த கம்பனியொன்றாகவும் கடன் தீர்த்தல் விகிதம் (Solvency Tation) 2015 ஆம் ஆண்டின் போது பேணப்பட வேண்டிய மட்டத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்ட கம்பனியொன்று தொடர்பாக சபையினால் எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்ட முதலாவது நிறுவனத்தின் முழுமையான மூலதனம் சரிவு அடைந்தமை தொடர்பாக 2015.10.20, 2015.11.12 மற்றும் 2015.12.17ம் திகதிகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 2016.01.01ம் திகதியில் இருந்து எதிர்பார்க்கப்படும் இடர் அடிப்படையிலான மூலதன சட்டங்களுக்கு (Risk Based Capital) அமைவாக நிறுவனத்தினால் ரூபா 500 மில்லியனுக்கு அதிக மொத்த கிடைக்கக்கூடிய மூலதனத்தைப் (Total Available Capital) பேணுதல் வேண்டும் என்பதனால் அதுபற்றி நிறுவனத்தினால் மூலதனத் திட்டம் (Capital Plan) சபைக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2016.06.30ம் திகதி ஆகும் பொழுது மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் ரூபா 500 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக இருப்பதற்கான செயற்பாடுகளை இந்த மூலதனத் திட்டம் உள்ளடக்கியிருப்பதனால் இது தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது.<br><br>இது தொடர்ந்தும் அவதானிக்கப்படுகின்றது.<br><br>இந்த நிறுவனம் தொடர்பாக சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டாவது நிறுவனத்தின் கடன்தீர் வீதம் (Solvency Ratio) 2015ம் ஆண்டில் பேணவேண்டிய மட்டத்திற்கும் விட குறைவான மட்டத்தில் பேணுவது தொடர்பாக சபையினால் பல்வேறுபட்ட செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது. சபையினால் 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 57ம் பிரிவின் கீழ் மாதாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நிறுவனத்திற்கு கடப்பாடு உள்ளமை அவர்களின் நிதி நிலைமையை தொடர்ந்து அவதானிப்பதற்காகவாகும். அத்துடன், சபையினால் 2015.10.16ம் திகதி பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு இந்த நிறுவனத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2016.04.06ம் திகதி இந்த நிறுவனத்தின் பங்குகளைக் கொண்டுள்ள நிறுவனத்திற்கும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அத்துடன் 2016.01.01ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் இடர் அடிப்படையிலான மூலதன மேற்பார்வை சட்டத்திற்கு அமைவாக நிறுவனத்தின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தொகையை சபைக்கு அறிவிக்குமாறு 2016.06.16ம் திகதி அறிவிக்கப்பட்டது. அதனை அவதானித்து பொருத்தமான நடவடிக்கையை சபை மேற்கொள்ளும். |
| (ஊ) | நிறுவனத்தினால் மீளாய்வாண்டுக்குரிய காலாண்டு ரீதியான அறிக்கை மற்றும் இணக்கச் சான்றிதழ் (Compliance Certification) சபைக்கு வழங்கப்பட்டிருக்காத போதிலும் இது தொடர்பாக சபையினால் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனம் அவர்களின் 2015ம் ஆண்டுக்கு உரிய காலாண்டு அறிக்கையையும் இணங்குவிப்பு சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்காமையினால் அவர்களுக்கு அதனை சமர்ப்பிக்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 1வது மற்றும் 2வது காலாண்டுக்கான அறிக்கையை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டள்ளது. எனினும் தேசிய காப்புறுதி நிதியம் 2015ம் ஆண்டக்குரிய மேற்குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கவில்லை. தேசிய காப்புறுதி நிதியத்தின் 2016ம் ஆண்டக்கான 1வது காலாண்டுக்கான அறிக்கை பணிப்பாளா சபையினால் பணிப்புரை வழங்கப்பட்டதன் பின்னர் 2016.06.20ம் திகதி சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. |
| (எ) | காப்புறுதியாளர்களினால் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுகளுக்காக பொதுவாக பாவனைக்கு எடுக்கக்கூடிய வழிகாட்டிக் கோவையொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய திருத்திய வரைபு அறிக்கை 2016 யூன் 14 ஆந் திகதி காப்புறுதித் தொழில் தொடாபான தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டிருந்தமையினால் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அது செயற்படு நிலையில் காணப்படவில்லை. | 2016ம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக 2015ம் ஆண்டில் பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர், காப்புறுதி நட்டவீட்டு வேண்டுதல்களை கவனத்தில் கொள்ளும் போது மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு உரிய வழிகாட்டல் அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்ததன் பின்னது, மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் இறுதி வழிகாட்டலை வழங்குவதற்கு எதிர்பாக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் 2015.12.01ம் கடிதத்தின் மூலம் காப்புறுதி நிறுவனங்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் பதில்கள் 2016.01.06ம் திகதி கிடைக்கப்பெற்றது. அந்தக் கருத்துகள் மிக விரிவாக அவதானிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் 2016.04.217ம் திகதி மீண்டும் வழிகாட்டல் தொடர்பாக நிறுவனங்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இது தொடர்பான அவர்களின் கருத்துக்களை 2016.05.16ம் திகதி காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பி உள்ளதுடன், அந்தக் கருத்துகளில் உள்ள ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் ஏனைய பௌதீக விடயங்கள் தொடாபாக கேட்டறியப்பட்டதன் பின்னர் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| (ஏ) | காப்புறுதியாளர்களினால் உரித்துக்கோரும் விண்ணப்பம் தொடர்பாக வெளித்தரப்பினர் ஊடாக புலனாய்வை முறையாக மேற்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் சபை திட்டமிட்டிருந்த போதிலும் அதற்குரிய வரைவு வழிகாட்டிக் கோவையின் இறுதி அங்கீகாரம் 2016 யூலை 28ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் இடையீட்டு நிறுவனங்களினால் வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான நடைமுறை தொடர்பாக வரைவு செய்யப்பட்ட வழிகாட்டல், 2015.10.28ம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டதுடன், அது காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் இடை நிறுவனங்களின் கருத்துக்களைக் கேட்பதற்காக 2015.11.04ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களின் பதில்கள் 2015.11.20 மற்றும் 2015.12.04 ம் திகதிகளில் கிடைக்கப்பெற்றதுடன், அந்தக் கருத்துகள் மிக விரிவாக அவதானிக்கப்பட்துடன் 2016.02.15 மற்றும் 2016.04.27ம் திகதிகளில் மீண்டும் அனுப்பப்பட்டது. உரிய வழிகாட்டலை பூரணப்படுத்துவதற்கான மேலதிக தகவல்கள் காப்புறுதி நிறுவனத்தினால் 2016.07.06ம் திகதி சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி தற்போதுள்ள வழிகாட்டல் மேலும் மீளாய்வு செய்யப்பட்டு 2016 மூன்றாவது காலாண்டினுள் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| **4.4** | **அலுவலக நிர்வாகம் கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது** | |
| (அ) | சபையின் பதவிகளுக்குரிய ஆட்சேர்க்கும் நடைமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | ஆட்சேர்ப்பு பிரமாணம் திறைசேரிக்கு நிர்வாக கைநூலுடன் இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வெற்றிடமாக காணப்பட்ட பணிப்பாளர் (சட்டம் மற்றும் அமுலாக்கல்) பதவிக்காக 2015 மே 18 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆட்சேர்த்தலுக்குரிய பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் வயது எல்லை “35 வருடங்கள் முதல் 50 வருடங்கள் வரை” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்காக கிடைத்த விண்ணப்பங்களுக்கிடையே தகைமை பெற்ற 9 உத்தியோகத்தர்கள் இருந்ததுடன் அவர்களிடையே நிரந்தர ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 33 வயதினையுடைய உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | பணிப்பாளர் (சட்டம் மற்றும் அமுல்படுத்தல்) பதவிக்காக நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் வேறு பொருத்தமான விண்ணப்பதாரர் இருக்காமையினால் ஒப்பந்த அடிப்படையில் உரிய அலுவலர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். |
| (இ) | ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்குப் புறம்பாக 2012 ஒக்டோபர் மாதம் முதல் 2016 பெப்பரவரி 29 ஆந் திகதி வரை இலத்திரனியல் தபால் மூலம் சமர்ப்பித்த உடன்படிக்கையின் அடிப்படையில் ஆயட்கணிப்பு ஆலோசகர் பதிவிக்காக பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அவரின் வருகை மற்றும் வெளிச் செல்லலை உறுதிப்படுத்தப்படாமல் 2012 ஒக்டோபர் முதல் 2015 டிசம்பர் வரை 7,514,871 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | ஆயுள் கணிப்பீட்டாளரின் வரவினை காட்டுவதற்கு சாட்சியாக உரிய விமானச் சீட்டு மற்றும் தங்குமிடம் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்க முடியும். |
| (ஈ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றல்லாத ஆயுட்கணிப்பாளர் பதவிக்காக 2015 யூன் முதல் 2016 யூன் மாதம் வரை மாதாந்தம் ரூபா 15,000 தொகையான படியொன்றின் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருக்கும் போது ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு புறம்பாக 2016 சனவரி 01 ஆந்திகதி முதல் மாதாந்தம் ரூபா 200,000 படியொன்றை செலுத்தி 2 வருட காலத்திற்காக நபரொருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். | இந்த அலுவலர் சேவைக்கு பயிலுனராகவே இணைக்கப்பட்டுள்ளார். இந்த பயிலுனர் ஆயுள் கணிப்பீட்டு அலகுக்குரிய ஆரம்ப பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுகின்றார். சபைக்கு ஆயுள்கணிப்பீட்டு அலகொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்பொன்று உள்ளது என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.<br><br>காப்புறுதிக் கைத்தொழிலில் ஒழுங்குபடுத்தல் நிறுவனமாகவும் மற்றும் அண்மையில் மேற்கொள்ளப்பட் மாற்றங்கள், பிரதானமாக இடர் அடிப்படையிலான மூலதன முறைக்கு மாற்றமடைதல், இடர் அடிப்படையிலான மூலதனத்தை மேற்பார்வை செய்தல், காப்புறுதி நிறுவனங்களை வெவ்வேறாக பதிவுசெய்தல் போன்ற காரணங்களினால் தொழில்தகைமையுடைய ஆயுள் கணிப்பீட்டாளரின் சேவை அத்தியாவசியமானதாகும்.<br><br>எனினும் இலங்கையினுள் அவசியமான தொழில் தகைமையுடைய முழுமையான மற்றும் அவசியமான தொழில்தகைமையுடைய ஆயுள் கணிப்பீட்டாளர் சேவையைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிரமங்கள் காரணமாக 2012ம் ஆண்டிலிருந்து ஆலோசனை சேவை இந்தியாவின் ஆயுள் கணிப்பீட்டாளர் சேவைச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது, எனினும் நிரந்தரமான ஆயுள் கணிப்பீட்டாளர் இல்லாததன் காரணமாக உரிய பணிகளை மேற்கொள்ளும் போது சபை எதிர்கொண்ட நடைமுறைச் சிக்கல்களை கருத்தில்கொண்டதன் பின்னர் சபை அனுமதியுடன் Fellow of the Institute and Faculty of Actuaries) தகைமை மற்றும் அறிவினை உடைய இந்த நாட்டின் ஆயுள் கணிப்பீட்டாளரின் சேவை 2016.01.01ம் திகதியில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. |

## 2015ம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் மற்றும் அதற்கு சபை வழங்கிய பதிலளிப்புகள் தொடர்ச்சி

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதி சபையின் பதிலளிப்பு |
|---|---|---|
| **5** | **கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் ஆளுகை** | |
| **5.1** | **செயற்பாட்டுத் திட்டம்** | |
| | 2014 பெப்பரவரி 17 ஆந் திகதி 01/2017 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4 ம் பந்தியின் பிரகாரம் உரிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டம் அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களுடைய கடிதத்தின் மூலம் விபரிக்கப்பட்டுள்ள 2014 பெப்பிரவரி 17ம் திகதி உடைய 1/2014ம் இலக்க அரசி நிதிச் சுற்றுநிருபத்தின் 4ம் பிரிவுக்கு அமைவாக இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 2015.12.11ம் திகதி உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>கடந்த வருடத்தின் நிறுவன திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மேற்குறித்தி சுற்றுநிருபத்தில் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைவாக வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக நீண்டகால நோக்கத்தினை அடைவதற்கான இலக்கில் 2015ம் வருடத்திற்கு உரிய பகுதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **5.2** | **வரவு செலவுத் திட்டத்தின் நிர்வாகம்** | |
| | மீளாய்வாண்டில் பாதீட்டில் 53 விடயங்களில் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையில் மிகை நிதி ஏற்பாடு காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சபையின் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் வரவுசெலவுத்திட்ட வருமானம் மற்றும் செலவு மற்றம் உண்மையான வருமானம் மற்றும் செலவு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு காணப்படுவதுடன், இதனை நிவர்த்தி செய்வதற்கு சபை முடிந்தவரையில் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. |
| **6.** | **முறைமை மற்றும் நிர்வாகம்** | |
| (அ) | **நிதிக் கட்டுப்பாடு** | எங்களினால் திருத்தப்படுவதற்கு உரிய துறைகள் தொடாபாக மட்டும் உங்கள் அறிவுரைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு கவனம் செலுத்தப்படுகின்றது. |
| | நிதிக்குரித்தற்ற செலவினங்களைத் தீர்ப்பதற்காகவும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவினங்களுக்காகவும் நிதியை ஒதுக்குதல் | |
| (ஆ) | **பதவியணியினர் நிர்வாகம்** | |
| | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும், நியமனத் திகதியை கவனத்தில் கொள்ளாமலும் சம்பள அதிகரிப்புகளை செலுத்துதல். | |
| (இ) | **வருமானக் கட்டுப்பாடு** | |
| (i) | அங்கீகாரமின்றி வருடாந்த கட்டணங்களை மீளச் செலுத்தல் | |
| (ii) | வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படாமை | |

# பின்னிணைப்பு I

2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறையை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள்

| இல. | காப்புறுதியாளரின் பெயர் | காப்புறுதியின் வகை |
|---|---|---|
| 1 | ஏஐஏ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 2 | ஏஐஏ இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி |
| 3 | ஏஐஜி இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 4 | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 5 | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 6 | அமானா டக்காபுல் லைப் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 7 | அமான டக்காபுல் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 8 | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 9 | ஏசியன் அலையன்ஸ் ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 10 | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி |
| 11 | சிலிங்கோ ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | பொதுக் காப்புறுதி |
| 12 | சிலிங்கோ லைப் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 13 | கொண்டினென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 14 | கோர்பரெடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 15 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 16 | எச்என்பி அஸ்யூரன்ஸ் பீஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி |
| 17 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 18 | ஜனசக்தி ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 19 | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பீஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி |
| 20 | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 21 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 22 | எல்ஓஎல்சி லைப் அசூரன்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி |
| 23 | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 24 | நெசனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் ப(ஃ)ண்ட் போர்ட் | பொதுக் காப்புறுதி |
| 25 | ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 26 | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 27 | சீமாசகித சனச ரக்ஷன சமாகம | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 28 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 29 | யூனியன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 30 | யூனியன்ஸ் அசூரன்ஸ் பிஎல்சி | நீண்டகாலக் காப்புறுதி |

# பின்னிணைப்பு II

2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, 2000ம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதித் தரகர் கம்பனிகள்

| இல | காப்புறுதித் தரகரின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 1 | ஏஎம்டபிள்யு. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 2 | ஏடிஇஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 3 | எய்ட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 4 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 5 | அலையன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 6 | யுஆவுசுருளுவு இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 7 | அக்கியுலைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 8 | அஸகெய் இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 9 | அசெட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 10 | எஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 11 | பிரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 12 | சியக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 13 | சீலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை) லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 14 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | பொதுக் காப்புறுதி |
| 15 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 16 | கொலம்போரே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 17 | கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 18 | தயா சரண இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 19 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 20 | ஈஏபி - ஆர்எம்எஸ் இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 21 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 22 | ஈஸாஜி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 23 | ஃபின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 24 | போர்சைட் இன்ஸ்யூரன்ஸ் அன்ட் ரி. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 25 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட்ஸ் இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 26 | க்ளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ அன்ட் சேர்விசஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 27 | கிரான்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 28 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 29 | இன்டஸ்ட்ரியல் அன்ட் கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 30 | ஜே இன்சூரன்ஸ் புரோகர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 31 | ஜேஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 32 | எல்எம் அன்ட் ஏ. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 33 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |

## பின்னிணைப்பு II தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 34 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் சிலோன் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 35 | மக்வூட்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 36 | மக்ஸ்வெல் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 37 | மோ்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 38 | மை இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 39 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 40 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 41 | புரொகெயாா் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 42 | புரொடெக்ஷன் அன்ட் அசூவரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 43 | புரொடெக்ஷன் அன்ட் அட்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 44 | ரெட்மோ ஸ்விஸ் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 45 | ரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 46 | ரின்கூன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 47 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 48 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 49 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கா் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 50 | ஸ்ட்ரஜிக் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 51 | டிரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 52 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 53 | யுனைடட் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | பொதுக் காப்புறுதி |
| 54 | வெரசிடி இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 55 | விக்டா் இமானுவெல் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 56 | வொலன்கா இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |
| 57 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கா்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி |

# அருஞ்சொல் விளக்கம்

**திரட்டல்**
ஒரே கம்பனியில் காப்புறுதி செய்யப் பட்டிருக்கும் அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் கணிசமான அளவிலான இடர்கள் ஓர் இழப்பு நிகழ்வினால் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுதல்.

**கையகப்படுத்தும் செலவுகள்**
புதிய காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தற்போதைய காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் (உதாரணமாக, தரகுக் கட்டணங்கள்) என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதானமான அனைத்துச் செலவுகளும்.

**கணிப்பீட்டாளர்**
காப்புறுதி, முதலீடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் குடிசனவியல் என்பன தொடர்பான நிகழ்தகவு மற்றும் பிரச்சினைகளுக்கான புள்ளிவிபரக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும் ஒரு நிபுணர்.

**நிர்வாகச் செலவுகள்**
தவணைக் கட்டணச் சேகரிப்பு, காப்புறுதிப் பத்திர நிர்வாகம், ஆளணிச் செலவுகள், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொடர்பான தேய்மான ஒதுக்கீடுகள் என்பவற்றில் இருந்து ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கிய நிர்வாக இயல்பைக் கொண்ட செலவுகள்.

**அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்**
காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நியதி பூர்வமான கடன்தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக் கூடிய ஆதனங்கள். அத்தகைய சொத்துகள், என்பவை 2000 மாவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆண்டுத் தொகை**
குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின்போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு கட்டத்தில் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது ஒத்திவைக்கப்பட்ட ஆண்டுத்தொகையாகும். உடனடியாக வருடாந்த கொடுப்பனவு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது உடனடியான ஆண்டுத்தொகை ஆகும்.

**பயனாளி**
காப்புறுதிப் பத்திரதாரரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய பயன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

**ஒப்பளி**
மீள்காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (ஆரம்ப காப்புறுதிக் கம்பனி)

**கோரிக்கைகள்**
காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துகள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், போன்றவை காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு**
கணக்கீட்டுக் காலத்தின்போது பணம் செலுத்தப்பட்ட அனைத்துக் கோரிக்கைகளினதும் மொத்தத் தொகை, கோரிக்கைகளைக் கையாளும் செலவுகளும் இதில் அடங்கும். பொருத்தமானவிடத்து, கணக்கிட்டுக் காலத்தின் ஆரம்பத்தின் போதும், முடிவின் போதும் நிலுவையிலிருந்து வரும் கோரிக்கைகளுக்கு செய்யப்படும் சீராக்கங்கள்.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள்**
ஏற்பட்டிருக்கும் ஆனால் இதுவரையில் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டிராத எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின்போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

**நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**
ஐந்தொகைத் திகதிக்குள் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (IBNR) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

**இணைக் காப்புறுதி**
ஓர் நட்ட இடரை குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

**தரகுக் கட்டணம்**
காப்புறுதி வழங்குநர் ஒருவரின் காப்புறுதி திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு.

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**
வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் தினத்தில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத நட்வச்சக் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள் இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

**தவணைக் கட்டன காப்புறுதி பெறுகை**
கணக்கீட்டுக் காலத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் பெறப்படாத தவணைக்கட்டன ஒதுக்குகளின் மூலம் சீராக்கம் செய்யப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்.

**பொதுக் காப்புறுதி வர்த்தகம்**
தீ, கடல், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல். கிடைத்த, மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

**மொத்த தவணைக் கட்டணம்**
கழிவுகள், மீள் திருப்பப்பட்ட தொகை, மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை கழிக்கப்பட்டதன் பின்னரான தவணைக் கட்டணமாயினும், இது எந்தவொரு தவணைக் கட்டண செலுத்துதல்கள் அல்லது காப்புறுதி வழங்குனர் ஒருவரின் மீள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுக் என்பவை கழிக்கப்படுவதற்கு முன்னரானதாக இருக்கும் தொகை ஆகும்.

**காப்புறுதி இடர்**
காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு, காப்புறுதிக் கோரிக்கையின் அளவு அல்லது கோரிக்கைக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய காலம் என்பன தொடர்பான நிச்சயமற்ற நிலை.

**காப்புறுதி வழங்குனர்**
2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டதும் மற்றும் 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான கம்பனி.

# அருஞ்சொல் விளக்கம் தொடர்ச்சி

**நீண்டகாலக் காப்புறுதி வர்த்தகம்**

மனித ஆயுள் தொடர்பான பூட்கை ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின் போது அல்லது மனித வாழ்க்கையில் ஏதெனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

**நட்ட வீதம்**

உழைக்கப்பட்ட தவணைக் கட்டளைக் கொடுப்பனவு கோரிக்கை செலவு விகிதம்.

**முதிர்ச்சி**

ஒரு நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் கொடுப்பனவுத் தொகை அதன் காலப் பிரிவின் முடிவின் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம்.

**நிகர கோரிக்கைகள் விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்**

நிகர இழப்புச் செலவுகளை நிகர வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி களைக் கழித்த பின்னர்)

நிகர கோரிக்கை கொடுப்பனவுகள் / நிகர தவணைக் கட்டண பெறுகைகள் X 100

**நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

இது காப்புறுதி வழங்குநரின் தொழிற்பாடுகளின் இலாபத் தன்மையைக் காட்டுகின்றது. தேறிய நட்ட விகிதத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

நிகர கோரிக்கை செலவுகள் X 100 / நிகர தவணைக் கட்டண பெறுகைகள் + செலவுகள் X 100 / நிகர தவணைக் கட்டண செலவுகள்

**தேறிய தவணைப் பெறுகைகள் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங்களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

**தேறிய செலவு விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக் கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

**பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

சம்பந்தப்பட்ட ஆயுள் பூட்கை நிதியத்தின் மிகையைப் பகிர்ந்து கொள்வதற்கு பத்திரதாரர்கள் ஒப்பந்த ரீதியான உரித்தினைக் கொண்டிராத ஆயுள் காப்புறுதி வர்த்தகம்.

**காப்புறுதிப் பத்திரம்**

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை கொண்டுள்ள ஓர் ஆவணம்.

**காப்புறுதி பத்திர வைப்பாளர்**

காப்புறுதி வழங்குநருடனான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிப் பத்திரத்தை அச்சமயத்தில் சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.

**பூட்கை பத்திரக் கடன்**

நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக கொண்டு காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதி வைப்பாளர் ஒருவருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறுதிப் பத்திரத்தின் தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத்திற்கு பொதுவாக வரையறுக்கப் பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

**முதன்மை காப்புறுதி வழங்குநர்**

ஒரு காப்புறுதி தவணைக் கட்டணத்திற்குப் பதிலாக, இடர்களைப் பொறுப்பேற்பதுடன், காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப்பவருடன் ஒரு நேரடி ஒப்பந்த ரீதியான தொடர்பினை வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் (தனியார், தனி நபர், நிறுவனம், அல்லது ஸ்தாபனம்)

**செயற்பாட்டு இலாபம்**

முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

**மீள் காப்புறுதி**

ஒரு தரப்பு (மீள் காப்புறுதி வழங்குநர்) ஒரு தவணைக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு, மற்றொரு தரப்புக்கு (ஆரம்ப காப்புறுதி வழங்குநருக்கு) மீள் காப்புறுதிப்பத்திரம் அல்லது பத்திரங்களின் கீழ் ஏற்கப்பட்டிருக்கும் பொறுப்பின் ஒரு பாகத்திற்கு எதிராக அல்லது மொத்தப் பொறுப்புக்கும் எதிராக நட்ட உத்தரவாதம் வழங்குவதற்கு உடன்படும் ஓர் ஏற்பாடு.

**மீள் காப்புறுதி தரகுக் கட்டணம்**

மீள் காப்புறுதி வழங்குநர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணங்கள் தொடர்பாக கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தரகுக் கட்டணம்.

**உள்நோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை ஏற்றுக்கொள்ளல்.

**வெளிநோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை வைத்தல்.

**மீள் காப்புறுதி தரகு கட்டண இலாபம்**

மீள் காப்புறுதி வழங்குநர்களினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்புறுதி வழங்குநருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

**பிடித்து வைத்திருத்தல்**

காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்காது இருக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்கென வைத்துக்கொள்ளப்பட்ட தேறிய தொகை.

**இடர் அடிப்படையிலான வேதனம்**

வியாபாரத்தின் உண்மையான காசுப் பாச்சலின் மீதான அடிப்படையில் கடன் தீர்வாற்றலை மதிப்பீடு செய்யும் அணுகுமுறை இடர் அடிப்படையில் மூலதனம் ஆகும்.

**கடன் தீர் எல்லை - நீண்டகால காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது 2000ம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பிரகாரம், (நீண்டகால காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அளவில் கீழ் நீண்டகால காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**கடன் தீர் எல்லை - பொதுக் காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது, 2000 ம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறையை ஒழுங்கு முறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2004 ஆவது விதிகளின் பிரகாரம் (பொதுக் காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் அளவின் கீழ் பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

# அருஞ்சொல் விளக்கம் தொடர்ச்சி

**ஒப்படைப்புப் பெறுமதி**

ஒரு காப்புறுதிப் பத்திரம் அதன் கால எல்லை முதிர்ச்சியடைவதற்கு முன்னர் முடிவடையும் போது ஆயுள் காப்புறுதி தொடர்பாக காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதிப் பத்திரதாரருக்குச் செலுத்த வேண்டிய தொகை. ஒப்படைப்புப் பெறுமதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஒரு காப்புறுதிப் பத்திரம் குறைந்தது மூன்று வருடகாலப் பகுதிக்கு தொடர்ச்சியாக வலுவில் வந்திருத்தல் வேண்டும்.

**கடற்பொருட் காப்புறுதி இலாபம்**

இது முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொள்ளாது பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்சார் இலாபமாகும்.

**உழைக்கப்படாத தவணைக் கட்டணம்**

இது, கிடைக்க வேண்டிய தொகைகள் என ஏற்கனவே கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும். ஐந்தொகைத் திகதியை அடுத்து வரும் காலகட்டத்துடன் சம்பந்தப்பட்ட தவணைக் கட்டணங்களின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**வருவாய் ஈட்டாத தவணைகட்டண ஒதுக்கு**

ஈட்டப்படாத தவணைக் கட்டண ஒதுக்கு ஏற்கனவே வலுவில் இருந்து வரும் காப்புறுதிப் பத்திரங்களின் கீழ் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய கோரிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு, பொதுக் காப்புறுதி வழங்குநர் ஒருவரினால் பராமரிக்கப்படும் ஒரு நிதியம்.

**காலாவதியாகாத இடர் ஒதுக்கு**

நிதியாண்டின் முடிவின் பின்னர், அத் திகதிக்கு முன்னர் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து தோன்றக்கூடிய கோரிக்கைகள் மற்றும் செலவுகள் என்பனவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மதிப்பீடு செய்த தொகைகள். அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி பெற்றுக்கொள்ளப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஒதுக்கினை மதிப்பிட்டுக் காணப்படும் நிலை (ஒத்திவைக்கப்பட்ட எவையேனும் கையகப்படுத்தப்பட்ட செலவு களைக் கழித்த பின்னர்).

**தொழில்நுட்ப ஏற்பாடு**

காப்புறுதி வியாபாரத்துடன் நேரடியாக தொடர்புடைய நிச்சயமில்லாத பொறுப்புகள் காப்புறுதி ஒப்பந்தங்கள் எப்போதும் வேண்டுதல்கள் உறுதிப்படுத்துவதற்காக இந்த ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளது.

**எழுதப்பட்ட இலாபம்**

இந்த தொழில்நுட்ப இலாபமானது முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானத்தை கணக்கில் கொள்ளும்போது காப்புறுதி வியாபாரத்தில் உருவாக்கப்படுகின்றன.

# பொதுத் தகவல்கள்

**அலுவலக முகவரி**
எம் 11, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக நிலையம்
கொழும்பு 1
இலங்கை
தொலைபேசி : +94 11 2396184-9
தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : info@ibsl.gov.lk
இணையத்தளம் : www.ibsl.gov.lk

**சட்டபூர்வ நிலைமை**
2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் நியம சபையாக நிறுவப்பட்டது. 2001 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1172/27 ஆம் இலக்க அரசாங்க வர்தமானி அறிவித்தலை அடுத்து 2001 மார்ச் 01 ஆம் திகதி நடவடிக்கைகளை மேற்கொண்ட சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொண்ட நிறுவனம் ஆக்கப்பட்டது.

**சபையின் நோக்கமும் பொறுப்புக்களும்**
காப்புறுதியாளர்களினதும், உத்தேச காப்புறுதியாளர்களினதும் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், இலங்கையில் காப்புறுதித் தொழிலை நேர்மையாகவும், தொழில்சார் அடிப்படையிலும், விவேகமாகவும், இலங்கையில் காப்புறுதித் தொழில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது சபையின் நோக்கமும், பொறுப்புக்களுமாகும்.

**கணக்கீட்டு ஆண்டு**
டிசம்பர் 31

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி

**கணக்காய்வுக் குழு**
செல்வி புஸ்பா வெல்லப்பிலி
திரு. ஜெரமி போலிங்
டாக்டர் ஏ. ஏ. வுகபிர் குலாம்ஹுசைன்

Designed & Printed by Ceylon Printers PLC

IBSL
INSURANCE
BOARD OF SRI LANKA


இலங்கை காப்புறுதிச் சபை | வருடாந்த அறிக்கை 2015

தளம் 11, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக நிலையம், கொழும்பு 1, இலங்கை

தொலைபேசி :+94 11 2396184-9 | தொலைநகல் :+94 11 2396190

மின்னஞ்சல் : info@ibsl.gov.lk | இணையத்தளம் : www.ibsl.gov.lk